
உயிரோடு
உயிராக
சத்யா இராஜ்குமார்

# உயிரோடு உயிராக

சத்யா இராஜ்குமார்

அறிவாலயம்
தபால் பெட்டி எண்: 667,
புதிய எண்: 32/7, பழைய எண்: 107/7,
கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 28353520
Email: arivalayamvenkat@yahoo.in

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உயிரோடு உயிராக |
| ஆசிரியர் | : சத்யா இராஜ்குமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : நவம்பர், 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 284 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>தபால் பெட்டி எண்: 667,<br>பு.எண்: 32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# உயிரோடு உயிராக



# உயிரோடு உயிராக

# 1

‘‘நீங்க ஏன் முத்தையா இதையெல்லாம் எடுத்துட் டிருக்கீங்க?’’

கீழே ஆங்காங்கே சிதறிக் கிடந்த பேப்பர் பிளேட் கப் மற்றும் ஐஸ்கிரீம் கப்களை ஒரு பெரிய பாலிதீன் கவரில் சேகரித்துக் கொண்டிருந்தவரிடம் கேட்டான் ஷ்யாம் சுந்தர்.

அப்பொழுது தான் காம்பவுண்டுக்குள் நுழைந்து பைக்கை விட்டு இறங்கிக் கொண்டே கேட்டவனை நிமிர்ந்து பார்த்தான் முத்தையன்.

''வாங்க சின்னய்யா, சும்மா வீட்டுக்கு முன்னாடி கிடக்கறத மட்டும் எடுத்துடலாம்னு...''

''பரவாயில்ல நீங்க விட்ருங்க, காலைல கூட்றவங்க வந்து எடுத்துக்கட்டும்.''

''சரிங்கய்யா.''

''என்ன வீட்ல யாருமில்ல போலிருக்கு'' என்றான் ஷ்யாம்சுந்தர்.

''ஆமாங்கய்யா ஐயாவும் அம்மாவும் கல்யாணத்துக்குப் போயிருக்காங்க. அண்ணாவும் அண்ணியும் இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் வெளிய கிளம்பிப் போனாங்க, பாப்பா அவங்க ரூம்புல படிச்சுட்டிருக்காங்க.''

''சரி முத்தையா மதியமும் சாப்பிடாததால பசி உயிர் போகுது, சீக்கிரம் டிஃபன் எடுத்து வைங்க ரெண்டு நிமிஷத்துல வர்றேன்.''

''இதோ போறேங்கய்யா'' என்று வேகமாக உள்ளே விரைந்தான் முத்தையன்.

சொன்னது போல இரண்டு நிமிடங்களில் டைனிங் ஹாலுக்கு வந்துவிட்டிருந்த ஷ்யாம்சுந்தர், அங்கு கைகளைப் பிசைந்து கொண்டு பயம் கலந்த தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தவரைப் பார்த்தான்.

''என்ன முத்தையா?''

''ஐயா டிஃபன் எல்லாம் தீந்துடுச்சுங்களே...''



''என்னது டிஃபனே தீந்துடுச்சா? அப்ப சாப்பிட ஒன்னுமில்ல போய்ட்டு வாங்கன்றீங்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

பசியோடு நின்று கொண்டிருந்த தனது சின்னய்யாவைப் பார்க்க பயமாக இருக்க, ''ஐயா உங்க அண்ணி வீட்லிருந்து அப்புறம் அவங்க ஃப்ரண்ட்சுன்னு எதிர் பார்த்தத விடவும் நிறையப் பேர் வந்துட்டாங்க அதான்...''

அன்றைக்குத் தனது அண்ணன் அண்ணியுடைய திருமண நாள்.

அதற்கு அவர்கள் நிறையப் பேரை அழைத்திருந்ததும் ஷ்யாம்சுந்தருக்குத் தெரிந்தது தான், அதற்காக வீட்டில் இருப்பவர்களுக்குக் கூடப் போதாத அளவுக்கா உணவு சமைப்பது.

''ஐயா ஒரு பத்து நிமிஷம் மட்டும் உக்காந்திருக்கீங்களா சட்னிய அறைச்சு தோசக்கல் வைச்சுடறேன்.''

அங்கு டைனிங் டேபிள் மேல் மூடி வைக்கப்பட்டிருந்ததைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தவன், ''பரவாயில்ல முத்தையா மதியம் செஞ்சதெல்லாம் அப்படியே இருக்கும் போலிருக்கு இதையே சூடு பண்ணி எடுத்துட்டு வாங்க'' என்றான்.

''இருந்தாலும் பழச...''

முத்தையன் தயங்க, ''நான் மதியம் சாப்பிடாததால எனக்கு இது புதுசுதான். சீக்கிரம் சூடு பண்ணி எடுத்துட்டு வர்றீங்களா?'' என்றான்.

தனது சின்னய்யாவின் குரலில் சற்று அழுத்தம் தெரிய, ''சரிங்கய்யா'' என்ற அதற்கு மேல் எதுவும்

பேசாமல் இரண்டு நிமிடங்களில் அனைத்தையும் சூடு செய்து எடுத்து வந்திருந்தான்.

ஆனால் அவருடைய மனம் தான் தவித்துக் கொண்டிருந்தது. இருந்திருந்து இப்படியா சின்னவருக்கே உணவில்லாமல் போவது. அதிலும் சின்னத்தனமோ சிக்கனமோ எப்பொழுதுமே சிறிதும் இல்லாத இந்த வீட்டில்.

அனைத்திற்கும் காரணமான அந்த வீட்டு மருமகளான இந்துமதியின் மேல் எரிச்சல் கூட வந்து விட்டிருந்தது முத்தையனுக்கு.

வீட்டில் சிறியவருக்கு உணவு வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லையே, இப்படியா துடைத்து வைத்ததைப் போல அனைத்தையும் அவர்களது சொந்தங்களுக்கும் தோழிகளுக்கும் கட்டிக் கொடுத்தனுப்பி விடுவது.

இப்படி மற்ற அனைவரும் சாப்பிட்டு முடித்துவிட்டு அந்த அம்மாவுக்கு மட்டும் எதையும் இல்லாது செய்திருந்தால், வீடு இரண்டு பட்டிருக்காதா?

எப்பொழுதுமே அனைத்தும் சரியாக நடந்தாக வேண்டுமென்று நினைக்கும் சின்னவர் கூட, இப்பொழுதெல்லாம் நிறைய விஷயங்களைக் கண்டும் காணாமல் விட்டுவிடுவது புரிந்தது, அதாவது பெருந்தன்மையாக.

அதிலும் ஷ்யாம்சுந்தரைப் பொறுத்தவரை என்ன நடந்தால் நமக்கென்ன என்று பொறுத்துப் போகும் குணம் கொண்டவனல்ல என்பதால், இதே நிலை தொடர்ந்தால் எங்கே பிரச்சனை ஒரு நாள் வெடித்து



விடுமோ என்ற பயம் கடந்த சில நாட்களாக அவருக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

''ஸ்மிர்த்தி சாப்டாச்சா முத்தையா.''

''ஆச்சுங்கய்யா.''

உணவு உள்ளே போகும் வேகத்திலேயே அவனுடைய பசியின் அளவு தெரிந்தது, பாவம் நேரங்காலம் பாராது கொஞ்ச நஞ்ச உழைப்பா.

''சரி முத்தையா நீங்களும் இப்படியே உக்காந்து முதல்ல சாப்பிடுங்க.''

''இல்லைங்கய்யா, நான் எல்லாத்தையும் ஒதுக்கி வெச்சுட்டு என்னோட வழக்கமான நேரத்துக்கே சாப்பிட்டுக்கறேன்.''

''ஏதோ ஒன்னு, ஆனா நேர நேரத்துக்கு கரெக்டா சாப்பிடுங்க.''

''சரிங்கய்யா, உங்களுக்குக் குடிக்கறதுக்கு...''

''எப்பவும் போல சூடா ஒரு டம்ளர் பால் ஃப்ளாஸ்க்ல ஊத்தி வெச்சுடுங்க'' என்று ஹாலுக்கு வந்திருந்தவன், ரிமோட்டை எடுத்து டி.வியை ஆன் செய்தான்.

பக்கத்து அறையில் சற்று சத்தமாகப் பரிட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கும் தங்கையின் குரல் கேட்டது, விட்டால் இப்படியே காலை வரை படித்துக் கொண்டிருந்துவிட்டுக் காலையில் குளித்துக் கிளம்பி பரிட்சைக்கும் சென்று விடுவாளென்று சிரிப்புக் கூட வந்தது.

பத்து நிமிடங்களில் எழுந்து தன் அறைக்குச் சென்றவன், பிறகு ஆஃபீஸில் இருந்து கொண்டு வரப்பட்ட பைல்களைப் பார்க்க ஆரம்பித்திருந்தான்.

ஷ்யாம்சுந்தர் அந்த வீட்டின் இளைய ஆண் மகன். ஒரு அண்ணன், ஒரு தங்கை என அவனுடன் பிறந்தவர்கள் இரண்டு பேர். அண்ணன் ராஜ் பிரபாகருக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் முடிந்திருக்க, அவர்கள் இருவருக்கும் இளையவளான தங்கை ஸ்மிர்த்தி இன்ஜினியரிங்கை முடிக்கும் தருவாயில் இருந்தாள்.

அவர்களுடையது சொந்தத் தொழில். பம்ப் இன்டஸ்ட்ரி ஒன்றை மிகப்பெரிய அளவில் நடத்தி வந்தார்கள்.

அந்த வீட்டின் தலைவரான கிருபாகரன் தான் அந்தத் தொழிலைத் தோற்றுவித்தார் என்றாலும், அவருடைய மகன்கள் இருவரும் தங்களது இன்டஸ்ட்ரியைக் காலத்திற்குத் தகுந்தாற் போல பல மடங்கு விஸ்தரித்து தரத்திற்கும் எந்தக் குறைவும் வந்துவிடாமல் நாளுக்கு நாள் விற்பனையை அதிகமாக்கிக் கொண்டே போனார்கள்.

பொதுவாக வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அப்படித் தோன்றும் என்றாலும், அந்த அளவிற்கு அவர்களுடைய தொழில் அடைந்திருக்கும் முன்னேற்றத்தின் பெரும்பங்கு ஷ்யாம்சுந்தரையே சாரும்.

இரவு பதினோரு மணி வரை கம்பெனி வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தவன், அதற்குப் பிறகே குளித்து பிரஸ் செய்துவிட்டுத் தூங்கப் போனான்.

எழுந்து குளித்து முடித்து ஆறு மணிக்கு அமுதா சமயலறைக்கு வந்த போது சமையல் வேலைகள் அனைத்தும் ஆரம்பமாகியிருந்தன.



''முத்தையா''

''அம்மா சொல்லுங்க'' என்று வந்தவனிடம் ''காபி ஒரு கப் குடு'' என்றார்.

''இதோ போடறேம்மா.''

''ஐயாவுக்குக் குடுத்துட்டயா?''

''ஆமாம்மா, ஐயாவுக்கும் சின்னய்யாவுக்கும் அஞ்சு மணிக்கே குடுத்துட்டேன்.''

சில நிமிடங்களில் ''எடுத்துக்கோங்கம்மா'' என்று வந்த முத்தையாவிடமிருந்து காபியை வாங்கிக் கொண்டார் அமுதா.

''என்ன டிபன் செய்யப்போற?''

''பொங்கல் சட்னியும், பூரி மசாலும்மா.''

''அப்படியே கொஞ்சம் உப்புமாவும் செஞ்சுடு.''

''சரிங்கம்மா.''

''எல்லாத்தையும் தயார் பண்ணி எட்டு மணிக்குள்ள டைனிங் டேபிள்ல வெச்சுடு முத்தையா, இல்லன்னா சீக்கரம் கிளம்பறவங்க அரைகுறையா சாப்பிட்டுப் போவாங்க.''

''சரிங்கம்மா, அதுக்குள்ளயே முடிச்சுடறேன்.''

''சரி அப்ப நான் போய் பூத்தொடுத்து சாமி படத்துக்குப் போட்டு பூஜைய முடிச்சுட்டு வந்துடறேன்'' என்று திரும்பியவரை மகள் அழைக்க, ''வா ஸ்மிர்த்தி நைட் கொஞ்ச நேரமாவது தூங்கினயா?'' என்று கேட்டார்.

''அதெல்லாம், நல்லாத் தூங்கிட்டுக் காலைல நாலு மணில இருந்து தான் எழுந்து படிச்சுட்டிருக்கேன்.''

''நிஜமாவா?''

''அட ஆமாம் மம்மி, சின்னண்ணா தான் நைட் பதினோரு மணிக்குக் கண்டிப்பாத், தூங்கப் போயே ஆகணும்னு சொல்லிட்டு காலைல நாலு மணிக்கு எழுப்பிவிட்டார்.''

''ஓ, சரி போய் பூஸ்ட் குடிச்சுட்டு குளிக்கப் போ.''

''அதெல்லாம் எழுந்தப்பவே குடிச்சாச்சு, நான் போய் குளிச்சுட்டு வந்து டிபனே சாப்பிட்டுக்கறேன்'' என்று ஸ்மிர்த்தி செல்லவும், அவளைத் தொடர்ந்து அவளுடைய பெரிய அண்ணன் ராஜ் பிரபாகர் வரவும் சரியாக இருந்தது.

ராஜ் பிரபாகருக்கும் காபி கலந்து கொண்டு வந்து கொடுத்த முத்தையன், அதற்குப் பிறகு வேகமாக டிபன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தான்.

''கண்ணா சாப்பிடாமையே எங்க கிளம்பிட்ட என்று வெளியே கிளம்புவதற்குத் தயாராக வந்த சின்ன மகனிடம் கேட்டார் பூத்தொடுத்துக் கொண்டிருந்த அமுதா.

''இங்க பக்கத்துல ஒரு வேல, ஒன்பது மணிக்குள்ள வந்துடறேம்மா'' என்று தாய்க்கு பதில் சொல்லிக் கொண்டே வெளியே வந்திருந்த ஷ்யாம்சுந்தர் பைக்கை எடுத்துக் கொண்டு பறந்தான்.

எட்டு மணிக்குள் அனைத்து வேலைகளையும் முடித் திருந்த அமுதா, ''ஸ்மிர்த்தி வந்து சாப்பிடு வா அப்புறம் லேட்டாயிடுச்சுன்னு ரெண்டு வாய் சாப்பிட்டு ஓடாத'' என்று வந்து மகளை சாப்பிட அழைத்தார்.



''இதோ ஃபைவ் மினிட்ஸ்ல வர்றேன் மம்மி.''

''குட்மானிங் ஸ்வீட் கேர்ள்.''

''வாங்க அண்ணி குட்மானிங்.''

''ஸாரி அத்தை, நைட் ஸெகண்ட் ஷோ போய்ட்டு வந்து லேட்டாத் தூங்கினதால காலைல நேரத்துல எழுந்திருக்க முடியல'' என்று வந்த மருமகளிடம் ''அத னால என்னம்மா பரவாயில்ல'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அமுதா.

தனக்கு எவ்வளவு நல்ல மருமகள் எழுவதற்கு லேட் டானதற்குக் கூட மன்னிப்புக் கேட்கிறாளே என்று பெருமையுடன் அமுதா நினைத்துக் கொண்டிருக்க, இல்லாவிட்டால் மட்டும் ஆறு மணிக்கு எழுந்து வந்து விடுகிற மாதிரி என்று ஸ்மிர்த்தியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''பெஸ்ட் ஆஃப் லக் கேர்ள், எக்ஸாம் நல்லா எழுது.''

''தேங்க்யூ அண்ணி.''

''எங்க ''ஹிந்து''வக் காணோம்'' என்று தனது பெரிய அண்ணன் ராஜ் பிரபாகர் ஆங்காங்கே பார்த்துக் கொண்டே வர, ''உங்களுக்கு முன்னாடி தான நிக்கறாங்க தெரியலையா அண்ணா'' என்று அவனுடைய மனை வியைக் காட்டிக் கேட்டாள் ஸ்மிர்த்தி.

''நிறையப் படிக்காத மூள குழம்பிப் போய்டும்னு எத்தன தடவ சொன்னேன் கேட்டியா?''

''யாருக்கு எனக்கா?''

''பின்ன பேப்பரத் தேடினா, உன் அண்ணியக் காட்ற.''

''ஓ, சரி அப்படிப் பாத்தாலும் மூள எனக்கு மட்டும் குழம்பின மாதிரி தெரியல'' என்று சின்னக்குரலில் சிரித்துக் கொண்டே சொன்ன தங்கையைப் பார்த்தான் ராஜ் பிரபாகர்.

''ஓ, அப்ப எனக்கும் சேத்து தான் மூள குழம்பிப் போய் டுச்சுன்னு சொல்றியா?''

''அச்சச்சோ அப்படின்னு நான் என் வாயால சொல் லல'' என்று சிரித்தவள், ''ரெண்டு ஹிந்து பேப்பர் எதுக்கு அவசியமில்லாமன்'னு அம்மா ஒன்ன எப்பவோ ஸ்டாப் பண்ணிட்டு வேற பேப்பர் வாங்க ஆரம்பிச்சுட்டாங்க. அது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள் தங்கை.

''ஆனா உனக்குக் குழம்பிப் போனது கன்ஃபார்ம் தான்''என்று ஜாடையாய்த் தலையைத் தொட்டுக் காட்டித் தங்கையைப் பார்த்துச் சொன்னவன், ''ஏன்னா வழக்கமில்லாத வழக்கமா எதிர்த்துக் கூடப் பேசறையே'' என்றான்.

''சரி இப்ப அந்த ஒன்னும் தான் எங்க?'' என்று கேட்ட தனது அண்ணனுக்கு, ''அத மாமா படிச்சுட்டிருக் காருங்க அவர் குளிக்கப் போற நேரந்தான் நீங்க போய் வாங்கிக்கோங்க'' என்ற அண்ணியின் பதில் ஸ்மிர்த்தி யின் காதில் விழுந்தது.

தான் சாதாரணமாக சிரித்துப் பேசியதைக் கூடத் தனது பெரிய அண்ணன் தவறாக எடுத்துக் கொண்ட தில் ஸ்மிர்த்தியின் மனதிற்குக் கஷ்டமாக இருந்தது.

இதுவே தனது சிறிய அண்ணனாக இருந்திருந்தால் தனக்குச் சரிக்கு சரியாக கேலி பேசியிருப்பதோடு



அல்லாமல் உடன் சேர்ந்தும் சிரித்திருப்பார் என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மேலும் சிறிது நேரத்தில் அவள் கல்லூரிக்குக் கிளம்ப, வீட்டிலிருந்த மற்ற சிலரும் கூட வெளியே கிளம்புவ தற்காக அவரவர்களுடைய வேலைகளைப் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள்.

சொன்னது போல ஒன்பது மணிக்குள் வந்து விட் டிருந்த சிறிய மகனை சாப்பிட அழைத்தார் அமுதா.

''எல்லாரும் சாப்டாச்சாம்மா'' என்று கேட்டுக் கொண்டே வந்து சாப்பிட அமர்ந்த மகனுக்குப் பரிமாறி யவர், ''ஆமாம்பா ஸ்மிர்த்தி எட்டரைக்குக் காலேஜ்க்கு கிளம்பிப் போனா, உங்க அப்பா கொஞ்சம் முன்னாடி தான் ஆஃபீஸ்க்குக் கிளம்பினார்'' என்றார்.

''என்னப்பா இப்படி ஆளே இளைச்சுட்ட?''

''எல்லா அம்மாவும் வழக்கமா சொல்ற மாதிரிதான் நீங்களும் சொல்றீங்கன்னு நினைக்கறேன். ஏன்னா நான் இப்ப ரெண்டு கிலோ வெய்ட் அதிகம் தான் ஆகியிருக் கேன்.''

''அப்புறம் கண்ணா உங்கிட்ட ஒரு விஷயம் பேச ணும்.''

''சொல்லுங்கம்மா.''

''நைட் உங்கப்பாவும் வரட்டும்'' என்று தனது தாய் சொன்ன விதத்தில், அது தனக்குப் பெண் பார்ப்பதைப் பற்றித்தான் என்பது ஷ்யாம்சுந்தருக்குப் புரிந்தது.

சிறிது நேரத்தில் சாப்பிட்டு முடித்தவன் மேலும் சில நிமிடங்களில், கம்பெனிக்குக் கிளம்புவதாகத் தனது தாயிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

நேராக வந்து கீ ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்த சாவியை எடுப்பதற்காகப் பழக்கதோஷத்தில் கையை நீட்டியிருந்தவன், அதற்குப் பிறகு தான் அங்கு எந்த சாவியும் இல்லையென்பதைக் கண்டான்.

அப்பொழுதுதான், அதாவது ஒரு சில வினாடிகளுக்கு முன்னர் தான் அங்கிருந்த கார் சாவியைத் தனது அண்ணி எடுத்திருப்பது தெரிய ''எனக்குக் கார் வேணும்'' என்று இந்துமதியைப் பார்த்துக் கேட்டான்.

அதை எதிர்பார்த்திருந்தாற் போன்று அடுத்த வினாடியே ''அப்புறம் நானெப்படிப் போறது?'' என்று பட்டென்று கேட்டாள் இந்துமதி.

''என் ஃப்ரண்ட் கல்யாண ரிசப்சனுக்குப் போறதுக்கு எனக்குக் கார் வேணும்'' என்று தன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டவள், தான் அணிந்திருக்கும் ஆடைக்குப் பொருத்தமாகக் காலணிகளைத் தேர்ந்தெடுப்பதில் முனைந்தாள்.

''நான் ஆபீஸ் போய் இறங்கிட்டு உடனே டிரைவர் கிட்டக் கொடுத்தனுப்பிடறேன்.''

''ஏன் நான் வேணும்னா மண்டபத்துல போய் இறங்கிட்டுக் கார அனுப்பறேனே,'' என்றாள் இந்துமதி.

கிழிந்தது. இன்னும் அரைமணி நேரத்திற்குள் போயாக வேண்டிய மீட்டிங்கிற்கு, இவர்கள் சென்று காரைத் திருப்பி அனுப்பும் வரை 'ஆ' என்று வாயைத் திறந்து கொண்டு காத்திருந்து செல்ல வேண்டுமாமா.

அங்கு நடந்து கொண்டிருந்த உரையாடலைக் கண்டு பயந்து போனார் அமுதா.



காலையில் ஒரு மீட்டிங்கின் முக்கியத்துவம் பற்றிக் கணவனும், மகனும் பேசிக் கொண்டது அந்த நேரம் பார்த்து நினைவிற்கு வந்தது அவருக்கு.

நீ வேண்டுமானால் வேறு எப்படியாவது போய் கொள்ளேன் என்று மருமகளிடம் சொல்வதற்காக அவர் வாயைத் திறக்கப் போகவும், எரிச்சலுடன் விடுவிடுவென்று மகன் அந்த இடத்தை விட்டுச் செல்லவும் சரியாக இருந்தது.

சிறிது கூட குற்ற மனப்பான்மையே இல்லாமல் எதையோ சாதித்து விட்டாற் போல இவளால் எப்படி சிரிக்க முடிகிறதென்று அமுதாவிற்கு மருமகளின் மேல் எரிச்சல் தான் வந்தது.

குடும்பத்திற்காக நேரங்காலம் பாராது உழைத்துக் கொண்டிருக்கும் சிறிய மகன் இப்பொழுதெல்லாம் தனது குணத்திற்கு நேர்மாறாக நிறைய விஷயங்களில் விட்டுக் கொடுத்து விடுவது புரிந்தது.

தான் நினைத்தது எதுவானாலும் அது நடந்தே ஆக வேண்டுமென்று நினைப்பவன் நிறைய மாறியிருக்கிறான், ஆனால் அந்த மாற்றமும் அவருடைய மனதிற்குள் பயத்தையே ஏற்படுத்தியது.

இது எத்தனை நாளைக்கு, திடீரென்று ஒரு நாள் பிரச்சனை வெடித்தால்.

அதோடு வீட்டில் அனைவருடைய உபயோகம் போக மேலும் ஒரு கார் அதிகப்படியாக இருந்தும் கூட இப்படியாகி விட்டதே என்ற ஆதங்கம் தான் அமுதாவிற்கு.

அதிலும் பார்க்கப் போனால் இந்தக் கார், அதாவது இப்பொழுது இந்துமதி தனக்கு வேண்டுமென்று எடுத்துச் செல்லும் கார் ஷ்யாமுடையது.

இதே ஷ்யாமுடைய இடத்தில் அவள் இருந்திருந் தால் ஏன் வேறு யார் இருந்திருந்தாலுமே கூட, அது அவர்களுடைய உரிமை என்னும் பட்சத்தில் கண்டிப் பாக விட்டுக் கொடுத்திருக்க மாட்டார்களென்றே அவ ருக்குத் தோன்றியது.

சின்னவனுக்கு எப்பொழுதுமே சின்னபுத்தி சிறிது கூடக் கிடையாது, அதோடு மிகுந்த பெருந்தன்மையும் கூட என்று நினைத்தவர், இனிவரும் நாட்களில் இந்த மாதிரி விஷயங்களில் மருமகளை சற்று எச்சரிக்கத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.

இந்துமதி மட்டும் நினைத்திருந்தால் இப்பொழுது அவள் தனது கணவனுடனே சென்று இறங்கியிருக் கலாம். அவளுடைய கணவனும் அதே வழியில் தான் செல்கிறான் என்பதோடு, பத்து நிமிடங்களுக்கு முன்னர் தான் கிளம்பியும் இருந்தான்.

இல்லையென்றால் கம்பெனிக்கு ஒரு போன் செய் திருந்தால், கால் மணி நேரத்தில் கூட ஏதாவது ஒரு காரை அனுப்பியிருப்பார்கள்.

அதுவும் இல்லையென்றால் பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் அவளுடைய வீட்டில் சும்மா தூங்கிக் கொண்டிருக்கும் அவளுடைய காரை டிரை வரிடம் சற்று முன்னரே சொல்லி எடுத்து வரச் சொல்லி யிருக்கலாம்.



அந்த வீட்டைப் பொறுத்த வரை இரவு மட்டும் முடிந்த அளவு அனைவரும் ஒன்றாக அமர்ந்து தான் உணவு உட்கொள்வது.

அனைவரும் சாப்பிட்டு முடித்துவிட்டு ஹாலுக்கு வந்திருக்க, தன்னறைக்குச் செல்வதற்காக மாடியேறப் போனான் ஷ்யாம்சுந்தர்.

பெற்றவர்கள் தன்னை அழைப்பது தெரிய திரும்பி என்னவென்பதைப் போலப் பார்த்தான்.

''உங்கூடக் கொஞ்சம் பேசணும்'' என்று தந்தை சொல்ல, ''சொல்லுங்க'' என்று அவருடன் சோபாவில் சென்று அமர்ந்தான்.

''என்னமா?'' என்று அவன் தனது தாயைப் பார்க்க, ''கண்ணா ரெண்டு நாளைக்கு முன்னாடி உங்கிட்டப் பேசின மாதிரி எல்லா ஜாதகங்களையும் வெச்சுப் பொருத்தம் பாத்தோம் அதுல நாலு ஜாதகம் ரொம்பப் பொருந்தியிருக்கு அதுல உனக்குப் பிடிச்ச பொண்ண நீ தேர்ந்தெடுத்துட்டாப் போதும்'' என்றவரை எதுவும் பேசாமல் பார்த்தான் ஷ்யாம் சுந்தர்.

''என்னப்பா?''

''உங்க இஷ்டம்னு சும்மா ஒரு வார்த்த சொன்னேன் அதுக்கே இந்த அளவுக்குப் போய்ட்டீங்களா?'' என்று தன்னைப் பெற்றவர்களைப் பார்த்தான்.

''அப்பக் கல்யாணம் பண்ணிக்கற ஐடியா இல்லையா?'' என்று தனது அத்தையின் அருகில் வந்து அமர்ந்தாள் இந்துமதி.

''இல்லாம, இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கல அவ்வளவுதான்.''

"சரி அப்பக் கல்யாணத்த வேணும்னா கொஞ்சம் தள்ளி வெச்சுக்கலாம், ஆனா இதுல ஒரு பொண்ண செலக்ட் பண்ணிடேன் கண்ணா" என்றார் அமுதா.

"என்னப்பா ரொம்பவும் யோசிக்கற?" என்று தனது தந்தையும் கேட்க, "எல்லாரும் ஒரு முடிவோட தான் இருக்கீங்கன்னு தெரியுது" என்றான் ஷ்யாம் சுந்தர்.

"பின்ன?" என்று அவனுடைய அண்ணன் ராஜ் பிரபாகர் வர, "அப்ப நான் மட்டும் தான் இங்க மிஸ் ஸிங்கா? இது ரொம்பவும் அநியாயம்" என்று ஸ்மிர்த்தியும் வந்து சேர்ந்தாள்.

"இது வேண்டாம்" என்று தனது கையிலிருந்த நாலு ஜாதகங்களில் ஒன்றை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டு மீதியை மகனிடம் நீட்டினார் அமுதா.

ஜாதகங்களுடன் போட்டோவும் இணைக்கப்பட்டிருக்க, என்னதான் பொருத்தம் இருக்கிறதென்றாலும் போட்டோவைப் பார்த்து வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதா என்று சிரிப்பு தான் வந்தது ஷ்யாம் சுந்தருக்கு.

வேண்டாமென்று தனது தாய் ஒதுக்கி வைத்திருந்த ஜாதகத்தைக் கையிலெடுத்தவன், அதற்குப் பிறகு தான் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த போட்டோவைப் பார்த்தான்.

அந்த ஜாதகமாகத்தான் இருக்க வேண்டும், அதைக் காட்டி அந்தப் பெரியவர் அதாவது ஜாதகங்களைக் கொடுப்பவர் தனது தாயிடம் சொன்னது தான் நினைவுக்கு வந்தது அவனுக்கு.



'ஒற்றைப் பெண், தாயும் மகளும் மட்டும்தான். ஏழைக் குடும்பம். கணவனிடமிருந்து விவாகரத்து வாங்கிக் கொண்டு பதினெட்டு வருடங்களாகத் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றாலும், தனது பெண்ணைப் பிரமாதமாக வளர்த்திருக்கிறார் அந்த அம்மா.

ஆனாலும் வசதியை வைத்துப் பார்க்கும் போது அவர்கள் உங்கள் அருகில் கூட நிற்க முடியாது' என்று அவர் சொன்னது தான் நினைவுக்கு வந்தது.

அந்த கோபால் தாத்தா முப்பது வருடங்களுக்கு மேலாகவே அந்தக் குடும்பத்திற்குப் பழக்கமானவர்.

தவறாகவோ மிகைப்படுத்தியோ அவர் எப்பொழுதுமே எதையும் சொல்பவரல்ல, அதனாலேயே அவர் கைவசம் இருக்கும் ஜாதகங்களை அவ்வப்பொழுது அவனது தாய் கேட்டு வாங்குவதும்.

அதோடு கடந்த ஆறு மாதங்களாகவே இடைவிடாது இந்த வேலை நடந்து கொண்டிருப்பதும் அவன் அறிந்ததே.

"என்னப்பா ஏதோ யோசனைல இருக்க?" என்று கேட்ட தனது தாயிடம், "இந்தப் பொண்ண வேணும்னாப் பாக்கலாம்மா" என்று அவர் வேண்டாமென்று ஒதுக்கி வைத்திருந்த ஜாதகத்தைக் காட்டிச் சொன்னான் ஷ்யாம்சுந்தர்.

தனது கொழுந்தனார் கொடுத்த ஜாதகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு "இதுவா?" என்று சற்று அதிர்ச்சியுடன் கேட்டாள் இந்துமதி.

"இந்த இடம் வேண்டாமே கண்ணா" என்று தாய் சொல்ல, ஏனென்று கேட்டான் மகன்.

''அவங்க வசதியில ரொம்பவும் குறைஞ்சவங்க, அதோட மத்தபடியும் ஒன்னும் நல்லா இருக்கற மாதிரித் தெரியலப்பா.''

''ஆனா பொருத்தம் இருக்கு தான?''

''அது மட்டும் இருந்து என்னத்துக்கு?'' என்று அமுதா சொல்ல, ''அதான நம்ம அந்தஸ்த்துக்கு ஏத்த மாதிரி இருக்க வேண்டாமா?'' என்று தானும் தனது அத்தையுடன் சேர்ந்து கொண்டாள் இந்துமதி.

''ஆமா ஷ்யாம். அம்மா கைல இருக்கற மத்த ஜாதகங்கள் மூணுமே நம்ம வசதிக்கும், அந்தஸ்த்துக்கும் ஏத்த மாதிரியான இடங்கள். அதோட நம்ம குடும்பத்துல சம்பந்தம் வெச்சுக்கறத அவங்க எல்லாருமே பெருமையா நினைக்கறாங்க'' என்று ஒரு தந்தையாகத் தானும் சொன்னார் கிருபாகரன்.

கை மறைவில் ஒரு கொட்டாவியை வெளியிட்டுக் கொண்டே ''நான் சொன்னத வேணும்னாப் பாருங்க இல்லன்னா விடுங்க இன்னொரு வருஷம் போகட்டும்'' என்று தன்னைப் பெற்றவர்களைப் பார்த்துச் சொன்னவன், ''சரிப்பா எனக்குக் கொஞ்சம் வேலயிருக்கு'' என்று எழுந்து கொண்டான்.

அவன் ஒன்றை நினைத்து விட்டால் அது நடக்கிறதோ இல்லையோ மற்றவர்கள் சொல்வது கண்டிப்பாக நடக்காது என்பது தெரிந்த விஷயமென்பதால், அதற்கு மேல் யாரும் எதையும் பேசாமல் மேலே ஆக வேண்டிய வேலைகளைப் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள்.



# 2

''நான் போகல, அவ்வளவுதான்.''

''அட என்னமா நீ? உங்கூட வேல செய்யற மாலினி கிட்ட கூடப் பேசினேன் எல்லாருமே தான் போகப் போறாங்களாமே.''

''சரி இருக்கட்டும், அதனாலென்ன?''

''அதனாலென்னவா? வயசுக்கேத்த ஆசாபாசங்களும் இருக்க வேண்டாம்? கண்டிப்பா உங்க கம்பெனில இருந்து போற டூருக்கு நீயும் போகத்தான் போற'' என்று முடித்து விட்டிருந்தார் சுகந்தி.

அந்தக் குரலில் தனது தாய் சொல்லிவிட்ட பிறகு, அப்போதைக்கு மீண்டும் அதை மறுத்து எதையும் சொல்ல வேண்டாமென்று சசிரேகாவும் விட்டு விட்டாள்.

இந்த அம்மாவுக்கென்ன, முழுமையாக இரண்டு இரவுகள் மூன்று பகல்கள் இவரை மட்டும் தனியாக விட்டுச் செல்வதா.

ம்கூம். கண்டிப்பாகத் தான் போகவே கூடாதென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்து விட்டிருந்தாள் என்றாலும், அதைத் தாயிடம் சற்று யோசித்து அவர் ஒத்துக் கொள்ளக் கூடிய வேறு ஏதாவது காரணத்துடன் சொல்லிக்

கொள்ளலாமென்று அதற்கு மேல் அப்போதைக்கு எதுவும் பேசாமல் விட்டுவிட்டாள்.

''சசி''

''சொல்லுங்கம்மா''

''இன்னைக்கு உனக்குக் கொஞ்சம் டைம் இருக்கு மாம்மா?''

''எதுக்குமா?''

''கரண்ட் பில் கட்டிட்டுப் போகணும்.''

''நாளைக்கு வேணும்னாக் கட்டிடறேன்மா. இன்னும் ஒரு வாரம் டைமிருக்கே.''

''பரவாயில்லமா நாள் ஆக ஆகக் கூட்டமாயிடும், நான் வேணும்னாப் பக்கத்து வீட்டு நித்யன் தம்பிகிட்டக் குடுத்துக் கட்டச் சொல்லிடறேன்.''

''எதுக்குமா நம்மால மத்தவங்களுக்கு சிரமம்?''

''எனக்கொரு சிரமமும் இல்ல'' என்ற குரலில் தாய் மகள் இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''வாங்க தம்பி'' என்று சுகந்தி வரவேற்க, தானும் வந்தவனை வரவேற்றாள் சசிரேகா.

''உக்காரறதுக்கெல்லாம் இப்ப நேரமில்ல ஆன்ட்டி, நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருந்த மாதிரி நான் என்னோட கரண்ட் பில்லக் கட்டத்தான் போறேன் உங்க அட்டயக் குடுத்தீங்கன்னா உங்களுக்கும் சேத்தே கட்டிடுவேன்.''

அவன் சொல்வதை மறுத்து எதையோ சொல்வதற்காக சசிரேகா வாயைத் திறக்கப் போக, அதற்குள் அவளை முந்திக் கொண்டான் நித்யன்.



''இப்படி ஏதாவது ஒரு உதவியவாவது நான் செஞ்சு குடுத்தாத்தான் நானும் குற்ற மனப்பான்மையே இல்லாம உங்ககிட்ட ஏதாவது உதவி கேட்டு வர முடியும்'' என்றான்.

''அதுலயும் ஆன்ட்டியால எனக்கு எத்தன காரியம் ஆகுது தெரியுமாங்க? குரியர், சிலிண்டர்னு எனக்கு வர்றதையெல்லாம் வாங்கி வெச்சுடறாங்க, சமயல் செய்யும்போது ஏதாவது வேணும்னா அப்படியே ஒரு எட்டு வந்து வாங்கிட்டுப் போய்க்கறேன். இப்படி இன்னும் எத்தனையோ'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கரண்ட் ரீடிங் அட்டை, பணத்தோடு வந்தார் சுகந்தி.

அதை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டவன், இருவரிடமும் பொதுவாக ஒருமுறை சொல்லிக் கொண்டு கிளம்பிவிட்டிருந்தான்.

அவர்களுடைய வீட்டிற்கு அடுத்ததாக இருக்கும் வீட்டில் தான் நித்யனும் வாடகைக்குக் குடியிருந்தான்.

இரண்டு தங்கைகள், இரண்டு தம்பிகள் தாய் தந்தை என அவனுடையது பெரிய குடும்பம்.

கிராமத்தில் வசித்து வரும் அவனுடைய குடும்பத்திற்குத் தானே சமைத்து உண்டு சிக்கனம் பிடித்துத் தனது சம்பாத்தியத்தின் பெரும்பகுதியைப் பணமாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்ப்பது ஒரு பெரிய புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் மார்க்கெட்டிங் வேலை, காலையில் ஒன்பது மணிக்குக் கிளம்பினான் என்றால் இரவு பத்து பத்தரைக்குத் தான் வீடு திரும்புவான்.

அவனைப் பார்ப்பதே அரிது என்பதோடு, அப்படியே பார்த்தாலும் அளவாக இரண்டு வார்த்தைகள் மட்டும் பேசிவிட்டுச் சென்று விடுவான், அதுகூட சுகந்தியிடம் மட்டும் தான்.

அதிலும் ஆண் துணையில்லாத தனது வீட்டிற்கு, உதவும் மனப்பான்மையுடைய அந்த நல்ல இளைஞன் பக்கத்து வீட்டில் வசிப்பதே சற்று தைரியத்தைக் கொடுத்தது சுகந்திக்கு.

''அம்மா நான் வேலைக்குக் கிளம்பறேன், நீங்க வயிறு நிறைய சாப்பிட்டு மெதுவாப் போய்க் கடயத் திறங்க போதும்'' என்றாள் சசிரேகா.

''சரிங்கம்மா'' என்ற தாயின் பாவனையில் சிரித்துக் கொண்டே சசிரேகா செல்ல, மகள் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டே வீட்டிற்குள் வந்தார் சுகந்தி.

ஓய்வே இல்லாமல் ஒவ்வொரு நாளும் சந்தோஷமாக உழைக்கும் மகளை நினைக்கப் பெருமையாக இருந்தது அவருக்கு.

அவர்களுடையதும் வாடகை வீடு தான், வீட்டின் முன் பகுதியைக் கடையாக்கி இருந்தார்கள். காயின் டெலிபோன் பூத், கொஞ்சம் ஸ்டேஷனரி பொருட்கள் மற்றும் இவற்றோடு ஒரு பெட்டிக் கடைக்கான பொருட்கள் கொஞ்சமும் இருந்தன.

அவர்களது வீடு இருப்பது ஒரு புறநகர்ப் பகுதி, அங்கு மொத்தமாகவே ஒரு நூறு வீடுகளுக்குள் தான் இருந்தன.

கடையிலிருந்து வரும் மாத வருமானம் கிட்டத்தட்ட வீட்டு வாடகைக்கு மட்டும் தான் சரியாக இருந்தது,



மற்றபடி வீட்டுச் செலவு, பால், எல்.ஐ.சி, பஸ் செலவு என அனைத்திற்குமே சசிரேகாவுடைய சம்பளம் தான் உதவியது.

நிலைமை இப்படியே போய்க் கொண்டிருந்தால் மகளை எப்படித் திருமணம் செய்து கொடுப்பது என்ற கவலை சில வருடங்களாக அவருக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

கூடவே தன் சுகத்திற்காக மகளுடைய வாழ்க்கையைப் பலி கொடுப்பதைப் போன்ற ஒரு வலியும்.

அவருடைய கவலைக்கும் பொருள் இருந்தது, அந்த அளவிற்கு நிறைய விஷயங்களில் அவருடைய மகள் தன் சுகத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தன்னுடைய தாய்க்காகவே எப்பொழுதும் பார்த்துப் பார்த்து அனைத்தையும் செய்து கொண்டிருந்தாள்.

அன்று அலுவலகத்தில் தன்னிடத்திற்குச் சென்று ஹேண்ட் பேக்கை வைக்கும் போதே அனைவரும் வந்து விட்டிருந்ததைக் கண்டாள் சசிரேகா, கூடவே தனக்காக அவர்கள் காத்துக் கொண்டிருப்பதையும்.

''என்ன சசி நீ என்ன டிசைட் பண்ணியிருக்க?''

அனைவருக்கும் பொதுவாக ஒரு குட்மானிங் சொன்னவள், ''எதப்பத்தி?'' என்று கேட்டாள்.

''ம், டூருக்குப் போறதப் பத்தி.''

''பாக்கலாம்'' என்றாள் சசிரேகா.

''போடி நீ வரலேன்னா நல்லாவே இருக்காது.''

''கண்டிப்பா வர ட்ரை பண்றேன் மாலினி.''

''ஓ அப்ப நீ வரக் கூடாதுன்னு டிஸைட் பண்ணிட் டேங்கறது நல்லாத் தெரியுது'' என்றாள் அவள்.

தனக்கு மட்டும் என்ன ஆசையே இல்லையா, தனது தாயைப் போலவே இவர்களும் பேசுகிறார்களே என்று நினைத்தவளுக்கு சிரிப்புத் தான் வந்தது.

ஏற்கனவே சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதி குடும்பச் செலவுகளுக்கே சரியாகிவிடுகிறது.

எவ்வளவோ சிக்கனமாக மூன்று வருடங்கள் சேமித் திருந்தும் கூட, சசிரேகா ஆசைப்பட்டபடி ஒரு ஸ்கூட் டியை வாங்கிக் கொள்வதற்கு ஒரு ஐந்தாயிரம் ரூபாய் துண்டு விழுந்தது.

இப்பொழுது சுற்றுலாவுக்கு மட்டும் செல்லாமல், கூடவே மேலும் சில மாதங்களும் சேமித்துவிட்டால் தனது நீண்ட நாளைய கனவான ஸ்கூட்டியை வாங்கியே விடலாமென்பதில் சசிரேகாவுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை.

காலையில் வேலைக்குப் போவதில் ஆரம்பித்து, மாலையில் வீடு போய்ச் சேரும் வரை இடையில் இன் னும் எத்தனையோ வேலைகளுக்கு ஒவ்வொரு நாளும் அவள் படும் சிரமம் உண்மையிலேயே மிகவும் அதிகம், அந்த அளவிற்கு அவளது வீடு இருக்கும் பகுதிக்கு ஒரு சில பேருந்துகள் மட்டுமே இருப்பதோடு அதுவும் சில குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் தான் இருந்தன.

அனைத்திற்கும் மேலாக மூன்று நாட்கள் தனது தாயைப் பிரிவதைப் பற்றியும் அவளால் சிறிதும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.



தான் செல்லக் கூடாது என்பதற்காக சசிரேகா இப்படி இன்னும் எத்தனையோ காரணங்களை மனதிற்குள் அடுக்கிக் கொண்டிருந்தாலும், கடைசியில் அவள் சுற்றுலாவுக்கு செல்லும்படிதான் நேர்ந்தது.

சந்தோஷமாக சுற்றுலாவிற்குச் செல்லும் மகளை வழியனுப்பி விட்டு வந்த சுகந்தி, சிறிது நேரத்தில் நின்று விடப் போகும் தண்ணீரை வேகமாக செடிகளுக்குப் பாய்ச்சுவதில் முனைந்தார்.

சில நிமிடங்கள் தான் சென்றிருக்கும் திடீரென வேர்த்து விறுவிறுத்துப் போய் அமர்ந்து விட்டவரை, தானும் வெளியே செடிகளுக்குத் தண்ணீரைப் பிடித்து ஊற்றிக் கொண்டிருந்த நித்யன் பார்த்துவிட்டு ''என்ன ஆன்ட்டி?'' என்று வேகமாக அருகில் ஓடி வந்தான்.

''என்னவோ தெரியலப்பா கொஞ்சம் ஒரு மாதிரி யிருக்கு'' என்று அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு பேச முடியாமல் சிரமப்பட, அவர் தடுத்தும் கேட்காமல் ஓடிப் போய் அடுத்த வீதியிலிருக்கும் தனக்குத் தெரிந்த கால் டேக்ஸி ஒன்றை சில நிமிடங்களில் அழைத்து வந்திருந்தான் நித்யன்.

அப்படியே அடுத்த கால் மணி நேரத்தில் சுகந்தியை அருகிலிருக்கும் ஒரு மருத்துவமனைக்கும் அழைத்துப் போயிருந்தான்.

''எனக்கு எதுவுமில்ல தம்பி, அப்போதைக்கு இப்பக் கொஞ்சம் பரவாயில்ல பேசாம இப்படியே வீட்டுக்குப் போயிடலாமே'' என்று தன்னிடம் சொன்ன ஆன்ட்டியைப் பார்த்து ''கொஞ்சம் தான ஆன்ட்டி, ஒரு செக்கப் மட்டும் பண்ணிக்கிட்டா மீதியும் சரியாயிடம், ஃப்ரீயா இங்க உக்காருங்க'' என்று ஆசுவாசப்படுத்தினான் நித்யன்.

மூன்றாம் நாள் சுற்றுலாவை முடித்துக் கொண்டு மகள் திரும்பி வந்த போது, சிரித்த முகத்துடன் அவளை வரவேற்றார் சுகந்தி.

''என்னமா ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க?''

''அது சரிதான், வாடாம்மா பசியோட வந்திருப்ப குளிச் சுட்டு வந்து முதல்ல சாப்பிடு. அப்புறம் டூர் ஜாலியா இருந்ததா?''

''ஓ ரொம்ப ரொம்ப, முதல்ல உங்க சந்தோஷத்துக் கான காரணத்த சொல்லுங்களேன்.''

''சொல்றேன், நீ கை கால் அலம்பிட்டாவது வந்து சாப்பிடு.''

என்னவாக இருக்கும் என்ற யோசனையுடனேயே, ''இதோ வர்றேன்'' என்று சென்றாள் சசிரேகா.

மகள் சற்றே நகர்ந்ததும், அவ்வளவு நேரம் பேசியதே ஒரு பெரிய பாரமாக அப்படியே அமர்ந்து விட்டார் சுகந்தி.

சில நிமிடங்களில் திரும்பி வந்த மகளுக்குத் தயாராக இருந்த டிபனைப் பறிமாறினார்.

''சுத்தமாவே பசியே இல்ல ஆனா நீங்க விட மாட்டீங் களே'' என்றவள், ''நீங்க பேசாம உக்காருங்கம்மா. எனக்கு நான் எடுத்து வெச்சுக்கூட சாப்பிட்டுக்க மாட்டேனா?'' என்று செல்லமாகத் தாயைக் கடிந்து கொண்டாள்.

''அது சரிதான்'' என்று தானும் ஒரு சேரில் அமர்ந்து கொண்ட தாயிடம், ''என்னமா சந்தோஷமான விஷயம் சொல்லுங்களேன்'' என்றாள்.

''முதல்ல சாப்பிடுமா.''



தாயின் செய்கை சற்று வித்யாசமாக இருக்க, பேசா மல் சாப்பிடுவதில் முனைந்தாள் சசிரேகா.

சில வினாடிகளில் ''கோபால் தாத்தா வந்துட்டுப் போனார்மா'' என்று மகளைப் பார்த்தார் அவர்.

''எதுக்கு?'' என்று சற்று எரிச்சலுடன் பட்டென்று கேட்டவள், தாயின் பார்வையில் ''இல்ல அவர் அவ சியமில்லாம வரமாட்டாரே அதனால கேட்டேன்'' என்றாள்.

''ஆமா அவசியத்தோட தான் வந்துட்டுப் போனார். உன் ஜாதகத்தை ரெண்டு மூணு இடங்கள்ள குடுத் திருக்கார். அதுல ஒரு இடத்திலிருந்து வர்ற வாரம் உன்னப் பொண்ணுப் பார்க்க வர்றாங்களாம்.''

''என்னமா இது?''

''எது?''

''இப்ப எனக்கொன்னும் கல்யாணம் வேண்டாம்.''

''ஏன்?''

''வேண்டாம்னா வேண்டாம். அவ்வளவுதான்.''

''பின்ன எப்பப் பண்ணிக்குவ?''

''அதெல்லாம் தெரியாது. ஆனா இப்ப வேண்டாம்.''

''என்னடி இப்ப வேண்டாம்? நீதான் எனக்கு ஒரு பெரிய கவலையா இருக்க. உனக்கு மட்டும் ஒரு கல் யாணத்தப் பண்ணி வெச்சுட்டேன்னா, நான் எவ்வளவு நிம்மதியா இருப்பேன் தெரியுமா.''

..........

''இந்த ஒரு விஷயத்துல நான் சொல்றத நீ கண்டிப் பாக் கேட்டுத் தான் ஆகணும்.''

''தயவுசெஞ்சு சொன்னாக் கேளுங்கம்மா.''

''முடியாதுமா என்னால எதையும் கேக்க முடியாது. இந்த விஷயத்துல நான் சொல்றது நீ கேட்டுத்தான் ஆகணும். எப்ப உன்னப் பாக்க வர்றாங்கன்னு சொல்ற துக்காக அந்தத் தாத்தா இப்பக் கொஞ்ச நேரத்துல வருவார், நீ சிரிச்ச மாதிரி அவருகிட்ட பேசற சொல் லிட்டேன்.''

..........

''எனக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியிருக்கு நான் போய் ரெஸ்ட் எடுக்கறேன்'' என்று சொல்லிவிட்டு அவளுடைய தாய் சென்ற திசையையே சாப்பிடவும் மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள் சசிரேகா.

திடீரென்று இப்படியொரு அதிர்ச்சியை மட்டும் சுகந்தி மகளுக்குத் தராமல் இருந்திருந்தால், அவர் உடம்புக்கு முடியவில்லையென்று சொல்லிவிட்டுப் போனதற்கு தாயுடன் கூடவே சென்று என்ன ஏதென்று கேட்டறிந்து அதற்கு எத்தனையோ இதங்களை சொல்லியும் இருப்பாள்.

ஆனால் எதிர்பாராத விதமாக வந்த திடீர் அதிர்ச்சி யில் சுற்றுப்புறத்தையே மறந்து மகள் விழித்துக் கொண் டிருக்க, தாயின் மனநிலையோ வேறு மாதிரியிருந்தது.

தான் உண்மையையே சொன்னாலும் அப்போதைக்கு அது மகளின் கருத்தை எட்டுவது சந்தேகம் தான் என் பதையும் அவர் அறிந்தே தான் இருந்தார்.

சாதாரணமாக ஒரு காய்ச்சல் ஜலதோஷம் எனும் போதே என்ன ஏதென்று துளைத்துத் தன்னை ஒரு வழி



செய்துவிடும் மகளுக்கு மட்டும், தனக்கு இவ்வளவு பெரிய பிரச்சனை இருப்பது தெரிந்தால்.

அதனால் தான் அப்போதைக்குத் தன் பிரச்சனை மகளுக்குத் தெரியவே கூடாது என்பதிலும் அவர் உறுதி யாக இருந்தார்.

அதற்குக் கடவுளே உதவி செய்தாற் போல சரியாக அந்த நேரம் பார்த்து மகள் சுற்றுலாவிற்குச் சென்றிருந் தது வேறு மிகவும் உதவிகரமாக அமைந்துவிட்டிருந்தது.

சசிரேகாவுக்கு நான்கு வயதிருக்கும் போது, அவ ளுடைய தந்தை இரண்டாம் திருமணம் செய்து கொண் டிருந்தார்.

அப்பொழுதுதான் அவருடைய பெற்றவர்களுக்காக வும் சமூக அந்தஸ்த்திற்காகவும் மட்டுமே தன்னைத் திருமணம் செய்து கொண்ட கணவனுக்கு, தங்களது திருமணத்திற்கு முன்பிருந்தே அந்தப் பெண்ணுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது தெரிய வந்தது.

மனைவியிடமிருந்து பலத்த எதிர்ப்பு வருமென்பதை அவர் எதிர்பார்த்து தான் இருந்தார் என்றாலும், ஒரேயடி யாக நின்று தனக்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பும் வரை மனைவியின் கோபம் செல்லுமென்று அவர் சிறிதும் எதிர்பார்த்தார் இல்லை.

அப்படி விவாகரத்து வாங்கிக் கொண்டு பிரிந்து சென்ற மனைவி, தன்னிடமிருந்து எந்த உதவியையும் பெற்றுக் கொள்ளாமல் அதே வைராக்கியத்துடன் தனி யாளாக நின்று தனது மகளை சிறப்பாக வளர்த்ததும் அவரது தன்மானத்திற்கு ஒரு அடியாகத்தான் இருந்தது.

ஆனால் சுகந்தியின் மனநிலையோ வேறு மாதிரி கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

புழுவைப் போல எந்நேரமும் மனதை அரித்துக் கொண்டிருக்கும் அந்தக் கவலை நாளுக்கு நாள் அவருடைய உடல்நிலையை பலவீனப்படுத்தியும் இருந்தது.

சமுதாயத்தில் மிகப்பெரிய அந்தஸ்த்தில் இருக்கும் தனது மாஜி கணவனிடமிருந்து அவரே தொடக்கத்தில் தன்னிடமும் அதைத் தொடர்ந்து தான் ஒரேயடியாக மறுத்து விட்டதின் விளைவாக மகளிடமும் கட்டாயப் படுத்திக் கொண்டிருப்பது போல 'அவரது உதவிகளை யாவது நாம் பெற்றுக் கொண்டிருக்கலாமோ' என்ற எண்ணமும் கூட அவருடைய கவலைக்கான மிக முக் கியமான காரணங்களுள் ஒன்று என்றால் அது மிகை யல்ல.

அந்த எண்ணம் கூட தனது மகளுக்காகத்தான், அதுவும் ஒரு சில மாதங்களாக மட்டும்.

என்னதான் அவளுடைய தந்தையே இருந்து வளர்த் திருந்தால் எப்படி வளர்த்திருப்பாரோ அதேபோல மிகப் பெரிய பள்ளியில் படிக்க வைத்து, அவள் விரும்பிய கலைகளையெல்லாம் கற்றுக் கொடுத்துத் தானும் சிறப்பாக மகளை வளர்த்திருந்தாலும், 'தனது வீம்புக்காக மகளின் வாழ்க்கையை பலி கொடுத்து விட்டாற் போன்ற ஒரு வேதனை மட்டும் அவரை விட்டு அகலுவ தாக இல்லை.

ஏற்கனவே இப்படி ஏதேதோ எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தவர் மூன்று நாட்களுக்கு முன்னர்



வந்த இதயப் பிரச்சனையில், மகளுக்கென்று ஒரு வாழ்க் கையை அமைத்துக் கொடுக்காமலே போய்ச் சேர்ந்து விடுவோமோ என்று மிகவும் மனமுடைந்து போயிருந் தார்.

ஆனால் அவர் சற்றும் எதிர்பார்த்திராத விதமாக கடவுளே அந்தக் கவலைக்கு ஒரு தீர்வைக் காட்டி விட்டிருந்ததில் மனம் ஓரளவு நிம்மதியடைந்தாலும், அனைத்தும் நல்லபடியாக நடந்து முடிய வேண்டுமே என்ற ஒரு இனம்புரியாத பயம் வந்து மீண்டும் அவரைப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் சுகந்தியின் எதிர்பார்ப்பை விடவும் மிகவும் நன்றாகவே தொடர்ந்து வந்த சில நாட்களுக்குள்ளேயே அவளுடைய மகளின் திருமண நிச்சயம் வெகு சிறப் பாக நடந்து முடிந்தது.

# 3

மறுப்பிற்கு மதிப்பில்லையென்பதோடு அர்த்தமும் இல்லையென்பதால் சசிரேகாவும் அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் விட்டுவிட, அந்த வாரமே பெண் பார்க் கும் படலம் எந்தக் குறையுமில்லாமல் நடந்தேறியது.

தங்களது வீட்டிற்குப் பொருத்தமே இல்லாதது போலப் பெரிய பெரிய கார்களும் நிறையப் புதிய மனிதர்களும் வந்துவிட்டுப் போனதில், தனக்குச் சம்பந்தமில்லாத

எதுவோ நடப்பதைப் போன்ற ஒரு விசித்திரமான உணர்வு தான் சசிரேகாவுக்கு.

ஐயோ பாவம், பரிதாபம் என்பதைப் போல வந்தவர்களில் நிறையப் பேரின் பேச்சு இருக்க, முக்கியமாகத் தனது வருங்கால மாமியார் என்று வந்திருந்தவர்களால் அடையாளம் காட்டப்பட்டிருந்த பெண்மணி யாருடைய வார்த்தைகளுக்கோ கட்டுப்பட்டு இயந்திரம் போல அனைத்தையும் செய்வதைப் போலத்தான் பட்டது சசிரேகாவுக்கு.

இருந்திருந்து தனக்கு இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையா என்று நெஞ்சுக்கூடே அதிர, தனது தாய்க்காகத் தானே என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு முகத்தில் எந்த வித்தியாசமும் தெரிந்து விடாதவாறு நடந்து கொண்டாள்.

ஒரே ஜாதியென்றாலும் அவ்வளவு வசதி படைத்தவர்கள் நம் சசியை ஏன் பெண் கேட்டு வர வேண்டுமென்று பக்கத்து வீட்டுப் பெண்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டது தான் நினைவுக்கு வந்தது. கூடவே வசதி மட்டும் தானே மற்றபடி சசியின் குடும்பத்திற்கு என்ன குறைவு, பெண்ணுக்கு அழகில்லையா, படிப்பில்லையா. என்னதான் நகைக்கடைகளாகக் காரில் வந்து இறங்கினாலும் நம் சசியின் அழகில் பாதியளவு கூட, வந்து போன பெண்களில் ஒருத்திக்கும் இல்லையே என்று அவர்கள் மிகைப்படுத்திப் பேசிக் கொண்டதும். ஆனாலும் அனைவராலும் ஒருமனதாக ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு விஷயமும் இருந்தது, மாப்பிள்ளை பார்க்க கம்பீரமாக ராஜா மாதிரி இருக்கிறார் நம் சசிக்கு ஏற்ற பிரமாதமான ஜோடி என்பது தான் அது.



தனக்கு ஏற்ற ஜோடியோ இல்லையோ ஆனால் தான் பார்த்த அளவில் தனது வருங்காலக் கணவன் பார்க்க நன்றாகத்தான் இருந்தான் என்பதோடு அவனுடைய முகமும் எங்கோ பலமுறை பார்த்துப் பழக்கப்பட்டது போலத் தோன்றியது சசிரேகாவுக்கு.

அதற்குப் பிறகு திருமண வேலைகள் அனைத்தும் இயந்திர கதியில் வேகமாக நடந்தன. தொடர்ந்து வந்த ஒரு மாதத்திற்குள்ளேயே திருமணத் தேதியும் குறிக்கப்பட்டது.

மகளின் திருமணத்திற்கென்றே பல வருடங்களாகச் சேர்த்து வைத்திருந்த பணத்தை எடுத்து, ஓரளவு நன்றாகவே சீர் முறைகளை வாங்கிச் சேர்த்தார் சுகந்தி.

ஒருசில வார்த்தைகளே என்றாலும் அன்பாக சில முறை தனது வருங்காலக் கணவன் தன்னை அழைத்துப் பேசியதில், நெஞ்சம் நிறைய இருந்த பயம் நீங்கி மணப்பெண்ணிற்குரிய அழகு பெற்றுத் திகழ்ந்தாள் சசிரேகா.

தொடர்ந்து வந்த நாட்களில் நிச்சயிக்கப்பட்டிருந்தது போல சசிரேகா, ஷ்யாம்சுந்தரின் திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

என்னதான் தனது புகுந்த வீட்டினர் மிகவும் வசதி படைத்தவர்களென்று சசிரேகாவுக்குத் தெரியுமென்றாலும், செல்வத்திலும் செல்வாக்கிலும் தான் எதிர்பார்த்ததை விடவும் பலமடங்கு மேலோங்கி இருந்தவர்களுக்கிடையே தான் மட்டும் தனித்து விடப்பட்டது போல உணர்ந்தாள்.

தனது கணவனுக்கு அஞ்சியே அனைவரும் முக்கியமாகத் தன்னுடைய புகுந்த வீட்டுப் பெண்கள் தேவையற்ற எதையும் பேசாமல் இருக்கிறார்களோ என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் இது எத்தனை நாளைக்கு என்ற பயமும் நெஞ்சுக்குள் வந்து போனது.

தொடர்ந்து வந்து கொண்டே இருந்த அவனுடைய நண்பர்களையும், உறவினர்களையும் கணவன் தனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்க, எப்போதாவது வந்த தன் பக்க மனிதர்களையும் கணவனுக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள் சசிரேகா.

பந்தா சிறிதும் இல்லாமல் வந்திருந்தவர்கள் அனைவரிடமும் இனிமையாகவும், அதே சமயம் கம்பீரமாகவும் பேசிக் கொண்டிருந்த கணவனின் மேல் மிகுந்த மரியாதை ஏற்பட்டிருந்தது சசிரேகாவுக்கு.

அன்று மதியத்திற்கு மேல் தங்களது சொந்தங்களுடன் தனது தாயும் விடைபெற்றுக் கொண்டு செல்ல, புதிய மனிதர்களுக்கு மத்தியில் ஒன்றும் செய்வதறியாது திகைத்து நின்றாள்.

கண்களுக்கு முன்னால் நீண்டு விரிந்து தெரிந்த எதிர்காலம் ஒரு பெரிய கேள்விக்குறி ஆகிவிட்டாற் போல மனதை மருட்ட, ''என்னமா?'' என்று பரிவாகக் கேட்ட கணவனின் குரலில் அவன் தன்னைக் கண்டு கொண்டான் என்பது புரிந்தது.

உடனே ''ஒன்னுமில்லையே'' என்று சசிரேகா சொன்னாலும் லேசாகக் கலங்கி விட்டிருந்த அவளுடைய கண்கள் அவளைக் காட்டிக் கொடுத்தன.



மனைவியின் அருகில் லேசாகக் குனிந்து ''பக்கத்துல நான் இருக்கும்போது உனக்கென்ன பயம்'' என்று ஷ்யாம்சுந்தர் சொல்ல, கணவனின் கனிவான வார்த்தைகளில் மேலும் கண்கள் கலங்கிவிட சிரமப்பட்டு அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள், சசிரேகா.

''அம்மா செண்டிமென்டாக்கும்?'' என்று மாமியார் சிரித்துக் கொண்டே கேட்க, ''ஓ இப்பவே ஆரம்பிச்சுட்டயா?'' என்று ஏளனத்துடன் பார்த்தாள் இந்துமதி.

''அதெல்லாம் இல்ல'' என்று மிகவும் முயன்று சிரித்தபடி பதிலளித்தாள் சசிரேகா.

''வாம்மா'' என்று கணவன் அழைக்க அவனுடன் உள்ளே சென்றாள் சசிரேகா.

சொந்தங்களென்று யாரும் உடனில்லாமல் கணவனும் தானுமாக மட்டும் தனது தந்தை தனக்குப் பரிசாக அளித்திருந்த அந்த வீட்டிற்கு அன்று இரவு வந்திருந்தது மிகவும் பிடித்திருந்தது சசிரேகாவுக்கு.

வெகு அழகாக செய்யப்பட்டிருந்த வீட்டின் உள் வேலைப்பாட்டை தன்னையறியாமல் ரசித்துக் கொண்டிருந்தவள், பின்னால் நின்று வீட்டோடு தன்னையும் பார்த்துக் கொண்டிருந்த கணவனின் பார்வையில் திரும்பி அவனைப் பார்த்தாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, கணவனின் பார்வையில் இரத்த நிறம் கொண்டுவிட்ட முகத்தை என்ன முயன்றும் முழுவதுமாக மறைத்துக் கொள்ள முடியாமல் தோற்றாள்.

''என்ன பிடிச்சிருக்கா?''

எதைப் பற்றிக் கேட்டானென்று புரியாவிட்டாலும், ஆமாமென்பதைப் போல லேசாகத் தலையை ஆட்டினாள்.

"வா வீட்ட சுத்திப் பாக்கலாம்" என்று கணவன் அருகில் வர, அதிகமாக எதையும் பேசிக் கொள்ளாவிட்டாலும் மவுனமே மொழியாக கணவன் மனைவி இருவருக்கும் வீட்டை சுற்றிப் பார்ப்பதில் சிறிது நேரம் கழிந்தது.

அடுத்ததாக ஷ்யாம்சுந்தர் படுக்கையறைக்கு வர, ஒருவிதத் தயக்கத்துடன் படபடத்த மனதை சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு கணவனைப் பின் தொடர்ந்து தானும் உள்ளே வந்திருந்தாள் சசிரேகா.

சில வினாடிகளில் கைகள் நடுங்க மனைவி கொண்டு வந்து நீட்டிய பால் டம்ளரை சிரித்துக் கொண்டே வாங்கிக் கொண்டவன், "உக்காரு" என்று படுக்கையில் தன்னருகே இருக்கும் இடத்தைக் காட்டிச் சொன்னான்.

கணவன் சொன்னதைப் போல அவனை ஒட்டி அமரா விட்டாலும், சற்றுத் தள்ளி உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

தான் சற்று நகர்ந்து மனைவியை ஒட்டி அமர்ந்த ஷ்யாம்சுந்தர் பால் டம்ளரை அவளிடம் கொடுத்து "முதல்ல நீ குடி" என்றான்.

வேண்டாமென்று சொல்ல நினைத்தவள் பிறகு மெதுவாகக் கணவன் கொடுத்திருந்த பாலை இரண்டு வாய் குடித்திருக்க, "எப்படியோ காலைல ஆறு மணிக்குள்ள குடிச்சு முடிச்சுடுவியா?" என்று மனைவியின் கையிலிருந்த பால் டம்ளரை வாங்கி மடமடவென்று



குடித்துவிட்டு டம்ளரைக் கீழே வைத்திருந்தான் ஷ்யாம் சுந்தர்.

கணவனின் பாவனையில் சசிரேகா நன்றாகவே சிரிக்க ஆரம்பித்திருக்க, "ம் இது நல்லார்க்கு" என்றான்.

"என்னமா? எதுவானாலும் மனசு விட்டுப் பேசு."

"நான் ஒன்னு கேட்டா நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது" என்று சற்றே தயங்கியவள், "உங்க லெவலுக்கு ஏத்த மாதிரி எத்தனையோ பொண்ணுங்க இருக்காங்க தான அப்படியிருக்கும் போது என்ன எதுக்காக நீங்க..."

"ஏன்னா உன்னப் பிடிச்சிருந்தது" என்று பட்டென்று பதில் சொன்ன கணவனை நிமிர்ந்து பார்த்தாள் சசிரேகா.

..........

தான் சொன்னதை நம்ப முடியாததைப் போல அதாவது புரியாமல் பார்த்த மனைவியிடம், "நம்ம இன்டஸ்ட்ரியப் பத்தித் தெரியுமா உனக்கு, அதாவது நம்ம தொழில்?" என்று கேட்டான் ஷ்யாம் சுந்தர்.

"ம், பம்ப் மேனுஃபேக்ச்சரிங்," என்று சசிரேகா சொல்ல "நீங்க யாருக்கு ஐ மீன் நீ வேல செஞ்சுட்டிருந்தியே அந்தக் கம்பெனில இருந்து யாருக்கு ஜாப் வொர்க் செஞ்சு தர்றீங்கன்னு தெரியுமா?" என்றான்.

ஆச்சர்யத்துடன் சில வினாடிகள் யோசித்தவள், உடனே "உங்களுக்குத்தான், அதாவது நம்ம இன்டஸ்ட்ரீஸ்க்கு தான்" என்று சந்தோஷமாகச் சொன்னாள்.

"ஆமாம்மா, முக்கியமான வேலையிருக்கறப்பவெல்லாம் நிறைய முறை நான் வந்திருக்கேன் பாத்திருக்கியா?"

ஓ. அதனால் தான் அவனது முகம் எங்கோ பார்த்துப் பழக்கப்பட்டது போலத் தோன்றியதோ.

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து இவர்களுடைய இன்டஸ்ட்ரிஸ்களுக்கு ஜாப் வொர்க் செய்து கொடுத்துக் கொண்டிருக்கும் தனது பழைய எம்.டி.யே பலப்பல கோடிகளுக்கு அதிபதி என்னும் போது, இவர்களுடைய செல்வ நிலையைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

என்னதான் பல வருடங்கள் சசிரேகா அந்தக் கம் பெனியில் வேலை செய்திருந்தாலும், எப்பொழுதும் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவளென்ப தால் தனது சக ஊழியர்களுக்குத் தெரிந்திருக்கும் சாதா ரண விஷயங்கள் கூட, பெரும்பாலும் சசிரேகாவுக்குத் தெரிந்திருப்பதில்லை.

''என்ன பார்த்த ஞாபகம் வருதா?''

''ம் வருது'' என்று சொன்னவள், உடனே ''அட பர வாயில்லையே'' என்ற கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''இல்ல நீ ஒரு தடவ கூட என்னப் பார்க்கவே மாட்டி யான்னு நான் நிறைய முறை ஃபீல் பண்ணியிருக்கேன்'' என்ற கணவனின் வார்த்தைகளில் உள்ளம் படபடத் தாலும், சசிரேகாவால் அவன் சொல்வதை முழுமையாக நம்ப முடியவில்லை.

சரி என்னதான் பார்ப்பதற்கு நாம் சற்று நன்றாகவே இருந்தாலும், இவனே பார்க்குமளவிற்கு அப்படி நம் மிடம் என்ன இருக்கிறது என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



உண்மையை சொல்லப்போனால் சசிரேகாவைப் பார்ப்பதற்கென்றே அவன் சிலமுறை சென்றிருக்கிறான் என்பதோடு, அப்பொழுதே முழுவதையும் சொன்னால் மனைவிக்கு நம்புவதற்கு சிரமமாக இருக்குமென்று அதற்குமேல் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் விட்டுவிட்டான் ஷ்யாம்சுந்தர்.

மூச்சுக்காற்று தன்மேல் விழுமளவிற்கு அமர்ந்திருந்த கணவனின் அருகாமை என்னவோ செய்ய, ''சசி'' என்று வெட்கத்தில் மேலும் குனிந்து கொண்டவளின் முக வாயைத் தனது கையால் நிமிர்த்தினான் ஷ்யாம்சுந்தர்.

நிமிர்ந்து தன்னைப் பார்த்த மனைவியின் கண்களை அவன் கண்ணிமைக்காமல் பார்க்க, தொடர்ந்து கணவ னின் பார்வையை சந்திக்க முடியாமல் ஒருவிதக் கிரக் கத்தில் சசிரேகாவின் கண்கள் மூடிக் கொண்டன.

அடுத்த வினாடியே அவன் மனைவியை இழுத்து அணைத்திருக்க, ஏற்கனவே தன்வசம் இழக்கத் தொடங்கி யிருந்த சசிரேகாவோ கணவனின் மார்பில் முகம் புதைத் துக் கொண்டாள்.

மனைவியின் மனதைக் கண்டு கொண்ட ஷ்யாம் சுந்தருக்கோ அவனுடைய நிலையைப் பற்றி சொல்ல வேண்டியதே இருக்கவில்லை, தன்னுடைய அணைப் பில் மயங்கிக் கிடந்த மனைவியைத் தனது ஆளுகைக் குள் கொண்டு வந்திருந்தான்.

அடுத்த நாள் காலையே புது மணமக்கள் விமானத் தில் தேனிலவு ட்ரிப் கிளம்பினார்கள். அதற்கு முன்பே அங்கு வீட்டினர் அனைவரிடமும், சசிரேகா தனது தாயிடமும் விடைபெற்றுக் கொண்டாள்.

"ஃபர்ஸ்ட் டைம் ஃப்ளைட்ல போற பாத்து மயக்கம் ஏதாவது போட்டு வெச்சுடாத" என்று இந்துமதி சொல்ல, "சொன்ன மாதிரி பயப்படாம பாத்துப் போய்ட்டு வாம்மா" என்றார் அமுதா.

"ஆமா ட்ரெயின்லயாவது போயிருக்கியா இல்ல அதுவும் இல்லையா?" என்ற இந்துமதியிடம் "அதெல்லாம் போயிருக்கேன்" என்றாள் சசிரேகா.

தொடர்ந்து "நல்ல துணி ஒரு நாலு செட் எடுத்துக் குடுக்கச் சொல்லி வாங்கிக்கோ" என்றவள் "ஏன் சொல்றேன்னா ஷ்யாம் எல்லாமே ரொம்ப பர்ஃபெக்டா இருக்கணும்னு எதிர்பாக்கறவர்" என்றாள்.

தேனிலவு ட்ரிப் முடிந்து வந்திருந்த புது மணமக்களுக்கு பதினைந்து நாட்களும் பதினைந்து வினாடிகளாகப் பறந்து போயிருந்தன.

அதிலும் கணவனின் அன்பில் திளைத்துத் திக்குமுக்காடிப் போயிருந்த சசிரேகாவோ, தனக்கு இவ்வளவு பிரமாதமான வாழ்க்கைத் துணை கிடைக்குமென்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஏன் திருமண வாழ்க்கையைப் பற்றியே கூட அவள் துளியும் நினைத்துப் பார்த்தாள் இல்லையே.

ஆனால் அதையே தனது கணவன் சொல்லவும் தான் மிகவும் வெட்கமாகப் போயிற்று சசிரேகாவிற்கு.

இந்த அளவிற்குத் தன்மேல் பிரதிபலன் பாராது அன்பு வைத்திருக்கும் கணவனைத் தானும் நன்கு புரிந்து கொண்டு, அவனது மனம் கோணாது நடந்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.



அனைத்திற்கும் உச்சகட்டமாகத் தேனிலவு முடிந்து நேராக அவனுடைய வீட்டிற்குச் செல்லாமல், தனது வீட்டிற்குக் கணவன் தன்னை அழைத்து வந்ததில் தான் மிகவும் சந்தோஷமாகப் போயிற்று அவளுக்கு.

கணவனுடைய பெற்றோர்கள் நல்ல முற்போக்குவாதிகள் என்பதால், திருமணத்தில் ஆரம்பித்து வேறு எதிலுமே அவர்கள் அவ்வளவாக சாஸ்திர சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்திருக்கவில்லை.

அதிலும் தனது இதம் நாடிக் கணவன் செய்த அத்தனையுமே, தான் பெரும் பாக்கியம் செய்தவள் என்றே சசிரேகாவை எண்ண வைத்தன.

"வாங்க சாப்பிடலாம்" என்று சுகந்தி வந்து தனது மருமகனை அழைத்துவிட்டுச் செல்ல, தானும் தனது கணவனை அழைத்தாள் சசிரேகா.

"நல்ல வீட்டு சாப்பாடு சாப்பிட்டு ரெண்டு வாரமாச்சு" என்று சொல்லிக் கொண்டே சாப்பிட வந்தான் ஷ்யாம்சுந்தர்.

மாப்பிள்ளை எப்படி ஸ்டூலில் ப்ளேட்டை வைத்து சேரில் அமர்ந்து சாப்பிடுவார் என்று தயக்கத்துடன் சுகந்தி கைகளைப் பிசைந்து கொண்டிருக்க, அதற்குள் அங்கிருந்த டந்தி ஜமுக்காளத்தை எடுத்துக் கீழே விரித்து சம்மணம் போட்டு அமர்ந்திருந்தான் அவளுடைய மருமகன்.

ஆச்சரியத்துடனும் கூடவே மிகுந்த தயக்கத்துடனும் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த தனது அத்தையைப் பார்த்து மெல்லியதாய்ப் புன்னகைத்தவன், "இப்படி

உக்காந்து சாப்பிடக் குடுத்து வெச்சிருக்கணுமே அத்தெ'' என்றான்.

அருகில் நின்று கொண்டு அதுவரைத் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியின் கையைப் பிடித்து வேகமாக ஷ்யாம்சுந்தர் இழுக்க, அதை சற்றும் எதிர் பார்த்திராத சசிரேகா கணவனின் மடியிலேயே சென்று விழுந்தாள்.

''என்னங்க இது?'' என்று வெட்கத்துடன் முகம் சிவந்தவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

''நல்லவேள அம்மா பாக்கல'' என்று முணுமுணுத்த வளிடம், ''அவங்க அந்தப் பக்கம் போன பின்னாடி தான நான் இழுக்கவே செஞ்சேன்'' என்று பெருமை பேசி னான் அவளுடைய கணவன்.

அடுத்த வினாடியே தனது கணவனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தவள், சமைத்த உணவுகள் அனைத்தையும் தனது தாயோடு சேர்ந்து எடுத்து வந்து வைத்துவிட்டுப் பிறகு தானும் அமர்ந்து கொண்டாள்.

சமையல் உண்மையிலேயே பிரமாதமாக இருக்க, அதை ஆஹா ஓஹோவென்று புகழ்ந்து கொண்டே மருமகன் வயிறு நிறைய சாப்பிட்டதில் சுகந்திக்கு அளவில்லாத சந்தோஷம்.

தன்னருகில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மனைவியிடம், ''எப்படி நீ இவ்வளவு ஒல்லியா இருக்க?'' என்று ஷ்யாம்சுந்தர் கேட்க ''ஏன் இப்படிக் கேக்கறீங்க?'' என்றாள் அவள்.



''இவ்வளவு டேஸ்ட்டான சமயல கன்ட்ரோல் பண் ணிக்கிட்டு அளவா சாப்பிடறது கஷ்டமாச்சே. அதனால கேக்கறேன்.''

தனது தாய் எதையோ எடுப்பதற்காகக் கிச்சனுக்குச் சென்றிருக்க, மையலுடன் தனது கணவனைப் பார்த்தாள் சசிரேகா.

''என்ன?''

''இல்ல எனக்குத் தெரிஞ்சு நீங்க எதுலயுமே கன்ட் ரோல் இல்லையே'' என்று அவனுடைய காதருகில் வந்து வெட்கத்துடன் முணுமுணுத்தவளைப் பார்த்தான் அவன்.

''அப்ப முடிவே பண்ணிட்ட இல்லையா?''

''முடிவா, உண்மைய சொல்றேன்.''

''சரிதான்'' என்று கண் இமைக்காது கணவன் தன்னைப் பார்த்த பார்வையைச் சந்திக்க முடியாமல் குனிந்து கொண்டாள் சசிரேகா.

''இன்னும் கொஞ்சம் வெச்சுக்கங்க மாப்ள'' என்று தனது அத்தை மேலும் பரிமாறப் போக, ''அவ்வளவுதான் அப்புறம் வயிறு வெடிச்சுடும்'' என்று அவரைத் தடுத் தான் ஷ்யாம்சுந்தர்.

''ஆமா உனக்கு இதுல பாதி அளவுக்காவது சமைக்கத் தெரியுமா?'' என்று கேட்ட கணவனிடம் ''ஓ இத விட நல்லாவே கூட சமைப்பேன்'' என்றாள் சசிரேகா.

''அதெல்லாம் நல்லாவே நீ சமைப்ப, ஆனா அத சாப் பிட முடியுமான்னு தான் நான் கேக்கறேன்.''

''ம்'' என்று கணவனை விளையாட்டுக்கு முறைத் தவள், ''நானும் நல்லாத்தான சமைப்பேன் சொல்லுங்

கம்மா'' என்று தனது தாயிடம் செல்லம் கொண்டாடி னாள் பெண்.

''பாவம் அத்தெ யோசிக்கறதப் பார்த்தா இல்லாதத சொல்ல வேண்டாம்னு அவங்க நினைக்கறது நல்லாவே தெரியுது'' என்ற மருமகனைப் பார்த்துப் புன்னகைத்த சுகந்தி ''செய்யணும்னு நினைச்சா நல்லாவே செய்வா மாப்ள ஆனா அப்பப்பக் கிறுக்கு புத்தி வந்துடும்'' என்றார்.

''அது சரிதான்'' என்று கணவன் எழுந்து செல்ல, தனது தாயுடன் சேர்ந்து அனைத்தையும் ஒதுக்கி வைப் பதில் முனைந்தாள் சசிரேகா.

டி.வி.யை ஆன் செய்து பார்த்துக் கொண்டிருந்த கணவனிடம், ''என் பழைய போட்டோஸ் பாக்கறீங் களா?'' என்று எடுத்து வந்தாள்.

''பின்ன?''

''அப்புறம் கிண்டல் பண்ணக் கூடாது'' என்ற மனை வியைப் பார்த்தவன், ''அப்பக் கிண்டல் பண்ற மாதிரி தான் இருப்பங்கற'' என்றான்.

''அதெல்லாமில்ல'' என்று தனது கையிலிருந்த ஆல்பங்களைக் கணவனிடம் கொடுத்தவள், தானும் அருகில் அமர்ந்து கொண்டாள்.

தனது சிறு வயது போட்டோக்களைப் பார்த்துக் கணவன் செய்த கேலிகளை மறுத்தாலும், ரசிக்கவும் செய்தாள்.

சிறு வயதில் தனது தந்தை தன்னைக் கையில் வைத்து எடுத்துக் கொண்ட போட்டோ ஒன்றை வேறொரு



போட்டோவுக்கு அடியில் மறைத்து வைத்திருந்தாள் சசிரேகா.

அதைக் கண்டு கொண்ட கணவன் அதை வெளியே எடுக்க, அவனிடமிருந்து அதைப் பறிக்க முயன்றாள்.

ஆனால்அவன் அந்தப் போட்டோவை மனைவியின் கைகளில் கொடுக்காமல் பார்க்க ஆரம்பிக்க, ரகசியக் குரலில் ''மூணு வயசுல அப்பா என்னக் கைல வைச் சுக்கிட்டு எடுத்துக்கிட்டது'' என்று கணவனிடம் சொன் னாள்.

''அத்தைக்குத் தெரியாம வெச்சுப் பாதுகாத்துட்டு இருக்கியாக்கும்'' என்று கேட்ட கணவனிடம் ஆமாம் என்பதைப் போலப் புன்னகையுடன் தலையசைத்தாள்.

''உங்க அப்பாவ உனக்குப் பிடிக்குமா?''

''பிடிக்கும். ஆனா அம்மாவுக்காக முடிஞ்ச அளவுக்கு அவர்கிட்டப் பேசறத அவாய்ட் பண்ணிக்குவேன். ஏன்னா அம்மாவோட சந்தோஷமும் நிம்மதியும் தான் எனக்கு முதல்ல முக்கியம்.''

''நீ உங்க அப்பாகிட்டப் பேசறது உங்க அம்மாவுக்குத் தெரியாதுன்னு நினைச்சுட்டிருக்கியா?''

''தெரியாம என்ன? என்னோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அப்பா மறக்காம கூப்பிட்டு விஷ் பண்ணு வார். டென்த் படிக்கற வரைக்கும் எல்லாம் அவருகிட்டப் பேசக்கூட மாட்டேன், போன டக்குன்னு வெச்சுடுவேன். ஆனாலும் போகப் போக அவர் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அழைச்சு வாழ்த்தும்போதெல்லாம் நாம பண்றது தப்போன்னு மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கும்.''

''அதே மாதிரி அம்மாவும் எங்கிட்ட உங்க அப்பா கூட நீ பேசக் கூடாதுன்னெல்லாம் எப்பவுமே சொன்னது கிடையாது. எனக்காக நீ பாக்க வேண்டாம் உன் மனசு என்ன சொல்லுதோ அதுபடி நீ செய்னு தான் அம்மா சொல்லுவாங்க.''

தனக்குப் பிடிக்காததை மகளும் செய்யக்கூடாது என்று கட்டாயப்படுத்தாத தனது அத்தையின் மேல் மரியாதை சற்று அதிகமானது ஷ்யாம்சுந்தருக்கு.

''அதே மாதிரி அப்பாவப்பத்தி அவங்க எங்கிட்ட தப்பாவோ, ஏன் பேசவே மாட்டாங்க. தொடக்கத்துல நானாவே அம்மாவுக்குப் பிடிக்காதத நாம செய்யக்கூடாதுன்னு இருந்தேன்னாலும், போகப் போக நாம எவ்வளவு உதாசீனப்படுத்தினாலும் அதப் பெருசா எடுத்துக்காம தொடர்ந்து கூப்பிட்டுப் பேசற அப்பாவையும் நாம கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு தோணுச்சு.''

.........

''அதனால இப்ப ஒரு ஆறேழு வருஷமா நானாக் கூப்பிட்டுப் பேசலேன்னாலும், அப்பா கூப்பிடும் போது பேசிட்டுத் தான் இருக்கேன்.''

''ஆனாலும் நம்ம கல்யாணத்துக்கு அப்பா குடுத்த அன்பளிப்ப நாம வாங்கிக்கிட்டதுக்கு அம்மா எதுவுமே சொல்லாதது எனக்கு ரொம்பவும் ஆச்சரியம்.''

''வேற எப்படியும் நீங்க ஏத்துக்க மாட்டீங்கன்னு தெரிஞ்சு தான் சபைல வெச்சே குடுத்திருக்கார்னு நினைக்கறேன், அதோட ஒரு அப்பாவா அவருக்கும் உனக்கு எதுவுமே செய்யலையேங்கற வருத்தம் இருக்கும் தானம்மா.''



''அதுக்காக அவ்வளவு பெரிய வீட்டக் குடுத்திருக்கார். அதோட மதிப்பு எவ்வளவு இருக்கும் ஷ்யாம்?''

''ரெண்டு கோடிக்குப் பக்கம் இருக்கும்.''

''அவ்வளவா?!''

''ஆமாம்மா. உங்கப்பா நம்ம வீட்ட விட குறைஞ்சது ஒரு ரெண்டு மடங்காவது அதிகப் பணக்காரரா இருப்பார் தெரியுமா?''

''கேள்விப்பட்டேன். ஆமா ஷ்யாம் நம்ம கல்யாணத்துக்கு அப்பா வந்திருந்தப்ப, மாமாகிட்ட அதாவது உங்க அப்பாகிட்ட ரொம்ப நேரம் பேசிட்டிருந்தாரே'' என்று ஆச்சர்யத்துடன் கேட்ட மனைவியைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''உங்க அப்பா எங்க அப்பாவோட டியர் மோஸ்ட் ஃப்ரண்ட் தெரியுமா? கிட்டத்தட்ட பதினஞ்சு வருஷப் பழக்கம்.''

''ஓ, அப்படியா! அதனாலதான் நீங்க என்னத் தேர்ந்தெ...'' என்ற மனைவியின் பேச்சை இடைமறித்தவன் ''என்ன உதை கேக்குதா?'' என்றான்.

''உன்னப் பொண்ணுப் பாத்துட்டுப் போனதுக்கு அப்புறம் தான், நீ அவரோட பொண்ணுங்கறதே எங்களுக்குத் தெரியும்.''

''ஓ, ஸாரி.''

''ஸாரியா அதெல்லாம் எதுக்கு? இப்படியொரு அழகான ரதி எனக்கு மனைவியா வர்றதுல எனக்கு தான் சந்தோஷம்னா, உங்க அப்பா என்னவிட அதிகமா சந்தோஷப்பட்டார்மா.''

''என் கையப் புடிச்சுட்டு ஆனந்தக் கண்ணீர் விடாத குறைதான், உலகத்துல எந்த மூலைல தேடினாலும் இப்படியொரு மாப்ள எம் பொண்ணுக்குக் கிடைக்காது. அதே மாதிரி எம்பொண்ணு கிடைக்க நீங்களும் குடுத்து வெச்சிருக்கணும்னெல்லாம் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.''

''ஒரு விதத்துல பாத்தா நீ அவரோட பொண்ணுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் தான் நம்ம வீட்ல சமாதான மானாங்க.''

''நானும் அதத்தான் கொஞ்சம் முன்னாடி சொன் னேன், நான் அவரோட பொண்ணுங்கறதால தான் என்ன அப்ப உங்க வீட்ல ஏத்துக்கிட்டாங்களோன்னு.''

''பாரு இப்பவும் தப்பாதான் புரிஞ்சுக்கிட்ட. நான் ஒரு விஷயத்த முடிவு பண்ணிட்டாலே மேக்ஸிமம் வீட்ல யாருமே அத மறுத்துப் பேச மாட்டாங்க. ஆரம்பத்துல அம்மாவுக்கும், அப்பாவுக்கும் கொஞ்சம் ஆட்சேபணை இருந்ததுன்னாலும் நீ தேவராஜன் அங்கிளோட பொண் ணுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் அதுவும் சரியாயிடுச்சு.''

''ஆனாலும் அண்ணி அவங்க சொந்தத்துல ஒரு பொண்ணத்தான் உங்களோட சின்ன மருமகள்னு அம்மாகிட்ட அப்பப்ப சொல்லிட்டே இருந்ததோட, அந்தப் பேச்ச இன்னும் கூட விடாம இழுத்துப் பேசிட்டு தான் இருக்காங்கன்னு நினைக்கறேன்.''

''அவங்களையும் தப்பு சொல்ல முடியாது, அந்த அளவுக்கு நான் அந்தப் பொண்ணத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு ரொம்பவும் நம்பினாங்க.''

''அஞ்சலியும் ஓரளவு நல்ல டைப், அதாவது அண்ணி யோட ரிலேட்டிவ். கல்யாணம் பண்ணிக்கற எண்ணத் தோட நான் அவகிட்ட எப்பவுமே பேசினதில்ல. அதே மாதிரி தான் அந்தப் பொண்ணு அஞ்சலியும். இந்த அண்ணி பாட்டுக்கு தானே கற்பன பண்ணின ஒரு விஷயத்த சொல்லிச் சொல்லி எல்லாரோட முக்கியமா அம்மாவோட நிம்மதியக் கெடுக்கறாங்கன்னு நினைக் கறேன். அந்த ஆதங்கத்துல அம்மா ஏதாவது பேசி னாலும் நீ தப்பா எடுத்துக்காதம்மா போகப்போக எல் லாம் சரியாயிடும்.''



''புரியுதுங்க. அதோட பெத்தவங்களுக்கும் தங்களோட குழந்தைகள்கிட்ட சில எதிர்பார்ப்புகள் இருக்கும். அவங்க நினைச்சது நடக்கலையேன்னு அவங்க பேசற துலயும் நியாயமிருக்கு.''

''அது சரிதான். ஆமா நாம எதப்பத்திப் பேசிட்டிருந் தோம். ம் உங்கப்பா மேல ஒரு விதத்துல எனக்குக் கொஞ்சம் கோபம் தான்'' என்ற கணவனைப் பார்த்தாள் சசிரேகா.

''கண்டிப்பா வரதட்சணை வாங்கவே கூடாதுங்கற துல நான் உறுதியா இருந்தேன். ஆனா இப்ப வேற வழியே இல்லாம உங்கப்பா குடுத்தத வாங்க வேண்டிய தாயிடுச்சு.''

சிரித்தபடி சொன்னாலும் கணவனின் குரலில் இருந்த லேசான வருத்தம் சசிரேகாவுக்கு புரியவே செய்தது.

''நாம நம்ம வீட்ல தான இருக்கப் போறோம் அந்த வீட்ட வேணும்னா நாம எப்பவாவது போய்த் தங்கற கெஸ்ட் ஹவுஸா யூஸ் பண்ணிக்கலாம்'' என்று சிரமப் பட்டு யோசித்துத் தன்னை சமாதானப்படுத்த முயலும் மனைவியின் செய்கையில் சிரித்தான் ஷ்யாம்சுந்தர்.

''ஒரு பேச்சுக்கு சொன்னேன் அத நீ பெருசா எடுத்துக்கிட்டயா'' என்றவன் ''எப்படி நாம அங்க அன்னைக்குத் தங்கினோமே அந்த மாதிரியா?'' என்ற கணவனின் பார்வையில் முகம் சிவக்கக் குனிந்து கொண்டாள் சசிரேகா.

''அது சரிதான் நம்ம ரெண்டு பேருக்கும் ரொம்ப ஸ்பெஷலான நாள் வரும் போதெல்லாம் அங்க போயிடலாம் சரியா?''

''குடிக்கறதுக்கு என்ன கொண்டு வரட்டும்?'' என்று கேட்டுக் கொண்டே தனது அம்மா வர ''சூடா பால்மா எங்க ரெண்டு பேருக்கும்'' என்று சொல்லி அனுப்பினாள் சசிரேகா.

''காலைல நேரத்துல கிளம்பணும்மா.''

''சரிங்க'' என்ற மனைவியின் குரலில் என்ன கண்டானோ ''என்னமா?'' என்று கேட்டான்.

''இல்ல அம்மாவுக்கு நாலு நாளா சளி காய்ச்சல்...''

''சரி''

''ஆனா அது சரியாயிடுச்சுங்க'' என்ற மனைவியின் பேச்சை இடைமறித்தவன் ''வேணும்னா நாளைக்கு ஒரு நாள் நீ இருந்துட்டு வா'' என்றான்.

''அச்சச்சோ அது நல்லா இருக்குமாங்க?''

''பரவாயில்லமா, பாவம் அவங்களுக்கும் ஒரு நாள் உங்கூட இருந்த மாதிரி இருக்கும்.''

''அதனால உங்களுக்கொன்னும் ப்ராப்ளம் இல்லையே ஷ்யாம்.''



''பகல்லதான'' என்ற கணவனின் பார்வையில் முக பாவனை மாறி விடாமல் சமாளித்தவள், ''அட இன்னும் கொஞ்சம் இன்னும்...'' என்ற கணவனின் சீண்டலில் ''அம்மா கூப்பிடறாங்க போலிருக்கு'' என்று எழுந்து ஓடியே போய்விட்டாள் சசிரேகா.

''சரி சரி போய்ட்டு வா'' என்ற கணவனின் சிரிப்பொலியில் அவள் ஏதோ பொய் சொல்வது போல ஆனது.

சில வினாடிகளில் இரண்டு டம்ளர்களில் பாலை எடுத்து வந்து ஒன்றைக் கணவனிடம் கொடுத்தவள், இருவரும் குடித்து முடித்ததும் காலி டம்ளர்களை எடுத்துப் போய் கிச்சனில் வைத்துவிட்டு வந்தாள்.

''கொஞ்ச தூரம் நடந்துட்டு வரலாமாம்மா? என்று கேட்ட கணவனிடம், ''அங்க வீட்டச் சுத்தியே நடப்பீங்க தான ஆனா இங்க வீதியில தான் நடக்கணும்'' என்றாள்.

''அங்கயும் ரொம்ப தூரம் ஃப்ரியா நடக்கணும்னா வீதில தான் நடக்கணும், சரி வா'' என்று எழுந்தான் ஷ்யாம் சுந்தர்.

''ஆனா இங்கெல்லாம் ஸ்ட்ரீட் லைட் கூட சரியா எரியாது ஷ்யாம்.''

''நீ பேசற விதத்தப் பாத்தா உனக்கு இப்ப வாக்கிங் போற இண்ட்ரஸ்ட்டே இல்லன்னு தெரியுது.''

''ம், பின்ன வேற எதுக்கு இன்ட்ரஸ்ட்டாம்?''

''ஓ, அத என் வாயாலேயே சொல்லிக் கேக்க உனக்கு ஆசையா? சரி சொல்றேன் நேரா...'' என்று ஆரம்பித்த கணவனை மேலே சொல்ல விடாமல் அவனது கையைக் கிள்ளினாள் சசிரேகா.

''நான் அதுக்கு எப்பவுமே ரெடி தான் வா'' என்ற கணவனின் சீண்டலுக்கு பதில் சொல்லாமல் வேகமாக வெளியே போய் செருப்பை மாட்டியிருந்தாள்.

கூடவே தானும் வெளியே வந்திருந்த ஷ்யாம்சுந்தர் ''என்ன?'' என்ற மனைவியைப் பார்த்தான்.

''ப்ளீஸ் ஷ்யாம்.''

''சரி பாத்து வா, சுவத்துல இடிச்சுக்காத.''

இருவரும் வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்திருக்க, ''நீ தினமும் வாக்கிங் போவியா?'' என்று மனைவியிடம் கேட்டான்.

''வாக்கிங்னு தனியாப் போனதில்ல, அதுக்கு அவசியமும் வந்ததில்ல. வேலைக்குப் போறதுக்கே காலைலயும் சாயந்தரமும் எப்படியும் மூணு கிலோ மீட்டர் நடந்தாகணும். அதுக்கப்புறமும் கோவிலுக்கு கடைக்குன்னு எப்படியும் ஒரு நாளைக்கு அஞ்சு கிலோமீட்டர் வரைக்கும் நடக்க வேண்டியது வந்துடும்.''

''ஓ, அதனால தான் உன் உடம்பு நல்லா ஃபிட்டா இருக்கு.''

''ஆனா நீங்க தினமும் வாக்கிங் போய்டுவீங்க இல்லையா?''

''கண்டிப்பா, உன்ன மாதிரி யூஸ்ஃபுல்லா நடக்க வெல்லாம் எனக்குக் குடுத்து வைக்கல. அதனால குறைஞ்சது அஞ்சு கிலோமீட்டராவது தினமும் நானும் வாக்கிங் போய்டுவேன்.''

''வீட்ல எல்லாருமே உங்கள மாதிரி தானா?''

''ம் அப்பா என்ன மாதிரிதான். ஆனா நடக்கற தூரம் கொஞ்சம் குறைவா இருக்கும். அண்ணா வீட்ல இருக்கற



குட்டி ஜிம்லயே தன்னோட எக்ஸர்சைஸ முடிச்சுக்கு வார்.''

''அம்மா அவங்களோட ஃப்ரண்ட்ஸ் கூட சேர்ந்து சாயங்காலம் அஞ்சு மணிக்கு வாக்கிங் கிளம்பினாங் கன்னா, ஜாலியா ஒரு மணி நேரம் நடந்து காத்து வாங் கிட்டு வருவாங்க.''

''அப்புறம் ஸ்மிர்த்தி?'' என்று புன்னகையுடன் சசி ரேகா தனது நாத்தனாரைப் பற்றிக் கேட்க, தங்கையின் நினைவில் தானும் முகம் மலர்ந்தான் ஷ்யாம்சுந்தர்.

''அவளப் பத்திக் கேக்க வேண்டியதே இல்ல, அப் பப்ப டயட், எக்ஸர்சைஸ், வாக்கிங்னு எல்லாமே இருக் கும். ஆனா எதுவுமே எனக்குத் தெரிஞ்சு பத்து நாளைக்கு மேல கண்டினியூ ஆனதில்ல.''

''அதுல ஒன்னும் தப்பில்லையே, ஸ்மிர்த்தி நல்லா ஸ்லிம்மா தான இருக்கா.''

''அது சரிதான், அவ கூட எப்பவுமே ஒரே ஜோக்கா தான் இருக்கும் இனி நீயும் பாக்கத்தான போற.''

''வீட்ல நிறையப் பேர் இருக்கறதால ரொம்ப ஜாலியா இருக்கும் இல்லையா ஷ்யாம்?''

''ஆமாம்மா சின்னக் குழந்தைகளா இருக்கும் போது அப்படித்தான் இருந்தது, ஆனா இப்ப அவங்கவங் களுக்கு அவங்கவங்க வேலையே சரியா இருக்கும். நம்ம வீட்ல எல்லாரும் சேந்து மீட் பண்ணிக்கறதே டின்னர் சாப்பிடும்போது மட்டும்தான்.''

''அப்ப வீட்ல விளையாட்டுப் பொண்ணு ஸ்மிர்த்தி மட்டும் தான்.''

"அது சரிதான் ஆனா அவ ஒரு புத்தகப் புழு. எப்ப சான்ஸ் கிடைச்சாலும் புக்க எடுத்து வெச்சுக்கிட்டு உக்காந்துடுவா."

"ஓ, அப்ப என்ன மாதிரின்னு சொல்லுங்க."

"நீயும் அப்படித்தானா?" என்று சிரித்த கணவனிடம்

"ஆமாம் கிளாஸ்ல நான்தான் எப்பவும் ஃபர்ஸ்ட் வருவேன்" என்றாள் சசிரேகா.

மேலும் மேலும் சசிரேகா தனது புகுந்த வீட்டு சொந்தங்களைப் பற்றியே கேட்டுக் கொண்டிருக்க, "என்ன உன்னப்பத்தி எதுவுமே சொல்ல மாட்டேங்கற?" என்றான் ஷ்யாம் சுந்தர்.

"என்னப்பத்தி சுவாரஸ்யமா சொல்றதுக்குன்னு ஒன்னுமே இல்ல ஷ்யாம். வீட்ல கூட போட்டிக்கு யாருமே இல்லாம ஒத்தையா வளந்தவ."

"காலைல அஞ்சு மணிக்கு எழுந்து சமயல்ல அம்மாவுக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ணிட்டு ஆறிலிருந்து ஏழரை மணி வரைக்கும் ஒரு நாலு ஸ்டூடண்ட்ஸ்க்கு மேத்ஸ் டியூஷன் எடுப்பேன். அப்புறம் நான் கிளம்பினா ஒன்பது மணிக்குள்ள டியூட்டிக்குப் போய் சேர்றதுக்கு சரியா இருக்கும்."

"அதுக்கப்புறம் ஈவினிங் திரும்பி வந்தா திரும்பவும் ஒரு பத்து பேருக்கு எல்லா சப்ஜக்ட்டுக்குமே டியூஷன் எடுப்பேன். அப்புறம் டியூஷன் முடிஞ்சு சாப்டுட்டு மறுநாளைக்குத் தேவையான டிரஸ்லிருந்து எல்லாத்தையும் அயர்ன் பண்ணி ரெடியா எடுத்து வெச்சுட்டுத் தூங்கப் போகும்போது மணி பத்தாயிடும். இதுதான் என் மாமூல் லைஃப்."



# 4

அன்று மாலையே கணவன் தான் சொன்னது போல டிரைவருடன் காரை அனுப்பியிருக்க, அந்தக் காரில் தனது புகுந்த வீட்டிற்குக் கிளம்பினாள் சசிரேகா.

ஏதோ அன்றைக்குத் தான் முதன் முதலாகத் தாயைப் பிரிவதைப் போல மனம் வலிக்க, கலங்கிய கண்களுடன் தனது தாயிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

இரவு ஏழு மணிக்கு சசிரேகா தனது புகுந்த வீடு வந்து சேர்ந்த போது, இந்துமதியும் அவளுடைய அத்தை அமுதாவும் மட்டும் தான் வீட்டில் இருந்தனர்.

தாய் வைத்துக் கொடுத்திருந்த பலகாரத்தைக் கொண்டு போய்க் கிச்சனில் வைத்துவிட்டு வந்தவள், தனது அத்தை அழைக்க அருகில் சொன்றாள்.

"என்ன ஒரு வழியா வந்துட்ட, வீடு விட்டுடுச்சா?"

"அம்மாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்ல அத்தெ, அதான்..."

"நினைச்சேன், ஐயோ பாவம்னு நாங்கெல்லாரும் பரிதாபப்படுவோம்னு நினைச்சுட்டியா? அதோட செலவும் மிச்சம்."

"அப்படியெல்லாம் இல்லெ அத்தெ" என்ற சசிரேகாவைப் பேச விடாமல், "ஆனா மத்தவங்க பணம்னா

மட்டும் மனசாட்சியே உறுத்தாது போலிருக்கு'' என்றாள் இந்துமதி.

இந்துமதி சொல்வது புரியாமல் சசிரேகா அவளைப் பார்க்க, ''உன் ஒருத்தியக் கூப்புட்றதுக்காகக் கார் நூறு கிலோ மீட்டர் தூரம் வந்துட்டு வந்திருக்கு இல்லையா?'' என்றாள்.

வேறொரு முக்கியமான வேலையாக டிரைவர் இங்கு நம் வீட்டிற்குச் சற்று அருகிலேயே வருகிறான் என்று கணவன் சொன்னதும், அந்த வேலையை முடித்து விட்டுத்தான் உங்களை அழைக்க வந்திருக்கிறே னென்று டிரைவர் சொன்னதும் நினைவுக்கு வந்தாலும் சசிரேகா அப்போதைக்கு அதை வெளியே சொல்ல வில்லை.

''என்ன எங்களையெல்லாம் பாத்தா பதில் சொல்ற அளவுக்குக் கூட இல்லையா?''

''அப்படியெல்லாம் இல்ல அத்தை.''

''சரிசரி உன் திருவாயிலிருந்து வர்ற வார்த்தைகள நின்னு கேக்க நேரமில்ல, நாங்க ரெண்டு பேரும் ஒரு ஃபங்ஷனுக்குக் கிளம்பறோம் அந்தி வேளைல கதவ மூட வேண்டாம் இங்க ஹால்லயே உக்காந்திரு.''

''சரிங்க அத்தெ.''

''நாங்க திரும்பிவர எப்படியும் ஒரு மணி நேரத்துக்கு மேல தான் ஆகும். எங்காவது உள்ள போய்டாத வீட்ல யாருமில்ல'' என்று மேலும் ஒருமுறை சொல்லிவிட்டு அவர்கள் இருவரும் கிளம்ப, அவர்கள் சென்றதும் டி.வி.யை ஆன் செய்து கொண்டு சோஃபாவில் அமர்ந்து கொண்டாள் சசிரேகா.



என்னதான் ஒரு ஆதரவான சூழ்நிலையை அவள் அந்த வீட்டில் எதிர்பார்த்திருக்க வில்லையென்றாலும், இதே போல எப்பொழுதும் அவர்கள் நடந்து கொண் டால் என்ன செய்வது என்று யோசனை போனதில் எதிர்காலமே இருண்டு படுபயங்கரமாகத் தோன்றியது.

அதோடு இதுவரை ஒரு நாள் கூடத் தனது அத்தை தன்னிடம் முகம் கொடுத்துப் பேசியிருக்கவில்லை என்பதும் மனம் வலிக்க நினைவுக்கு வந்தது.

ஏதேதோ எண்ணி மனம் குழம்பியவள், கடைசியாகத் தனக்குத்தான் கணவனின் துணை இருக்கிறதே என்று மனம் நிம்மதியடைந்தாள்.

திருமணத்திற்குப் பிறகு முதல் தடவையாக அரை நாள் கணவனைப் பிரிந்திருப்பதே, ஏதோ மிகப்பெரிய இடைவெளி போல மனதிற்குள் தோன்றத் தொடங்கி யிருந்தது.

தொடர்ந்து ஒரு வாரம் தேனிலவுக்கென பனியில் சுற்றியது, தாயைப் பிரிந்ததில் அழுதது, எதையெதையோ எண்ணி மனம் குழம்பியது என தலையை வலிக்க ஆரம் பித்திருக்க, சூடாக ஒரு கப் காபி குடித்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது.

இந்நேரம் தனது தாயாக இருந்திருந்தால் முகத்தின் குறிப்பறிந்தே தனக்காக அனைத்தையும் செய்திருப்பார் களே என்று சிறிது நேரம் ஏங்கிவிட்டு பிறகு நடப்புக்கு வந்தாள் சசிரேகா.

அப்பொழுது தான் தனது வீட்டைப் போன்று இரண்டு மடங்கு பரப்பளவுடைய அந்த ஹாலில் தான்

மட்டும் தனியாக அமர்ந்திருப்பது நினைவுக்கு வந்து பயத்தை ஏற்படுத்தியது.

மணி ஏழரைக்கும் மேல் ஆகியிருக்க மாலை நேரம் தான் முடிந்து விட்டதே இனி சென்று ஹால் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து நிம்மதியாக அமர்ந்து கொள்ளலாமென்று நினைத்தவள், பிறகு அதற்கும் தயங்கிக் கொண்டு பேசாமல் அப்படியே அமர்ந்து விட்டாள்.

இதோ இப்பொழுது வந்து விடுவார்களென்று இரண்டு மணி நேரங்களுக்கும் மேலாக அனைவரையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, லேசாக இருந்த தலைவலி கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி விண்விண்னென்று தெறிக்க ஆரம்பித்திருந்தது.

கடைசியாக அப்படியே சற்றுப் படுத்துக் கொள்ளலா மென்று சசிரேகா படுக்கப் போகவும், அவளுடைய அத்தை அமுதாவும், இந்துமதியும் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''என்ன இன்னும் யாரும் வரலையா?''

தனது அத்தை கேட்க இல்லையென்று பதில் சொன் னாள் சசிரேகா.

''ஏன் உன்னோட சொத்த யாரோ புடுங்கிட்ட மாதிரி இப்படி உர்ருன்னு இருக்க?'' என்று தன்னை ஒரு மாதிரி யாகப் பார்த்த இந்துமதியை என்ன பதில் சொல்வ தென்று தெரியாமல் பார்த்தாள்.

வாய்விட்டு முனகாத குறையாகத் தலைவலியால் துடித்துக் கொண்டிருந்தவளுக்கு இந்துமதி தன்னைப்



பார்க்கும் பார்வையில் அழுகை வரப் பார்க்க, தான் தூங்கப் போவதாகத் தனது அத்தையிடம் சொல்லி விட்டு நல்ல வேளையாக அங்கிருந்து நகர்ந்தாள்.

''ஏன் இப்பிடி ஜடம் மாதிரி நின்னுட்டிருக்க? அங்க உங்க வீட்லயும் இப்படித்தான் உங்கம்மாவுக்கு எந்த உதவியும் செய்யாம பராக்குப் பாத்துட்டிருப்பியா?''

''எல்லாரும் சாப்டுட்டு வந்துடுவாங்க, நாங்களும் சாப்டாச்சு. போ சமையலறை எல்லாம் அப்படி அப் படியே கிடக்கும் போய் உன் வீட்டுக்காரருக்கு பால நல் லாக் கொதிக்க வெச்சு அரை சக்கர போட்டு ப்ளாஸ்க்ல ஊத்திக்கிட்டு எல்லாத்தையும் ஒதுக்கி வெச்சுட்டு அப்புறமாப் படுக்கப் போ.''

சரியென்று தன்னை அறியாமலேயே தலையை அசைத்துத் தனது அத்தைக்கு பதில் சொல்லியிருந்தாள் சசிரேகா.

அனைவரும் சாப்பிட்டாயிற்று என்றால், அப் பொழுது தான் அந்த அனைவரில் சேர்த்தியில்லையா?

நீ போய் சாப்பிடு என்று ஒரு வார்த்தை கூட சொல்ல வில்லையே, சரி அவர்கள் சொல்லாவிட்டால் தான் என்ன என்று சமையலறைக்குப் போய் ஆராய்ந்த வளுக்கு உணவென்று சிறிது கூட சாப்பிடுவதற்கு எதுவுமில்லாமல் சுத்தமாகத் துடைத்துக் கழுவப் போடப் பட்டிருந்த பாத்திரங்கள் தான் கண்களுக்குத் தட்டுப் பட்டது.

சாப்பிடப் போவதில்லையென்பது தெரிந்து விட்ட தாலோ என்னவோ, பசி பல மடங்கு அதிகமாகி விட் டதைப் போலத் தோன்றியது சசிரேகாவுக்கு.

எதையாவது கொஞ்சம் சாப்பிட்டால் நிச்சயமாகத் தலைவலி மட்டுப்படும் என்பது தெரிந்தாலும், உயிர் போகும் தலைவலியில் தனது அத்தை சொன்ன வேலைகளை முடிப்பதற்குள்ளேயே அவளுக்குப் போதும் போதுமென்று ஆகி விட்டிருந்தது.

இந்த அளவுக்குத் தன்னை நடத்த இவர்களால் எப்படி முடிகிறதென்று நினைத்தவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, ஒரு நாளே இப்படி இருந்தால்,

மேலே எதையும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாமல் உடல் நடுங்க ஃப்ளாஸ்க்கை எடுத்துக் கொண்டு எப்படியோ தங்களது அறைக்கு வந்து சேர்ந்திருந்தவள், அப்படியே கட்டிலில் குறுகிப் படுத்துக் கொண்டாள்.

'உங்க மகளாவே நிம்மதியா இருந்திருப்பேனே அம்மா' என்று மனதிற்குள் ஊமையாய்ப் புலம்பியவள், கண்களை இறுக மூடிக் கொண்டு அப்படியே பேசாமல் படுத்து விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படிப் போயிருக்குமோ மெதுவாக என்றாலும் தங்களது அறைக்கதவு திறந்து கொண்ட ஒலியில் கண் விழித்துப் பார்த்தாள் சசிரேகா.

கணவன்,

நேராகத் தன்னருகில் வந்து நின்றவனைப் பார்த்து விட்டு மெதுவாக எழுந்து அமர்ந்தாள்.

''வாங்க, இப்பத்தான் வர்றீங்களா?''

''ஆமாம்மா, நீ எத்தன மணிக்கு வந்து சேந்த? ஏன், என்னாச்சு பாக்க ஒரு மாதிரியிருக்க?''



''ஒன்னுமில்லைங்க லேசாத் தலைவலி அவ்வளவுதான்'' என்று எழப்போன மனைவியைத் தடுத்தவன், தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

''லேசாவா? பாத்தா அப்படித் தெரியலையே ரொம்ப டல்லா இருக்க.''

''நீங்க சாப்டாச்சா?''

''அதெல்லாம்'' என்றவன் ''நேத்தே உன் உடம்பு சூடா இருந்ததேம்மா உனக்கு அந்தப் பனி ஒத்துக்கல'' என்று மனைவியின் நெற்றியை மிருதுவாகத் தொட்டுப் பார்த்தான் ஷ்யாம் சுந்தர்.

''அதெல்லாம் ஒன்னுமில்லைங்க, தூங்கி எழுந்தா எல்லாம் சரியாயிடும்.''

மிகவும் சிரமப்பட்டுத் தன்னை சாதாரணமாகக் காட்ட முயலும் மனைவியைப் பார்த்தவன், ''நீ சாப்டாச்சா?'' என்று கேட்டான்.

.........

''என்னமா?''

''பசிக்கலங்க.''

''என்னது பசிக்கலையா? பசிக்கற அளவுக்கு கொஞ்சமா சாப்பிட்டிருக்க வேண்டியது தான?''

.............

''என்னமா சொல்லு ஏன் சாப்பிடல?''

''ப்ளீஸ் ஷ்யாம் என்னால சுத்தமா முடியல. என்ன விட்டுடுங்களேன் ரெஸ்ட் எடுத்தா எல்லாம் சரியாயிடும்.''

''சொல்லு ஏன் சாப்பிடல?''

மீண்டும் அதே கேள்வியைக் கேட்ட கணவனை நிமிர்ந்து பார்த்தாள் சசிரேகா.

சற்று இறுக்கத்துடன் அமர்ந்திருந்தவன், தனது பதிலுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

''இன்னைக்கு எல்லாரும் வெளிய சாப்டுட்டு வந்துட்டதால என் ஒருத்திக்காக செய்யலேன்னா என்னன்னு பேசாம வந்து படுத்துட்டேன்.''

''சரி அப்புறம்?''

அட இதென்ன சோதனை என்று சசிரேகா மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்க, ''சரி நீ படுத்துக்கோ'' என்று எழுந்திருந்தான் ஷ்யாம் சுந்தர்.

''நீங்க ஏன் எழுந்துட்டிங்க?''

''நீ படுத்துக்கோம்மா நான் பத்து நிமிஷத்துல வர்றேன்'' என்று கணவன் வெளியே சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவனுடைய கரிசனத்தில் தலைவலி கூட சற்று மட்டுப்பட்டிருந்தது போலத் தோன்றியது.

ஆனால் வயிற்றுப் பசிதான் மேலும் அதிகமாகி இம்சித்தது.

சொன்னது போலப் பத்து நிமிடங்களில் திரும்பி வந்திருந்த கணவனின் கைகளில் இருந்த ஹாட்பாக்ஸைப் பார்த்தாள் சசிரேகா.

''என்னங்க இது?''

''எழுந்துரு சொல்றேன்'' என்று மனைவியை எழுப்பி அமர வைத்தான், தான் எடுத்து வந்திருந்த ப்ளேட்டில்



இரண்டு தோசைகளை வைத்துக் கையோடு கலக்கி எடுத்து வந்திருந்த இட்லிப் பொடியுடன் ''சாப்பிடு'' என்று மனைவியின் கைகளில் கொடுத்தான்.

............

''என்னமா, சாப்பிடு.''

''நீங்க போய் செஞ்சு எடுத்துட்டு வந்தீங்களா ஷ்யாம்?''

''நீ முதல்ல சாப்பிடு அப்பத்தான் நான் மேல பேசுவேன்'' என்ற கணவனின் உபசரிப்பில், எழுந்து போய்க் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள் சசிரேகா.

மனைவி அமர்ந்ததும் அவளிடம் ப்ளேட்டை எடுத்துக் கொடுத்தவன், ஒரு டம்ளரில் தண்ணீரை ஊற்றி அருகில் வைத்தான்.

முதலில் கணவனுக்காக சாப்பிட ஆரம்பித்தவள், அதற்குப் பிறகு மடமடவென்று மூன்று தோசைகளைச் சாப்பிட்டு முடித்து விட்டுத்தான் நிமிர்ந்தே பார்த்தாள்.

தான் எவ்வளவு மறுத்தும் கேட்காமல் சிறியது தான் என்று கணவன் மேலும் ஒரு தோசையை வைத்து விட்டுக் குளித்துவிட்டு வருகிறேன் என்று சென்றிருக்க, முயன்று அதிலும் ஒரு பாதியை சாப்பிட்டு முடித்தாள் சசிரேகா.

தன் வயிறு வாடக்கூடாது என்பதற்காக தானே சென்று தோசை வார்த்து எடுத்து வந்த கணவனின் அன்பில் நெஞ்சம் நெகிழ்ந்து போனது. இப்படியொரு கணவன் கிடைக்க உண்மையிலேயே தான் மிகவும் தவம் செய்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அதிலும் முன்னும் பின்னும் நான் கிச்சனுக்குள் சென்றதே இல்லையென்று கணவன் பேச்சு வாக்கில் சொன்னது தான் நினைவுக்கு வந்தது.

யாராவது பார்த்திருந்தால் அவனுடைய காதில் விழும் விதமாகவே இல்லாவிட்டாலும், புதுப் பொண்டாட்டி மோகமென்று கேலி பேசியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

அப்படி எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் பசியைத் தீர்ப்பதற்காகத் தனக்குத் தெரிந்த அளவில் இவ்வளவு விரைவாகக் கணவன் செய்திருக்கும் வேலைகளை நினைத்ததில் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது சசிரேகாவுக்கு.

''என்னமா?'' என்று கணவனின் குரலில் நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

''என்னடா?'' என்று குளித்து முடித்துவிட்டு ஃப்ரஷ்ஷாக தனக்கு மிக அருகில் வந்து அமர்ந்திருந்தவனை ''ஷ்யாம்'' என்று அழுகையில் உதடு துடிக்க அழைத்தாள்.

''ம்....''

அதற்கு மேல் எதுவும் பேச முடியாமல் போக, அப்படியே கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

''சசி'' என்று அவன் மிருதுவாக மனைவியை அணைத்துக் கொள்ள, மேலும் வாகாக கணவனுடைய மார்பில் ஒண்டிக் கொண்டாள் சசிரேகா.

அப்படியே பல வினாடிகள் சென்றிருக்க, மனைவியின் சூடான கண்ணீர் தன் மார்பை நனைப்பதை உணர்ந்தான்.



''வேண்டாம்மா, ஏற்கனவே தலைவலி இருக்கும் போது இப்படி அழக்கூடாது.''

கண்களைத் துடைத்துக் கொண்டு மெதுவாக நிமிர்ந்து தன்னைப் பார்த்த மனைவியைப் பார்த்தான் ஷ்யாம் சுந்தர்.

''நான் ஒன்னும் அழல, இது ஆனந்தக் கண்ணீராக்கும்'' என்றாள்.

''ஓ.''

''நிஜமாகவே நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா ஷ்யாம்?''

''ஏன்?''

''உங்க இடத்துல வேற யார் இருந்திருந்தாலும் அதிகபட்சம் போய் எதையாவது செஞ்சு சாப்பிட்டு வான்னு வேணும்னா சொல்லியிருப்பாங்க, ஆனா நீங்க...''

''நான் மட்டும் அப்படி பெருசா என்னத்தை செஞ்சுட்டேன்?'' என்றவன் ''இப்ப உனக்குத் தலைவலி எந்த அளவுல இருக்கு?'' என்று கேட்டான்.

''மேக்ஸிமம் சரியாயிடுச்சு ஷ்யாம்.''

''அட!''

''நிஜமாதான் சொல்றேன்'' என்ற மனைவியை அவன் காதல் பார்வை பார்க்க, ''ப்ளீஸ் அப்படிப் பாக்க வேண்டாமே'' என்றாள் சசிரேகா.

''சரிதான்'' என்ற ஷ்யாம் சுந்தர் மனைவியை இழுத்து அணைத்திருந்தான்.

# 5

''குட்மார்னிங் அண்ணி.''

''ஹாய் ஸ்மிர்த்தி குட்மார்னிங், பாத்து ரொம்ப நாளாச்சு எப்படியிருக்க?''

''அதான நான் நல்லார்க்கேன், நீங்க எப்படியிருக் கீங்க?''

''நானும் நல்லார்க்கேன்.''

''ஆமா நீங்க என்ன கிச்சன்ல இருக்கீங்க, உங்களுக்கு சமைக்கவெல்லாம் கூடத் தெரியுமா?''

''அடடா ஸ்மிர்த்தி குட்டிக்கு என்ன இவ்வளவு ஆச் சரியம்? நானென்ன ஃப்ளைட்டா ஓட்டறேன் சமைக்கத் தான செய்யறேன்.''

''ரொம்ப சிம்பிள் நீங்க சொல்றதப் பாத்தா பிரமாதமா சமைப்பீங்க போலிருக்கே.''

''அத நீயே சாப்பிட்டுப் பாத்து அப்புறமா சொல்லு, ஆமா எக்ஸாம் எல்லாம் எப்படி எழுதியிருக்க?''

''நல்லா எழுதியிருக்கேன் அண்ணி, ஆமா அண் ணாவ எங்க காணல?''

''ஏதோ வேலையா கிளம்பிப் போனார்மா, நைட் படத்துக்குப் போயிருந்தியே எப்படியிருந்தது?''



''சூப்பர்ப், நாம எல்லாருமே கூட சேந்து இன்னொரு தடவ அந்தப் படத்துக்குப் போலாம் அண்ணி.''

''ஓ போலாமே, உனக்கு ஒன்னு தெரியுமா எனக்கும் சினிமாவுக்குப் போறதுன்னா ரொம்பப் பிடிக்கும்.''

''அட நீங்களும் என்ன மாதிரி தானா அப்ப இனிமேல் எனக்குப் பிரச்சனையே இல்ல'' என்று குதித்தாள் ஸ்மிர்த்தி.

''அதுசரி, குடிக்க உனக்கு என்ன குடுக்கட்டும்?''

''வேண்டாம் அண்ணி, உங்க கை வண்ணத்துல டிபன் வாசன கமகமன்னு ஆளையே தூக்குது, நான் போய் பிரஷ் பண்ணிட்டு வந்துட்டு டிபனே சாப்புட் றேன்'' என்று சிரித்துக் கொண்டே சென்ற தனது நாத்த னாரைப் பார்த்தாள் சசிரேகா.

பரவாயில்லையே, தனக்கு இந்த வீட்டில் ஒரு நல்ல தோழமையும் இருக்கிறது என்று மன நிம்மதியுடன் நினைத்துக் கொண்டே சமையல் வேலைகளைத் தொடர்ந்தாள்.

தன்னுடைய அத்தை சொன்னது போல எட்டு மணிக் குள் அனைத்து பதார்த்தங்களையும் செய்து முடித்து டைனிங் டேபிளில் எடுத்து வைத்திருந்தாள்.

சொல்லி வைத்தாற் போல அடுத்த பத்து நிமிடங் களில் ஒவ்வொருவராக சாப்பிட வர, தானே முன்னின்று பரிமாறினாள்.

''அடடா, நம்ம வீட்டுக் கிச்சனுக்குள்ள லேடிஸ் எட்டிப் பாக்கறதே அதிசயம், ஆனா இன்னைக்கு சமையலே உன்னோடது தான் போல. இப்பத்தான் இந்த

வீடு அந்த மஹாலட்சுமியே வந்து வாசம் செய்யற மாதிரி நிறைஞ்சு இருக்குமா'' என்று சொல்லிக் கொண்டே கிருபாகரன வர, மெல்லியதாகப் புன்ன கைத்துக் கொண்டே ஒதுங்கி நின்றாள் சசிரேகா.

''எப்படியிருக்கமா? ஊர்ல அம்மா எப்படி இருக் காங்க?''

''நல்லார்க்கோம் மாமா'' என்று சொல்லிக் கொண்டே சாப்பிட வந்து அமர்ந்திருந்த தனது மாமனாருக்குப் ப்ளேட்டைத் திருப்பி வைத்து பரிமாற ஆரம்பித்தாள் சசிரேகா.

''அண்ணியோட ப்ரிப்பரேஷன் பிரமாதம் டாடி'' என்று ஏற்கனவே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மகள் பாராட்டிதழ் வழங்க, இரண்டு வாய் சாப்பிட்டிருந்த கிருபாகரனும் அதையே ஆமோதித்தார்.

அப்படியொன்றும் மிகவும் பிரமாதமாக சமைத்துப் பழக்கப்பட்டிராத சசிரேகாவுக்கு, அவர்கள் இருவரும் மனதாரப் பாராட்டியதில் மனம் நெகிழ்ந்து போனது.

மேலும் சிறிது நேரத்தில் ''நீயும் உக்காந்து சாப் புடுமா'' என்று மருமகளிடம் சொல்லிக் கொண்டே தான் சாப்பிட்டு முடித்து எழுந்தார் கிருபாகரன்.

அதே நேரம் ''ஐய் அண்ணா வந்தாச்சு'' என்று ஸ்மிர்த்தி சந்தோஷமாகச் சொல்ல, தானும் திரும்பிப் பார்த்தாள் சசிரேகா.

''என்ன மேடம் உன் வேலைய ஆரம்பிச்சுட்டயா?'' என்று கேட்ட அண்ணனிடம் ''என்னண்ணா?'' என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.



''சாப்புட்ற வேல தான், எக்ஸாம் எல்லாம் முடிஞ்சது இனி நீ பாக்கப் போற ஃபுல் டைம் ஜாப் இதுதான?''

''போங்கண்ணா நானொன்னும் அப்படியில்ல, நாந்தான் காலேஜ்ல ஃபர்ஸ்ட் மார்க் வாங்குவேன் தெரிஞ்சுக்கோங்க.''

எதுவும் பேசாமல் தன்னை ஒரு மாதிரியாகப் பார்த்த தன் அண்ணனிடம் மீண்டும் ''என்னண்ணா?'' என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

''உங்க காலேஜ்ல எல்லாரும் அவ்வளவு மோசமாவா படிப்பாங்க?''

அப்படிக் கேட்ட தனது அண்ணனை விளையாட் டுக்கு முறைத்தவள், ''அண்ணி இந்த அண்ணாவுக்கு இன்னைக்கு சாப்பாடே குடுக்க வேண்டாம்'' என்றாள்.

''அது சரிதான் எனக்கு டிபனே போதும்'' என்று சொல் லிக் கொண்டே சாப்பிட அமர்ந்த தனது கணவனுக்குப் புன்னகையுடன் பரிமாறினாள் சசிரேகா.

''சரி போனாப் போகுது அண்ணியோட சூப்பர் சமை யலை நீங்களும் என்ஜாய் பண்ணுங்க'' என்ற தங் கையைப் பார்த்துச் சிரித்தான் ஷ்யாம்சுந்தர்.

''எதுக்கு சிரிக்கறீங்க?''

''வாய் நிறைய சொல்ற, ஆனா அதுக்கெல்லாம் மிச்சம் மீதி ஏதாவது இருக்கணுமே.''

''ஹலோ என்ன கிண்டலா?'' என்று ஸ்மிர்த்தி சற்று சத்தமாகத் தனது அண்ணனைப் பார்த்துக் கேட்க, ''அதான இருந்திருந்து ஸ்மிர்த்தியப் போய் எதுக்கு இப்படி சொல்றீங்க?'' என்று தானும் தனது நாத்தனாருக் காகப் பரிந்து வந்தாள் சசிரேகா.

''பாத்தீங்களா என் பக்கம் இனிமேல் பலம் அதிகம்'' என்று ஸ்மிர்த்தி சந்தோஷமாகச் சொல்ல, ''அது சரி தான்'' என்று சற்றே பயந்தவன் போல சாப்பிட ஆரம்பித் தான் ஷ்யாம்சுந்தர்.

''அண்ணா நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்'' என்ற தங்கையைப் பார்த்தவன், ''சொல்லு'' என்றான்.

''அண்ணா எனக்கு மியூஸிக் க்ளாஸ் போகணுங்கறது ரொம்ப நாள் ஆசைன்னு உங்களுக்குத் தெரியும், அதே மாதிரி தான் அண்ணிக்குமாம். நாங்க ரெண்டு பேரும் வேணும்னா ஒன்னா மியூசிக் க்ளாஸ் போறோம்னா.''

''ஒரு வீட்ல ரெண்டு கொடுமையா தாங்காதும்மா.''

''ப்ளீஸ்னா நான் ரொம்ப ஸீரியஸாக் கேக்கறேன்.''

''இல்ல ஒரு கொடுமைக்கு அதாவது ஒரு பக்க மிருந்து வர்ற சத்தத்துக்கு ஒரு காத வேணும்னா அடைச் சுக்கலாம், ரெண்டு காதையும்னா...''

''அண்ணா வேண்டாம்.''

''வேண்டாமா, அப்பாடா எல்லாரும் ஒரு வழியாத் தப்பிச்சாங்க'' என்ற தனது அண்ணனிடம் ''நான் சொன் னது ஒன்னும் அந்த வேண்டாம் இல்ல'' என்று அவசர மாக மறுத்தாள் ஸ்மிர்த்தி.

''பின்ன?''

''நான் மியூஸிக் க்ளாஸ் போகத்தான் போறேன். அதுல உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்'' என்ற தங்கையிடம் ''அடடா இப்படி சொல்லிட்டயே ஸ்மிர்த்தி'' என்றான் ஷ்யாம் சுந்தர்.



''சரி அதெல்லாம் இருக்கட்டும்னா இன்னைக்கு நானும் அண்ணியும் பர்ச்சேஸ் பண்ணப் போறோம்.''

''இன்னைக்கா?'' என்று வந்த தனது தாயைத் திரும் பிப் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

''அட ஆமாம் மம்மி இனி நீங்க என்ன சொல்லப் போறீங்க?'' என்ற மகளுக்கு எந்த பதிலும் சொல்லாமல் தனது மருமகளைப் பார்த்தார் அமுதா.

''பர்ச்சேஸ்ஸுக்குக் கிளம்பிட்டா சமையல் வேலைய யாரு பாக்கறது? இன்னைக்கு முழுக்க கிச்சன்ல எல்லா வேலைகளையும் நீயே பாத்துக்க'' என்று சொன்ன தனது அத்தையிடம், ''சரி அத்தை'' என்றாள் சசிரேகா.

''என்ன மம்மி நீங்க?'' என்று சிணுங்கிய மகளிடம், ''நாளைக்கு முத்தையா திரும்பி வர்ற வரைக்கும் அப்ப எல்லாரும் பட்டினி இருந்துக்கலாமா?'' என்று கேட் டார்.

''பட்டினி எதுக்கு இருக்கணும், இத்தன நாளா என்ன பண்ணிட்டிருந்தோமோ அப்படி எதையாவது செஞ்சுக்க வேண்டியது தான்'' என்று சின்னதாகி விட்ட குரலில் சொன்ன மகளைப் பார்த்தவர், ''நாந்தான் செய்யணும் ஆனா அதுக்கும் முடியாம எனக்கு வெளிய கிளம்ப வேண்டிய வேலையிருக்கே'' என்றார்.

''பரவாயில்ல மம்மி நாளைக்குப் போய்க்கறோம், ஆனா நீலா நல்லா சமைப்பாங்க தான?''

வேலைக்காரப் பெண் நீலாவைக் குறிப்பிட்டு ஸ்மிர்த்தி சொல்ல, ''எல்லாருக்கும் புடிக்கணுமே. என்ன நீ வர வர நிறைய எதித்துப் பேச ஆரம்பிச்சிருக்க?'' என்று மகளைப் பார்த்தார் அமுதா.

''இத்தன நாளா வீட்டுக்குள்ளயே அடஞ்சு கிடந்து எக்ஸாம்க்குப் படிச்சுட்டிருந்ததால ஸ்மிர்த்திக் குட்டிக்குப் போரடிச்சுப் போச்சு. நாளைக்கு வேணும்னா நான் காலைல ஆபிஸுக்குப் போகும்போதே உங்க ரெண்டு பேரையும் கொண்டு போய் பர்ச்சேஸ்க்கு விட்டுட்டுப் போயிடறேன் ஓகேவா?'' என்று கேட்ட தன் அண்ண னிடம் உடனே ''சரிண்ணா'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் ஸ்மிர்த்தி.

''அப்புறம் ஷ்யாம் உங்க கல்யாணம் முடிஞ்சதும் குடும்பத்தோட நம்ம குல தெய்வக் கோயிலுக்கு வர்றதா வேண்டிக்கிட்டேன், நாளைக்கு மறுநாள் கோவில் விசேஷமும் வருது. கம்பெனில வேலைகளைக் கொஞ்சம் ஃப்ரீ பண்ணிக்கோங்கப்பா அன்னைக்கே கோவிலுக்குப் போய்ட்டு வந்துடலாம்.''

''நாளைக்கு மறுநாளா?'' என்று கேட்ட மகனிடம் ''ஏம்பா உனக்கு முக்கியமான வேலை ஏதாவது இருக்கா?'' என்று கேட்டார் அமுதா.

''இல்ல ஒரு பதினஞ்சு நாளாவே என்னால கம்பெனி வேலைகள்ல கான்ஸன்ட்ரேட் பண்ண முடியல, வர்ற சன்டே கோயிலுக்குப் போய்க்கிட்டா என்னமா?''

''இல்லப்பா நாளைக்கு மறுநாள் போனா கொஞ்சம் நல்லார்க்கும்'' என்று மெதுவாகத் தயங்கிக் கொண்டே சொன்ன தனது அத்தையைப் பார்த்தாள் சசிரேகா.

''சரிமா அப்ப அந்த வேலைகள சன்டே பாத்துக் கறேன்'' என்று மகன் சொல்ல உடனே முகம் மலர்ந்தார் அமுதா.



''அப்ப சரிப்பா, உங்கிட்ட கேட்டுட்டு மத்த எல்லார் கூடவும் சொல்லிக்கலாம்னு இருந்தேன். இனி கோவி லுக்குக் கிளம்பறதுக்கான ஏற்பாடுகள இன்னைக்கிருந்தே பாக்க ஆரம்பிச்சா தான் சரியா இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே தாய் செல்ல தொடர்ந்து சாப்பிடு வதில் முனைந்தான் ஷ்யாம்சுந்தர்.

தங்கையின் முகம் இன்னும் முழுமையாகத் தெளி யாததைக் கண்டவன், ''கவலைப்படாத இப்ப அண்ணி செஞ்சிருக்கற சாப்பாடு நல்லார்க்கற மாதிரி மதியம் அவங்க செய்யப் போற டிபனும் நல்லாத்தான் இருக் கும்'' என்றான்.

''அடப் போங்கண்ணா.''

''அதான'' என்றவன், மேலும் பரிமாறப் போன மனை வியைப் போதுமென்று தடுத்தான்.

''சரிண்ணா என் ரூம்ல எனக்கு வேலையிருக்கு'' என்று எழுந்தவள், ''ஒன் அவர்ல வந்து உங்களுக்கு லஞ்ச் ப்ரிப்பேர் பண்றதுல ஹெல்ப் பண்றேன் அண்ணி. நான் வந்ததுக்கப்புறம் தான் நீங்க லஞ்ச் வேலையை ஸ்டார்ட் பண்ணனும்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டுச் சென்றாள் ஸ்மிர்த்தி.

சென்றவள் சில வினாடிகளில் ''அண்ணி'' என்று அழைத்துக் கொண்டே திரும்பி வந்தாள்.

''என்னமா?''

''அண்ணாவுக்குக் காபி கலக்கும்போது எனக்கும் ஒரு கப் காபி குடுக்கறீங்களா?''

''சரிடாம்மா'' என்று சொல்லிக் கொண்டே டேபிள் மேல் இருந்தவற்றை ஒதுக்கி வைத்தாள் சசிரேகா.

"ஹாய் ஸ்வீட் கேர்ள், என்ன சாப்டாச்சா?''

தனது பெரிய அண்ணி வர, "வாங்க அண்ணி குட் மார்னிங்'' என்றவள் "நான் இப்பதான் சாப்பிட்டேன்'' என்றாள்.

"ஓ அப்ப நேரத்துலயே எழுந்துட்டயா?''

"வழக்கம்போல ஆறு மணிக்குத் தான்'' என்றவள், "நீங்க சாப்பிடலயா அண்ணி?'' என்று கேட்டாள்.

"பின்ன பசி வயித்தக் கிள்ளுது'' என்று சொல்லிக் கொண்டே டைனிங் டேபிளில் இருந்த பதார்த்தங்களை திறந்து பார்த்துத் தனக்குத் தேவையானவற்றை ஒரு ப்ளேட்டில் பரிமாறிக் கொண்டாள் இந்துமதி.

"என்ன அண்ணி இங்க உக்காந்து சாப்பிடலயா?''

"ம்கூம், அவசரமா ஒரு மெயில் அனுப்பணும். அதனால என் ரூமுக்குப் போறேன்'' என்றவள், "எனக்கொரு ஸ்பூன் எடுத்துட்டு வர முடியுமா'' என்று சசிரேகாவைப் பார்த்தாள்.

சில வினாடிகளில் அவள் ஒரு ஸ்பூனை எடுத்து வந்து கொடுக்க ஒரு நன்றி கூடச் சொல்லாமல் அதை வாங்கிக் கொண்டு திரும்பிய இந்துமதியை மீண்டும் "அண்ணி'' என்று அழைத்தாள் ஸ்மிர்த்தி,

"என்ன ஸ்மிர்த்தி?''

"இன்னைக்கு எல்லா சமையல் ப்ரிப்பரேஷனும் சின்ன அண்ணியோடது, ரொம்ப டேஸ்டா இருக்கு. நீங்க வெச்சுட்டுப் போறது கண்டிப்பாப் பத்தாது இன்னும் கொஞ்சம் சேத்து எடுத்துட்டுப் போங்க.''



"ஓ அதான பாத்தேன் பொங்கல்ல ஒரு முந்திரிப் பருப்பக் காணோம். தயிர் சேமியால ஃப்ரூட்ஸ் எதுவும் இல்லாம மொட்டையா இருக்கு. நீ ஒன்னு பண்ணு ஒரு பத்து நாளைக்கு முத்தையாகூட இருந்து நம்ம வீட்டு சமையல் எப்படியிருக்கணுங்கறதைக் கொஞ்சம் கத்துக்கோ'' என்று சசிரேகாவைப் பார்த்துச் சொல்லி விட்டுச் சென்றாள் இந்துமதி.

தான் பேசாமலே இருந்திருக்கலாமோ என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ஸ்மிர்த்திக்கு, பெரிய அண்ணி சொன்னதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு வெகுளியாகச் சிரிக்கும் தனது சின்ன அண்ணியைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

மனைவியும் தங்கையும் ஒரு சேரத் தன்னைப் பார்க்க, "கிச்சன் கேபினட்டுக்குள்ள ஜென்ட்ஸ் தலைய நீட்றது நல்லார்க்காது'' என்று சிரித்தான் ஷ்யாம்சுந்தர்.

"அதான உங்களுக்கு சாப்பிட மட்டும் தான் தெரியும், ஆமா நம்ம வீட்ல கிச்சன் எந்தப் பக்கம் இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமாண்ணா?''

"அடடா இப்படி உண்மையக் கண்டு பிடிச்சுட்டயே ஸ்மிர்த்தி'' என்று ஷ்யாம்சுந்தர் சற்றே பயந்தவன் போலத் தங்கையைப் பார்க்க, "ம் அந்தப் பயம் இருக்கட்டும்'' என்றாள் அவள்.

அந்தப் பேச்சைத் தொடர்ந்து வந்த கணவனின் பார்வை தன் மேல் விழ, "சரி நான் போய் காபி எடுத்துட்டு வர்றேன்'' என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் சசிரேகா.

சமையலறைக்கு வந்து விட்டிருந்தவளுக்குக் கணவனைப் பற்றிய எண்ணங்கள் தான் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தன.

மருந்துக்குக் கூட சமையலறைப் பக்கம் வந்திருக்காதவன், இரவு தனக்காக செய்தது தான் நினைவுக்கு வந்தது.

எவ்வளவு அன்பான கணவன் தனக்குக் கிடைத்திருக்கிறான்.

அவனுக்காக எந்த அளவு கஷ்டம் வந்தாலும் இந்த வீட்டில் தான் அதைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள் சசிரேகா.

# 6

சொன்னது போலவே மறுநாள் தனது அண்ணியுடன் பர்ச்சேஸ்க்குக் கிளம்பினாள் ஸ்மிர்த்தி.

''அண்ணி ஃபர்ஸ்ட் பர்ச்சேஸ் உங்களுக்கா, எனக்கா?''

''எனக்கெல்லாம் எதுவும் வேண்டாம்மா.''

''ம், வந்ததே உங்களுக்காகத்தான். அப்படின்னு சொன்னா நீங்க வர மாட்டீங்கன்னுதான் நான் முதல்லையே சொல்லல'' என்றவள் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பேசினாள்.



''அண்ணா ஒரு நிமிஷம் நீங்களே சொல்லிடுங்க'' என்றவள் ''அண்ணி இந்தாங்க பேசுங்க'' என்று சசிரேகாவிடம் மொபைல் போனைக் கொடுத்தாள்.

தனது கணவனிடம் சில நிமிடங்கள் பேசியவள் ''சரிங்க'' என்று போனை வைத்தாள்.

''என்ன அண்ணி?''

''ஏன் சிரிக்கற?''

''இல்ல இப்ப சொல்லுங்க. ஃபர்ஸ்ட் பர்ச்சேஸ் உங்களுக்குத்தான?''

''அண்ணனும் தங்கையும் உங்க மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்கீங்க?''

''அத நீங்க அண்ணாகிட்டயே கேட்டிருக்கலாமே. சரி வாங்கண்ணி அண்ணா குடுத்திருக்கிற பணத்தையெல்லாம் காலி பண்ற வேலையைப் பார்க்கலாம்.''

''அது சரிதான், ஆனா முதல்ல உனக்கு.''

''ரெண்டு பேருக்கும் சேர்ந்தே பார்க்கலாம் அண்ணி. எனக்கும் சேலைகள் எடுக்கணும், உங்களுக்கும் மாடர்ன் டிரஸ் பாக்கணும்.''

''எனக்கு ரெண்டு செட் மட்டும் போதும்.''

''அப்ப அம்பது அம்பதாயிரத்துக்கு ரெண்டு பட்டு ஸாரீஸ் எடுத்துக்கோங்க சரியா இருக்கும்.''

''என்ன உத கேக்குதா உனக்கு?''

''பின்ன உங்களுக்குன்னு உங்க வீட்டுக்காரர் குடுத்திருக்கற பணத்தக் காலி பண்ணியாகணுமே.''

''எல்லாப் பணத்தையும் முடிச்சே ஆகணும்னு ஏன் ஸ்மிர்த்தி பாக்கற?''

''நீங்க வாங்க அண்ணி, இங்க வீட்டப் பொறுத்த வரைக்கும் ஷ்யாம் அண்ணா சொல்றத செஞ்சுதான் எல்லாருக்கும் பழக்கம். அதோட...''

''அதோட?''

''அழகான அவரோட மனைவிக்கு இன்னும் வித விதமா எல்லாம் போட்டு அழகு பாக்கணும்னு அவர் ஆசப்படறார் போலிருக்கு'' என்று ஸ்மிர்த்தி சிரிக்க, ''அது சரி நேரம் போயிட்டே இருக்கு வா உள்ள போய்ப் பாக்கலாம்'' என்று முன்னே நடந்தாள் சசிரேகா.

''அப்பாடா ஒரு வழியா ஒத்துக்கிட்டிங்களா, நீங்க இப்படியெல்லாம் சொல்லுவீங்கன்னு தெரிஞ்சு தான் அண்ணா உங்ககிட்ட சொல்லாம எங்கிட்ட சொல்லியிருக்கார்னு இப்பத்தான் புரியுது'' என்று உடன் நடந்தாள் ஸ்மிர்த்தி.

ஸ்மிர்த்தியைக் கண்டதுமே நல்ல உபசரிப்புடன் வாயெல்லாம் பல்லாகக் கடையின் உரிமையாளர் முதல் மற்ற அனைவருமே தங்களை வரவேற்று அமரச் சொல்லி மிகவும் விலையுயர்ந்த துணிகளை எடுத்துப் போட்டுக் கொண்டே இருக்க, ஸ்மிர்த்தியும் அவற்றில் பெரும்பாலான துணிகளை தேர்வு செய்து எடுத்து வைத்துக் கொண்டே இருந்தாள்.

முக்கியமாக ஒவ்வொரு துணிக்கும் ஸ்மிர்த்தி தன்னுடைய விருப்பத்தையும் கேட்டுக் கொண்டதோடு, அவளுடைய தேர்வுகள் அனைத்துமே மிகவும் பிரமாதமாக இருப்பதையும் சசிரேகாவால் மறுக்க முடியவில்லை.



மேலும் சிறு பெண்ணாக இருந்தும் எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாள் என்று ஆச்சரியப் படவும் நேர்ந்தது.

இவங்க என்று கடையின் உரிமையாளர், (அவர் உரிமையாளராகத்தான் இருக்க வேண்டுமென்று சசிரேகாவுக்குத் தோன்றியது) தன்னைக் காட்டிக் கேட்க, ''என் சின்ன அண்ணி'' என்று ஸ்மிர்த்தி சற்றுப் பெருமையுடன் பதில் சொல்வதைக் கண்டாள்.

அத்தோடு ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் தன்னுடைய விருப்பத்தையும், சந்தோஷத்தையும் கேட்டுக் கேட்டு அதன்படி நடந்து கொள்ளும் ஸ்மிர்த்தியின் செய்கையில் உள்ளம் நெகிழ்ந்து போனது சசிரேகாவுக்கு.

''உங்க பெரிய அண்ணியக் கொஞ்ச நாளா கடைப் பக்கமே காணல, அவங்க கேட்ட மாதிரி நிறைய கலெக்ஷன்ஸ் வந்திருக்கு எடுத்து வெச்சிருக்கோம். அவங்க கிட்ட சொல்லிடறீங்களா?'' என்ற கடைப் பெண்மணியிடம் ''கண்டிப்பா சொல்றேன்'' என்றாள் ஸ்மிர்த்தி.

''அண்ணி அங்க பாருங்க அவங்க உங்களத் தான் கூப்புட்ற மாதிரி தெரியுது'' என்று தனது நாத்தனார் கை காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தாள் சசிரேகா.

ஊரில் அவர்களுடைய பக்கத்து வீட்டில் குடியிருக்கும் நித்யன் தங்களை நோக்கி வருவது தெரிய, ''இதோ வர்றேன் ஸ்மிர்த்தி'' என்று தனது நாத்தனாரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுத் தானும் அவனை நோக்கிப் போனாள் சசிரேகா.

''வாங்க எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன் உங்க வீட்ல எல்லாரும் எப்படியிருக் காங்க?''

''ரொம்ப நல்லார்க்காங்க, நீங்க பேமிலியோட வந் திருக்கீங்க போலிருக்கு.''

''ஆமா, ஊர்ல இருந்து எல்லாரும் வந்திருக்காங்க. பெரிய தங்கச்சிக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிருக்கு அத னால பர்ச்சேஸ்க்கு வந்திருக்கோம்.''

''ஓ ரொம்ப சந்தோஷம், எப்ப மேரேஜ்?''

''இன்னும் ஒரு மாசமிருக்கு. அழைப்பு வைப்பேன் கண்டிப்பா வந்துடணும்.''

''ஷ்யூர், அப்புறம் அம்மாவப் பாத்தீங்களா?''

''உங்கிட்ட நான் ஒன்னு சொல்லணும்'' என்று பீடிகையுடன் நித்யன் ஆரம்பிக்க, என்னவென்பதைப் போல அவனைப் பார்த்தாள் சசிரேகா.

''நீ டூர் போயிருந்தப்ப உங்கம்மாவுக்கு திடீர்னு நெஞ்சு வலி வந்துடுச்சு. அப்பத்துக்கு பயப்பட பெரிசா எதுவுமில்லன்னாலும் கண்டிப்பா மேல ட்ரீட்மெண்ட் எடுத்தாகணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். ஆனா அந்த நேரம் பாத்து உன்னோட கல்யாணப் பேச்சும் வந்துட்டதால உங்கம்மா உங்கிட்ட மறச்சுட்டாங்கன்னு நினைக்கறேன்.''

.............

''உனக்குத் தெரிஞ்சா நீ கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டன்னு என்னயும் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட் டாங்க. சரி எப்படியும் ஒரு மாசத்துக்குள்ள உன் கல் யாணம் முடிஞ்சுடுங்கற கண்டிஷன்ல இருந்ததால நானும் அப்பப் பேசாம இருந்துட்டேன்.''



.........

''நீ ஊருக்கு வரும்போது உங்கிட்ட சொல்லணும்னு நினைச்சிருந்தேன், தங்கச்சி கல்யாண ஜோலியா ஊருக்குப் போயிருந்ததால நீ வந்தப்ப உன்னப் பாக்க முடியாமல் போயிடுச்சு. நல்லவேளை இப்பவாவது உங்கிட்ட சொல்ல முடிஞ்சது'' என்றவன் ''உங்கம்மாவ ஒரு நல்ல டாக்டர்கிட்டக் கூட்டிட்டுப் போய்க் கன்சல்ட் பண்ணு'' என்றான்.

..........

''உடனடியா பாக்கறது நல்லதுன்னாலும் ரொம்ப பயப்பட்றதுக்கு ஒண்ணுமில்ல, நீ மனசப்போட்டுக் குழப்பிக்காம இரு.''

''இப்ப அம்மா...'' என்று சசிரேகா கண் கலங்க, ''பாரு இப்பிடி நீ பயப்படுவேன்னு தான் ஆன்ட்டி உங்கிட்ட இன்னும் சொல்லாம இருக்காங்கன்னு நினைக்கறேன்'' என்றான்.

''அம்மாவ நீங்க அப்பப்பப் போய் ஒரு கண் பாத்துக் குவீங்களா?''

சிரமப்பட்டு அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேசுபவளைப் பார்க்கப் பாவமாக இருக்க, ''உனக்கு அதுல சந்தேகமே வேண்டாம் நீ இருந்து பார்த்துக்கிட்டா எப்பிடிப் பார்த்துக்குவியோ அதே அளவுக்கு நானும் பார்த்துக்கறேன்'' என்றான்,

''ரொம்ப தேங்க்ஸ்.''

''பரவாயில்ல கவலப்படாமப் போ, ஆனா ஆன்ட்டிய ஒரு நல்ல டாக்டர்கிட்டக் காட்றதுக்கு மட்டும் லேட் பண்ணிடாதே.''

"சரி" என்று அவனிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பியவள், அதற்குப் பிறகு தான் தனது கணவன் வந்திருப்பதைக் கண்டாள்.

அவன் தனது தங்கையிடம் பேசிக் கொண்டிருக்க, "ஷ்யாம் நீங்க!" என்று அருகில் சென்றாள் சசிரேகா.

"வாம்மா, யாராது அவர நம்ம கல்யாணத்துல கூடப் பாத்த ஞாபகம்."

"ஆமா ஷ்யாம் அவர் பேரு நித்யன், ஊர்ல நம்ம வீட்டுக்குப் பக்கத்து வீடு. இருங்க ஒரு ஸெகண்ட் அவரக் கூப்பிட்றேன்" என்று திரும்பிய மனைவியைத் தடுத்தான் ஷ்யாம்சுந்தர்.

"வேண்டாம்மா, நான் கொஞ்சம் சீக்கிரம் கிளம் பணும்."

"ஆமா என்ன நீங்க இங்க!?"

"நான் இங்க பக்கத்துல ஒரு வேலையா வந்தேன், சும்மா போன் பண்ணிப் பாக்கலாமேன்னு கூப்பிடப் போக இன்னும் கொஞ்சம் பணம் வேணும்னு ஸ்மிர்த்தி சொன்னா. நல்லவேளையா அவ சொன்னா, இல்லன்னா அரகுறையா பர்ச்சேஸ முடிச்சுட்டு வந்திருப்பீங்க."

"என்னது பணம் பத்தலேன்னாளா?" என்று சசிரேகா சற்று ஆச்சரியத்துடன் கேட்க, "சரி பேசிட்டிருங்க நான் போய் பில் பே பண்ணிட்டு வந்துட்றேன்" என்று நகர்ந்தாள் ஸ்மிர்த்தி.

"என்னமா?" என்று கணவன் கேட்க, "எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்குதான நான் எவ்வளவு



சொன்னாலும் ஸ்மிர்த்தி கேக்கவே மாட்டேன்றாங்க. அவ பாட்டுக்கு எடுத்து அடுக்கிட்டே போறா."

"இல்லமா, இந்த ஒரு விஷயத்துல நீ எதுவும் சொல்லாத. நம்ம குடும்பத்துக்குன்னு ஒரு கவுரவம் இருக்கு முக்கியமா எனக்கு. நீ அடிக்கடி எங்கூட வெளிய வர வேண்டியிருக்கும், நம்ம கம்பெனிக்கும் தான்."

............

"அதனால நீ தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காத, அதோட....."

"ம், அதோட என்ன?"

"உனக்காக நான் என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கேன், நீ மட்டும் "ம்" னு ஒரு வார்த்த சொல்லேன் இந்த உலகத்தையே உன் காலடில கொண்டு வந்து கொட்டுவேன்."

கணவனின் பார்வை என்னென்னவோ செய்ய, வெட்கமாகவும் அதே சமயம் மனதிற்குள் மிகவும் பெருமையாகவும் உணர்ந்தாள் சசிரேகா.

இப்படிபட்டவன் தனது தாயின் மருத்துவச் செலவுக்கு உதவாமலா போய் விடுவான்.

"என்ன யோசனை?" என்ற கணவனின் குரலில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சசிரேகா.

"என்ன சொன்னீங்க நான் 'ம்' னு ஒரு வார்த்தை சொன்னா உலகத்தையே என் காலடியில் கொட்றதாத் தான?, 'ம்' னு சொல்லிட்டேன்" என்று புன்னகையுடன் கணவனைப் பார்த்தாள்.

"அடடா என்னடா இது? ஆசையாக் காதல் வசனமெல்லாம் பேசக்கூடாது போலிருக்கே. சும்மா சொல்

றதையெல்லாம் செஞ்சு காட்டச் சொன்னா நான் என்ன செய்யட்டும்?''

''ம், இதுக்குத்தான் யோசிச்சுப் பேசணுங்கறது'' என்று சிரித்தவளைப் பார்த்தான் அவளுடைய கணவன்.

''பொது இடமா இருக்கேன்னு பாக்கறேன் இல்லன்னா.....''

''ம் சொல்லுங்க, இல்லேன்னா என்ன பண்ணிடுவீங்களாம்?''

''அத நைட் செயல்லையே காட்றேன்'' என்ற கணவனின் வார்த்தைகளில் முகம் சூடாகிச் சிவந்துவிட, அதை மறைப்பதற்காகக் குனிந்து கொண்டாள் சசிரேகா.

சில வினாடிகளில் ஸ்மிர்த்தி திரும்பி வர, ''சரி ரெண்டு பேரும் பாத்துப் பொறுமையா பர்ச்சேஸையெல்லாம் முடிச்சுட்டுக் கிளம்புங்க'' என்று கிளம்பினான் ஷ்யாம்சுந்தர்.

மதிய நேரமும் ஆகிவிட அந்த காம்ப்ளக்ஸிற்கு உள்ளேயே இருந்த தரமான புகழ்பெற்ற ஹோட்டலில் மதிய உணவை முடித்துக் கொண்டு மேலும் தேவையான அனைத்தையும் வாங்கிக் கொண்டு அவர்கள் வீடு திரும்பிய போது நேரம் மாலை நான்கு மணிக்கும் மேல் ஆகியிருந்தது.

டிரைவரின் உதவியுடன் வாங்கி வந்த அனைத்தையும் வீட்டிற்குள் கொண்டு வந்து சேர்த்தவர்கள் 'ஷ்' அப்பாடா என்று சற்று நேரம் அமர்ந்து விட்டனர்.

''இன்னைக்குதான் அண்ணி நான் லைஃப்லயே ஃபர்ஸ்ட் டைமா என்னென்ன வாங்கணும்னு நினைச்சுப்



போனேனோ அதையெல்லாத்தையும் வாங்கிட்டு வந்திருக்கேன்.''

''அப்படியா, ஆனாலும் ஒரு சில திங்க்ஸ் நாம கேட்டது இல்லதான ஸ்மிர்த்தி?''

''அது சரிதான் அண்ணி, உங்களாலதான் பொறுமையா மனசுக்குத் திருப்தியா எல்லாத்தையும் வாங்க முடிஞ்சது. ஆனாலும் உங்களுக்கு பொறுமை ரொம்பவும் அதிகம் அண்ணி, நானா இருந்திருந்தா இப்பிடி காலைல இருந்து சாயிந்தரம் வரைக்கும் ஒரே மாதிரி இன்ட்ரஸ்ட்டிங்கா பர்ச்சேஸ் பண்ணியிருக்கவே மாட்டேன்.''

''அப்படி ஒன்னும் தெரியலையே, நீதான் இன்னைக்கு ரொம்ப நிதானமா ரசிச்சு எல்லாத்தையும் வாங்கின.''

''நானும் அதத்தான் சொல்ல வர்றேன், நீங்க ஜாலியா பேசிட்டிருந்தது தான் அதுக்குக் காரணம். சரி அண்ணி விட்டா நான் பேசிக்கிட்டே இருப்பேன்னு எல்லாரும் சொல்லுவாங்க, நீங்க போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க எனக்கும் கொஞ்சம் வேலையிருக்கு'' என்று தன்னறைக்குச் சென்றாள் ஸ்மிர்த்தி.

நேராகத் தங்களது அறைக்கு வந்து சேர்ந்த சசிரேகா, மொபைலை எடுத்துத் தனது தாய்க்கு அழைத்தாள்.

உடனே எதிர்ப்புறத்தில் அட்டெண்ட் செய்த தனது தாயிடம் சில நிமிடங்கள் பேசியவள், நிம்மதி, துக்கம் என்று எதுவுமில்லாத மன நிலையில் போனை வைத்தாள்.

'எனக்குப் பெரிதாக பயப்படுமளவிற்குப் பிரச்சனை எதுவுமில்லை, நீ அங்கு உன் புகுந்த வீட்டில்

சந்தோஷமாக இருந்தாலே நான் இங்கு நிம்மதியாக இருக்கிற மாதிரி தான்.' என்று தனது தாய் கொக்கி வைத்துப் பேசியதில், என்ன செய்வதென்று தெரியா மல் மனம் குழம்பினாள் சசிரேகா.

நிச்சயமாகத் தனது தாய்க்கு உடல் நலக் குறைவு இருக்கிறது, ஏன் அதை அவரே தனது வாயால் ஒத்துக் கொள்ளவும் செய்திருக்கிறாரே.

மனம் சலிப்படைந்து விட, எதையேதையோ எண்ணி நொந்தாள்.

சிறிது நேரம் படுத்தாவது இருக்கலாம் என்று படுத்தவள், பிறகு அதுவும் பிடிக்காமல் எழுந்து கொண் டாள்.

நேராகக் குளியலறைக்குச் சென்றவள் முகம் கைகால் கழுவித் தலைவாரிக் கொண்டு கீழே இறங்கி வந்தாள்.

அங்கு ஹாலில் அமர்ந்து டிஃபனைக் கொறித்துக் கொண்டே மும்முரமாக டி.வி பார்த்துக் கொண்டிருந்த ஸ்மிர்த்தி ''வாங்க அண்ணி கேசரியும், மிளகாய் பஜ்ஜியும் சூடா இருக்கு வந்து எடுத்துக்கோங்க'' என்று உபசரித்தாள்.

''இதோ வர்றேன்'' என்று தனது நாத்தனாருக்கு பதில் சொல்லிக் கொண்டே கிச்சனுக்கு வந்த சசிரேகா, ''முத்தையா உங்களுக்கு ஏதாவது உதவி வேணுமா?'' என்று கேட்டாள்.

''என்னம்மா நீங்க போயி?''

''பின்னே கல்யாணத்துக்கு முன்னாடி வரைக்கும் வேல அது இதுன்னு எந்நேரமும் பிஸியா இருந்தவ நான்,



அதனால கிச்சனுக்குள்ள நான் அப்பப்பத் தலைய நீட்டி எனக்குத் தெரிஞ்ச டிஷ் எதையாவது செய்ய நீங்க விட் டுக்குடுத்து தான் ஆகணும்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னவளைப் பார்த்தான் முத்தையன்.

''உங்களை மாதிரி சின்ன வயசுக்காரங்க இந்தக் காலத்துக்குத் தகுந்த மாதிரி இன்னும் பிரமாதமா சமைப்பீங்களேம்மா, அதனால எல்லாரும் சந்தோஷமா நிறையக்கூட சாப்பிடுவாங்க.''

''ஒரேயடியா அப்படின்னு சொல்லிட முடியாது'' என்றவளிடம், ''நீங்களும் டிஃபன் எடுத்துக்கோங்கம்மா சூடா இருக்கு'' என்று சசிரேகாவைச் சாப்பிடச் சொல்லி உபசரித்தான் முத்தையன்.

''இவ்வளவா? கண்டிப்பா சாப்பிடவே முடியாது'' என்று அவன் கொடுத்ததில் கொஞ்சத்தை மட்டும் வாங்கிக் கொண்டு ஹாலுக்கு வந்தாள் சசிரேகா.

எவ்வளவு பிரமாதமான பெண். இந்த வீட்டின் பெரிய மருமகளுக்கு நேர் எதிர் என்று முத்தையனால் சசி ரேகாவைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''வாங்க அண்ணி நாம போகணும்னு பேசிக்கிட் டோமே அந்தப் படத்தோட திரை விமர்சனம் தான் போயிட்டிருக்கு'' என்ற ஸ்மிர்த்தியின் அருகில் டிஃபன் ப்ளேட்டுடன் சென்று அமர்ந்தாள் சசிரேகா.

''ஸ்டோரி ரொம்ப நல்லா இருக்கும் போலிருக்கு.''

''ஆமா அண்ணி அதனால தான் நான் ஸெகண்ட் டைம் போகவும் தயாராயிட்டேன் இந்த வாரத்துலையே ஒருநாள் எல்லாரும் போலாம் அண்ணி.''

''ஸ்யூர் ஸ்மிர்த்தி'' என்ற சசிரேகா அந்தப் படத்தின் கதையைப் பற்றிக் கேட்க, அப்படியே பேச்சு எங் கெங்கோ சுற்றிக் கடைசியாக அரட்டையில் வந்து நின் றிருந்தது.

அப்பொழுது ஹாலுக்கு வந்த இந்துமதிக்கு அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்க்க வயிறு எரிந்தது, என்ன ஒரு சிரிப்பு, சந்தோஷம்.

அதிலும் தன்னிடம் பெயருக்குப் பேசிவிட்டுப் போகும் இந்தச் சிறு பெண் ஸ்மிர்த்தி, அந்த சசிரேகா விடம் அண்ணி அண்ணியென்று எப்படிக் கொஞ்சிக் குலவுகிறாள்.

நிலமை இப்படியே போனால் கூடிய விரைவில், இந்த வீட்டில் இருப்பவர்கள் அனைவரையும் அவள் தனது கைக்குள் போட்டுக் கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அப்படி மட்டும் நடந்து விட்டால் அப்புறம் இந்த வீட் டின் பெரிய மருமகளான தனக்கு, சிறிதும் மதிப்பில் லாமல் போய்விடும்.

கூடாது, அந்த அளவிற்கு நிலமை மோசமாவதற்கு விடவே கூடாது.

''வாங்க பெரியண்ணி, டிஃபன் எடுத்துக்கோங்க'' என்று ஸ்மிர்த்தி சிரித்துக் கொண்டே உபசரிக்க ''பின்ன அதுக்குத்தான வந்திருக்கேன்'' என்று ஹால் சோஃபா வில் வந்து அமர்ந்தாள் இந்துமதி.

தான் கையில் வைத்திருந்த ப்ளேட்டில் இன்னும் ஒரு வாய் கூட சாப்பிட்டிருக்காததால், அதை அப்



படியே இந்துமதிக்குக் கொடுத்து உபசரித்தாள் சசி ரேகா.

சசிரேகா தனக்கு முன்பாக வைத்த ப்ளேட்டை நகர்த்தி வைத்த இந்துமதி, ''என்ன இப்பிடி ஆறி அவலாப் போனதக் குடுக்கற போய் சூடாப் போட்டத எடுத்துட்டு வா'' என்றாள்.

''நான் சாப்பிட்டு முடிச்சாச்சு நீங்க உக்காந்து சாப் பிடுங்க சின்ன அண்ணி, நான் போய் பெரிய அண் ணிக்கு எடுத்துட்டு வர்றேன்'' என்று வேகமாக எழுந்து உள்ளே சென்றிருந்தாள் ஸ்மிர்த்தி.

ஸ்மிர்த்தியைத் தொடர்ந்து உள்ளே செல்லத் திரும்பிய தன்னை இந்துமதி அழைக்க, நின்று திரும்பிப் பார்த்தாள் சசிரேகா.

''உன்னை விரட்டி வேல வாங்கணும்னெல்லாம் எனக்கு ஒன்னும் ஆசை கிடையாது, எங்க வீட்ல எப்பவும் ஒரு நாலு வேலைக்காரங்கள விரட்டி விரட்டி அதே பழக்க தோஷத்துல உன்னையும் ஏதாவது சொல் லிடறேன்'' என்று தன்னைப் பார்த்துச் சொன்ன இந்து மதியைப் பார்த்தாள்.

நீ என் வேலைக்காரிகளுக்குச் சமமென்று சொல்லா மல் சொன்ன இந்துமதியின் வார்த்தைகளில் அயர்ந்து போனாள் சசிரேகா.

அவளுக்கு பதிலெதுவும் சொல்லாமல் சில வினாடி களில் சமயலறைக்குள் வந்திருந்தவளை, ''நானே எல்லாம் சொல்லிட்டேன் நீங்க வாங்க அண்ணி'' என்று வற்புறுத்தி மீண்டும் சசிரேகாவைத் தன்னுடன் ஹாலுக் குள் அழைத்து வந்திருந்தாள் ஸ்மிர்த்தி.

''இருமா, நான் ரெண்டு நிமிஷத்துல வர்றேன்.''

''அதெல்லாம் முடியாது, முதல்ல நீங்களும் வந்து டிஃபன் எடுத்துக்கோங்க.''

''எனக்கு டிஃபன் வேண்டாம்மா காஃபி மட்டும் போதும்.''

''என்ன அண்ணி நீங்க, சரி இருங்க முத்தையாகிட்ட சொல்லிட்டு வர்றேன். நீங்க வந்து ஒரு பஜ்ஜி மட்டுமாவது எடுத்துக்கோங்க'' என்று மீண்டும் உள்ளே சென்றாள் ஸ்மிர்த்தி.

டிஃபன் காஃபி எடுத்துக் கொண்ட பின், ''வாங்க அண்ணி வந்து எனக்கு மேக்கப் பண்ணி விடுங்க'' என்று சசிரேகாவைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள் ஸ்மிர்த்தி.

''அட நிஜாமாவா சொல்ற?''

''பின்ன என்னயும் ஆல்பத்துல இருக்கற உங்களை மாதிரி மாத்திக் காட்றீங்க இல்லன்னா விட மாட்டேன்.''

''சரி வா நீயே முடிவு பண்ணிட்ட, இனி நான் என்ன சொல்ல'' என்று சிரித்த தனது அண்ணியிடம் ''அதுக்காகப் பழி வாங்கிடாதீங்க என்ன பிரச்சனையா இருந்தாலும் பேசித் தீத்துக்கலாம்'' என்றாள்.

''அப்படிங்கற? அதுவும் சரிதான். முதல்ல நீ போய் இன்னொரு தடவ நல்லா ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வந்துடு நான் எல்லாத்தையும் எடுத்து வைக்கிறேன்'' என்று சசிரேகா சொல்ல சரியென்று சென்றாள் ஸ்மிர்த்தி.



# 7

டைனிங் டேபிளில் அனைத்தையும் ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்த சசிரேகா ''ஹலோ மேடம்'' என்ற கணவனின் அழைப்பில் திரும்பினாள்.

''வாங்க.''

''என்னமா பர்ச்சேஸ் எல்லாம் முடிஞ்சதா?''

''ஆமாங்க.''

''எங்க ஸ்மிர்த்தியக் காணல, இந்நேரம் எல்லாத்தையும் கட பரப்பியிருப்பான்னு நினைச்சுட்டு வந்தேன்.''

''ஆனா இன்னைக்கு நீங்க எதிர்பாக்கறது நடக்கறது கஷ்டம்'' என்று சிரித்த மனைவியைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''ஏன்?''

''அத அவ ரூம்ல போய்ப் பாத்துத் தெரிஞ்சுக்கோங்க.''

''என்ன புதிரெல்லாம் போட்றே?'' என்ற கணவனிடம் ''போய்த்தான் பாருங்களேன்'' என்றாள் சசிரேகா.

''அதெல்லாம் நானே வந்துட்டேன்'' என்ற குரலில் கணவன் மனைவி இருவருமே திரும்பிப் பார்த்தனர்.

''அட யாரிது!?''

ஸ்மிர்த்தி வெட்கத்துடன் நெளிய, தங்கையையும் மனைவியையும் மாறிமாறிப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''என்னங்க?''

மணப்பெண் போல அலங்கரித்துக் கொண்டிருந்த ஸ்மிர்த்தியைப் பார்த்து ''நிஜமாவே இவ என் தங்கை தானா?'' என்று கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

''ஹலோ என்ன கிண்டலா?'' என்று ஸ்மிர்த்தி சற்றே கோபத்துடன் கேட்க, ''அட ஆமா'' என்று ஒத்துக் கொண்டான் அவன்.

''சரி சரி பாத்துக்கலாம்'' என்ற தனது அண்ணனிடம் ''என்ன பாத்துக்கலாம்?'' என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

''மாப்பிள்ளை தான்.''

''அண்ணா வேண்டாம்.''

''அட வெக்கத்தப் பாரேன் அப்பக் கண்டிப்பா வரச் சொல்லிட வேண்டியது தான்,''

''அதுலயும் இந்த மாதிரி விஷயத்துல வேண்டாம்னு சொன்னா வேணும்னு தான் அர்த்தம், நீ மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வரச் சொல்லிடுப்பா'' என்று வந்த தனது தாயைத் திரும்பி சற்றே கோபத்துடன் பார்த்தாள் ஸ்மிர்த்தி.

''எல்லாரும் உங்க மனசுல என்ன தான் நினைச் சுட்டிருக்கீங்க?''

''உன்னை மாலையும், கழுத்துமா பாக்கலாம்னு தான்'' என்று ஷ்யாம்சுந்தர் சொல்ல, ''முதல்ல கல்யாணம் பண்ணிக்கிட்ட உங்கள குழந்தை குட்டியோடப் பாக்கத்



தான் அம்மா அப்பா ஆசப்பட்றாங்க'' என்று பட்டென்று சொன்னாள் ஸ்மிர்த்தி.

''சரியா சொன்னமா'' என்று அங்கு வந்த கிருபாகரன், ''அடடா இது யாரு எம் பொண்ணா?'' என்று ஆச் சரியத்துடன் தனது மகளைப் பார்த்தார்.

''என்னப்பா நீங்களுமா?''

''அடடா யாரோட கை வண்ணம் இது. பாத்துக்கிட்டே இருக்கலாம் போல பிரமாதமா இருக்கறையேம்மா!''

''என்ன டாடி இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க? நான் அழகா இருக்கேன்னு சொல்றீங்களா, இல்ல நல்லா மேக்கப் பண்ணிட்டிருக்கேன்னு சொல்றீங்களா?''

''நீ முதல்ல சொன்னத நான் சொல்லியிருக்க சான்ஸ் இல்லேங்கறது உனக்கே தெரிஞ்சிருக்கும்'' என்ற தந்தையின் பதிலில் சிரித்த பெண் ''அது சரிதான் அழகியா இருக்கற என்ன பேரழகியா மாத்தின அண் ணிக்கே உங்க பாராட்டெல்லாம் போய்ச் சேரட்டும்'' என்றாள்.

''ஓ உன்னோட வேலையாம்மா'' என்று பாராட்டு வதைப் போலக் கிருபாகரன் தனது சிறிய மருமகள் சசிரேகாவைப் பார்க்க, ''அதுக்கு முன்னாடி இவங்க எல்லாரையும் பாருங்க டாடி. நானே சின்னப் பொண்ணு தான எனக்கு இவங்க மாப்பிள்ளை பாக்கப் போறாங் களாம்'' என்று குற்றம் சாட்டினாள் பெண்.

''அட என்னடா இது, இனிமேல் தான் பார்க்கணும்னு சொல்றாங்களா?''

''டாடி'' என்று ஸ்மிர்த்தி தனது தந்தையை விளை யாட்டுக்கு முறைக்க ''ஆமா எப்பிடி இந்த ஐடியா வெல்லாம் வந்தது?'' என்று கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

''அதுவாண்ணா உங்க கல்யாண ஆல்பத்துல அண்ணி ரொம்ப அழகா இருக்காங்கன்னு சொன்னதுக்கு மேக்கப் பண்ணிக்கிட்டா எல்லாரும் தான் அழகா இருப்பாங்கன்னு அவங்க சொல்றாங்க. அதான் சரி என்னையும் அப்ப உங்கள மாதிரி மாத்திக் காட்டுங்கன்னு சொன்னேன்.''

''நிஜமாவே ரொம்பப் பிரமாதமாய் பண்ணியிருக்கமா இன்னும் என்னென்ன திறமையெல்லாம் உங்கிட்ட இருக்கு?''

''அச்சச்சோ அப்படியெல்லாம் இல்ல மாமா.''

''உங்ககிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயமே இது தான் அண்ணி'' என்ற ஸ்மிர்த்தி, ''அண்ணிய சாதாரணமா நினைச்சுக்க வேண்டாம் டாடி ஒரு பெரிய பியூட்டி பார்லரே வெச்சு நடத்தற அளவுக்கு அவங்க கிட்டத் திறமையிருக்கு. அது மட்டுமில்ல பரதம் முழுசாக் கத்துக்கிட்டு அரங்கேற்றம் கூடப் பண்ணியிருக்காங்க'' என்றாள்.

''அப்படியாம்மா'' என்று அபரிதமான ஆச்சரியத்துடன் தனது மருமகளைப் பார்த்தார் கிருபாகரன்.

''அது மட்டுமா பிரமாதமா சமைக்கற, வீட்ட நல்லா நிர்வகிக்கற மேலமேல சொல்லிக்கிட்டே போற அளவுக்கு உங்கிட்ட நிறைய திறமை இருக்கேம்மா'' என்று கிருபாகரன் சொல்லிக் கொண்டிருக்க, தனக்கு சம்பந்தமில்லாத எதையோ பேசிப் போரடிப்பதைப் போன்ற முகபாவனையுடன் சற்றே எரிச்சலுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்த தனது அத்தையைப் பார்த்தாள் சசிரேகா.



ஒன்றுமில்லாததை சற்று அதிகமாகத் தான் பாராட்டுகிறார்கள் என்ற எண்ணம் ஏற்கனவே சசிரேகாவுக்கும் வந்து விட்டிருந்ததால், தனது அத்தை அப்படிச் சென்றது அவளுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

''டிஃபன் எல்லாம் ரெடி சாப்பிடலாம் மாமா'' என்று சசிரேகா சொல்லவும், அதுவரை போன் பேசிக் கொண்டிருந்த அவளுடைய கணவன் மொபைல் போனைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டே ''டிஃபன் சாப்பிடலாமா?'' என்று வரவும் சரியாக இருந்தது.

''நீங்க எடுத்து வெச்சுட்டிருங்க நான் போய் பெரிய அண்ணாவையும் அண்ணியையும் வரச் சொல்லிட்டு வந்துட்றேன்'' என்று சென்றாள் ஸ்மிர்த்தி.

''என் அலங்காரத்த ஒரு தடவை அவங்க கிட்டயும் காட்டிட்டு அப்படியே என் ரூமுக்குப் போறேன் அண்ணி'' என்று சசிரேகாவிடம் திரும்பி சொல்லிக் கொண்டே சென்றாள்.

ஏற்கனவே வந்து சாப்பிட அமர்ந்திருந்த கணவனுக்கும், மாமனாருக்கும் சசிரேகா பரிமாற ஆரம்பித்திருக்க, ''உங்க ரெண்டு பேர் கிட்டயும் ஒரு வேண்டுகோள்'' என்ற கிருபாகரனை மற்ற இருவரும் நிமிர்ந்து பார்த்தனர்.

''வயசு அறுபதுக்கு மேல ஆகியும் இன்னும் ஒரு பேரக் குழந்தையப் பாக்க முடியல. கூடிய சீக்கிரம் இந்த வீட்ல ஒரு குழந்த சத்தத்தக் கேக்க வெச்சு எங்க ஏக்கத்தை தீத்து வைங்க'' என்று மகனையும், மருமகளையும் பார்த்தார் கிருபாகரன்.

சசிரேகா முகத்தில் எந்த உணர்ச்சியும் தெரிந்து விடாதவாறு கணவனைப் பார்க்க, ''கவலப்படாதீங்க உங்க

ஏக்கம் சீக்கரம் தீரும்'' என்று மனைவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான் ஷ்யாம்சுந்தர்.

டிஃபனை முடித்துக்கொண்டு தங்களது அறைக்கு வந்திருந்த ஷ்யாம்சுந்தர் ஆஃபீஸிலிருந்து கொண்டு வந்திருந்த ஃபைல்களைப் பார்த்துக் கொண்டே தனது மனைவியின் வருகைக்காகக் காத்திருந்தான்.

சமயலறையில் வேலைகள் சற்று அதிகமாக இருந்ததில் வழக்கத்தை விடவும் நேரங் கழித்து வந்த மனைவியை ''வாம்மா, என்ன இவ்வளவு நேரம்?'' என்றான்.

''நாளைக்குக் காலைல நேரத்துல கோயிலுக்குப் போறோமே, அதான் எல்லாத் திங்க்ஸையும் தயாரா எடுத்து வெச்சோம்.''

''ஓ, அப்ப எல்லாம் ரெடி'' என்ற கணவனிடம் ''அதெல்லாம்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் சசிரேகா.

''சரி அப்புறம்?''

''அப்புறமென்ன ஷ்யாம்?''

''காலையிலிருந்து, அதாவது அந்த நித்யன் கூடப் பேசினதுலிருந்தே உன் முகமே சரியில்லையேம்மா!''

மனைவியின் முகம் மேலும் வாட சற்று தள்ளி நின்றிருந்தவளை அருகில் இழுத்து அவளது முகத்தைப் பார்த்தான்.

''என்னமா?''

''ஷ்யாம் அம்மாவுக்கு உடம்புக்கு சரியில்ல.''



''என்னாச்சு?''

''நமக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகறதுக்கு முன்னாடி நான் டூர் போயிருந்ததா உங்ககிட்ட சொன்னேனில்ல, அப்ப அம்மாவுக்கு நெஞ்சு வலி வந்திருக்கு. அப்ப அந்த நித்யன் தான் அம்மாவ ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டுப் போய் எல்லா ஹெல்ப்பும் பண்ணியிருக்கார், அதத்தான் அவர் காலைல எங்கிட்ட சொன்னார்.''

''இது இத்தனநாளா உனக்குத் தெரியாதா?''

''தெரியாது, அம்மா தான் எனக்கு இப்பிடியொரு பிரச்சன இருக்கறது தெரிஞ்சா சசி கல்யாணத்துக்கு சம்மதிக்க மாட்டா அதனால அவகிட்ட இப்பத்துக்கு சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டாங்களாம்.''

''அத்தையக் கூப்பிட்டுப் பேசினயா, இப்ப அவங்களுக்கு எப்பிடியிருக்கு?''

''ஈவினிங் பேசினேன், அவங்களும் இல்லேன்னு மறுக்கல. ஆனா....''

''என்னடா?''

''எனக்குப் பிரச்சனை இருக்கு தான், ஆனா பெரிசா பயப்பட்றதுக்கு ஒன்னுமில்ல. நீ அங்க நிம்மதியா சந்தோஷமா இருந்தாலே போதும்னு முடிச்சுட்டாங்க....''

''ம்''

''அவங்க மேல ட்ரீட்மெண்ட் எடுக்கணும் ஷ்யாம்.''

''கண்டிப்பா எடுக்கணும்மா, நாளைக்கே ஒரு பெரிய கார்டியாலஜிஸ்ட் கிட்ட நான் அப்பாயிண்ட்மென்ட் வாங்கிடறேன்.''

..........

''ஆனா அத்தெ சொல்ற மாதிரி நீ எதுக்கும் கவலப் படாம நிம்மதியா இருக்கணும்மா, நான் இருக்கேன் எல்லாம் நல்லதா நடக்கும்.''

''தேங்க்ஸ் ஷ்யாம், எனக்கிப்ப எவ்வளவு நிம்மதியா இருக்கு தெரியுமா?'' என்று கண் கலங்கியவளைப் பார்த்தான் அவளுடைய கணவன்.

''ம் என்னம்மா?''

''நான் நாளைக்கு அம்மாவப் போய்ப் பாத்துட்டு வந்துடட்டுமா?''

''கண்டிப்பாமா, அதோட கோவிலுக்கு நாளைக்கு வேண்டாம். இன்னும் மூணு நாள்ல சன்டே வருது தான அப்பப் போய்க்கலாம்.''

''ஆனா அத்தெ எல்லாம் ரெடி பண்ணிட்டாங்களே'' என்று சற்று பயத்துடன் கணவனைப் பார்த்தாள் சசி ரேகா.

''அப்பாவுக்கு திடிர்னு ஒரு வேல வந்துடுச்சு, அத னால அவர் வர போறதில்ல, உனக்கும் நினைப்பு எல் லாம் அத்தையப் பாக்கணும்னு தான் இருக்கும், அத னால நாளைக்குக் காலைலயே டிரைவர் கூட நீ கிளம்பிப் போய்ப் பாத்துட்டு வந்துடு.''

''அது எப்பிடி நடக்கும்?'' என்று கேட்ட மனைவியைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''ஏன்?''

''இல்ல அத்தெ ஒத்துக்க மாட்டாங்களே அவங்ககிட்ட என்னன்னு சொல்றது?''



''அத நான் பாத்துக்கறேன், அதோட இந்த மாதிரி ரெண்டு தடவ செஞ்சா தான் வீக் டேஸ்ல அவங்க எந்தப் ப்ரொகிராமையும் ஃபிக்ஸ் பண்ணாம இருப்பாங்க.''

சற்று முன்பு மலை போலத் தெரிந்த பிரச்சனைகள் அனைத்தும் இப்பொழுது காணாமலே போய் விட்டிருந் ததில் மனம் மிகவும் லேசாகிவிட எம்பிக் கணவனின் கன்னத்தில் இதழ் பதித்தாள் சசிரேகா.

''அடடா இன்னைக்கு நமக்கு ஏமாற்றம்தான்னு ரொம்பக் கவலையா இருந்தேன், ஆனா இப்பிடியொரு ஜாக்பாட்டா?'' என்று அவன் தனது மனைவியை இறுக அணைத்துக் கொள்ள, வெட்கம் கலந்த புன்னகையுடன் கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் சசிரேகா.

# 8

''ஆண்ட்டி.''

''வாடாம்மா, எப்ப வந்த?''

''ரெண்டு நாளாச்சு, எல்லாரும் எப்பிடியிருக்கீங்க?''

''நல்லார்க்கோம்மா, அப்புறம் அம்மா அப்பா அங்க வெளி நாட்ல அக்கா குழந்த எல்லாரும் நல்லார்க்காங்களா?''

''எல்லாரும் ஃபைன் ஆன்ட்டி, எங்க யாரையும் காணல?''

''அங்கிள் வெளியூர் போயிருக்கார்மா, ஷ்யாமும், பிரபாகரும் கம்பெனிக்குப் போயிருக்காங்க, இந்துவும் ஸ்மிர்த்தியும் அவங்க ரூம்ல இருந்தாங்க. வாம்மா உக்காரு.''

''இது யாரு'' என்று அப்பொழுது ஹாலுக்கு வந்த சசிரேகாவை அந்த அஞ்சலி பார்க்க, சசிரேகாவும் அதே பாவனையுடன் அவளைப் பார்த்தாள்.

''என்ன அப்பிடிப் பாக்கற? ஷ்யாமோட மனைவி'' என்ற அமுதா ''இரு வர்றேன்'' என்று உள்ளே சென்றாள்.

''என்ன சொல்றீங்க ஆன்ட்டி?'' என்று ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டே நின்றாள் அஞ்சலி.

''வாங்க உக்காருங்க'' என்று சசிரேகா உபசரித்த பிறகு தான் அஞ்சலியால் நடப்புக்கு வர முடிந்தது.

''உன்.... உங்க பேரு?''

''சசிரேகா. உங்கபேர அத்தை அஞ்சலின்னு சொன்னதா ஞாபகம்.''

''ஆமா.''

''இங்க நீங்க எப்படி சொந்தம்?''

''நான் இந்துக்காவோட சித்தி பொண்ணு, அதாவது அவங்களோட சின்னத் தாத்தா மகனுடைய பேத்தி.''

''அப்படியா, உங்கள மேரேஜ்ல பாத்த ஞாபகமில்ல அதான் கேட்டேன்.''

''நான் உங்க மேரேஜ்க்கு வரல, அப்ப அக்காவுக்கு டெலிவரி சமயம் ஃபேமிலியோட ஆறு மாசம் அமெரிக்கா போயிருந்தோம்.''



சரி எப்படியோ திருமணம் முடிவாகி விட்டது பரவா யில்லை, அதை போனிலாவது ஒரு வார்த்தை ஷ்யாம் சொல்லியிருக்கலாமே என்று அஞ்சலியின் மனம் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

என்ன முயன்றும் நடந்து விட்டிருந்த ஷ்யாமின் திருமணத்தை அஞ்சலியால் நம்பவே முடியவில்லை. அவனைப் பொறுத்தவரை எந்தவொரு செயலையும் யாருக்கும் மறைத்தோ, பயந்தோ செய்பவனல்லவே, அவன் செய்யும் அனைத்து செயல்களிலுமே ஒரு அதிகாரமும் கம்பீரமும் கலந்திருக்குமே.

அப்படிபட்டவன் அவனுடைய திருமணத்தைத் தனக்குத் தெரியப்படுத்தாததின் காரணமென்ன? ஒரு வேளை.....

சரி வேண்டாம், கண்டதையும் நினைத்து மனதைக் குழப்பிக் கொள்வதற்கு பதிலாக சிறிது நேரத்தில் வந்துவிடப் போகும் ஷ்யாமிடமே கேட்டால் போகிற தென்று நினைத்துக் கொண்டாள் அஞ்சலி.

அஞ்சலியின் நிலையை ஓரளவு சரியாகவே கணித்து விட்ட சசிரேகா, அவளுக்கு டிஃபன் எடுத்து வரலா மென்று மேலே எதுவும் கேட்காமல் உள்ளே போய் விட்டிருந்தாள்.

சில நிமிடங்களில் அவள் டிஃபன் ப்ளேட்டோடு திரும்பி வந்த போது, தனது அத்தையுடன் அமர்ந்து திருமண ஆல்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அஞ்சலி.

''டிஃபன் எடுத்துக்கோங்க.''

''தேங்க்ஸ்'' என்று வாங்கிக் கொண்ட அஞ்சலி, அதைக் கீழே வைத்து விட்டு மீண்டும் ஆல்பத்தில் கவனத்தை செலுத்த ஆரம்பித்திருந்தாள்.

''உங்களுக்குக் குடிக்க என்ன குடுக்கட்டும்?'' என்று சசிரேகா கேட்க, ''சுகர் கொஞ்சமாய் போட்ட ஸ்ட்ராங்கா ஒரு கப் காஃபி'' என்றாள் அவள்.

''இது யார் ஆன்ட்டி?'' என்று அவள் மீண்டும் தனது அத்தையுடன் பேச ஆரம்பித்திருக்க, டிஃபன் எடுத்துக் கொள்ளச் சொல்லி இன்னொரு முறை சொல்லலாமா என்று நினைத்தவள் பிறகு வேண்டாமென்று காஃபி தயாரிப்பதற்காக உள்ளே வந்து விட்டிருந்தாள்.

அஞ்சலிக்குக் காஃபியைக் கொடுத்து விட்டு வந்த கையோடு, ஆஃபீஸிலிருந்து அனைவரும் வந்து விடுவார்களென்று ரெடியாகிவிட்ட டிஃபன்களை டைனிங் டேபிளில் எடுத்து வைக்க ஆரம்பித்தாள் சசிரேகா.

அன்றைக்குத் தனது அத்தை தன்னிடம் சற்று கடுமையாக நடந்து கொள்வதைப் போலத் தோன்றியது சசிரேகாவுக்கு. இல்லாவிட்டால் மட்டும் தினமும் சிரித்துத் தட்டிக் கொடுத்துப் பேசுவதா இன்றைக்குக் குறைந்து விட்டது என்றும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் தனது அத்தையின் கோபத்திற்குக் காரணம் ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி கோவிலுக்குச் செல்ல முடியாதது தான் என்பதும் சசிரேகாவுக்குப் புரியாமல் இல்லை.

ஆனால் அவரைப் பொறுத்தவரை இன்று கோவிலுக்கு வேண்டாமென்று சொன்னது அவருடைய இளைய



மகனல்லவா, அப்படியிருக்கும் போது சம்பந்தமில்லாமல் தன் மேல் கோபமாக இருக்கிறார் என்றால் அதற்கும் தனக்கும் சம்பந்தமிருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருக்கிறாரோ.

எது எப்படியோ இரவு தனது கணவன் சொல்லியிருந்தது போல காலையில் நேரத்திலேயே டிரைவருடன் கிளம்பிச் சென்று தனது தாயைப் பார்த்து விட்டு சற்று முன்னர் தான் வந்திருந்தாள் சசிரேகா.

நான் புகுந்த வீட்டில் நிம்மதியாக இருக்க வேண்டுமென்றால் நீங்கள் உங்களது நோய்க்கு வைத்தியம் செய்து கொள்ள வேண்டும் அதற்குத் தயாராக இருங்கள் என்று தனது தாயை மனதளவில் தயார்ப்படுத்தி விட்டும் வந்திருந்தாள்.

தன்னுடைய மருத்துவத்திற்காகப் பார்த்துப் புகுந்த வீட்டில் மகளுக்குத் தலை குனிவை ஏற்படுத்தி விடக் கூடாதென்று தனது தாய் மிகவும் தயங்குவது சசிரேகாவுக்கு நன்றாகவே புரிந்தது.

ஒரேயடியாக முடியாது வேண்டாம் என்றிருந்தவரை சில மணி நேரங்கள் பேசிக் கெஞ்சி இந்த அளவிற்கு மாற்றியிருந்தாலும் மனதளவில் சசிரேகாவுக்கு இன்னும் பயமாகத்தான் இருந்தது.

எதையெதையோ எண்ணி மனம் குழம்பியவள் கடைசியாகத் தனது கணவனின் துணையிருக்கும் போது அனைத்தும் நன்றாகத்தான் நடக்கும் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

''முத்தையா.''

''சொல்லுங்கம்மா.''

''செஞ்சதெல்லாத்தையும் டேபிள் மேல எடுத்து வெச்சாச்சு, பூரிய மட்டும் சாப்பிடும் போது சூடாய் போட்டுக்கலாம்.''

''சரிங்கம்மா.''

முத்தையா முதல் மற்ற அனைவருக்குமே அந்த வீட்டின் இளைய மருமகளான சசிரேகாவின் மேல் மிகுந்த மரியாதை ஏற்பட்டிருந்தது.

எதற்கும் அலட்டிக் கொள்ளாமல் யாரையும் உருட்டி மிரட்டாமல் எந்நேரமும் பொறுமையாக சிரித்த முகத்துடன் வளைய வரும் சசிரேகா காலால் ஏவிய வேலைகளை தலையால் ஏந்திச் செய்தார்கள்.

ஆனால் அப்படியெல்லாம் தனது வார்த்தைகளுக்கு மதிப்புக் கிடைக்க வேண்டுமென்று அவள் சிறிதும் எதிர்பார்த்தாள் இல்லை, அதனால் தனக்கு அப்படிக் கிடைத்துக் கொண்டிருக்கும் மரியாதையை அவள் மனதால் உணரவும் இல்லை.

இனி அனைவரும் வந்த பிறகுதானே வேலையென்று வீட்டிற்குப் பக்கவாட்டில் இருக்கும் குடைச்சேரில் சென்று அமர்ந்து கொண்டாள் சசிரேகா.

அப்படி வந்து அமர்ந்து கொள்வது சசிரேகாவுக்கு எப்பொழுதுமே மிகவும் பிடித்தமான ஒன்று.

செடி கொடி மரங்களின் பசுமையும், இனிய தென்றலும், பூக்களின் வாசனையும் மனதை லேசாக்கி விடுவது அவள் அனுபவத்தால் உணர்ந்த ஒன்று.

அப்படியே எவ்வளவு நேரம் அமர்ந்திருப்பாளோ தனது அத்தையின் அழைப்பில் எழுந்து உள்ளே வந்தாள்.



''என்ன வெத்தல பாக்கு வெச்சு அழைச்சாத்தான் வருவியா, போய் சீக்கிரம் எல்லாரையும் சாப்பிட அழைச்சிட்டு வா'' என்று சொல்லிவிட்டு அவர் உள்ளே போக ''சரி அத்தெ'' என்றாள்.

கார் வந்து நின்ற சத்தமும் அதைத் தொடர்ந்து கணவனின் குரலும் சற்று முன்னர் அவளுக்கும் கேட்கத்தான் செய்தது. கூடவே அஞ்சலியின் குரலும்.

நேராக சமயலறைக்குச் சென்று பூரியைப் பொரிக்கச் சொல்லி முத்தையாவிடம் சொன்னவள், பிறகு கணவனை அழைப்பதற்காக மாடிக்குச் சென்றாள்.

மற்றவர்கள் ஏற்கனவே டைனிங் ஹாலில் ஆஜராகியிருக்க, ''நான் பசிக்கிதுன்னு கொஞ்சம் முன்னாடி தான் சாப்புட்டு முடிச்சேன் அண்ணி'' என்று தன்னுடைய அறைக்குச் சென்றாள் ஸ்மிர்த்தி.

நேராகத் தங்களுடைய அறைக்குச் சென்றிருந்த சசிரேகா அவன் அஞ்சலியுடன் பேசிக் கொண்டிருந்ததில் சற்றே தயங்கி நின்றாள்.

''என்னம்மா வா'' என்று கணவன் தன்னைப் பார்த்து விட்டு அழைக்க தொடர்ந்து உள்ளே சென்றவள் ''சாப்பிடலாம் வாங்க'' என்று இருவரையும் பொதுவாக அழைத்தாள்.

''சசி இவ'' என்று ஷ்யாம்சுந்தர் மனைவியிடம் அஞ்சலியை அறிமுகப்படுத்தி வைக்க எத்தனிக்க, ''அதெல்லாம் நாங்க ஏற்கனவே அறிமுகமாயிட்டோம்'' என்று அவசரமாகச் சொன்னாள் அஞ்சலி.

சசிரேகாவும் அதை ஆமோதிக்க, ''அதான ரெண்டு பொண்ணுங்க பாத்துக்கிட்டா பேசிக்காம இருப்பீங்களா நான் ரொம்ப லேட் தான்'' என்றான் ஷ்யாம்சுந்தர்.

அஞ்சலி தனது கணவனை ஒட்டி அமர்ந்திருந்த விதத்தில், சசிரேகாவுக்குத் தான் சற்று ஒரு மாதிரியாக இருந்தது.

ஆனால் மற்ற இருவருக்கும் அப்படி எதுவும் தோன்ற வில்லை போலும், ஒருவர் காலை மற்றவர் வாருவதி லேயே குறியாக இருந்தனர். முக்கியமாக அஞ்சலி ஷ்யாம் ஷ்யாமென்று கணவனைத் தன்னுடன் பேச வைப்பதிலேயே குறியாக இருப்பதும் தெரிந்தது.

தான் அங்கு அதிகப்படியோ என்று சசிரேகாவுக்குத் தோன்ற ஆரம்பித்திருக்க, ''எது எப்படியோ உங்க கல்யாணத்துக்கு நீங்க என்ன டைரக்டாக கூப்பிடாததுல எனக்கு உங்க மேல ரொம்பக் கோபம் சொல்லிட்டேன்'' என்ற அஞ்சலி ''நான் சாப்பிடப் போறேன்'' என்று முன்னே சென்றிருந்தாள்.

அவளைத் தொடர்ந்து தானும் இறங்கிக் கீழே வந்தாள் சசிரேகா.

''வா அஞ்சலி, என்ன அதிசயமா சாப்பிடவெல்லாம் வர்ற!'' என்று இந்துமதி வரவேற்க, ''ஆறு மாசம் ஃபாரின் போய்ட்டு வர்றதுக்குள்ள இங்க கல்யாணத்தையே முடிச்சுட்டீங்க'' என்று ஒரு டைனிங் சேரை இழுத்துப் போட்டுத் தானும் அமர்ந்தாள் அஞ்சலி.

''உம்மனசுல ஆசைய வளத்து விட்டுட்டு உங்கிட்ட இப்பிடின்னு சொல்றதுக்கு எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது அஞ்சலி அதான், ஆனா ஷ்யாம் சொல்லலையா? சம்பந்தமில்லாத யார் யாருக்கோ கூட இன்விடேஷன் வெச்சாங்க, உனக்கு இன்விடேஷன் வரலையா?''



ஏற்கனவே கோபத்தில் இருந்த அஞ்சலிக்கு இந்துமதி கேட்டது எரிகிற அடுப்பில் எண்ணெயை விட்டாற் போல ஆயிற்று.

அதை நன்கு புரிந்து கொண்ட இந்துமதியோ மேலும் தனது வேலையைக் காட்டினாள்.

''நீயும் ஷ்யாமும் என்ன அந்த அளவுக்கா பழகினீங்க? நான் என்னென்னவோ நினைச்சேன்'' என்றவள் சாப் பிடுவதில் தனது முழு கவனத்தையும் செலுத்துவது போல பட்டும் படாமல் அஞ்சலியை கவனித்தாள்.

''நான் மட்டும் உன் இடத்துல இருந்திருந்தா ஏன் வேற யார் இருந்திருந்தாலுமே ஷ்யாம் இந்த அளவுக்குப் பழகிட்டு இப்படி செஞ்சதுக்கு........''

''என்னால நினைச்சுக் கூடப் பாக்க முடியல அஞ் சலி'' என்றவள் ''சரி வேண்டாம் விட்டுடலாம் நடந்தது நடந்து போச்சு இனி அதையெல்லாம் பேசறதுனால எந்தப் பலனுமில்ல'' என்று பெரிய மனுஷி போல சமா தானமும் சொன்னாள்.

இந்துமதி சொல்வதை வைத்துப் பார்த்தால் அஞ்சலிக் கும் தனது கணவனுக்கும் இடையில்..... இல்லையில்லை தன்னைக் குழப்புவதற்காகத்தான் அவள் வேண்டு மென்றே ஏதோதோ சொல்கிறாள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தன்னையே சமா தானம் செய்து கொண்டாள் சசிரேகா.

அஞ்சலியைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், சின்ன தாகி விட்ட சசிரேகாவின் முகம் இந்துமதியைத் துள்ள வைத்துக் கொண்டிருந்தது.

அதுவும் நேற்று அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸிற்குச் சென்றிருந்த போது ஒரு பொது இடத்திலேயே கணவனும் மனைவியும் கொஞ்சிக் குலாவிக் கொண்டு நின்றிருந்ததைப் பார்க்க நேர்ந்ததிலிருந்து இந்துமதியின் மனதிற்குள் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்திருந்தது.

தனது அத்தையைத் தவிர மற்ற அனைவரும் ஏற்கனவே இந்த வீட்டில் அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடாத குறை, அப்படியிருக்கும் போது இவள் வீட்டில் இருப்பவர்கள் அனைவரையும் கைக்குள் போட்டுக் கொள்ளும் வித்தையை வேறு மிக நன்றாகவே கற்றும் வைத்திருக்கிறாள்.

இனி இந்த வீட்டு வாரிசை மட்டும் அவள் வயிற்றில் சுமக்க ஆரம்பித்தாளானால் அப்புறம் குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் பெரிசுகள் தன்னை மதிக்கக் கூட மாட்டார்கள்.

அடுத்த வேளை உணவிற்கே கூட வழியில்லாத ஒருத்தி தனக்குச் சமமாக அந்த வீட்டிற்கு மருமகளாக வந்திருப்பதோடல்லாமல், அவளுக்கு முன்பு தான் மட்டமாகிப் போவதா என்பதைத்தான் இந்துமதியால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தான் அப்பொழுது பேசியது சசிரேகாவின் மனதை அசைத்து விட்டது தெரிய, இந்த அஸ்த்திரத்தைப் பயன்படுத்தியே உன்னை ஒரு வழி செய்கிறேன் பாரென்று மனதிற்குள் கறுவிக் கொண்டாள் இந்துமதி.

அஞ்சலியின் நேரடிப்பேச்சும் இந்துமதியின் ஜாடைமாடைப் பேச்சும் உண்மையிலேயே சசிரேகாவை ஒருவழி செய்திருந்தன.



வேண்டாம், எதையும் நினைத்து நிம்மதியைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதென்று பெருமுயற்சி செய்து மனதை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

ஆனால் அது திரும்பவும் வேறு வழியில் வந்து தன்னைத் தாக்கியதில் மீண்டும் நிலை குலைந்து போனாள்.

அனைவரும் சாப்பிட்டு முடித்துச் சென்றதும் டேபிளை ஒதுக்கிக் கொண்டிருந்தவள், தனது அத்தையின் அழைப்பில் நிமிர்ந்து பார்த்தாள்.

''மஹாராணி பேருக்கு எல்லாத்தையும் ஒதுக்கிட்டு சாப்டுட்டுத் தூங்கப் போயிடாத, நாளைக்கு காலை டிஃபனுக்குத் தேவையான சாமான்கள் எல்லாத்தையும் தயாரா எடுத்து வெச்சுட்டு முத்தையாகிட்ட சொல்லிட்டு அப்புறமாப் போ.''

''சரி அத்தெ'' என்று தனது அத்தைக்கு பதில் சொன்னவளுக்கு, அவரது பேச்சில் தவறாக எதுவும் பட்டிருக்கவில்லை, எப்பொழுது நன்றாக சிரித்துப் பேசினார்கள் இதில் குற்றம் காண்பதற்கு என்ற எண்ணம் தான் மனதிற்குள்.

''எல்லாம் என் தலவிதி இருந்திருந்து எனக்கு இப்பிடியொரு மருமக'' என்று உண்மையான வருத்தத்துடன் சொல்லிக்கொண்டே போன தனது அத்தையைப் பார்த்தாள்.

எப்பொழுதும் தன்னை வார்த்தைகளால் காயப்படுத்தி வேலை வாங்குவதில் கூடவா அத்தையின் மனம் நிம்மதியடையவில்லை என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''ஆப்பிள நல்லாக் கழுவி விதைகள எடுத்துட்டு தோல் சீவிக் கட் பண்ணி எடுத்துட்டு வா, நீ பாட்டுக்குப் பேருக்குக் கொண்டு வந்து வெச்சுட்டுப் போயிடாத'' என்று தொடர்ந்து வந்த இந்துமதியும் தன்னை ஏவி விட்டுப் போக சிரிப்பு தான் வந்தது சசிரேகாவுக்கு.

எதையும் மனதில் வைத்துக்கொள்ளத் தெரியாமல் பொரிந்து தள்ளிவிடும் தன்னால் எப்படி இப்பொழுதெல்லாம் அனைத்தையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறதென்று ஆச்சரியமாகக் கூட இருந்தது.

டைனிங் ஹாலுக்கு ஒட்டியிருந்த லைப்ரரியில் குறிப்பெடுப்பதற்காகத் தனக்குத் தேவையான புத்தகம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த ஷ்யாம்சுந்தருக்கு வெளியில் நடந்த பேச்சுக் குரல்கள் அனைத்தும் மிகவும் தெளிவாகக் கேட்டன.

தனது தாய் கூடப் பரவாயில்லை, அந்தஸ்த்து செல்வாக்கு என அதிலேயே ஊறிப் பழக்கப்பட்டுப் போனவர், அந்த ஆதங்கத்தில் தனது மனைவியை எதையாவது சொல்லலாம்.

ஆனால் தனது மனைவியை விரட்டி வேலை வாங்க இந்துமதிக்கு என்ன உரிமை இருக்கிறது.

தொடக்கத்தில் சற்றுப் பொறுத்து விட்டுக் கொடுத்துப் போய் விடென்று தான் வெகு சாதாரணமாக சொல்லி விட்டதற்கு, தனது மனைவி எந்த அளவிற்கு சகிப்புத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டியிருக்கிறதென்பது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

இதே இந்த இடத்தில் வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் அப்படியென்ன சொல்லிவிட்ட வார்த்தை



களுக்கு மதிப்புக் கொடுத்தாக வேண்டிய கட்டாயமென்று தன்னில் தொடங்கி அனைவரையும் எதிர்த்துக் கூட நிற்பாள் என்றே அவனுக்குத் தோன்றியது.

மேலும் ஒரு மணி நேரம் கழித்து சிரித்த முகத்துடன் தங்களது அறைக்கு வந்த மனைவியைப் பார்த்தான் ஷ்யாம் சுந்தர்.

''என்னம்மா இவ்வளவு நேரம், ரொம்ப வேலையா?''

''அதெல்லாம் இல்லைங்க இந்தாங்க பால் எடுத்துக்கோங்க'' என்று கையோடு கொண்டு வந்திருந்த பெரிய டம்ளரில் மனைவி ஊற்றிக் கொடுத்த பாலை வாங்கிக் கொண்டான் அவன்.

''உனக்கு?''

''எனக்கு வேண்டாம்.''

''அப்ப எனக்கும் வேண்டாம்''

''என்னங்க இது சின்னக் குழந்த மாதிரி'' என்று சிரித்த மனைவி பாதிப் பாலை வாங்கிக்கொண்ட பின்னரே தான் குடிக்க ஆரம்பித்தான் ஷ்யாம்சுந்தர்.

''என்னங்க இன்னும் டிரஸ் கூட சேஞ்ச் பண்ணிக்காம இருக்கீங்க, அவ்வளவு பிஸியா?''

''கொஞ்சம் நோட்ஸ் எடுக்க வேண்டிய வேலையிருந்தது ஒரு வழியா முடிஞ்சது'' என்று கையிலிருந்த ஃபைலை அவன் கீழே வைக்க ''இருங்க இதக் கழுவி வெச்சுட்டு வந்துட்றேன்'' என்று தாங்கள் இருவரும் குடித்து முடித்த காலி பால் டம்பளர்களை எடுத்துக் கொண்டு போனாள் சசிரேகா.

ஈரக்கைகளைத் துடைத்துக் கொண்டே வந்த தன்னைக் கணவன் கண்ணிமைக்காமல் பார்க்க, என்னவென்று கேட்டாள்.

.........

''என்னங்க இப்பிடி இன்னைக்குத்தான் என்ன முதல் முறையாப் பாக்கற மாதிரி பாக்கறீங்க?''

''சசி சகிப்புத்தன்மைக்கும் பொறுமைக்கும் கூட ஒரு எல்லையிருக்குமா. அம்மா அப்பாவ நீ பொறுத்துப் போக வேண்டியது தான், மத்தபடி யாருக்காகவும் நீ ரொம்பவும் பாக்க வேண்டாம்.''

கணவன் யாரைப் பற்றி சொல்ல வருகிறான் என்ன சொல்ல வருகிறானென்பது நன்றாகவே புரிந்தது. ஒரு விதத்தில் பார்த்தால் இந்துமதியை தான் எதிர்த்து நிற்கும் நாளை எதிர்பார்த்திருப்பதும் நன்றாகவே புரிந்தது.

அதற்காகவே அவள் தன்னைப்பற்றி யாரிடமும் ஒரு சிறு குறை கூட சொல்ல முடியாத அளவுக்கு நடந்து கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கும் சசிரேகா வந்திருந் தாள்.

''என்னமா பேசு.''

''புரியுது ஷ்யாம், நாம திருப்பி எதித்து பதில் சொல் லாம விட்டுட்டா போகப்போக அவங்களே மாறிடு வாங்க'' என்ற மனைவியை எதுவும் பேசாமல் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்

மனைவி தப்புக்கணக்கு போடுவது புரிந்தது, எதற்கும் பதில் பேசாமல் இருக்க இருக்க இந்துமதி மேலும் அதிக மாகத்தான் எகிறுவாள் என்பது இவளுக்குப் புரியவில் லையே.



மனைவியும் ஏதோ யோசனையில் இருப்பதைக் கண்டவன், சரி நூற்றில் ஒரு பங்காக மனைவி சொல் வதைப் போலவும் நடக்கலாம் நாம் எதற்குத் தேவை யில்லாமல் குழப்ப வேண்டுமென்று அந்தப் பேச்சை அத்தோடு விட்டு விட்டான்.

''ஆனா எனக்கு வேற ஒரு பயம்'' என்ற மனை வியைப் பார்த்தவன், ''என்னமா?'' என்று கேட்டான்.

''இந்துமதி என்ன வேல வாங்கறதுலயோ, அவங்க சொல்றத நான் செய்யணும்னு நினைக்கிறதுலயோ எனக்கு எந்த வருத்தமும் கிடையாது. ஆனா....''

''ம் சொல்லு''

உனக்கும் அஞ்சலிக்கும் தவறான உறவு இருந்ததைப் போல சித்தரிக்க முயல்கிறாள் என்று எப்படிக் கணவ னிடம் நேரடியாகத் தானே சொல்வதென்று தெரியாமல் விழித்தாள் சசிரேகா.

ஆனால் அதற்கு முன்பே தான் நினைத்ததை ஓரளவு சரியாக ஆனால் வேறு மாதிரி கணித்து விட்டிருந்த கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''புரியுதுமா. இந்துமதியப் பொறுத்தவரைக்கும் அவங் களுக்கும் மேல யாரையாவது நாம புகழ்ந்து பேசினா அத அவங்களால தாங்கிக்க முடியாது.''

''தொடக்கத்துல அம்மா என்ன, ஸ்மிர்த்திய எல்லாம் யதார்த்தமா கொஞ்சம் மெச்சி மேல தூக்கிப் பேசுவாங்க, ஆனா இந்துமதியோட குணம் தெரிஞ்சதுக்கப்புறம் அவசியத்துக்குக்கூட அம்மா அவங்களுக்கு முன்னாடி எங்களப் புகழ்ந்து பேசறத விட்டுட்டாங்க.''

''இந்துமதி அவங்க குணத்துக்கு நம்மளப் பாத்து எல்லாரும் பயந்து ஒதுங்கிப் போறாங்கன்னு கூட நினைச்சுக்கலாம். ஆனா உண்மைய சொல்லணும்னா தேவையில்லாத பிரச்சனைகள அவாய்ட் பண்றதுக்காக கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போறோம் அவ்வளவு தான்.''

''குடும்பத்துல அமைதி தான் ரொம்ப முக்கியம், அதனால யாரா இருந்தாலும் சில விஷயங்கள்ல விட்டுக்குடுத்து ஒதுங்கிப் போறதுல தப்பில்ல.''

கணவன் தனக்கும் சேர்த்துத்தான் சொல்கிறானோ என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் இந்துமதியைப் பார்த்துக் குடும்பம் மொத்தமும் எதுவும் பேசாமல் ஒதுங்கிப் போய்விடுவதை நினைத்ததில், நெஞ்சுக்குள் ஏனோ ஒரு இனம் புரியாத பயம் ஏற்பட்டது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்துமதியிடம் வாய் கொடுத்து விடக் கூடாது, முடிந்த அளவு வெகு தூரம் ஒதுங்கிப் போய்விட வேண்டுமென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்து விட்டிருந்தாள்.

மனைவி தீவிர யோசனையில் இருப்பதைக் கண்ட ஷ்யாம்சுந்தர், என்னவென்று கேட்டான்.

''இந்துமதி அவங்க வீட்டுக்கு ரொம்ப செல்லம் போலிருக்கு.''

''இருக்கலாம், அது மட்டுமில்ல அளவில்லாத பணம். அவங்க தூக்கத்துல ஒன்ன சொன்னாக் கூட அத உடனே நிறைவேத்தி வைக்கற அப்பா அம்மா. ஆனா அவங்களோட தங்கச்சிங்க ரெண்டு பேரும் அந்த மாதிரியெல்லாம் இல்ல.''



''ஓ, அவங்க கூடப் பிறந்தவங்கள நான் பாத்ததில்லையே.''

''அவங்க ரெண்டு பேருமே எம்.எஸ்.பண்றதுக்காக ஃபாரின்ல இருக்காங்க. எது எப்படியோ தங்களோட உணர்வுகளுக்கு நூறு சதவீதம் மதிப்புக் கிடைக்கணும்னு எதிர்பாக்கறவங்க மத்தவங்களோட உணர்வுகளக் கொஞ்சம் கூட மதிக்காம இருக்கறது தான் ஆச்சரியம்.''

......

''சரி விடுமா மனிதர்கள் பலவிதம், நான் உனக்கொரு சந்தோஷமான விஷயத்த சொல்லப் போறேன்.''

''என்னாங்க?''

''சிட்டிலயே நெம்பர் ஒன் கார்டியாலஜிஸ்ட்கிட்ட அத்தைக்கு அப்பாயிண்ட்மென்ட் வாங்கிட்டேன். இந்த மாசக் கடைசில அப்பாயிண்ட்மென்ட் கிடைச்சிருக்கு, இன்னும் ஒரு வாரம் தான் இருக்கு.''

''தேங்க்ஸ் ஷ்யாம்'' என்று சந்தோஷத்துடன் சொன்ன மனைவியைப் பார்த்தவன், ''அத்தை மட்டும் எதுக்கு அங்க தனியா இருக்கணும் இங்க நம்ம வீட்டுக்குப் பக்கத்துலயே ஒரு அளவான வீட்டப் பார்த்துக் குடுத்துட்டா ட்ரீட்மெண்ட்டுக்கும் சவுகரியமா இருக்கும். நீயும் போய் அப்பப்ப பாத்துக்கலாம் தானம்மா'' என்றான்.

''நல்ல ஐடியா'' என்று உடனே சொன்னவளுக்கு, ஆனாலும் தனது தாய் அதற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமே என்றிருந்தது. எதற்கும் தனது தாயிடம் பேசி விட்டுப் பிறகு மேலே நடப்பதைப் பார்த்துக்

கொள்ளலாமென்று அப்போதைக்கு அதைப்பற்றித் தனது கணவனிடம் அவள் எதையும் சொல்லிக் கொள்ளவில்லை.

''என்னமா?''

''ஷ்யாம் நாளைக்கு எனக்குக் கொஞ்சம் வெளிய போக வேண்டிய வேலையிருக்கு. துணிகளைத் தைக்கக் குடுக்கணும், அப்படியே பேங்க்லயும் கொஞ்சம் வேலையிருக்கு. அப்புறம்...''

''ம், சொல்லு.''

''அம்மாவுக்கு மீடியம் விலைல நாலு சேலைகள் எடுக்கணும், இங்க ட்ரீட்மெண்ட்டுக்கு அவங்க வரும் போது யூஸ்ஃபுல்லா இருக்கும். அம்மா ஒன்று காஸ்ட்லியா வெச்சுட்டிருக்காங்க இல்லன்னா வீட்ல கட்டிக்கற மாதிரி மட்டும் தான் வெச்சுட்டிருக்காங்க.''

''தாராளமா டிரைவரக் கார் எடுக்கச் சொல்லி காலைலயே கிளம்பிப்போய் எல்லா வேலைகளையும் முடிச்சுட்டு வந்துடுமா. இங்க நம்ம பீரோவுக்குள்ள முன்னாடியே பணம் இருக்கும் எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோ, அவசியமான செலவுகளுக்குக் கணக்கு பாக்காத. நீ தினமும் பர்ச்சேஸ் போய் கைநிறைய அள்ளிட்டு வந்தாக் கூட நமக்கு பணத்தட்டுப்பாடு வராது அந்த அளவுக்கு நான் சம்பாதிச்சுட்டுத்தான் இருக்கேன்.''

''அடடா அப்ப நீங்க சொல்றதப் பாத்தா நான் தினமும் பர்ச்சேஸ் பண்ணப் போய்ட்டே இருக்கலாம் போலிருக்கே'' என்ற மனைவியைப் பார்த்து சிரித்தவன், ''முதல்ல நீ அத்தியவாசிய தேவைகளுக்கு யோசிக்காம செலவு பண்ணிப் பழகு மத்ததையெல்லாம் அப்புறமாப் பாக்கலாம்'' என்றான்.



அதற்குப் பிறகும் கணவனும் மனைவியும் தங்களது குடும்ப விஷயங்களைப் பற்றி வெகுநேரம் சுவைபடப் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே தூங்கப் போனார்கள்.

# 9

முதல் நாள் இரவு பேசிக் கொண்டதைப் போல காலையில் நேரத்திலேயே தான் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும் முடித்துக் கொண்ட சசிரேகா டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லி வெளியே கிளம்பி விட்டிருந்தாள்.

ஏற்கனவே முடிவு செய்திருந்தது போல அனைத்து வேலைகளையும் முடித்துக் கொண்டு அவள் வீடு திரும்பிய போது மதிய நேரம் ஆகி விட்டிருந்தது.

வீட்டிற்குள் வந்தவள் அதற்குப் பிறகு தான் அஞ்சலி வந்திருப்பதைக் கண்டாள்.

தனது அத்தை உட்பட வீட்டுப் பெண்கள் மூவருமே அஞ்சலியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, சற்றே தயக்கத்துடன் என்றாலும் அஞ்சலியை வரவேற்றாள் சசிரேகா.

அந்தத் தயக்கத்திற்குக் காரணம் அனைவரும் தன்னையே பார்ப்பது தான் என்றாலும், முடிந்த அளவு அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

தொடர்ந்து உள்ளே சென்றவளை இந்துமதியின் குரல் தடுக்க நின்று திரும்பினாள்.

''இப்பவெல்லாம் நினைச்சா டிரைவரை வண்டிய எடுக்கச் சொல்லி வெளிய கிளம்பிட்ற. அப்படிப் போறது தப்பில்ல ஆனா போறதுக்கு முன்னாடி வேற ஏதாவது வேலையிருக்கான்னு கேட்டுட்டுப் போக வேண்டியதுதானே?''

''அதெல்லாம் இவளுக்கு எப்பவும் புரியாது, பொறந்த வீட்ல என்னவோ டிரைவரப் போட்டு எந்நேரமும் ரெண்டு கார வெளியே நிக்க வெச்சுட்டிருந்த மாதிரி ரொம்பவும் தான் ஆட்டம் போட்றா'' என்று இந்துமதி யுடன் தனது அத்தையும் சேர்ந்து கொள்ள, தான் வாங்கி வந்திருக்கும் கவர்களே தூக்க முடியாத பெரும் பாரமாகி சசிரேகாவின் கைகளையும் மனதையும் கனக்க வைத்தன.

''சரி சரி இனியாவது ஜடம் மாதிரி நிக்காம போய் எல்லாருக்கும் ப்ளேட்ட எடுத்து வை, அதுக்கு முன்னாடி டிரைவருக்கு சாப்பாட்டப் போட்டு அனுப்பு. வெளிய போக வேண்டிய வேலையிருக்கு.''

''சரி அத்தெ'' என்று அந்த இடத்தை விட்டு நகர்வ தற்குள்ளேயே அழுகை வந்திருந்தது சசிரேகாவுக்கு.

தனது பெரிய அண்ணியும் அம்மாவும் சற்று அநியாய மாகப் பேசுவது தெரிய தான் அதை மறுத்து ஏதாவது சொன்னாலும் பலனிருக்காது என்பதால், அஞ்சலியுடன் தான் ஏற்கனவே பேசிக் கொண்டிருந்ததைத் தொடர்ந் தாள் ஸ்மிர்த்தி.

ஆனாலும் அவளுடைய உள்மனம் சசிரேகாவுக்காகப் பரிந்து கொண்டு வந்தது.



''எதுக்கும் வழியில்லாம இருந்தே இந்த ஆட்டம் போடறா இன்னும் ஏதாவது வழியிருந்தா அவ்வளவு தான், அப்புறம் நம்மளையெல்லாம் எதுத்துக் கூடப் பேசுவா'' என்று இந்துமதி சொன்னது போகிற போக்கில் மெதுவாக என்றாலும் தெளிவாகக் கேட்டது சசிரேகாவுக்கு.

அத்தோடு பிரச்சனை தீர்ந்து விடவில்லை.

பெண்கள் மூவரும் சாப்பிட வர, ''எனக்குப் பசியில்ல நான் சின்ன அண்ணி கூட சாப்பிட்டுக்கறேன்'' என்று பட்டென்று சொல்லிவிட்டு அமர்ந்து விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

''அட வா ஸ்மிர்த்தி உன் சின்ன அண்ணி இருக்கற எல்லா வேலைகளையும் முடிச்சுட்டு சாப்பிட இன்னும் ரொம்ப நேரமாகும்'' என்று இந்துமதி சொல்ல, ''பரவா யில்ல நானும் பாதி வேலைகளை ஷேர் பண்ணிக்கிட்டா சீக்கிரம் முடிஞ்சுடும்'' என்றாள்.

''இருந்தாலும்...'' என்று அஞ்சலி மேலும் ஏதோ சொல்ல வர, ''அதுக்குக் கூட அவசியமில்ல அஞ்சலி. வீட்ல வேலைக்குத்தான் ஒருத்தருக்கு மூனு பேரா இருக் காங்களே நீங்க சாப்பிடுங்க ஒண்ணும் லேட்டாகாது'' என்று முடித்து விட்டிருந்தாள்.

''சரிதான்'' என்று அஞ்சலி சாப்பிட ஆரம்பித்திருக்க, ஸ்மிர்த்தியின் செய்கை சசிரேகாவுக்கு மேலும் அவஸ்த் தையையே கொடுத்தது.

சிறிது நேரத்தில் பெண்கள் மூவரும் சாப்பிட்டு முடித்து எழுந்து சென்றிருக்க, ''வாங்க அண்ணி இனி நாம சாப்பிடலாம்'' என்று தனது கையைப் பிடித்து இழுத்த நாத்தனாரைப் பார்த்தாள் சசிரேகா.

''ஒரு அஞ்சே நிமிஷம் ஸ்மிர்த்தி, எல்லாத்தையும் ஒதுக்கி மட்டும் வெச்சுட்டு வந்துட்றேன்.''

''அட வாங்க அண்ணி அதையெல்லாம் வேலக் காரங்க பாத்துக்குவாங்க, நீங்க எதுக்கு எல்லாத்தையும் இழுத்துப் போட்டு செஞ்சுட்டிருக்கீங்க'' என்று கட் டாயத்துடன் சசிரேகாவை அமர வைத்து ப்ளேட்களை எடுத்து வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள் ஸ்மிர்த்தி.

''ஒரு நிமிஷம் ஸ்மிர்த்தி மொபைல் எங்க ரூம்ல வெச்சுட்டு வந்துட்டேன் உங்க அண்ணா கூப்புட்ற நேரம் போய் எடுத்துட்டு வந்துட்றேன்'' என்று எழுந்த வளிடம் ''சரி சீக்கிரம் வாங்க'' என்றாள் அவள்.

தங்களது அறையை நோக்கி செல்லத் திரும்பியவள், ''முன்னாடி நீ எப்பிடி வேணும்னாலும் இருந்திருக்கலாம் ஆனா இப்ப ஷ்யாமுக்குக் கல்யாணம் ஆயிடுச்சு அதனால நீ கொஞ்சம் ஒதுங்கித் தான் போயாகணும் அஞ்சலி'' என்ற தனது அத்தையின் குரலில் அப்படியே நின்றாள்.

''அதான அத நான் சொன்னாக் கேக்க மாட்டேங்கறா அத்தெ நீங்களாவது சொல்லுங்க'' என்ற இந்துமதியின் குரலும் தொடர்ந்து கேட்டது.

''சரிமா நான் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும் நீங்க பேசிட்டிருங்க'' என்று தொடர்ந்து தனது அத்தை எழுந்து செல்லும் அரவமும் கேட்டது.

''விளையாடாம கொஞ்சம் ஸீரியஸாப் பேசு அஞ்சலி.''

''அட என்ன இந்துக்காக நீங்க, நானெதுக்கு விளை யாடணும்? நான் ஸீரியஸா தான் பேசிட்டிருக்கேன்.''



''மனசார நான் ஷ்யாமத்தான் என்னோட வருங்காலக் கணவனா நினைச்சுட்டிருந்தேன், ஆனா ஒரு ஆறு மாசம் வெளிநாடு போய்ட்டு வர்றதுக்குள்ளேயே இப்பிடி எல்லாமே தலைகீழா மாறிடும்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல.''

''சரி இனி என்ன செய்ய முடியும் அஞ்சலி, நீயே சொல்லு.''

''தெரியாது, ஆனா என்னால ஷ்யாம மறக்க முடியல.''

''நீ இப்பிடியெல்லாம் பினாத்திட்டிருக்கறது அவருக் குத் தெரியுமா?''

''பின்ன தொடர்ந்து நாலு நாளா நான் அவர்கிட்ட இதப்பத்தித்தான் பேசிட்டிருக்கேன், அதுவும் நேத்து மதியம் அங்க உங்க ஃபேக்டரிக்குப் போனது நைட் ஏழுமணி வரைக்கும் அங்க தான் இருந்தேன் அவர்கூட இதப்பத்திப் பேசிக்கிட்டு நாமளும் கல்யாண விஷயத் துல கொஞ்சம் அவசரப்படாம இருந்திருக்கலாமோன்னு இப்ப அவரே ஃபீல் பண்ண ஆரம்பிச்சுட்டார்.''

''ஓ, ஷ்யாம் என்ன சொல்றார்?''

''ம், அதான் சொல்றேனே ரொம்பவும் ஃபீல் பண்றார்னு.''

''இந்த அளவுக்குத் தீவிரமா நீ ஷ்யாம விரும்பின தெல்லாம் எங்களுக்குத் தெரியாது. அதோட அப்படி யிருக்கும் போது ஷ்யாமும் அத மறந்துட்டு வேறொரு பொண்ணக் கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு மோசம் கிடையாதுன்னு தான் நான் நினைச்சேன்.''

''அதத்தான் நானும் சொல்றேன். இருந்திருந்து ஷ்யாம் எப்பிடி இப்பிடியொரு வேலைய செஞ்சார்னு என்னால நம்பவே முடியல.''

......

''நீங்க எல்லாரும் என்ன வேணும்னாலும் சொல்லிக் கோங்க ஆனா என்னால அவர விடவும் முடியாது மறக் கவும் முடியாது'' என்று அடித்துச் சொன்னாள் அஞ்சலி.

மற்றவர்கள் பேசுவதை மறைந்து நின்று கேட்பது அநாகரீகம் என்றாலும், உருளுவது தன் தலை என்பதால் சத்தம் செய்யாமல் சிலை போல நின்று விட்டிருந்தாள் சசிரேகா.

''சரி இதுக்கெல்லாம் ஷ்யாம் என்ன சொல்றார்?'' என்று இந்துமதி கேட்க, அதற்கு அஞ்சலியின் வாயி லிருந்து வரும் பதிலைக் கேட்பதற்குள்ளேயே எங்கே தன் இதயம் வெடித்து விடுமோ என்னும் அளவிற்கு ஒருவிதப் பதட்டமும் பயமும் வந்து சசிரேகாவின் நெஞ்சை அடைத்துக் கொண்டன.

''அதையெல்லாம் விடுங்கக்கா நடக்கறது நடந்து தான தீரும்'' என்ற அஞ்சலி ''சரி இனி நாம ரெண்டு பேரும் இந்த விஷயத்தப்பத்திப் பேச வேண்டாமே'' என்றாள்.

அவர்களுடைய பேச்சு நின்று போயிருக்க மேலும் பல வினாடிகள் கழித்தே நடப்புக்கு வந்தாள் சசிரேகா.

ஸ்மிர்த்தி தனக்காகக் காத்திருப்பாளென்று அப்படியே டைனிங் ஹாலுக்குத் திரும்பியவளின் இதயத்துடிப்பு எதையோ வெட்டி முறித்தாற் போலப் பன்மடங்கு அதிகரித்துப் படபடவென்று அடித்துக் கொண்டது.

தனிமையில் சென்று அமர்ந்துவிட மனம் துடித் தாலும் அப்போதைக்குப் பெருமுயற்சி செய்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



ஆனால் என்ன முயன்றும் சசிரேகாவின் மனம் அமைதி யடைய மறுத்தது.

அன்றைக்கு முதன் முறையாகப் பார்த்ததற்குப் பிறகு எப்படி அஞ்சலியைப் பற்றி மறந்தே போனேன்.

உண்மையில் சொல்லப் போனால் அன்றிலிருந்து அவள் தொடர்ந்து தினமும் தனது கணவனைப் பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறாள்.

ஆனால் ஷ்யாம் ஏன் ஒருமுறை கூட அவளை சந்தித் துக் கொண்டிருப்பதைப் பற்றித் தன்னிடம் சொல்லவே இல்லையே.

அனைத்திற்கும் உச்சகட்டமாக நேற்று பகலில் பாதி நேரத்திற்கும் மேலாக ஃபேக்டரியில் தான் அஞ்சலி இருந்திருக்கிறாள், ஆனால் நேற்று இரவு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்த போது கூடத் தன்னிடம் கணவன் அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லையே.

ஷ்யாமைப் பொறுத்தவரை அப்படியொன்றும் தொழிலைப் பற்றிய விஷயங்கள் பெண்களுக்குத் தேவையில்லா தவையென்று நினைப்பவனல்ல.

கம்பெனியின் நிர்வாகத்தைப் பற்றியும், தான் முயன்று சாதித்த வெற்றிகளைப் பற்றியும் சுவைபட அவன் சொல் வதைக் கேட்டு சசிரேகா மனதிற்குள் வியந்து போயிருக் கிறாள்.

அப்படி அவனே சொன்னதையும் மற்றவர்கள் சொல் வதையும் வைத்துத்தான் தனது கணவன் ஒரு மிகச்சிறந்த நிர்வாகி என்பதும் சசிரேகாவுக்குத் தெரிந்திருந்தது.

அப்படி அனைத்தையும் சொல்பவன் இந்த விஷ யத்தை மட்டும் ஏன் சொல்லாமல் விட்டுவிட்டான்.

சொல்லுமளவிற்குப் பெரிய விஷயம் இல்லை யென்று விட்டுவிட்டானா அல்லது மனதிற்குள் கள்ளத் தனம் இருப்பதால் மறைத்துவிட்டானா.

எது எப்படியோ இந்த அளவிற்கு அவன்மேல் தீவிர மான காதலுடன் இருக்கும் பெண்ணிற்கு எப்படி ஒரு சிறு எதிர்பார்ப்பு கூடத் தன்மேல் இல்லாமல் போகக் கூடுமென்று அவன் எதிர்பார்த்தான்.

ஓ, ஒருவேளை அது அவனுக்குத் தெரிந்திருந்ததால் தான் அதாவது அவன் அதை எதிர்பார்த்திருந்ததால் தான் அஞ்சலி இங்கு இல்லாத நேரமாகப் பார்த்துத் தனது திருமணத்தை நடத்திக் கொண்டு விட்டானோ.

ஒருவிதத்தில் பார்த்தால் மனதிற்குள் இந்த அளவிற்கு ஆசையை வளர்த்துக் கொண்ட அஞ்சலியை நினைக்கப் பாவமாகவும், அதற்குக் காரணமான கணவனின் மேல் கோபமாகவும் வந்தது.

''அண்ணி என்னாச்சு உங்களுக்கு?'' என்று ஸ்மிர்த்தி தன்னைப் பிடித்து உலுக்கியதில் தான் அவள் வெகு நேரமாகத் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்திருக் கிறாள் என்பதையே சசிரேகா உணர்ந்தாள்.

''என்ன அண்ணி சாப்பிடாம ஏதோ யோசனையாவே இருக்கீங்க?''

''அங்க ஊர்ல அம்மா வீட்டு ஞாபகம் வந்துடுச்சு அதான்'' என்றவள் பிறகு தானும் சாப்பிட ஆரம்பித்தாள்.

ஸ்மிர்த்திக்காக கொஞ்சம் உணவை உள்ளே தள்ளி விட்டு, முக்கியமான வேலைகள் சிலவற்றை மட்டும் முடித்துக் கொண்டு தங்களது அறைக்கு வந்து சேர்வ தற்குள்ளேயே போதும் போதுமென்றாகி விட்டிருந்தது சசிரேகாவுக்கு.



என்ன தடுத்தும் அஞ்சலியும், இந்துமதியும் பேசிக் கொண்டது தான் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டே இருந்தது அவளுக்கு.

ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் இந்த அள விற்கு மனம் விட்டு சொல்கிறாளென்றால், அவளுடைய மனதிற்குள் இருக்கும் அன்பு எந்த அளவிற்கு உண்மை யானதாக இருக்க வேண்டும்.

அவன்மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கும் ஒருத் திக்கு துரோகம் செய்யத் தனது கணவனால் எப்படி முடிந்தது.

அவளுக்கு துரோகம் செய்ததோடும் அல்லாமல் இன் னொரு பெண்ணின் வாழ்க்கையிலும் துணிந்து விளை யாடும் உரிமையை இவனுக்கு யார் கொடுத்தது.

இப்படியொரு பிரச்சனை எதிர்காலத்தில் வருமென்று முன்னரே எதிர்பார்த்திருந்ததால் தான் தன்னைப் போன்ற பின்புலமே இல்லாத ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டானோ.

பணம் இல்லை தான், அதற்காகத் தனக்கென்று ஒரு மனம், எதிர்பார்ப்பு என்று எதுவுமே இல்லாமல் போகக் கூடும் என்று எப்படி எதிர்பார்த்தான்.

வெகுநேரம் எதையெதையோ எண்ணி மனம் குழம் பியவள், கடைசியில் தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

ஏனோ கணவனைப் பொறுத்தவரை அவன் அந்த அளவிற்குக் கீழ்த்தரமாக நடந்து கொள்பவனல்ல என்றும் நினைக்கத் தோன்றியது சசிரேகாவுக்கு.

ஒரு வினாடி அப்படி நினைத்து விட்டவளால், அதற்குப் பிறகு கணவனிடமிருக்கும் நல்ல பிரமாதமான குணநலன்களை மட்டுமே எடுத்து அடுக்க முடிந்தது.

அதோடு நன்றாக யோசித்துப் பார்த்த பிறகு தான் எப்படித் தேடினாலும் கணவனிடம் ஒரு சிறு குறையைக் கூடத் தன்னால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லையென்பதும் சசிரேகாவிற்குப் புரிந்தது.

ஒருவேளை அஞ்சலியுடை'யது ஒருதலைக் காதலாகக்கூட இருக்கலாம்.

ஷ்யாம் மறுத்திருந்து அதைப் புரிந்து ஏற்றுக் கொள்ளாமல் கூட அஞ்சலி தன்னிலேயே நிற்கலாம்.

இப்படி எதைப்பற்றியும் யோசிக்காமல் தான் கணவனைத் தவறாக நினைத்து விட்டதையெண்ணித் தன்னையே நொந்து கொண்டாள் சசிரேகா.

# 10

ஞாயிற்றுக்கிழமையான அன்று அதிகாலையில் கண்விழிக்கும் போதே ஏனோ மனதிற்கு ஒரு மாதிரியாகவே இருந்தது சசிரேகாவுக்கு.

குலதெய்வக் கோவிலுக்குக் காலையில் ஆறு மணிக்குள் அனைவரும் வீட்டை விட்டுக் கிளம்பியாக வேண்டுமென்பதால் நான்கு மணிக்கே எழுந்து வந்துவிடென்று



தனது அத்தை சொல்லியிருக்க, அவசரமாக லைட்டை ஆன் செய்து சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

நேரம் நாலே காலுக்கு மேல் ஆகியிருக்க கணவனின் தூக்கம் கலைந்து விடாதவாறு உடனே லைட்டை ஆஃப் செய்தவள் அவசரமாகக் கட்டிலை விட்டு இறங்க முனைந்தாள்.

ஆனால் அதற்குப் பிறகுதான் கணவனின் தோள் வளைவுக்குள் தான் இருப்பதையே உணர்ந்தவள், மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால் அதற்கு விடாமல் மேலும் பக்கவாட்டில் தன்னை நோக்கி நன்றாகத் திரும்பி மற்றொரு கையாலும் கணவன் தன்னை மிக அருகில் இழுத்து அணைக்க, அவனது அணைப்புக்காக ஏங்கிய மனதை முயன்று அடக்கினாள் சசிரேகா.

கணவனின் அணைப்பு மேலும் இறுக, ''ப்ளீஸ் விடுங்க ஷ்யாம்'' என்று சிணுங்கியவளின் வார்த்தைகள் அவளுக்கே கேட்கவில்லை.

கணவனின் கைகளில் தன்னை மறக்க ஆரம்பித்திருந்தாள் திடீரென எழுந்து செல்ல வேண்டுமே என்ற எண்ணம் தோன்றியதில், மீண்டும் அவனது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வெகுவாக முயன்றாள்.

ஆனால் மேலும் சில நிமிடங்கள் கழித்தே அதுவும் மனமே இல்லாமல் மெதுவாகக் கணவன் தன்னை விடுவிக்க, இதுதான் சமயமென்று மீண்டும் அவனது கைகளில் சிக்கி விடாமல் வேகமாகக் கட்டிலை விட்டு இறங்கி விட்டிருந்தாள் சசிரேகா.

''என்ன கொடுமையிது சன்டே கூட? சரி இப்பப் போ ஆனா இதுக்கெல்லாம் சேத்து வட்டியும் முதலுமா வசூலிக் காம விடமாட்டேன்'' என்ற கணவனின் வார்த்தைகளால் வந்த சிரிப்பை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

வேகமாகக் காலைக் கடன்களை முடித்தவள் தனது அத்தையை நாடிச் சென்றபோது நேரம் நாலரைக்கும் மேல் ஆகி விட்டிருந்தது.

நல்லவேளையாக தாமதத்திற்கு அவள் எதுவும் சொல்லாததால், சற்றே மனம் நிம்மதிடைந்தாள்.

அதற்குப் பிறகு ஒவ்வொருவராக எழுந்து வர, கிளம்ப வேண்டிய பரபரப்பு அனைவரையும் பற்றிக் கொண்டது.

நேரம் ஐந்தரை ஆகியிருக்க, முத்தையா காலை டிஃபன்களைத் தயாரித்து டேபிள் மேல் வைத்து விட் டிருந்தான். மீண்டும் சென்று தான் குளித்துக் கிளம்பி கீழே இறங்கி வந்த சசிரேகா, தயாராக இருந்த டிஃபன் களை அதற்குத் தகுந்த ஹாட்பாக்ஸ்களில் வைத்து மூடி கோவிலுக்குக் கொண்டு சென்று சாப்பிடுவதற்குத் தயாராக எடுத்து வைத்தாள்.

''சீக்கிரம் கிளம்பலாம் அப்பதான் அஞ்சலிய அவங்க வீட்டுக்குப் போய் அழைச்சுட்டுப் போக சரியா இருக் கும்'' என்று சொல்லிக்கொண்டே இந்துமதி வர, ''அது சரிதான்'' என்றார் அமுதா.

''ஐய் அஞ்சலியும் வர்றாங்களா?'' என்று சந்தோஷ மாகக் குதித்தாள் ஸ்மிர்த்தி.

''சீக்கிரம் எல்லாத்தையும் கார்ல கொண்டு போய் வை'' என்று தனது அத்தை சொல்லிவிட்டுப் போக,



''குடுங்க அண்ணி'' என்று பாதியைத் தான் வாங்கிக் கொண்டாள் ஸ்மிர்த்தி.

அதற்குள் டிரைவர் வந்து அனைத்தையும் வாங்கிக் கொள்ள, ''பாத்து முடிஞ்ச அளவுக்கு அசைக்காம எடுத் துட்டுப் போகணும்'' என்றாள் சசிரேகா.

''சரிங்கம்மா'' என்று மீண்டும் வந்து மீதியிருந்த வற்றையும் எடுத்துச் சென்றான்.

''மூர்த்தி'' என்று ஷ்யாம்சுந்தர் அவனை அழைக்க, வேகமாக அருகில் வந்தான்.

''ஐயா சொல்லுங்க.''

''எல்லாக் காரும் தயாரா தான இருக்கு?''

''ஆமாங்கய்யா, உங்களுக்கு எந்தக் கார எடுத்து வெளிய நிறுத்தறதுங்கய்யா?''

''வேண்டாம் நானே எடுத்துக்கறேன் நீ உன் வண்டிய எடுத்துட்டு முன்னாடி வர்றவங்களை கூட்டிட்டுப் போயிடு.''

''சரிங்கய்யா'' என்று அவன் நகர, ''ஷ்யாம்'' என்று அழைத்துக் கொண்டே வந்த தாயைத் திரும்பிப் பார்த் தான்.

''சொல்லுங்கம்மா.''

''உங்கப்பா நம்ம கம்பெனி வழியா போகணும்னு சொல் றார், நீ வேணும்னா அஞ்சலி வீட்டு வழியாகப் போய் அவளக் கோவிலுக்கு அழைச்சுட்டு வந்துட்றயாப்பா?''

''சரிமா'' என்ற கணவனின் முகத்தில் தெரிந்த சந் தோஷம் சசிரேகாவின் கண்களில் படத் தவறவில்லை.

ஸ்மிர்த்தி முன்னே செல்லும் காருக்கு செல்ல, "அஞ்சலி வீட்டுக்குப் போயிட்டுப் போகப் போறோம் நீ வரலையா" என்று தங்கையைப் பார்த்துக் கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

"வர்றேண்ணா" என்றவள், இந்துமதியிடம் "நான் சின்ன அண்ணா அண்ணி கூட வந்துட்றேன்" என்றாள்.

தனது பெரிய மகன் இன்னும் புறப்படாததைக் கண்டு "என்னப்பா நீ வரலையா?" என்று கேட்டார் அமுதா.

"வர்றேம்மா, எனக்கு வேறொரு முக்கியமான வேலையிருக்கு அத முடிச்சுட்டு ஒன்பது மணிக்குக் கோவில்ல இருக்கற மாதிரி வந்துட்றேன்."

"சரிங்க கண்டிப்பா வந்துடுங்க நாங்க கிளம்பறோம்" என்ற இந்துமதி கடைசியாகப் போய்க் காரில் ஏறிக் கொள்ள, கார் புறப்பட்டது.

"நாமளும் கிளம்பலாமாண்ணா?"

"ஷ்யூர் நான் போய் கார எடுக்கறேன் வாங்க" என்று ஷ்யாம்சுந்தர் முன்னே நடக்க, ஸ்மிர்த்தியும் சசிரேகாவும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

ஸ்மிர்த்தி முதலில் பின் ஸீட்டில் ஏறிக்கொள்ள, அவளைத் தொடர்ந்து தானும் ஏற முயன்ற தனது சின்ன அண்ணியைத் தடுத்தாள் அவள்.

"அண்ணி நீங்க முன்னாடி போய்க்கோங்க."

"நீ மட்டும் பின்னாடி தனியா உக்காரணுமே, பரவாயில்ல நானும் உங்கூடவே உக்காந்துக்கறேன்."

"ப்ளீஸ் அண்ணி முன்னாடி போங்க, கொஞ்ச தூரம் தான் அதுக்கப்புறம் அஞ்சலி எனக்குத் துணைக்கு வந்துடுவாங்க."



"ஆனாலும்..... " என்று சசிரேகா தயங்க, "ஸ்மிர்த்தி தான் ஏறி உக்காந்துட்டாளே நீ முன்னாடி வந்து உக்காரு" என்றான் ஷ்யாம்சுந்தர்.

மனைவி ஏறியதும் காரை ஸ்டார்ட் செய்தவன் இருபது நிமிடங்களில் அஞ்சலியின் வீட்டின் முன்பாகக் காரை நிறுத்தினான்.

தான் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும் அஞ்சலியின் வீடும் சற்றுப் பெரிதாக இருப்பது போலத் தான் சசிரேகாவுக்கு தோன்றியது.

"இருங்கண்ணா நான் போய் அஞ்சலியக் கூப்பிட்டு வர்றேன்" என்று ஸ்மிர்த்தி இறங்கப் போக, "இருமா வீடு வரைக்கும் வந்துட்டு இப்பிடியே போனா நல்லார்க்காது" என்று ஷ்யாம்சுந்தர் தானும் இறங்கினான்.

அதற்குள் வாசலுக்கு வந்திருந்த அஞ்சலியின் பெற்றோர், அனைவரையும் வரவேற்றனர்.

"வாங்க ஷ்யாம், உள்ள வாங்கம்மா" என்று ஸ்மிர்த்தி, சசிரேகாவையும் உள்ளே அழைத்தனர்.

"வரலாம் அங்கிள் எல்லாரும் நல்லார்க்கீங்களா?"

"நாங்க எல்லாரும் நலம், நீங்க தான் கல்யாணத்துக்குக் கூட எங்களக் கூப்பிடாம விட்டுட்டீங்க" என்று அஞ்சலியின் தாய் குறைபட்டுக் கொள்ள, "தம்பி போன் பண்ணியிருந்தார்மா ஆனா ஸார்ட் டைம்ல மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிட்டதால தான் நம்மால வர முடியல" என்று யதார்த்தமாக உண்மையைச் சொன்னார் அஞ்சலியின் தந்தை.

"அப்படி மேரேஜ் ஃபிக்ஸ் பண்ணினதுக்குக் காரணமே நாம வந்துடக் கூடாதுங்கறதுதான" என்று

அஞ்சலி வர, ''அட சரியா சொல்லிட்டயே'' என்றான் ஷ்யாம்சுந்தர்.

''பின்ன என்னபத்தி என்னன்னு நினைச்சீங்க?'' என்று அஞ்சலி அவனைப் பார்க்க, ''அது சரிதான் நீ பெரிய ஆள் தான'' என்றான் அவன்.

''உங்களுக்குன்னு இல்ல அஞ்சலி எல்லாருக்குமே மேரேஜ்க்கு டென் டேஸ் டைம் இருக்கும் போதுதான் இன்விடேஷனே குடுத்தோம்'' என்றாள் ஸ்மிர்த்தி.

''முதல் தடவையாப் புதுப் பொண்ணு மாப்ள வீட்டுக்கு வந்திருக்காங்க அவங்களுக்கு சாப்பிடக் கூட எதுவும் குடுத்து உபசரிக்காம இப்பிடி பேசிட்டே இருந்தா எப்பிடி?'' என்று அஞ்சலியின் தந்தை வீட்டுப் பெண்களைப் பார்க்க அவருடைய மனைவி ''இதோ போய் ஏதாவது எடுத்துட்டு வர்றேன்'' என்று உள்ளே சென்றார்.

''அதெல்லாம் எதுவும் வேண்டாம் ஆன்ட்டி, எல்லாரும் எங்கள எதிர்பாத்துட்டிருப்பாங்க'' என்று ஷ்யாம் சுந்தர் மறுக்க ''அதான நீங்கெல்லாம் எங்கள மாதிரி ஆளுங்க வீட்ல சாப்பிடுவீங்களா?'' என்றாள் அஞ்சலி.

''இப்பிடி சொன்னதுக்காகவாவது நாம இருந்து டிஃபன் சாப்டுட்டு தான் போகணும் அண்ணா'' என்று சொன்ன ஸ்மிர்த்தி, ''ஆனா அதுவும் இப்ப முடியாதே அண்ணி தான் போய் இப்பக் குலதெய்வக் கோவில்ல பொங்கல் வெச்சாகணும்'' என்று அதையும் தானே சொன்னாள் ஸ்மிர்த்தி.

''சரி அப்ப மதியமாவது நீங்க இங்க சாப்பிடலாமில்ல?''

''கண்டிப்பா, அதுவும் நாங்க மட்டுமில்ல வீட்ல இருக்கற எல்லாரும் வந்துட்றோம் போதுமா?'' என்ற ஸ்மிர்த்தியிடம் ''பாக்கலாம்'' என்றாள் அஞ்சலி.



''என்னது பாக்கறீங்களா நிஜமாவே வர்றோம்'' என்ற ஸ்மிர்த்தி ''நீங்க என்னண்ணா சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

''உங்க அண்ணாவா இன்னைக்கு முடியாது இன்னொரு நாளைக்குப் பாக்கலாம்னு சொல்லப் போறார், நீ ஏன் ஸ்மிர்த்தி?'' என்றாள் அஞ்சலி.

''இன்னைக்கு மதியம் லஞ்ச்சுன்னு ஒன்னு சாப்பிட்டா அது உங்க வீட்ல தான் இல்லன்னாப் பட்டினி தான் போதுமா.''

''வாவ் நிஜமாவா சொல்றீங்க?'' என்று அஞ்சலி உண்மையான ஆச்சரியத்துடன் ஷ்யாம்சுந்தரைப் பார்க்க, ''ம் இப்ப நம்பறீங்களா?'' என்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

அதற்குப் பிறகு புதுமணத் தம்பதி அன்று மதியம் அஞ்சலியின் வீட்டிற்கு விருந்து சாப்பாட்டிற்கு வருவதாக முடிவாயிற்று.

அஞ்சலியின் தந்தையைத் தவிர வீட்டுப் பெண்கள் இருவருமே தன்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாததில் மனதிற்குள் சற்று ஒரு மாதிரியாக உணர்ந்தாள் சசிரேகா.

அதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய பட்டும் படாத ஜாடைப் பேச்சிலும், விலக்கி தூர நிறுத்தி வைத்திருந்த பார்வையிலும் அவர்கள் தன்னை வேண்டாத விருந்தாளியாக நடத்தியதையும் சசிரேகாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதைக் கணவனும் கண்டு கொண்டதை சசிரேகா உணரவில்லை, அந்த அளவிற்கு சசிரேகாவின் மனதை வேறு எண்ணங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

அஞ்சலியுடைய தந்தையின் பேச்சை வைத்துப் பார்க்கும் போது தங்களுடைய திருமணத்திற்குக் கணவன் அவர்களை அழைத்திருக்கிறான் என்பது தெளிவானது.

பிறகு எதற்காக முதல்நாள் திருமண விஷயமே தனக்குத் தெரியாத மாதிரி அஞ்சலி அப்படி நடித்தாள்.

அப்படி அது மட்டும் உண்மையாக இருந்திருந்தால் சற்று முன்பு சொன்ன தனது தந்தையின் பேச்சை அவள் ஆட்சேபித்திருக்க வேண்டுமே.

இதில் எது உண்மை.

நிச்சயமாகக் கணவனின் மேல் எந்தத் தவறும் இல்லை, அஞ்சலி தான் வேண்டுமென்றே விளையாடிக் கொண்டிருக்கிறாள்.

''சரி நாங்க கிளம்பறோம் அங்கிள்'' என்ற கணவனின் வார்த்தைகளில்தான் நடப்புக்கு வந்தாள் சசிரேகா.

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு ஸ்மிர்த்தியும் சசிரேகாவும் பேசிக்கொண்டே வெளியே வர, அவர் களுக்கு முன்பே ஷ்யாம்சுந்தருடன் பேசிக்கொண்டே சென்றிருந்த அஞ்சலி அவனுடன் முன் ஸீட்டில் ஏறி அமர்ந்திருந்தாள்.

அதில் யாருக்குமே எதுவும் தவறாகப் படவில்லை என்றாலும், அண்ணன் தங்கை இருவரும் அறியாத வாறு பின் ஸீட்டில் பக்கவாட்டில் அமர்ந்திருக்கும் தன்னை வெற்றிச் சிரிப்புடன் திரும்பிப் பார்த்த அஞ்சலி யின் செய்கையில் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென் றிருந்தாள் சசிரேகா.



அதோடு தன்னுடைய ஊகம் சரியானதுதான் என் பதையும் உணர்ந்து கொண்டாள்.

ஒருவழியாகக் கோவிலுக்கு வந்து சேர்ந்த பிறகு தான் அவளால் தன்னுடைய எண்ண ஓட்டத்தை வேறு திசைக்குத் திருப்ப முடிந்தது.

ஆனால் அதற்கும் ஆயுள் சொற்பம் தான் என்பதை அதற்குப் பிறகு தான் உணர்ந்தாள்.

ஏனென்றால் அஞ்சலி தானாக சரியான பாதையில் சிந்திக்க முயன்றாலும், அதற்கு விடாமல் இந்துமதி அவளைக் குழப்பிக் கெடுத்தாள்.

அதன் விளைவாக அஞ்சலி தனது கணவனிடம் அதிக உரிமையெடுத்துக் கொள்வதும் தெரிந்தது, கூடவே இப்பொழுது பார்த்தாயா என்பதைப் போன்ற அஞ்சலி, இந்துமதி இருவருடைய பார்வைகளும் மிகுந்த எரிச்சலையே வரவழைத்தன சசிரேகாவுக்கு.

கூடவே சை என்று மனம் வெறுத்தும் போயிற்று.

ஆனால் கடைசியாக இவையனைத்தும் ஒன்று சேர்ந்து கணவனின் மேல் மிகுந்த கோபத்தை வரவழைத்தது, அதையே பெண்கள் இருவரும் எதிர்பார்த்துக் கொண் டிருப்பதும் புரிய முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சசிரேகா.

வெகுளியான தனது அன்பு மனைவியின் மனதைக் குழப்புவதில் இந்துமதியும் அஞ்சலியும் சேர்ந்து செய்து கொண்டிருந்த அனைத்துமே ஷ்யாம்சுந்தரின் கூர் பார்வையில் விழவே செய்தன.

மேலும் அவற்றை முழுமையாக உண்மையென நம்பிக்கொண்ட மனைவியின் அவஸ்த்தையைப் புரிந்து

கொண்டவனுக்கோ சிரிப்பு தான் வந்தது. அசடு என்று செல்லமாக மனதிற்குள் திட்டிக் கொண்டான்.

உலகமே வந்து இல்லாததையெல்லாம் சொன்னாலும் என்னைப்பற்றி உனக்குத் தெரிந்திருக்க வேண்டாமா என்று இரவு மனைவியை ஒருவழி செய்துவிட வேண்டு மென்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

தலைக்குக் குளித்துத் தளரப் பின்னிய நீண்டு இடைவரை தொங்கிய கூந்தலும், கோபத்தில் சற்றே சிவந்துவிட்ட குழந்தைத்தனமான மனைவியின் முகமும் அவனை இம்சித்துக் கொண்டிருக்க, அது கோவில் என்ப தாலும் சுற்றி இருப்பவர்களுக்காகவும் அப்போதைக்கு மிகவும் முயன்று மனதை வேறு திசையில் செலுத்த ஆரம்பித்தான்.

ஏற்கனவே குறுக்கு வழியில் யோசிக்கும் குணமுடைய அஞ்சலி, இந்துமதியின் ஓதலில் சற்று அதிகமாகப் போவதும், எப்பொழுதும் இல்லாத வகையாகத் தன் னிடம் மிகுந்த அசட்டுத்தனமாக நடந்து கொள்வதும் எரிச்சலை வரவழைத்தாலும், ஷ்யாம்சுந்தர் அதைத் தான் கண்டு கொள்ளாதவாறு காட்டிக் கொள்ள வேண்டு மென்று நினைத்துக் கொண்டான்.

அத்தோடு இனிமேல் இந்த மாதிரியெல்லாம் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்ளக் கூடாதென்று அஞ்சலியைத் தனிமையில் எச்சரிக்கவும் வேண்டு மென்று நினைத்துக் கொண்டான்.

தான் கண்டு கொள்ளாமல் விட்டுவிட வேண்டு மென்று நினைக்க நினைக்க, இந்துமதியும் அஞ்சலியும் சற்று அதிகமாக இடமெடுத்துக் கொள்வது சசிரேகாவுக்கு வெளிப்படையாகவே தெரிந்தது.



குனியக் குனியக் குட்டுவார்கள் என்பது இதுதானோ என்று நினைத்தவளுக்கு கோபத்தில் உள்ளம் குமுறியது. கோவிலுக்கு வந்த இடத்தில் கூட கடவுளை தரிசிக்க விடாமல் என்ன இது என்று எரிச்சலும் சேர்ந்து கொண்டது.

தனது அத்தை மும்முரமாகப் பொங்கல் வைப்பதற் கான வேலையில் ஈடுபட்டிருக்க, தானும் சென்று அவ ருடன் நின்று கொண்டாள்.

கேஸ் அடுப்பில் செய்வதற்கே உடல் குனியாதவர் களான இந்துமதியும் அஞ்சலியும் விறகு அடுப்பில் மூன்று கற்களை வைத்து சாஸ்த்திரப்படி பொங்கல் வைக்க வேண்டியிருந்ததால் அவர்கள் அருகில் கூட வரவில்லை.

தனது அத்தை சொல்லும் வேலைகளை செய்து கொடுத்துக்கொண்டே இருந்தவள், தனது மொபைல் ஒலிக்க எடுத்து பார்த்தாள்.

நித்யன், எதற்காகத் தன்னை அழைக்கிறானென்று ஒரு வினாடி யோசித்தவள் உடனே அட்டெண்ட் செய்து பேசினாள்.

''சொல்லுங்க நல்லார்க்கீங்களா?''

..........

''அப்படியா இப்ப எப்பிடியிருக்காங்க?''

..........

''தயவுசெஞ்சு இன்னொரு முறை போய் அம்மாவுக்கு ஏதாவது வேணுமான்னு கேட்டுக்க முடியுமா. ப்ளீஸ்...''

...........

"நான் இப்ப வெளிய இருக்கேன் வீட்டுக்கு வந்ததும் வர்றேன்னு அம்மாகிட்ட சொல்லிடறீங்களா?" என்று கேட்டுக் கொண்டவள், மேலும் சில முறை அவனுக்கு நன்றி சொல்லிவிட்டே போனை வைத்தாள்.

"பொங்கல் பொங்கி வரப் போகுது சீக்கிரம் வந்து அந்த அரிசியையும், கரண்டியையும் எடு" என்று தனது அத்தை அழைக்க, "இதோ வர்றேன் அத்தெ" என்று வேகமாகச் சென்று அவர் கேட்பதை எடுத்துக் கொடுத்தாள்.

கடவுளே எப்படி இவரிடம் நான் உடனே ஊருக்குப் போக வேண்டுமென்று கேட்பது என்று மிகவும் தயங்கினாள்.

மேலும் சிறிது நேரத்தில் பொங்கல் வைத்து பூஜையும் முடிய, அனைவரும் அங்கு கோவிலில் இருக்கும் டைனிங் ஹாலிலேயே காலை உணவை முடித்துக் கொண்டனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக சந்தோஷமாகவும் கேலி பேசிக் கொண்டும் இருக்க, தான் மட்டும் இப்படி எதையோ பறிகொடுத்தாற் போல இருக்கிறோமே என்று சசிரேகாவுக்கே சற்று ஒரு மாதிரியாக இருந்தது.

நேற்றிலிருந்து அங்கு ஊரில் அவளுடைய தாய்க்கு சற்று உடல்நலம் இல்லையென்று சொல்லத்தான் நித்யன் அழைத்திருந்தான், 'பெரிதாக ஒன்றுமில்லை அதனால் சசியிடம் சொல்லவேண்டாம் அவள் தேவையில்லாமல் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வாளென்று' தனது தாய் சொன்னதையும் சேர்த்தே சொல்லியிருந்தான் அவன்.



என்னதான் நித்யனும் இருக்கிற பிரச்சனையை மிகவும் குறைத்துக் காட்டிச் சொல்லியிருந்தாலும், சசிரேகாவின் மனதிற்குள் ஏதோ ஒரு இனம் புரியாத பயம் தோன்றி அவளை வதைக்க ஆரம்பித்திருந்தது.

சற்று தூரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்த கணவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள், கூடவே அஞ்சலியும்.

இவன் மட்டும் அப்படியென்ன பெரிய ஒழுங்கு வரட்டும் பெயருக்கு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு உடனே தனது தாயைப் பார்க்கக் கிளம்பி விட வேண்டுமென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அதற்குள் மிக அருகிலேயே வந்து விட்டிருந்தவன், "என்னடா ஏன் பாக்க ஒரு மாதிரியிருக்க" என்று மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

தனது கேள்விக்குப் பதில் சொல்லாமல் அதே சமயம் தன்னை சாதாரணமாகக் காட்ட முயலும் மனைவியின் செய்கையில் மீண்டும் "என்னமா?" என்று கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

கணவனின் கேள்விக்குத் தான் பதில் சொல்லத்தான் வேண்டுமென்று தோன்றினாலும், அவனது தோளைப் பிடித்துத் தொங்காத குறையாக உரசிக்கொண்டு நின்றிருக்கும் அஞ்சலியின் மேலும், அவளுக்கு அந்த அளவிற்கு இடம் கொடுத்திருக்கும் கணவனின் மேலும் எரிச்சல் வர எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தாள் சசிரேகா.

"என்ன புதுசுபுதுசா நாகரீகங்களெல்லாம் நிறையக் கத்துக்கிட்ட போலிருக்கு."

''அத நான் கூட உங்களத் திருப்பிக் கேக்கலாம்.''

எதுவும் பேசாமல் மனைவியைப் பார்த்தான் ஷ்யாம் சுந்தர்.

''எல்லாரும் இப்பிடியே லஞ்ச்சுக்கு அஞ்சலி வீட்டுக்குப் போறோம் தெரியும் தான?''

''போய்ட்டு வாங்க.''

''அப்ப நீ?''

''நான்....''

''ம் என்ன?''

''நான் அம்மாவப் பாக்கப் போகணும்.''

''ஏன் திடீர்னு?''

''அவங்களுக்குக் கொஞ்சம் உடம்புக்கு சரியில்ல அதான்.''

''தாராளமாப் போ, ஆனா விருந்துக்குப் போய்ட்டு அதுக்கப்புறமாக் கிளம்பு. இன்னைக்கு சன்டே தான முடிஞ்சா நானும் கூட வர்றேன்.''

''இல்ல நான் இப்பவே போறேன், அம்மாவ உடனே பாக்கணும்.''

''சரி.''

கணவனின் குரலில் இருந்த கோபம் வெளிப்படையாகவே தெரிய, சசிரேகாவுக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது.

அப்படியென்ன அநியாயமாகக் கேட்டுவிட்டோம். உடம்புக்கு முடியாமலிருக்கும் தாயைப் பார்க்கப் போவதற்குக் கூடத் தனக்கு உரிமையில்லையா என்று சசிரேகாவின் உள்ளம் பொறுமியது.



''அஞ்சலி வீட்டுக்கு நீ இப்ப எங்கூட வரத்தான் போற, அங்கிருந்து வேணும்னா சீக்கிரம் கிளம்பிக்கோ.''

''இல்ல நான் வரல.''

''வந்து தான் ஆகணும்.''

''இல்ல, என்னால அங்க வர முடியாது, கம்பல் பண்ணாதீங்க.''

தனது மனைவியைக் கூர்ந்து பார்த்தவன், ''இதுதான் உன் முடிவா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்று மனைவியிடமிருந்து பட்டென்று வந்த பதிலில் ''சரி கிளம்பு'' என்றான்.

அதற்கு அடுத்த வினாடியே ''ஆனா திரும்பி இங்க வராத'' என்றான்.

அப்படிச் சொன்னவன் உடனே அந்த இடத்தை விட்டுச் செல்ல, ஓ பின்னால் சென்று கெஞ்ச வேண்டுமென்று எதிர்பார்க்கிறானோ என்று ஏளனத்துடன் நினைத்தாள் சசிரேகா.

அடடா பாவம் அவளது தாய்க்கு என்னவாயிற்றோ என்ற பரிதாபம் வேண்டாம், ஆனால் சற்று அனுசரனையாகப் பேசக்கூடவா முடியாது.

அதற்குப்பிறகு தனது தாயை உடனே பார்த்தாக வேண்டுமென்ற எண்ணம் புழுவைப் போல சசிரேகாவின் மனதை அரிக்க ஆரம்பித்திருக்க, முதன்முறையாகக் கணவன் தன் மேல் கோபப்பட்டது வேறு கடைசியாக மிஞ்சியிருந்த கொஞ்சநஞ்ச நிம்மதியையும் சேர்த்துக் கெடுத்திருந்தது.

''என்னமா அம்மாவுக்கு என்னாச்சு?'' என்று தன்னுடைய மாமா கிருபாகரன் வர, கலக்கத்தை

மனதிற்குள் மறைத்துக் கொண்டு ''கொஞ்சம் உடம்புக்கு முடியலன்னு பக்கத்து வீட்லிருந்து கூப்டாங்க மாமா'' என்றாள்.

''ஷ்யாம் கோபத்துல சொன்னதையெல்லாம் மனசுல வெச்சுக்காதம்மா'' என்றவர், டிரைவரை காரை எடுக்கச் சொல்லி உடனே கிளம்பிச் சென்று தாயைப் பார்க்குமாறு மருமகளிடம் சொன்னார்.

''முடிஞ்ச அளவுக்கு அம்மாவ அதே கார்ல அழைச்சுட்டு வந்துடுமா, இங்க ஏதாவது பெரிய ஹாஸ்பிட்டல்ல ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாம்'' என்றார்.

''சரி மாமா அங்க போய் அம்மாவப் பாத்துட்டு முடிவு பண்ணிக்கலாம்'' என்று சசிரேகா சொல்லிக் கொண்டிருக்க ''வா உங்கூட நான் வர்றேன்'' என்று வந்தான் அவளுடைய கணவன்.

ஆனால் கல்லாக இறுகியிருந்த கணவனின் முகம் மேலும் மனதைக் காயப்படுத்த ''வேண்டாம் உங்களுக்கெதுக்கு வீண் சிரமம் நான் டிரைவர் கூடவே போய்க்கறேன்'' என்றாள்.

உணர்ச்சி துடைத்த முகத்துடன் மனைவியை சில வினாடிகள் பார்த்தவன், பிறகு எதுவும் பேசாமல் தோளைக் குலுக்கிவிட்டுச் சென்றிருந்தான்.

கணவனாக இறங்கி வந்தும் இப்படியாகி விட்டதே, பேசாமல் அவன் கேட்டதும் நாமும் தான் சரியென்று சொல்லியிருக்கலாமோ என்று சசிரேகாவின் மனம் தவிக்க ஆரம்பித்திருந்தது.

ஆனால் அடுத்த வினாடியே தாயின் நினைவு வந்து மீண்டும் மனதைக் கலங்க வைத்தது.



# 11

தொடர்ந்து வந்த இரண்டு மணி நேரங்களில் தாய் வீட்டைச் சென்று அடைந்திருந்தாள் சசிரேகா.

வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும்போதே நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ள, சத்தம் செய்யாமல் கட்டிலில் படுத்திருந்த தாயருகில் சென்றாள்.

யாரோ வரும் அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்த சுகந்தி திடீரென்று அங்கு மகளைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்.

''வாடாம்மா, மாப்பிள்ளை எங்க?''

மிகவும் மெலிந்து கட்டிலோடு கிடந்த தாயைக் கண்டதில், நெஞ்சுக்கூடே காலியாகி விட்டாற் போலிருந்தது சசிரேகாவுக்கு.

ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தாய் தன்னிடம் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னாள்.

''அவர் வரலம்மா நான் மட்டும் தான் வந்தேன்'' என்று கட்டிலில் தாயின் அருகில் சென்று அமர்ந்தாள்.

''ஏன்?''

''அவருக்கு வேற முக்கியமான வேலைகள் இருக்குதுமா அதான்.''

"அதனாலென்ன, அவருக்கு அந்த வேல முடிஞ்சதும் சேந்தே வந்திருக்க வேண்டியது தான?"

தொடர்ந்து சில வாக்கியங்களைக் கோர்வையாகப் பேசவே தனது தாய் மிகவும் சிரமப்படுவது புரிந்தது.

"திடீர்னு உங்க ஞாபகம் ரொம்பவும் வந்துடுச்சுமா அதனால தான் உடனே கிளம்பி வந்தேன்."

"இருந்தாலும்...."

"என்னமா நீங்க, அப்ப நான் வந்ததுல உங்களுக்கு சந்தோஷமே இல்லையா?"

"அதுக்கு சொல்லலம்மா, என்னவோ உங்க ரெண்டு பேரையும் சேந்து பாக்கணும் போல மனசுக்கு ரொம்பவும் தோணுது" என்றாள் சுகந்தி.

அவருக்கு உடம்பு சரியில்லையென்று தான் கிளம்பி வந்தது தெரியாததால், தனக்குக் கணவனுடன் ஏதோ பிரச்சனையென்பதால் தான் தனியாக வந்திருப்பதாக நினைத்துக் கொண்டாரோ.

அப்படியெல்லாம் எதுவுமில்லையென்று தாய்க்கு எப்படிப் புரிய வைப்பது.

ஆனால்... கடைசியில் கிளம்பும் போது பார்த்த கணவனின் கோபமான இறுகிய முகம்தான் அந்த நேரம் பார்த்து துரதிஷ்டவசமாக நினைவுக்கு வந்தது சசிரேகா வுக்கு.

ஒருவேளை தனது தாய் நினைப்பது போலத் தான் ஆகி விடுமோ.

ஆனால் அந்த எண்ணங்களையெல்லாம் அப் போதைக்கு தூர எறிந்துவிட்டு சசிரேகா நிமிர்ந்து தனது



தாயைப் பார்க்க, அவரும் தன்னைப் பார்த்துக் கொண் டிருப்பது தெரிந்தது.

"ஏம்மா படுத்துட்டிருக்கீங்க, உடம்புக்கு என்ன செய்யுது?"

"என்னவோ தெரியலைமா ரெண்டு நாளா கொஞ்சம் அசதியா இருக்கு."

"அதான் ஏம்மா?"

தனது கேள்விக்கு பதில் சொல்லாமல் பேசாமல் கண்களை மூடிக்கொண்ட தாயின் செய்கையில், கண் கள் கலங்கிவிட்டன சசிரேகாவுக்கு.

சந்தேகமே இல்லை, அம்மாவுக்கு உடலில் ஏதோ ஒரு பெரிய பிரச்சனை இருக்கிறது.

இப்பொழுது என்ன செய்வது.

வெளியில் காருடன் டிரைவர் இருப்பது ஞாபகத் திற்கு வந்ததில் சற்றே மனம் தைரியமடைந்தது.

இப்பொழுது முதல் வேலையாகத் தாயை ஏதோ ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டால் மற்றதை அங்கு சென்று பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு வழி கிடைத்து விட்ட சந்தோஷத்தில் தாயை அழைத்தாள் சசிரேகா.

மெதுவாகத்தான்.

ஆனால் அதற்குத் தாயிடமிருந்து எந்தவொரு பதிலும் வராததில் மீண்டும் அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

மீண்டும் சில முறை அதே மாதிரி தாயை அழைத் தாள், பேசாவிட்டாலும் அவர் தலையை ஆட்டி என்ன வென்று கேட்பது புரிந்தது.

கடவுளே தாயால் வாயைத் திறந்து பேசக் கூட முடிய வில்லை போலிருக்கிறதே.

சசிரேகாவை பயம் பிடித்துக்கொள்ள என்ன செய்வ தென்று தெரியாமல் விழித்தாள்.

ஆனால் அது சில வினாடிகள் தான், உடனே தனது மொபைலை எடுத்துக் கணவனுக்கு அழைத்தாள்.

ஆனால் ஒரு முறைக்கு இரண்டு முறையாக முழு ரிங் போய் கட்டாகிவிட, நன்றாகவே அழ ஆரம்பித்திருந் தாள் சசிரேகா.

ஆனால் உடனே அடுத்து தான் செய்ய வேண்டியதை ஊகித்திருந்தவள், தாயை மருத்துவமனைக்கு அழைத் துச் செல்வதற்காக டிரைவரை அழைக்க வெளியே ஓடி வந்தாள்.

வெளியே வந்திருந்தவள் மிக வேகமாக வந்து நின்ற காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த தன்னுடைய கணவனை நம்ப முடியாத ஆச்சரியத்துடன் கண்டாள்.

டிரைவரும் அவனை அங்கு கண்டதில் ''ஐயா'' என்று ஆச்சரியத்துடன் அருகில் வர, ஜாடையாக அவ னுக்குக் கை காட்டிக்கொண்டே வேகமாக மனைவியை நோக்கி வந்தான் ஷ்யாம்சுந்தர்.

''என்னாச்சு, அத்தெ என்ன பண்றாங்க?'' என்று கேட்டுக்கொண்டே அழுகையை முயன்று கட்டுப் படுத்திக் கொண்டிருக்கும் தனது மனைவிக்கும் முன்பாக வீட்டிற்குள் வந்திருந்தான்.

நேராகத் தனது அத்தை படுத்திருக்கும் கட்டிலுக்கு அருகில் சென்றவன், மெதுவாக அவரை அழைத்தான்.



உடனே கண்களைத் திறந்து பார்த்த சசிரேகாவின் தாய் சுகந்தி, ''வாங்க மாப்ள'' என்று புன்னகையுடன் மரு மகனை வரவேற்றார்.

அதுவரை கண்களை மூடிக்கொண்டு சக்தி அனைத் தையும் திரட்டியிருந்தார் போல, உடல் நலமில்லாத சாயல் சிறிது கூட அவரது முகத்தில் தென்படவில்லை.

''நல்லார்க்கீங்களா அத்தெ?'' என்று கேட்டவன் சற்றே திரும்பி அருகில் நின்று கொண்டிருந்த மனை வியைப் பார்த்துச் சிரித்தான்.

''பாத்தியா நானும் ஒரு பத்தே நிமிஷ வித்யாசத்துல வந்துட்டேன் தான, நீங்க வர ரொம்ப லேட்டானாலும் ஆகும் அதனால நான் முன்னாடியே கிளம்பறேன்னு வந்துட்டா'' என்று மீண்டும் திரும்பி தனது அத்தை யிடம் விளக்கம் கொடுத்தான்.

கணவனின் முயற்சி புரிய தானும் ஒத்துழைத்தாள் சசிரேகா.

''நானும் நீங்க சீக்கிரம் வந்துடுவீங்கன்னு தான் நினைச்சேன் ஆனா இவ்வளவு சீக்கிரமா எதிர்பார்க்கல'' என்று கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

எதிர்பாராத விதமாகக் கணவனை அங்கு பார்த்ததி லேயே ஓரளவு நிம்மதியடைந்ததிருந்தவள், தனது தாயும் நன்றாக சிரித்துப் பேசியதில் பெருமளவு பழைய நிலைக்கே திரும்பியிருந்தாள் சசிரேகா.

தாய் தன்னை அழைக்க அருகில் சென்றாள்.

''மாப்பிள்ளைக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வந்து குடுமா'' என்ற தாயிடம் சரியென்றள், ''கடைசியா நீங்க

எப்ப என்ன சாப்டிங்க உங்களுக்கு என்ன கொண்டு வந்து குடுக்கட்டும்?'' என்று கேட்டாள்.

''எனக்கு இப்ப எதுவும் வேண்டாம் கொஞ்சம் முன்னாடி தான் ஹார்லிக்ஸ் குடிசேன்'' என்று அவர் ஒரேயடியாக மறுத்துவிட, கணவனுக்கும், டிரைவருக்கும் மட்டும் காஃபி கலக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள்.

சிறிது நேரத்தில் தாய் மீண்டும் பழையபடி எதுவும் முடியாமல், சுருண்டு படுத்துவிட, சமயலறைக்குள் சென்று ஓசையற்றுக் கண்ணீர் வடித்தாள்.

சற்று நேரத்தில் தன்னை சமாளித்துக் கொண்ட சசிரேகா தனது தாயின் கட்டிலில் சென்று அமர்ந்து விட, அப்படியே மேலும் சில மணி நேரங்கள் கழித்திருந்தன.

இப்படியே நேரம் போய்க் கொண்டிருப்பதில் என்ன பயன் டாக்டரிடமாவது செல்லலாம் என்று கணவன் சொல்ல, சசிரேகாவுக்கும் அதுவே சரியென்று பட்டது.

ஆனால் அவர்கள் எவ்வளவு சொல்லிப் பார்த்தும் சுகந்தி மறுத்து விட்டிருந்தாள்.

எனக்கு உடம்புக்குப் பெரிதாக எந்தப் பிரச்சனையும் இல்லை காலையில் வேண்டுமானால் மருத்துவமனைக்குச் செல்லலாமென்று அவர் ஒரேயடியாக சொல்லி விட, வேறு வழி தெரியாமல் அவர்களும் அதைக் கேட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று.

காலையில் தங்களுடன் ஊருக்கே அழைத்துச் சென்று விட்டால் அங்கு பெரிய மருத்துவமனையில் வைத்தே நல்ல சிகிச்சையளித்துக் கொள்ளலாமென்று அதற்கான ஏற்பாடுகளை போனிலேயே முடித்திருந்தான் ஷ்யாம் சுந்தர்.



இப்படியே தனது தாயின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் அதே சமயம் பின்னேற்றமும் இல்லாமல் போக, இரண்டு முறை அவரை வற்புறுத்தி சிறிது கஞ்சியையும், ஹார்லிக்ஸையும் மட்டும் குடிக்க வைத்திருந்தாள் சசிரேகா.

மாலையே கணவன் டிரைவரை ஊருக்குச் கிளம்பச் சொல்லியிருக்க, தங்கள் இருவருக்கும் மட்டும் தானே என்று சாதத்தோடு தயிரைக் கலந்து கொஞ்சம் ஊறுகாயோடு சிம்பிளாக இரவு உணவை முடித்துக் கொண்டனர்.

வெளிச்சம் போய் இருள் வரவர பிரச்சனை மிகவும் பூதாகாரமாகி தன்னையே விழுங்க வருவதைப் போல உணர்ந்தாள்.

தாயின் தலைமாட்டில் கவலையே உருவாக எங்கோ வெறித்தவாறு அமர்ந்திருக்கும் மனைவியைக் கண்டதில் மனம் உருகிட, தானும் அருகில் சென்றான் ஷ்யாம்சுந்தர்.

சுகந்தியிடமிருந்து வந்த சீரான சுவாசத்தில் அவர் நன்றாகத் தூங்குவது தெளிவாகத் தெரிய, கணவன் சொல்வதைப் போல சத்தம் செய்யாமல் ஃபேனை லேசாகச் சுழல விட்டு ஒரு மெல்லிய சால்வையை எடுத்துத் தாய்க்குப் போர்த்தி விட்டாள்.

அதே போல சத்தம் வராமல் அவர் தூங்கும் அறைக் கதவை மூடிவிட்டு மனைவியோடு வெளியே வந்திருந்தான் ஷ்யாம்சுந்தர்.

''என்னமா?'' என்று கேட்ட கணவனிடம் ஒன்றுமில்லையென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் சசிரேகா.

''எதையும் நினைக்காம நீயும் கொஞ்ச நேரமாவது தூங்கு'' என்ற கணவன் தனது மொபைல் போனை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல, தங்களது அறையில் இருக்கும் கட்டிலில் ஒரு ஓரமாகக் குறுகிப் படுத்துக் கொண்டாள்.

போன் பேசிவிட்டு அரை மணி நேரம் கழித்துத் திரும்பி வந்தவன் லைட்டைக் கூட அணைக்காது அப்படியே மனைவி தூங்கிப் போயிருப்பதைக் கண்டான்.

தனது அத்தை படுத்திருக்கும் அறையை லேசாகத் திறந்து எட்டிப் பார்த்து விட்டு வந்தவன், மனைவியின் தூக்கம் கலைந்து விடாதவாறு சத்தம் வராமல் லைட்டை ஆஃப் செய்துவிட்டுத் தானும் வந்து படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் நன்றாகத் தூங்கிப் போயிருந்தவன், திடீரென லேசான விசும்பல் சத்தம் கேட்பதைப் போலிருக்கக் கண் விழித்துப் பார்த்தான்.

சில வினாடிகளில் அந்த சத்தம் மனைவியிடமிருந்து தான் வருகிறதென்பது உறுதியாகி விட, ''சசி'' என்று மெதுவாக அழைத்தான்.

மனைவியிடம் நெருங்கி வந்தவன், ''என்னம்மா?'' என்று கேட்டான்.

கணவனை நோக்கித் திரும்பிப் படுத்தவள், இரவு விளக்கு தந்த வெளிச்சத்தில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்னடா?''

''ஷ்யாம்....''



அழுகையில் உதடு துடிக்க தன்னை அழைத்த மனைவியிடம் ''வேண்டாம்மா அழாத'' என்றான்.

''ஆனா மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கே ஷ்யாம்'' என்று அழுகையில் துடிக்கும் மனைவியைப் பார்க்க அவனுக்கும் நெஞ்சுக்குள் என்னவோ செய்ய, ''வேண்டாம்மா அழாத'' என்று கதறும் மனைவியை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் எதையும் உணரக்கூட மாட்டாமல் கதறியவள், பிறகு மெல்ல மெல்ல அழுகை குறைந்து தன்னை மிருதுவாக அணைத்திருக்கும் கணவனை நெருங்கி அவனது மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

கணவனின் அருகாமையில் என்னவோ அனைத்துப் பிரச்சனைகளும் தீர்ந்து விட்டாற் போல ஒருவிதப் பாதுகாப்பு உணர்வு தோன்ற, அப்படியே தூங்கியும் போனாள்.

நன்கு தூங்கிப் போயிருந்த குழந்தைத்தனமான மனைவியின் முகத்தையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்ததில் மனம் லேசாகி விட, அப்படியே தானும் தூங்கிப் போயிருந்தான் ஷ்யாம்சுந்தர்.

நடுநிசியில் திடீரென தூக்கம் கலைந்ததில் தனது அணைப்பிலிருக்கும் மனைவி எழுந்து விடாதவாறு மெதுவாக எழுந்து தனது அத்தையைப் பார்ப்பதற்காகச் சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே டியூப் லைட் எரிந்து கொண்டிருக்க, விழித்திருந்த சுகந்தியின் முகத்தில் நோயின் வாதனை நன்றாகவே தெரிந்தது.

வேகமாக அவரருகில் சென்றவன், ''உடம்புக்கு என்ன பண்ணுது அத்தெ?'' என்று கேட்டான்.

''கொஞ்சம் ஒரு மாதிரியிருக்கு'' என்றவள், ''சசி..'' என்று சற்று சிரமப்பட்டே அழைத்தார்.

தனது மனைவியை எழுப்புவதற்காக அவன் ஓரடி எடுத்து வைத்திருக்க, அதற்கு முன்பே எழுந்து வந்திருந் தாள் சசிரேகா.

''அம்மா'' என்று தாயருகில் சென்றவள் ''என்னமா என்ன பண்ணுது?'' என்று அழுகையுடன் கேட்டாள்.

எதுவும் பேசாமல் சற்றே மலர்ந்த முகத்துடன் மகளை யும் மருமகனையும் சிறிது நேரம் பார்த்துக் கொண் டிருந்தவள், இருவரையும் இன்னும் அருகில் வருமாறு ஜாடையில் அழைத்தார்.

மகளிடம் ''எப்பவும் நல்ல பொண்ணா நடந்துக் கணும்'' என்றவர், மருமகனிடம் ''தெரிஞ்சு எந்தத் தப் பும் பண்ணமாட்டா. அவள நீங்க நல்லா பாத்துக்கணும் மாப்ள'' என்று சற்று சிரமப்பட்டே என்றாலும் தெளி வாகச் சொன்னவளை இருவரும் எதுவும் செய்வதறியாது சற்றுப் பயத்துடன் பார்த்தனர்.

''அம்மா உங்களுக்கு என்னமா பண்ணுது சொல்லுங் கமா?'' என்று சசிரேகா அழுகையுடன் தனது தாயருகில் குனிந்து கேட்க ''உன்ன இப்ப சிரிச்ச முகமாப் பாக்க ணும்னு தான் ஆசப்படறேன்மா'' என்றார் அவர்.

சிறிதும் நோயின் வாதனை முகத்தில் தெரிந்து விடா மல் மகளையும் மருமகனையும் பார்த்துக் கொண்டே இருந்தவள், அன்றைய இரவைத் தாண்டவில்லை.



ஆம் அவர்களை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு இந்த மண்ணுலகை விட்டுப் பிரியா விடை பெற்றிருந்தாள்.

இனி தனக்குத் தாய் இல்லை என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கதறித் தீர்த்த சசிரேகாவுக்கு அதற்குப் பிறகு நடந்த எதுவுமே சற்றும் மனதில் பதிந் திருக்கவில்லை.

## 12

ஆயிற்று, சசிரேகாவின் தாய் இறந்து ஒரு வாரத்திற் கும் மேல் ஆயிற்று.

சுற்றி நடக்கும் எதையும் உணர மாட்டாமல் பிரம்மை பிடித்தாற் போல அமர்ந்திருந்தவள், நாளுக்கு நாள் அதுவும் மிகவும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பழைய நிலைக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தாள்.

துக்கம் கேட்டு யார் யாரோ வந்தது ஏதோதோ பேசியது என எதுவுமே மனதில் பதியாமல், ஏதோ ஒரு நீண்ட கனவிலிருந்து அப்பொழுது தான் விழித்தாற் போலிருந் தாள் சசிரேகா.

அங்கேயே இருந்தால் துக்கம் விசாரிக்கிறோம் என்ற பெயரில் வெந்த புண்ணிலேயே வேல் பாய்ச்சுவதைப் போல மீண்டும் மீண்டும் வந்து தாயின் மறைவை ஞாபகப்படுத்திக் கொண்டே இருப்பார்களென்று மனை வியைக் கையோடு ஊருக்கு அழைத்து வந்து விட் டிருந்தான் ஷ்யாம்சுந்தர்.

என்னதான் கணவனின் துணை இருக்கிறதென் றாலும் தனது தாய் இருக்கிறவரை ஏதாவது பிரச்சனை யென்று வந்தால் ஒரு பிடிப்பு இருப்பதைப் போல உணர்ந்தவள், இப்பொழுது புகுந்த வீட்டில் கண்களைக் கட்டிக் காட்டில் விடப்பட்டது போல உணர்ந்தாள்.

ஆனால் இப்பொழுது தனது கணவனின் வார்த்தை களுக்குக் கட்டுப்பட்டோ என்னவோ தன்னை அவ்வள வாக யாரும் எதுவும் சொல்லாததில் ஒரு விதத்தில் சற்று நிம்மதியாகவும் உணர்ந்தாள்.

அதிலும் தான் அந்த வீட்டிற்கு வந்த நாளிலிருந்து நன்கு உழைத்துப் பழக்கப்பட்டு விட்டதால், எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருப்பதற்கு அவளது மனமோ இடம் கொடுக்கவில்லை.

அதனால் காலையில் எழுந்து வந்தாளானால் பத்து மணி வரை எப்பொழுதும் போல வேலைகளைச் செய்ய ஆரம்பித்திருந்தவள் மதியமும் இரவும் மட்டும் உணவு எடுத்துக் கொள்வதற்காக மட்டும் கீழே இறங்கி வந்தாள்.

அப்படி வந்ததில் அதாவது தான் செய்யும் வேலைகள் குறைந்து விட்டதில் தான் மற்றவர்களின் சுயரூபத் தையே சசிரேகாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

நேரநேரத்திற்கு வந்து உண்டு விட்டு சும்மா பொழுதைக் கழிக்க இது ஒன்றும் சத்திரமோ விடுதியோ அல்ல என்று ஜாடை மாடையாகத் தனது அத்தையும், அதற்கும் ஒரு படி மேலே போய் தனக்கு இப்படியொரு தீராத நோயிருப்பது முன்னரே தெரிந்திருந்ததால்தான் நாடகமாடி மகளைப் பணக்கார வீட்டில் கட்டிக் கொடுத்து விட்டு அந்த அம்மா ஒரேயடியாகப் போய்



சேர்ந்து விட்டார் என்று இந்துமதியும் வார்த்தைகளால் குத்தினார்கள்.

அத்தோடு விட்டிருந்தால் கூடப் பரவாயில்லை அவள் அதற்கும் ஒருபடி மேலே போய் மகளின் குணத்திற்குக் கணவனோடு சேர்ந்து வாழாவிட்டாலும் கூட கடைசிக்கு ஒரு வேலைக்காரியாகவாவது இருந்து விட்டுப் போகட்டுமென்று தான் அந்தம்மா, தைரியமாக இப்படியொரு பணக்கார சம்பந்தம் செய்திருக்கிறா ரென்று சிறிதும் நாக்கூசாமல் சொன்னாள்.

எப்போழுது யார் என்ன சொல்லி விடுவார்ளோ என்று எந்நேரமும் மனதில் ஒரு பயத்துடனேயே திரியும் தனது நிலை பற்றி இவர்களுக்கு என்ன தெரியுமென்று நினைத்த சசிரேகாவுக்கு சிரிப்பு தான் வந்தது.

ஆனால் இவையனைத்துமே தனது கணவன் இல் லாத போது தான், அவன் இருக்கும் போது தன்னை யாரும் அவசியத்திற்குக் கூட எதுவும் பேசினார்கள் இல்லை என்பதையும் நன்கு உணர்ந்தே இருந்தாள்.

ஆனால் சசிரேகா இயற்கையிலேயே ரோஷம் சற்று அதிகம் கொண்ட பெண்ணென்பதால், தன்னை யாரும் தண்டச் சோறென்று சொல்லி விடக்கூடாதென்று முன்னை விடவும் அதிகமான வேலைகளை தானாகவே இழுத்துப்போட்டு செய்தாள்.

அவள் அப்படி அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்ததில், அவளே எதிர்பார்த்திருக்காத வித மாக ஒரு மிகப்பெரிய நன்மையும் இருக்கவே செய்தது.

வேலைப்பளு அதிகமானதில் எந்நேரமும் தனது தாயின் மறைவையே நினைத்து மனம் கலங்கிக் கொண்டிருக்க வழியில்லாது போயிற்று.

அதற்காக தாயின் மறைவை சுத்தமாக மறந்து விட்டாளென்று சொல்லிவிட முடியாது, முன்னைப் போல எந்நேரமும் நெஞ்சை அறுத்துக் கொண்டே இருந்த ஒரு வித வேதனை வெகுவாகக் குறைந்து போயிருந்தது.

புகுந்த வீட்டிற்கு வந்திருந்த இந்த ஐந்து நாட்களில் அங்கு இருந்ததைப் போல யாரும் எதற்கெடுத்தாலும் தனது தாயின் மறைவை நினைவு படுத்தாததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அதற்கு மேல் ஓரிரு முறை இங்கு நினைவுபடுத்தியிருந்தாலும் அது பெருமளவு ரோஷத்தை வரவழைப்பதாகவே இருந்தது.

ஆனால் இவ்வளவு விரைவில் இந்த அளவிற்குத் தனது தாயின் மறைவு தந்த பெரும் துயரத்திலிருந்து தான் மீண்டதற்குக் காரணம் தனது கணவன் மட்டுமே என்பதை சசிரேகாவால் சிறிதும் மறுக்க முடியவில்லை.

அந்த அளவிற்குக் கணவனின் ஆறுதலும் அரவணைப்பும் இல்லாது போயிருந்தால் தான் என்ன கதி ஆகியிருப்போமென்று சசிரேகாவால் நூறில் ஒரு பங்காகக் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை.

தனது தாயின் மறைவிற்கு பெற்ற மகனைப் போல யாரும் எந்தக் குறையும் சொல்லி விடாதவாறு தானே முன்னின்று அனைத்தையும் செய்ததிலிருந்து எதற்காகவும் தன்னுடைய மனம் சிறிதும் வாடிவிடக் கூடாதென்று மிகுந்த சிரத்தையெடுத்துத் தன்னை கவனித்துக் கொள்ளும் கணவனுக்காகவாவது தன்னை சந்தோஷமாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று மிகவும் முயன்று ஓரளவு வெற்றியும் கண்டாள் சசிரேகா.



அதே போலத் தனது மாமனார் கிருபாகரனும், நாத்தனார் ஸ்மிர்த்தியும் கூடத் தனது இதம் நாடி அனைத்தையும் செய்ததில் மனம் நெகிழ்ந்து போனாள்.

அன்று இரவு அருகில் ஒரு திருமண விஷேசத்திற்குச் சென்று விட்டு அஞ்சலி அப்படியே நேராகத் தங்களது வீட்டிற்கு வந்திருந்தாள்.

அந்த நேரம் பார்த்து இந்துமதியும் வீட்டில் இருந்ததில் கேட்கவே வேண்டியிருக்கவில்லை.

அங்கே சுற்றி இங்கே சுற்றிக் கடைசியில் பேச்சு அவர்களது வீட்டுப் பெருமைகளைப் பறைசாற்றுவதில் வந்து நின்றிருந்தது.

நான் ஆறு வைர நகை செட் வைத்திருக்கிறேனென்று இந்துமதி சொல்ல, அதில் பாதி என்னிடமும் இருக்கிறது என்றாள் அஞ்சலி.

அதில்லாமல் எண்ணற்ற தங்க நகைகளும் வைத்திருக்கும் தங்களுக்கே ஏதாவது விஷேசமென்று வந்து விட்டால் போட்ட நகைகளையே திரும்பத் திரும்பப் போடுவதைப் போன்ற ஒரு உணர்வு தான் ஏற்படுகிறது.

இப்படியிருக்கும் போது ஒரு சிலரெல்லாம் எப்படித் தான் தங்கத்தில் ஒரு தாலிக் கொடியைத் தவிர வேறு எதுவுமே இல்லாமல் இருக்கிறார்களோ என்று மிகவும் ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் ஜாடையாகக் குறிப்பிட்டுப் பேசுவது தன்னைத் தான் என்பதும் சசிரேகாவிற்குப் புரியவே செய்தது.

அவர்கள் மேலும் அதிகமாகப் பேசப்பேச வெறும் பணத்தை மட்டுமே பெரிதாக எடுத்துக் கொண்டு

இப்படியெல்லாம் அறியாமையால் எப்படி இவர்களால் பேச முடிகிறதென்று ஆச்சரியமாகக் கூட இருந்தது.

இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டால் சின்ன அண்ணியைப் பற்றிக் குறை கூறாமல் இருக்க மாட்டார்களென்பது தெரிந்த விஷயமாதலால், சற்று முக்கியமான வேலையிருப்பதைப் போலக் காட்டிக் கொண்டு எழுந்து சென்று விட்டிருந்தாள் ஸ்மிர்த்தி.

வேலைப்பளு மிகவும் அதிகமாகி விட்டிருந்த சசிரேகாவுக்கோ சிறுபிள்ளைத்தனமான அவர்களுடைய பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவோ மீண்டும் நினைத்துப் பார்க்கவோ நேரமில்லாது போயிற்று.

அப்படி சமயலறையில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தவள் அன்று கம்பெனியிலிருந்து வழக்கத்தை விடவும் முன்னதாகவே தனது கணவன் வந்து விட்டிருந்ததையும், பக்கத்து அறையில் அஞ்சலியும் இந்துமதியும் பேசிக் கொண்டதனைத்தையும் அவன் கேட்டு விட்டதையும் அறியவில்லை.

அதிலும் தனது தாய் இறந்து பத்து நாட்களே ஆகியிருந்த நிலையில் யாருக்கும் ஒரு சிறு பரிதாபம் கூட இல்லையே என்ற எண்ணம் தான் சசிரேகாவுக்கு.

அப்படி யாரும் தன்னைப் பார்த்துப் பரிதாபப் படுவதோ, தன்னிரக்கம் கொள்வதோ, சசிரேகாவுக்கும் சுத்தமாகப் பிடிக்காது என்றாலும், மற்றவர்களின் மனநிலையைப் பற்றிச் சிறிதும் யோசித்துப் பார்க்காமல் எப்படி இந்த அளவிற்குத் தன்னலமே உருவாக அவர்களால் நடந்து கொள்ள முடிகிறதென்று ஆச்சரியம் தான் அதிகமாக இருந்தது.



''அஞ்சலி வந்து எவ்வளவு நேரமாச்சு அவளுக்குக் குடிக்கக் கூட எதுவும் தராம என்ன பண்ணிட்டிருக்க? முதல்ல ஒரு கப் ஃப்ரஸ் ஆரஞ்சு ஜூஸ் எடுத்துட்டு வா'' என்ற இந்துமதியின் குரலில் திரும்பினாள் சசிரேகா.

''இதோ நான் எடுத்துட்டுப் போறேன்மா'' என்று சசிரேகாவிடம் வேலைக்காரி நீலா சொல்ல, ''யாரோ ஒருத்தர் ஆனா வீட்டுக்கு வந்தவங்கள முதல்ல உபசரிச்சுப் பழகுங்க'' என்று விட்டுப் போனாள் இந்துமதி.

அஞ்சலி வீட்டிற்கு வந்திருந்த சில வினாடிகளிலேயே சசிரேகா சென்று அவளை டிஃபன் சாப்பிடச் சொல்லி கொடுத்து உபசரித்திருந்தாள்.

ஆனால் திருமணத்திற்கு சென்றுவிட்டு வந்திருப்பதால் கொஞ்சம் தண்ணீரைக் குடிக்கக் கூடத் தனக்கு வயிற்றில் இடமில்லையென்று எதுவும் வேண்டாமென்று ஓரேயடியாக மறுத்திருந்தாள் அஞ்சலி.

அது இந்துமதிக்குத் தெரியாதாய் இருக்குமென்று நினைத்தவள், தானே அஞ்சலிக்கு ஆரஞ்சு ஜூஸ் பிழிய ஆரம்பித்திருந்தாள்.

''சாப்பாட்டிற்கே வழியில்லாத அவளது வீட்டில் வேண்டுமானால் வீட்டிற்கு வந்தவர்களை உபசரித்துப் பழக்கப்படாமல் இருந்திருக்கலாம், ஆனால் இங்கு அதுவும் முக்கியமாக எனது சொந்தங்களை அவமதிப்பது இதுவே கடைசியாக இருக்க வேண்டுமென்று சொல்லி விடுங்கள் அத்தை'' என்று இந்துமதி தனது அத்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தது நன்றாகவே கேட்டது.

''என்ன டிஃபனெல்லாம் ரெடியா?'' என்று வந்தவரிடம் ''ஆமா அத்தெ எல்லாம் ரெடி டைனிங் டேபிள்ள எடுத்து வெச்சுட்டேன்'' என்றாள் சசிரேகா.

''சிலருக்கு சிலது வாய்க்காமப் போகலாம் அதுக்காக மத்தவங்களப் பாத்து எதுக்குப் பொறாமப்படணும்?'' என்று அத்தை தன்னைப் பார்த்துக் கேட்டதில் ஆச்சரியமே உருவாகிப் போனாள் சசிரேகா.

.........

''என்ன பேசு.''

''பொறாமப்பட்ற குணம் எங்கிட்ட எப்பவுமே கிடையாது அத்தெ. ஆனா அத நான் சொன்னாலும் இந்துக்கா என்னப்பத்தி சொல்றதத் தான் நீங்க நம்புவீங்க'' என்றவளை எதுவும் பேசாமல் பார்த்தாள் அமுதா.

''அண்ணி டிஃபன் சாப்பிடலாமா?'' என்று வந்த ஸ்மிர்த்தி ''என்ன அண்ணி யாருக்கு இந்த நேரத்துல ஜூஸ் பிழிஞ்சுட்டிருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''ஒரு சின்ன ஹெல்ப் ஸ்மிர்த்தி இந்த ஜூஸக் கொண்டு போய் அஞ்சலிக்குக் குடுத்துட்றயா?'' என்று கேட்டாள் சசிரேகா.

''என்னது அஞ்சலிக்கா? அவங்க வீட்டுக்கு வந்ததுமே என்ன சாப்புட்றீங்கன்னு நீங்க போய் கேட்டதுக்குப் பச்சத் தண்ணிக்குக் கூட வயித்துல இடமில்லேன்னு சொல்லிட்டாங்களே மறந்துட்டீங்களா அண்ணி''

சசிரேகா பாட்டுக்கு ஜூஸைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றிக் கொண்டிருக்க, யதார்த்தமாக சொன்ன தமது மகளின் பேச்சிலிருந்த உண்மை மனதில் படவே செய்தது அமுதாவுக்கு.



''இந்தா'' என்று சசிரேகா டம்ளரை நீட்ட, ''ஓ கொஞ்சம் நிறையவே பேசிட்டாங்கள்ள அதனால இப்ப வயித்துல இடம் இருக்கும்'' என்று வாங்கிக் கொண்டு போனாள் ஸ்மிர்த்தி.

அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் அமுதாவும் அந்த இடத்தை விட்டுச் சென்றிருந்தார்.

# 13

பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.

அதிசயமாக அன்று மாலை ஐந்து மணிக்கே வீட்டிற்கு வந்து விட்டிருந்த கணவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் சசிரேகா.

''கொஞ்சம் மேல வா'' என்று கணவன் தங்களது அறைக்குச் சென்றிருக்க, இரண்டே நிமிடங்களில் அவனுக்கு டீயைக் கலக்கி எடுத்துக் கொண்டு தங்களுடைய அறைக்குச் சென்றாள் சசிரேகா.

''டீ எடுத்துக்கோங்க என்ன இன்னைக்கு அதிசயமா நேரத்துலையே வந்துட்டீங்க?''

''அது சரிதான்'' என்றவன், அங்கிருந்து நகரப்போன மனைவியின் கையைப் பிடித்து அமர வைத்தான்.

''என்னங்க?''

''கொஞ்சம் வெளிய போகணும், கிளம்பி வர்றியா?''

''எங்க?''

''சொன்னாத்தான் வருவியா?''

''நீங்க எங்க கூப்டாலும் வருவேன் ஆனா எங்க போறோம்னு தெரிஞ்சாதான அதுக்குத் தகுந்த மாதிரி டிரஸ் பண்ணிட்டு வர முடியும்.''

''பர்ச்சேஸ்க்கு'' என்ற கணவனிடம் மேலும் விவரம் கேட்கப் போனவள் பிறகு வேண்டாமென்று விட்டு விட்டாள்.

சிறிது நேரத்தில் கிளம்பி வந்த மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பினான் ஷ்யாம்சுந்தர்.

திருமணத்திற்குப் பிறகு முதன் முறையாக மாலை வேளையில் கணவனுடன் வெளியே செல்வது மிகவும் பிடித்திருந்தது சசிரேகாவுக்கு.

கணவனின் கம்பீரமான வலிய கரங்கள் ஸ்டியரிங் கைப் பிடித்திருக்க, செதுக்கியது போன்ற அவனுடைய முகம் அவன் ஏதோ தீவிர யோசனையில் இருப்பதைக் காட்டிக் கொடுத்தது.

ஏதோ கேட்பதற்காகத் தன்னைப் பார்த்து விட்டு மீண்டும் திரும்பிக்கொண்ட மனைவியிடம் ''என்னமா?'' என்று கேட்டான்.

''எனக்கு உங்ககூட வெளிய போறது எவ்வளவு பிடிச்சிருக்கு தெரியுமா? நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?'' என்றவளை ஷ்யாம்சுந்தர் விழுங்குவதைப் போலப் பார்க்க, கணவனுடைய பார்வையில் முகம் சிவந்தாள் சசிரேகா.

''அடடா இத்தனை நாளா எனக்கு இது தெரியாமல் போயிடுச்சே, இனிமேல் பாரு ஐயாவ'' என்ற கணவனின்



பாவனையில் சிரித்தவள், ''ஒரு சின்ன வேண்டுகோள் ஷ்யாம்'' என்றாள்.

''என்னமா?''

''வர்ற வாரம் சன்டே என் ஃப்ரண்ட் கல்யாணத்துக்குப் போகணும். அதான் அவகூட ரெண்டு நாளைக்கு முன்னாடி போன்ல உங்ககூடப் பேசினாளே. இன்விடேஷனும் அனுப்பி வெச்சிருக்கா.''

''தாராளமாப் போலாம்மா, அதுவும் சன்டே தான விடு ஜமாய்ச்சுடலாம்.''

''ரொம்ப தேங்க்ஸ் ஷ்யாம், ஆமா என்ன பர்ச்சேஸ் உங்களுக்கு ஏதாவது வாங்க வேண்டியிருக்கா?''

காரை பார்க் செய்தவன் ''இறங்கி வா சொல்றேன்'' என்று மனைவியோடு தானும் இறங்கினான்.

நேராக அவர்கள் சென்ற இடம் ஒரு பெரிய நகைக் கடை.

''என்ன ஷ்யாம் இங்க எதுக்கு இப்ப வந்திருக்கோம்?''

''நகைக்கடைக்கு எதுக்கு வருவோம் நகை வாங்கத் தான்'' என்ற கணவனின் சிரிப்பில் சில வினாடிகள் தன்னை மறந்து நின்றுவிட்டு பிறகு மீண்டும் நடப்புக்கு வந்தாள்.

''அப்பாடா இப்பத்தான் எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்றவனைப் புரியாமல் பார்த்தாள்.

''என்ன ஷ்யாம், நீங்க சொல்ல வர்றது புரியல''

''இல்ல நாம தான் பொண்டாட்டி மயக்கத்துல இப்பிடித் தலகுப்புறக் கிடக்கறோம், ஆனா அவளுக்

கெல்லாம் நம்மமேல அப்படியேதும் இல்ல போலிருக் குன்னு ரொம்பவும் ஃபீல் பண்ணிட்டிருந்தேன்.''

கணவனின் பாவனையில் நன்றாகவே சிரித்தாள், ''ஆனா இப்ப இருக்குன்னு தெரிஞ்சு போச்சாக்கும்'' என்றாள்.

அதற்குள் பேசிக்கொண்டே உள்ளேயே வந்து விட்டிருந்தவர்ளை நகைக் கடைக்காரர்கள் வரவேற்று அமரச் சொல்லி உபசரித்தார்கள்.

''எனக்கு ரொம்ப வேண்டியவங்களுக்கு நகை ஸெட் ப்ரஸண்ட் பண்ணனும் செலக்ட் பண்ணித் தர முடியு மாம்மா?''

''ஓ ஷ்யூர்'' என்ற சசிரேகா ''ஆனா என் செலக்ஷன் அவங்களுக்குப் பிடிக்குமோ என்னவோ'' என்று சற்றுக் கவலையுடன் கண்வனைப் பார்த்தாள்.

''அந்தக் கவலையே உனக்கு வேண்டாம் அதுக்கான எக்ஸேக்ட் பர்ஸன் நீ மட்டும் தான்.''

''அப்ப சரிதான்'' என்று சந்தோஷமாகச் சொன்ன மனைவியிடம் ''யோசிக்காம ஒரு பத்து ஸெட்ட செலக்ட் பண்ணிடு அதுக்கப்புறம் கடைசியா அதுல ரொம்பப் பிடிச் சத செலக்ட் பண்ணிக்கலாம்'' என்றான் ஷ்யாம்சுந்தர்.

சற்றும் பழக்கமே இல்லாவிட்டாலும் பார்ப்பதற்கு மிகவும் அழகழகான டிஸைன்கள் பலவற்றை அதில் வைர நகைகளும் அடக்கம். கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தில் தேர்ந்தெடுத்து முடித்திருந்தாள் சசிரேகா.

''எல்லாத்தையும் காட்டிட்டோம் மேடம்'' என்று பணிவுடன் கடை ஊழியர்கள் சொல்ல, கணவனைப் பார்த்தாள் சசிரேகா.



''சரி செலக்ட் பண்ணி வெச்ச எல்லாத்தையும் பில் பண்ணிடுங்க'' என்ற கணவனின் வார்த்தைகளில் சற்றே அதிர்ச்சியுடன்'' என்னங்க சொல்றீங்க?'' என்று கேட் டாள்.

''செலக்ட் பண்ணிட்டதுக்கு பில் போட்றோம் அதுல எதுக்கு உனக்கு இவ்வளவு ஆச்சரியம்?'' என்ற கணவன் பணத்தைக் கட்டுவதற்காக எழுந்து சென்றிருக்க, வாயடைத்து நின்று விட்டிருந்தாள் சசிரேகா.

இரவு உணவையும் வெளியிலேயே முடித்துக் கொண்டு கணவனும் மனைவியும் திரும்பி வந்த போது வீட்டினர் அனைவரும் ஹாலில் தான் அமர்ந்திருந்தனர்.

தனது அத்தையும் ஸ்மிர்த்தியும் ஒரே சோஃபாவில் அமர்ந்திருக்க தாங்கள் வாங்கி வந்திருந்த அனைத் தையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு, துணி மாற்றிக் கொண்டு வருகிறேனென்று தங்களது அறைக்குச் சென்றாள் சசிரேகா.

ஸ்மிர்த்தி அனைத்தையும் எடுத்துக் கடை பரப்பி யிருக்க, ''என்ன பர்ச்சேஸ் ரொம்ப பலமா இருக்கு போலி ருக்கு'' என்று தானும் வந்து இணைந்து கொண்டாள் இந்துமதி.

''என்னப்பா திடீர்னு இவ்வளவு நகைகள வாங்கிக் குடுத்து அசத்தியிருக்க, என்ன விஷயம்'' என்று புன் னகையுடன் மகனைப் பார்த்தாள் அமுதா.

''வாவ் எல்லாமே சூப்பர்ப் அண்ணா, இதெல்லாம் அண்ணியோட செலக்ஷன் தான?'' என்ற ஸ்மிர்த்தி, ''முதல்ல அம்மா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க'' என்றாள்.

''ம் நீயெல்லாம் இந்த அளவுக்குப் பேச ஆரம்பிச்சுட்ட, உனக்கும் இனி கல்யாணத்தப் பண்ணனுமே அதான் எதுக்கும் இருக்கட்டுமேன்னு எடுத்தோம்'' என்ற அண்ணனை விளையாட்டுக்கு முறைத்தாள் ஸ்மிர்த்தி.

''நோ நோ, என் கல்யாணத்துக்கு எனக்கு வேண்டிய தெல்லாத்தையும் நானே போய் எனக்குப் பிடிச்ச மாதிரி பாத்துப்பாத்து செலக்ட் பண்ணுவேனாக்கும்.''

''அப்பக் கல்யாணம் பண்ணிக்க ரெடியா இருக்கேன்னு சொல்லு.''

''பாருங்க மம்மி இந்த அண்ணாவ'' என்று சிணுங்கியவள், அந்த நேரமாகப் பார்த்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்த சசிரேகாவைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏன் அண்ணி இதெல்லாம் உங்களுக்கே கொஞ்சம் அநியாயமா இல்ல.''

அப்படிக்கேட்ட தனது நாத்தனாரைப் புரியாமல் பார்த்தாள் அவள்.

''உங்கமேல எவ்வளவு அன்பு இருந்தா அண்ணா உங்களுக்காக இவ்வளவையும் வாங்கிக் குடுத்திருப்பார், ஆமா இதுக்கெல்லாம் சேத்து நீங்க அண்ணாவுக்கு என்ன தரப் போறீங்க?''

அது சரிதானே என்பதைப் போல தனக்குள் யோசித்தவளாக சசிரேகா சற்றே திரும்பிக் கணவனைப் பார்க்க, அவனும் புன்னகையுடன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அங்கிருக்கும் அனைவருமே தங்களையே பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிய.



''சரி எல்லாருக்கும் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வா'' என்று மனைவியிடம் சொன்னவன், தங்கையிடம் ''சரி போதும் வாயாடி'' என்றான்.

''ஷ்யாம் அந்த வரதராஜன் ஸாரோட பையனப்பத்தி விசாரிக்கணும்னு சொல்லிட்டிருந்தோமே'' என்று கிருபாகரன் மகனைப் பார்க்க, ''ஆமாம்பா இது வரைக்கும் ஒரு மூணு பேர்கிட்ட விசாரிச்சிருக்கேன் எல்லாருமே பிரமாதமாத்தான் சொல்றாங்க'' என்றான் அவன்.

''அது சரிதான் எனக்கும் தெரிஞ்ச வரைக்கும் அந்த ஃபேமிலில எல்லாருமே ரொம்ப நல்ல டைப் தான்'' என்று அந்த வீட்டின் மூத்த மகனான ராஜ் பிரபாகரும் வர அதற்குப் பிறகு பேச்சு வேறு திசையில் செல்ல ஆரம்பித்தது.

வெகுநேரம் வீட்டினருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் தூங்க வந்த ஷ்யாம்சுந்தர், தாங்கள் வாங்கி வந்திருந்த நகைகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தான்.

''என்னம்மா எல்லாம் எப்பிடியிருக்கு?''

''ரொம்ப நல்லார்க்கு, ஆமா எதுக்கு ஷ்யாம் அப்பிடி செஞ்சீங்க?''

''எப்பிடி?''

''இவ்வளவு நகைகல ஓரே நாள்ள எதுக்கு வாங்கணும்?''

''தினமும் உன்ன அழைச்சுட்டுப் போய் ஒவ்வொன்னா வாங்கிட்டிருக்க எனக்கும் ஆச தான் ஆனா வேலய விட்டுட்டு வந்துட்டிருக்க முடியாதேம்மா.''

''நான் அதக் கேக்கல எல்லாத்தையும் ஒன்னாவா போடப் போறேன், எதுக்கு ஒரேயடியா இப்பிடி எல்லாத் தையும் வாங்கணும்னு கேக்கறேன்.''

''ஏம்மா டிஸைன் ஏதாவது பிடிக்காமப் போயிடுச்சா?''

கணவன் வேண்டுமென்றே விளையாடுவது புரிய அதற்கு மேல் எதுவும் பேசாமல் அனைத்தையும் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

''என்ன இவ்வளவு கேக்கற? ஆனா நீ மட்டும் கேக்கற கேள்விக்கு பதில் சொல்ல மாட்ட.''

''நானென்ன....'' என்ற மனைவியைப் பார்த்து சிரித்தவன், ''ஸ்மிர்த்தி கேட்ட கேள்விக்கு பதில் சொல் லாம நழுவிட்ட தான'' என்றான்.

எதுவும் பேசாமல் அங்கிருந்து நகர்ந்த மனைவியைப் பிடித்து அருகில் இழுத்தான் ஷ்யாம்சுந்தர்.

''ம் சொல்லு.''

''என்ன இருந்தாலும் நீங்க எங்கிட்டப் பொய் சொல்லி யிருக்கக் கூடாது.''

''நானா?''

''ம், எதுக்கு யாருக்கோ எடுக்கற மாதிரி சொல்லி என்ன நகைகளை செலக்ட் பண்ண வெச்சீங்க?''

''ஓ உனக்குன்னு தெரிஞ்சிருந்தா இன்னும் கொஞ்சம் கனமா இன்னொரு நாலு செட் சேத்தே செலக்ட் பண்ணியிருப்பயாக்கும்?'' என்ற கணவனின் கேலியில் சிரிப்பு வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு ''அதனால நான் உங்ககூடப் பேச மாட்டேன்'' என்றாள்.

''எவ்வளவு நேரத்துக்கு?''



''இனி எப்பவுமே.''

''ஓஹோ, சரி அத விடு. ஆமா ரெண்டு நாளா எங் கிட்ட என்ன சொல்லணும்னு ட்ரை பண்ணிட்டிருக்க?''

''ஷ்யாம்......''

''ம் சொல்லு''

கணவனின் அருகில் வந்து நன்றாக நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தாள் சசிரேகா.

''என்னமா?''

தன்னுடைய கையை எடுத்து அவளது வயிற்றில் வைத்துக் கொண்டு தன்னைப் பார்த்த மனைவியைக் குனிந்து பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

புரியாமல் சில வினாடிகள் தான் பார்த்திருப்பான் உடனே ''சசி'' என்றான்.

''என்னடா சொல்ல வர்ற?'' என்று மனைவியை மேலும் அருகில் இழுத்து அவளது முகத்தைப் பார்த்தான்.

''ஆமா ஷ்யாம், நானும் உங்களுக்குப் பரிசு தரப் போறேன்.''

''சசி......''

தனது மார்பில் முகம் புதைத்துக் கொண்ட மனை வியை ஒரு இனம் புரியாத சந்தோஷத்துடன் மிருதுவாக அணைத்துக் கொண்டான் ஷ்யாம்சுந்தர்.

''என்னடா இவ்வளவு சந்தோஷமான விஷயத்த இவ்வளவு சிம்பிளா சொல்ற?''

தன்னை நிமிர்ந்து பார்த்த மனைவியின் முகத்தில் தெரிந்த வேதனை அவனை என்னவோ செய்ய, ''என் னம்மா?'' என்று கேட்டான்.

''ஒரு விதத்துல நான் ரொம்பவும் துரதிர்ஷ்டசாலி ஷ்யாம்.''

''ஏன்டா அப்பிடி சொல்ற?''

''கடவுள் ஒரு சொந்தத்தப் பிடுங்கிட்டு தான இன்னொரு சொந்தத்தக் குடுத்திருக்கார், அம்மா மட்டும் இருந்திருந்தா இதக்கேட்டு எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாங்க தெரியுமா?''

''நல்லது, கெட்டது எதுவும் இல்லாம என் சந்தோஷமே அவங்க சந்தோஷம்னு எனக்காகவே வாழ்ந்துட்டு, இப்பப் போயும் சேந்துட்டாங்க. அவங்கள எப்பிடியெல்லாம் வெச்சுக்கணும்னு ஆசப்பட்டேன் தெரியுமா?''

மனைவி வேதனைப்படுவது மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும், மனதில் இருப்பதை வெளியே கொட்டி விட்டால் மன பாரமாவது சற்று குறையுமென்று பேசாமல் இருந்தான் ஷ்யாம்சுந்தர்.

மேலும் சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டவள், ''ஸாரி ஷ்யாம்'' என்றாள்.

''என்னடா எதுக்கு?''

''இந்த நேரத்துல எதையெதையோ சொல்லி உங்க மனசையும் கஷ்டப்படுத்திட்டேன்.''

''அதெல்லாம் இல்லமா, உன்மனசுல இருக்கறத நீயும் தான் வேற யார்கிட்ட சொல்லுவ? ரொம்பவும் மனசப் போட்டுக் குழப்பிக்காத, பாரு கல்யாணத்தப்ப இருந்ததுக்கு இப்ப ஆளே பாதியாயிட்ட.''

''இல்ல ஷ்யாம் நடந்து போனத நினைச்சுக் கவலப்பட்றதுல என்ன பலனிருக்குன்னு இப்பவெல்லாம் நான் எதயும் நினைக்கறது கூடக் கிடையாது. இப்ப என்னவோ திடீர்னு அம்மா ஞாபகம் வந்துடுச்சு.''



''சசி எவ்வளவு சந்தோஷமான விஷயத்த சொல்லியிருக்க தெரியுமாடா, அம்மாவும் அப்பாவும் இது தெரிஞ்சா எவ்வளவு சந்தோஷப்படுவாங்க தெரியுமா? இல்ல அவங்களுக்குத் தெரியுமா?''

''ம்கூம், உங்ககிட்ட தான் முதல்ல சொல்லணும்னு வேற யார்கிட்டயும் இன்னும் சொல்லல.''

வெட்கத்தில் சிவந்து போன மனைவியை அருகில் இழுத்து ஷ்யாம்சுந்தர் முத்தமழை பொழிய, மேலும் செல்லமாய்க் கணவனை ஒட்டிக்கொண்டு அவனது கழுத்தில் மாலையாகத் தொங்கினாள் சசிரேகா.

# 14

அன்று மதியம் வரை வேலையே சரியாக இருந்தது சசிரேகாவுக்கு.

அவளுடைய அத்தை அமுதாவும் ஸ்மிர்த்தியும் ஊரில் ஏதோ ஒரு விஷேசமென்று அதிகாலையிலேயே கிளம்பிச் சென்றிருக்க, ஆண்கள் வழக்கம் போல கம்பெனிக்குச் சென்றிருந்தார்கள்.

''என்னம்மா இப்ப வரவர எல்லா வேலைகளையும் நீங்களே செய்ய ஆரம்பிச்சுட்டிங்களே.''

''எல்லா வேலையுமா? அப்ப நீங்கெல்லாம் சும்மாவா இருக்கீங்க'' என்று சிரித்த சசிரேகா, ''சரி முத்தையா நான் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன்'' என்றாள்.

''போங்கம்மா பார்க்கவே ரொம்ப அசதியாத் தெரிய றீங்க.''

சரிதான் சில நாட்களாகத் தன்னுடைய உடலில் தெரியும் மாற்றங்கள் தனக்கே புதுமையாகத் தான் இருக்கிறது.

எந்நேரமும் நாடி நரம்பெல்லாம் ஒருவித சந்தோஷமும் பரபரப்பும், தான் பெண்ணாகப் பிறவி எடுத்ததற்கே பலன் கிடைத்து விட்டாற்போல, அப்பப்பா இதுதான் தாய்மை உணர்ச்சியா!

தன்னுடைய அறைக்குச் செல்வதற்காகத் திரும்பிய சசிரேகா, தன்னை யாரோ அழைத்ததில் நின்று திரும்பிப் பார்த்தாள்.

''வாங்க அஞ்சலி.''

''என்ன ரொம்ப பிஸி போலிருக்கு? நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே வயசு தான் நீயும் என்ன வா போன்னே கூப்புடு.''

''சரிதான், வா அஞ்சலி உக்காரு.''

''ம் கரெக்ட், இப்பதான் ஒரு ஃப்ரண்ட்லியான ஃபீலே வருது.'' என்று சோஃபாவில் சென்று அமர்ந்தாள் அஞ்சலி.

''லஞ்ச் சாப்பிடு வா அஞ்சலி.''

''நான் சாப்டாச்சு சசி'' என்று சொல்லிக்கொண்டே, தனது ஹேன்ட் பேக்கை அங்கிருந்த டிபாயின் மேல் வைத்தாள்.



''சசி நீ உன் ரூமுக்குப் போகப் போனியே, நீ வேணும்னாப் போ நான் கொஞ்ச நேரம் இருந்துட்டுக் கிளம்பறேன்.''

''வேல எதுவுமில்ல பேசவும் யாருமில்லன்னு தான் போகப் போனேன். இரு உனக்குக் குடிக்கவாவது ஏதாவது கொண்டு வர்றேன் 'என்று திரும்பிய சசிரேகாவைத் தடுத்தாள் அஞ்சலி.

''எனக்கு இப்ப எதுவும் வேண்டாம், சொன்னாக் கேளு.''

''சரி தண்ணியாவது எடுத்துட்டு வர்றேன்.''

''நோ ஃபார்மாலிட்டிஸ், கொஞ்சம் உக்காரேன் நம்ம ரெண்ட பேரும் மனசு விட்டுப் பேசிக்கிட்டதே கிடையாது.''

''சரிதான்'' என்று புன்னகையுடன் அமர்ந்த சசிரேகா, அஞ்சலியின் கையிலிருக்கும் ஆல்பங்களைப் பார்த்து விட்டு ''என்ன போட்டோஸ் போலிருக்கு'' என்று கேட்டாள்.

கைப்பையில் மும்முரமாக எதையோ தேடிக் கொண்டிருந்தவள் அதாவது அப்படிக் காட்டிக் கொண்டவள், ''என்னவோ கேட்ட மாதிரியிருந்தது'' என்று சசிரேகாவைப் பார்த்தாள்.

''இல்ல கைல ஆல்பம் வைச்சிருக்கையேன்னு கேட்டேன்.''

''ஆமா பாக்கறியா?'' என்று கேட்டுக்கொண்டே தனது கையிலிருக்கும் ஆல்பங்களை சசிரேகாவிடம் கொடுத்தாள் அஞ்சலி.

''இத்தனநாளா என் ஃப்ரண்ட் வீட்ல இருந்தது, இன்னைக்கு தான் ஞாபகமா எடுத்துட்டுப் போன்னு குடுத்தா.''

சசிரேகா போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருக்க, அதில் இருப்பவர்களைப் பெயர் சொல்லி விவரம் சொன்னாள் அஞ்சலி.

கூடவே அவள் வெளிநாடு சென்றிருந்த போது எடுத்த போட்டோக்கள் அக்கா, மாமா, அவர்களின் குழந்தை எனப் பெருமையாக சொல்வதற்கு அஞ்சலிக்கு விஷயங்கள் நிறைய இருந்தன.

சசிரேகா சற்று ஆர்வத்துடன் கேட்பது தெரிய மேலும் சந்தோஷமாக அனைத்தையும் விளக்கினாள்.

சிறிது நேரத்தில் அனைத்துப் போட்டோக்களையும் பார்த்து முடித்துவிட்டு சசிரேகா ஆல்பங்களைத் தர, அவற்றை எடுத்து உள்ளே வைக்கப் போனாள் அஞ்சலி.

அப்பொழுதுதான் ஆல்பத்தில் போடப்படாமல் நிறைய போட்டோக்கள் இருப்பதையும், அதைத் தான் பார்க்காமல் கொடுத்து விட்டதையும் கவனித்தாள் சசி ரேகா.

''ஒரு நிமிஷம் அதுல கொஞ்சம் போட்டோஸப் பாக் காமலே குடுத்துட்டேன்'' என்று சசிரேகா அஞ்சலியின் கையிலிருக்கும் ஆல்பத்தை வாங்க வர, அதே நேரம் பார்த்து அஞ்சலியின் கையிலிருந்த ஆல்பம் கை தவறி நழுவியது.

''அச்சச்சோ ஸாரி'' என்று சசிரேகா கீழே குனிந்து அனைத்தையும் எடுக்கப் போக, அவளது முதுகைப் பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்தாள் அஞ்சலி.

அஞ்சலி எதிர்பார்த்தது போலவே கீழே சிதறித் கிடக்கும் போட்டோக்களை சேகரித்துக் கொண்டிருந்த சசிரேகா அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தாள்.



ஏனென்றால் அந்தப் போட்டோக்களில் இருந்தது அஞ்சலியும் ஷ்யாம்சுந்தரும்.

அதுவும் ஒருவரையொருவர் அணைத்துக் கொள்வது போல, ஒருவர் மடியில் ஒருவர் அமர்ந்திருப்பது போல என இன்னும் எத்தனையோ நெருக்கமான போஸ்களில்,

ஒரு வழியாக அனைத்தையும் சேகரித்துக் கொண்ட சசிரேகா நிமிர்ந்திருக்க, அப்பொழுது தான் அந்த போட்டோக்களைத் தான் பார்ப்பது போல பதறினாள் அஞ்சலி.

''ஓ வெரி ஸாரி, இந்த போட்டோஸ்....''

அஞ்சலியின் தயக்கமும் பதற்றமும் சசிரேகாவின் கண்களில் படத் தவறவில்லை.

''இருந்திருந்து இதப் போய் நீ பாக்க வேண்டிய தாயிடுச்சே'' என்று மிகவும் வருத்தம் போலக் காட்டிக் கொண்டவள், ''ஸாரி'' என்று சசிரேகாவின் கையி லிருந்த போட்டோக்களை வாங்கிக் கொண்டாள்.

அதிர்ச்சியிலிருந்து முழுமையாக மீண்டிருக்காத சசிரேகா, அப்பொழுது அஞ்சலியிடம் எதையும் கேட்கும் மனநிலையில் இருக்கவில்லை.

சில வினாடிகள் பொறுத்துப் பார்த்து விட்டுப் பிறகு தானே அந்தப் பேச்சை ஆரம்பித்தாள் அஞ்சலி.

அதாவது தான் நினைத்தது நடக்க ஆரம்பித்திருக்க, அதை முழுமையாக்கும் வேலையைச் செய்ய ஆரம்பித் தாள்.

''ஸாரி சசி.''

அப்பொழுது தான் சற்று நடப்புக்கு வந்திருந்த சசிரேகா "ம் என்ன?" என்று கேட்டாள்.

"இல்ல ரொம்பவும் ஸாரி."

"ஏன்?"

"இருந்திருந்து இந்த போட்டோஸப் போய் நீ பாக்க வேண்டியதாயிடுச்சே, அதுவும் இத நீதான் கண்டிப்பாய் பாத்திருக்கவே கூடாது."

............

"சரி உங்கிட்ட சொல்றதுக்கென்ன நாங்க ஃபாரின் போறதுக்கு முன்னாடி, அதாவது உங்க கல்யாணத்துக்கு மூனு மாசத்துக்கு முன்னாடி வரைக்கும் நானும் ஷ்யாமும் எப்பிடியெல்லாம் இருந்தோம் தெரியுமா?"

"கிட்டத்தட்ட புருஷன் பொண்டாட்டி மாதிரி" என்றவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் சசிரேகா.

அவளது முகத்தில் தெரிந்த வேதனை, அதாவது இருப்பதைக் கொஞ்சம் குறைத்துக் காட்டும் அஞ்சலியின் முயற்சி சசிரேகாவுக்குப் புரிந்ததில், அவள் மேல் மனம் பரிதாபப்பட்டது.

"வேண்டாம் சசி, அதெல்லாம் இப்ப வேண்டாம். தேவையில்லாம உன் மனசு கஷ்டப்படும்."

"புரியுது அஞ்சலி ஒரு விதத்துல பாத்தா நீயும் ரொம்பப் பாவம் தான்."

சசிரேகா உணர்ந்து சொல்ல அஞ்சலியின் மனம் குதியாட்டம் போட்டது.

தான் வீசிய கல் முதல் குறியிலேயே மாங்காயை வீழ்த்திவிடுமென்று உண்மையிலேயே அஞ்சலி நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.



தினமும் குறிபார்த்துக் கல் வீசி முயற்சி செய்து பார்க்கலாம் என்றாவது ஒருநாள் பலன் கிட்டாமலா போய் விடும் என்றுதான் மனக்கணக்கு போட்டிருந்தாள் அஞ்சலி,

ஆனால் அது கனவிலும் எதிர்பார்த்திருக்காத விதமாக மிகப்பெரிய பலனை அள்ளிக் கொடுத்திருக்க, அதை அப்பொழுதே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடிவு செய்தாள்.

"அந்த அளவுக்குப் பழகிட்டு அந்தப் பழக்கத்த மறந்துட முடியும்னு நினைக்கறியா?"

அதற்குப் பதில் சொல்லாமல் மேலும் அஞ்சலி என்ன சொல்லப் போகிறாளே என்பதைப் போல உயிரைக் கையில் பிடித்துக்கொண்ட அவளது முகத்தைப் பார்த்தாள் சசிரேகா.

"நான் நேச்சுரலாவே கொஞ்சம் போல்ட் டைப், சரி நமக்குக் குடுத்து வெச்சது அவ்வளவுதான்னு மனசத் தேத்திக்கிட்டேன். ஆனா......."

..........

சசிரேகாவின் பார்வையில் மேலும் தீவிரமாக அனைத்தையும் சொல்ல ஆரம்பித்தாள் அஞ்சலி, அதாவது தான் ஜோடித்தவை அனைத்தையும்,

"ஷ்யாம்னால தான் என்ன மறக்கவே முடியல. இப்பவும் எப்படியும் வாரத்துக்கு நாலு முறையாவது பாத்துக்கலன்னா எங்களால முக்கியமா அவரால சுத்தமா முடியாது. எங்க சந்திப்பு எப்பவும் உங்க கம்பெனியில வெச்சு தான். அட்லீஸ்ட் என்ன சும்மா பாத்துக்கறத

மட்டுமாவது அவர் உங்கிட்ட சொல்லுவார்னு தான் நினைக்கிறேன்.''

இல்லையே, ஒருமுறை கூடக் கணவன் இதைப் பற்றித் தன்னிடம் சொன்னதே இல்லையே. இதி லிருந்தே அவனுடைய கள்ளத்தனம் தெளிவாகிறதல் லவா?

சசிரேகாவின் தீவிர யோசனையில் உள்ளம்.. துள்ள, தான் ஆரம்பித்திருந்த வேலையை செவ்வனே தொடர்ந் தாள் அஞ்சலி.

''எங்கிட்டேயும் எல்லாத்தையும் சொல்லிடுவார் சசிரேகா, ஈவன் நீ இப்ப என்ன நிலமைல இருக்கேங் கறதக் கூட.''

என்ன நிலைமையென்றால்... என்று சசிரேகா தனக் குள் யோசித்துக் கொண்டிருக்க, ''நீ விஷேச....'' என்று அஞ்சலி பேச ஆரம்பிப்பதற்குள் அவளைத் தடுத்து விட்டிருந்தாள் சசிரேகா.

''போதும் அஞ்சலி போதும். இந்த அளவுக்கு அவர் எல்லாத்தையுமே உங்கிட்ட சொல்லியிருக்கும் போது இன்னும் நான் அதையெல்லாம் நம்பாத மாதிரியோ கண் டுக்காத மாதிரியோ இருந்தா அது என்னோட ரொம்பப் பெரிய முட்டாள்தனம்.''

எந்த அளவுக்கு? இப்பொழுது நாம் என்ன சொன் னோம் என்று புரியாமல் தனக்குத்தானே யோசித்ததில் தான் விஷயமே புரிந்தது அஞ்சலிக்கு.

இன்னும் ஒரு குழந்தையையும் நீ வயிற்றில் சுமக்க ஆரம்பித்து விட்டாயானால் அப்புறம் உனக்கு எந்தக்



காலத்திற்கும் விடிவு காலமே இல்லாமல் போய்விடும், அதனால் அதற்கு முன்னரே சுதாரித்துக் கொள்ளென்று சொல்லத்தான் அஞ்சலி வாயைத் திறந்தது.

ஆனால் பழம் நழுவிப் பாலிலேயே விழுந்து விட்டது போல சசிரேகா தனது வாயாலேயே தான் தாயாகப் போவதை சொல்லிவிட, அந்த வழியில் செல்ல ஆரம்பித் தாள் அஞ்சலி.

''குழந்த விஷயத்த அவர் எங்கிட்ட சொன்னதுக்கு நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா? சரி இனி ஒரு குழந்தைக்கு முன் மாதிரியா வாழ்ந்து காட் டணுங்கறதால அதுக்காகவாவது இனிமேல் அவர் மாறிடுவார்னு ரொம்பவும் எதிர்பாத்துட்டிருக்கேன் சசி.''

''இப்படி என்ன வாழவும் விடாம சாகவும் விடாம ஏன் என்னக் கொல்றீங்க, இப்படியே போனா எப்பிடி. இத நான் சசிகிட்டயாவது சொல்லி, நியாயம் கேக்கத்தான் போறேன்னு சொன்னதுக்குக் கண்டிப்பா சொல்லவே கூடாதுன்னு சொல்லிட்டார்.''

''இப்ப இதையெல்லாம் நான்தான் உங்கிட்ட சொன்னேன்னு அவருக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்.''

''அதுக்காக நீ அவர்கிட்ட எதயும் கேக்காமலும் விட் டுட முடியாது. ஒன்ன செய்யறியா சசி. என்னப் பேச்சுக் குள்ள இழுக்காம நீயாக் கேக்கற மாதிரி கேட்டுக்கறியா? இல்லன்னா அதுக்கும் எம்மேல தான் கோபப்படுவார்.''

பாவம் அஞ்சலி, அன்பு வைத்துவிட்டு அவதிப்படு கிறாள்.

இப்பொழுது தான் எப்படி அது போல.

ஆனால் இப்படி இருவர் வாழ்க்கையிலும் விளையாடும் தனது கணவனுக்குக் குற்ற மனப்பான்மை சிறிது கூட இருப்பது போலத் தெரியவில்லையே.

இருந்திருந்து எப்படி அப்படியொரு முகத்தை வைத்துக் கொண்டு.....

அதற்காகத் தானே அதாவது பின்னால் பிரச்சனை வருமென்று தெரிந்திருப்பதால் தானே எதற்கும் வழியில்லாத தன்னைப் போன்ற ஒருத்தியை வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

சரி, அதற்காகத் தன்மானமும் ரோஷமும் கூடவா இல்லாது போய்விடும்.

ஒரு புழு கூடத் தன்னைத் துன்புறுத்துபவர்களை எதிர்த்துத் தடுக்க வருகிறது, நான் அந்த அளவிற்குக் கூட இருக்க மாட்டேனென்று நினைத்துக் கொண்டானே.

''ஷ்யாம் எப்பக் கூப்புடுவாரோ என்ன சொல்லிடுவாரோன்னு ஒவ்வொரு நிமிஷமும் நான் பயந்துட்டுத் தான் இருக்கேன். அவருக்கு வேணும்னா இது சாதாரணமா ஏன் பெருமையாக் கூட இருக்கலாம், ஆனா ஒரு அப்பாவிப் பொண்ணோட வாழ்க்கைல விளையாட எனக்கு மனசாட்சி உறுத்துது சசி.''

''அதக்கூட நான் அவருகிட்டக் கேட்டுப் பாத்துட்டேன். ஆனா அவர்......''

என்ன என்பதைப் போல சசிரேகா தன்னைப் பார்க்க, ''சரி எல்லாத்தையும் சொன்னாத்தான உனக்கும் புரியும்.'' என்று மீண்டும் சொல்ல ஆரம்பித்தாள்.

- அதாவது கூடைகூடையாக எரிநெருப்பை பத் த( )ல யில் வாரிக் கொட்டினாள்.



''நானென்ன அப்படி துரோகம் பண்ணிட்டேன் அவளுக்கு? என் ஸ்டேட்டஸ்க்கு நான் அவளக் கல்யாணமே பண்ணிக்கிட்டதோட இல்லாம எவ்வளவு சந்தோஷமா அவள வைச்சுட்டிருக்கேன் தெரியுமான்னு கேக்கறார்.''

''புடவை, நகைகன்னு எவ்வளவோ வாங்கிக் குடுத்துட்டிருக்கேங்கறார். ஆமா நேத்து கூட உன்ன அழைச்சுட்டுப் பர்ச்சேஸ் போகணுங்கறதால கம்பெனியிலிருந்து நேரத்துலயே கிளம்பி வந்திருந்திருக்கேன்னார் அப்படியா?''

அஞ்சலி சொல்லிக்கொண்டே போகப்போக, சசிரேகாவின் உள்ளம் தண்ணீரிலிருந்து தூக்கி எறியப்பட்ட மீன் குஞ்சைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது.

அதை அப்படியே வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் முகத்தை சாதாரணமாக வைத்துக் கொள்ள மிகவும் முயன்று ஓரளவு சமாளித்துக் கொண்டாள்.

தனது மொபைலுக்கு அழைப்பு வர பார்த்தாயா என்பதைப் போல சசிரேகாவைப் பார்த்துவிட்டு அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

''ம்..சொல்லுங்க.''

.........

''ஆமா ஷ்யாம்.''

.........

''இன்னைக்கேவா? சரி எத்தன மணிக்கு?'' என்று கேட்டவள் மேலும் சில விநாடிகள் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனை வைத்தாள்.

ஏதோ யோசனையில் இருப்பதைப் போலக் காட்டிக் கொண்ட அஞ்சலி, மேலும் சில வினாடிகள் கழித்தே சசிரேகாவைப் பார்த்தாள்.

''பாரு, இப்பக் கொஞ்சம் முன்னாடி தான நான் சொல் லிட்டிருந்தேன்.''

.........

''சரி சசி நானும் எம்மனசுல இருக்கறதெல்லாத் தையும் கொட்டிட்டேன், இனிமேலும் சொல்றதுக்கு எங்கிட்ட வார்த்தைகளே இல்ல. எதுவா இருந்தாலும் மனசப்போட்டுக் குழப்பிக்காம பொறுமையா யோசிச்சு நல்ல முடிவா எடு நான் கிளம்பறேன்.''

...........

சிரமப்பட்டு நடப்புக்கு வந்த சசிரேகா, அஞ்சலியைப் பார்த்தாள்.

''கிளம்பறேன் சசி.''

''வந்து எதுவுமே குடிக்கக் கூட இல்லையே அஞ்சலி, இரு ஏதாவது எடுத்துட்டு வர்றேன்.''

''வேண்டாம் சசி, காலைல வீட்லிருந்த கிளம்பினது. அம்மாவும் அப்பாவும் பாத்துட்டிருப்பாங்க.'' என்று அஞ்சலி கிளம்பியே விட்டிருக்க, அப்படியே சோஃபா வில் சாய்ந்து கண்களை மூடி அமர்ந்து விட்டிருந்தாள் சசிரேகா.

தலைவலி விண்விண்னென்று தெறிக்க ஆரம்பித் திருக்க கண்ணெதிரே நீண்டு விரிந்திருந்த எதிர்காலம் கும்மிருட்டாய் நெஞ்சை நடுங்க வைத்தது.



கடவுளே யாருக்கு என்ன பாவம் செய்தேன் என்னை ஏன் இப்படியெல்லாம் சோதிக்கிறாய் என்று மனம் மட்டும் ஊமையாய் அழுது கொண்டிருந்தது.

ஆரம்பத்திலிருந்து நடந்த ஒவ்வொன்றும் கோர்வை யாய் நினைவுக்கு வந்தன, சந்தேகமே இல்லை கணவன் தன்னை வெகு கச்சிதமாய் ஏமாற்றிக் கொண்டிருக் கிறான்.

அவன் அருகில் வந்து விட்டாலே தான் சுற்றி இருக் கும் உலகையே மறந்து விடுவது நினைவுக்கு வந்தது.

இத்தனை நாள் சரி, ஆனால் இனிமேலும் கணவன் அருகில் வந்தால் அவனைத் தடுக்கும் சக்தி தனக்கு இருக்கிறதா என்று நினைத்ததில் ஒரு இனம்புரியாத பயம் வந்து அவளைப் பற்றிக் கொண்டது.

உன்னதமான அன்பை அவனால் எப்படிக் கொச்சைப் படுத்த முடிந்தது.

அதிலும் அஞ்சலியை தினமும் சந்திப்பதைப் பற்றி அவன் தன்னிடம் ஒருமுறை கூட சொன்னதே இல் லையே, மனதில் கள்ளத்தனம் இருக்கவில்லையென் றால் எதற்காக மறைக்க வேண்டும்.

மேலும் அன்று கோவிலில் வைத்து நடந்தது தான் நினைவுக்கு வந்தது சசிரேகாவுக்கு, தான் ஏதோ சொன்ன தற்கும் 'கிளம்பு ஆனால் திரும்பி வர வேண்டாம்' என் றானே.

கடவுளே அப்பொழுது மிகவும் சகிக்க முடியாது போய் விட்டால், கிளம்பிச் சென்றுவிட ஒரு போக்கிடமாவது இருந்ததே, ஆனால் இனி?

அதுவும் நகை, துணியெல்லாம் வாங்கிக் கொடுத்து சந்தோஷமாக வைத்துக் கொண்டிருக்கிறானாமே.

அவன் வாங்கிக் கொடுத்தவற்றைத் தொட்டுத் தொட்டு ரசித்துப் பார்த்த தனது முட்டாள்தனத்தை என்னவென்று சொல்வது, அதைப்பார்த்து மனதிற்குள் எப்படியெல்லாம் சிரித்திருப்பான்.

எப்பொழுது தான் தாயாகப் போகும் விஷயத்தைக் கூட சொல்லுமளவிற்கு அஞ்சலியிடம் நெருக்கம் இருக்கிறதோ, இனி அதற்குமேல் யோசிக்க எதுவுமே இல்லை.

எவ்வளவு நேரமாக அப்படி அமர்ந்திருந்தாளோ ''அண்ணி'' என்ற ஸ்மிர்த்தியின் அழைப்பில் தான் நடப்புக்கு வந்தாள் சசிரேகா.

''என்ன அண்ணி அப்படி பயங்கரமான யோசனை?''

''வா ஸ்மிர்த்தி.''

''நீ இங்கதான் இருக்கியா?'' என்று அவளைத் தொடர்ந்து தனது அத்தையும் உள்ளே வர, இருக்கையி லிருந்து எழுந்து கொண்டாள் சசிரேகா.

''ஏன் அண்ணி உக்காருங்க'' என்ற ஸ்மிர்த்தி ''கச கசன்னு இருக்கு நான் போய் குளிக்கப் போறேன்'' என்று சென்று விட்டிருந்தாள்.

''லஞ்ச் எடுத்து வைக்கட்டுமா அத்தெ.''

''சரியாப் போச்சு, மணி பாத்தியா நாலாகப் போகுது.''

''எனக்கு ஒரு கப் காஃபி வேணும்னா எடுத்துட்டு வா'' என்று அவர் தன்னுடைய அறைக்குச் செல்ல, ''இதோ எடுத்துட்டு வர்றேன் அத்தெ'' என்று கிச்சனுக் குப் போனாள் சசிரேகா.



சில நிமிடங்களில் காஃபியைக் கலக்கி எடுத்துக் கொண்டவள், தனது அத்தைக்குக் கொடுப்பதற்காகச் சென்றாள்.

''காஃபி எடுத்துக்கோங்க அத்தெ.''

முகம் கழுவித் துடைத்துக் கொண்டே வந்தவர், ''ம் அப்படி வை'' என்றார்.

சில வினாடிகளில் அவர் வந்து காஃபியை எடுத்துக் கொள்ள, அங்கிருந்து நகர்ந்தாள் சசிரேகா.

''கொஞ்சம் இருமா, உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்னு தான் கூப்டேன்.''

தனது அத்தையின் வார்த்தையில் நின்றவள், திரும்பி அவரது முகத்தைப் பார்த்தாள்.

''உக்காரு.''

''பரவாயில்ல அத்தெ சொல்லுங்க.''

''ஏன் பாக்க ஒரு மாதிரியிருக்க?''

''அதெல்லாம் இல்லையே'' என்று அவசரமாக மறுத்தவளைப் பார்த்து சிரித்தார்.

''இல்லையா? காலைல பாக்கும் போதே டல்லாத் தான் தெரிஞ்ச, சரியாயிடும்னு பாத்தா இப்ப ரொம்பவும் ஒரு மாதிரியிருக்க. சொல்லு என்னாச்சு?''

.........

''என்னம்மா பேசு.''

''கொஞ்சம் ஒரு மாதிரிதான் இருக்கு.''

''அதான் ஏன்?''

''நீங்களே கேக்கலேன்னாக் கூட இன்னைக்கு உங்க கிட்ட சொல்லணும்னு தான் இருந்தேன், நான் டாக்டர் கிட்டப் போகணும் அத்தெ.''

''என்னமா, உடம்புக்கு என்ன பண்ணுது?''

சற்றே தயங்கியவள் ''ஒரே தலசுத்தலும் வாந்தியுமா இருக்கு. அதோட நாளும் தள்ளிப் போயிருக்கு அதான்'' என்றாள்.

''நிஜமாவா! இவ்வளவு சந்தோஷமான விஷயத்த ஏன் இப்படி டல்லா சொல்ற?'' என்றவர், ''அட நான் ஒன்னு அந்த அளவுக்குப் பாவம் உன்னால முடியல இல்லையாம்மா'' என்று கேட்டார்.

...........

''ஷ்யாம்க்குத் தெரியுமா?'' என்று சந்தோஷமா சிரித்துக் கொண்டே கேட்டவரிடம் ''தெரியும்'' என்றாள் சசிரேகா.

''சரிமா உன் ரூமுக்குப் போய்க் கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்துட்டு அதுக்கப்புறமாக் கிளம்பி வா, ஆறு மணிக்கு டாக்டரப் பாக்கப் போலாம்.''

''சரி அத்தெ'' என்று வெளியே வரத் திரும்பியவளை மீண்டும் அழைத்தார் அமுதா.

''இந்த மாதிரி நேரத்துல அம்மாவ இழக்கறது ரொம்பவும் கொடுமையான ஒன்னுதாம்மா. எதுவா இருந்தாலும் என்ன அம்மா மாதிரி நினைச்சுச் கேளு, உன்ன மாதிரி ஸ்டேஜக் கடந்து தான் நானும் வந்திருக்கேன் எனக்கும் உன் கஷ்டங்கள் புரியும்மா.''

முதன் முறையாகத் தனது அத்தை இந்த அளவுக்குப் பேசியதில் கண்கள் கலங்கி விட்டிருந்தன சசிரேகாவுக்கு.



அழுகையை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

சசிரேகா வெளியே வந்திருக்க, பாவம் தாயில்லாப் பெண்ணென்று மனம் உருகி விட்டிருந்தது அவருக்கு.

ஆரம்பத்தில் இந்தக் காலத்துப் பெண் தானே என்று அவர் சராசரியாகத்தான் சசிரேகாவையும் நினைத்திருந்தார்.

ஆனால் போகப்போகத் தேவையற்ற பந்தா அலட்டல் என்று எதுவுமில்லாமல் மிகவும் பொறுப்பாகவும் பெருந்தன்மையாகவும் நடந்து கொள்ளும் தன் சிறிய மருமகளுடைய குணம் அவரை மிகவும் ஈர்க்க ஆரம்பித்திருந்தது.

அதிலும் தான் எப்படிப் பிரமாதமாகக் குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்ற வளர்த்திருந்தாரோ அதே போல சசிரேகா இருந்ததில் சில முறை தான் அவளைத் தவறாகப் பேசியதை நினைத்து வருத்தியோடு, இனி மேல் தான் கண்டிப்பாக அந்த மாதிரி நடந்து கொள்ளக் கூடாதென்ற முடிவுக்கும் ஏற்கனவே மனதிற்குள் வந்திருந்தார்.

# 15

டாக்டரைப் பார்த்துவிட்டு சசிரேகாவும் அமுதாவும் திரும்பி வந்தபோது நேரம் இரவு எட்டு மணி ஆகியிருந்தது.

''நீ வேணும்னாப் போய் ரெஸ்ட் எடுமா'' என்ற வரிடம் ''பரவாயில்ல அத்தெ நான் போய் டிஃபன் எடுத்து வைக்கறேன்'' என்று கிச்சனுக்குச் சென்றாள் சசிரேகா.

பாதாம் அல்வாவுக்கு சரிக்கு சரியாக முந்திரிகளையும் திராட்சையையும் நெய்யில் சிவக்க வறுத்துக் கொட்டிக் கொண்டிருந்த முத்தையாவைப் பார்த்தாள்.

''வாங்கம்மா, எல்லாமே ரெடி. ஸ்வீட் மட்டும் எடுத்து ஒரு ஹாட்பாக்ஸ்ல போட்டாப் போதும்'' என்றவன் அதையும் சில வினாடிகளில் ஹாட்பாக்ஸில் போட்டு அழகாகப் பரப்பிக் கொடுத்தான்.

''என்ன மம்மி ஸ்வீட்டெல்லாம் தடபுடல்'' என்று கேட்டுக் கொண்டே ஸ்மிர்த்தி வந்து அமர, ''அதான'' என்றாள் இந்துமதி.

''ஸ்வீட் நியூஸ ஸ்வீட்டோட சொல்லலாமேன்னு தான்'' என்று அமுதா தனது சின்ன மருமகளைப் பார்த்து சிரிக்க, அப்பொழுது தான் சசிரேகாவுக்கும் திடீர் ஸ்வீட் டுக்கான காரணம் புரிந்தது.

''ஸ்வீட் நியூஸா அது என்ன மம்மி?'' என்று கேட் டாள் ஸ்மிர்த்தி.

''ஷ்யாம் அப்பா ஆகப் போறான்ல அதுக்குத்தான்'' என்று அப்பொழுது தான் டிஃபன் சாப்பிடுவதற்காக வந்து அமர்ந்த தன்னுடைய சிறிய மகனைப் புன்னகை யுடன் பார்த்துக் கொண்டே சொன்னார் அமுதா.

''வாவ்'' என்று ஸ்மிர்த்தி சந்தோஷத்தில் கத்த, ''அப் படியாம்மா அப்ப நான் தாத்தா ஆகப் போறேனா'' என்று



எல்லையற்ற ஆனந்தத்துடன் தனது சிறிய மருமகளைப் பார்த்தார் கிருபாகரன்.

''ஆமா டாடி, அதவிட மம்மி பாட்டி ஆகப்போறத நினைச்சா தான் நல்லார்க்கு'' என்றாள் ஸ்மிர்த்தி.

எதுவுமே சொல்லாவிட்டாலும் தன்னை சாதாரண மாகக் காட்டிக்கொள்ள இந்துமதி செய்யும் முயற்சி அமுதாவின் கண்களில் படத் தவறவில்லை.

''ஐய் இன்னும் கொஞ்சம் நாள்ள இந்த வீட்டுக்கு ஒரு குட்டிப்பாப்பா வந்துடுமே.''

''அது சரிதான். நீ சொன்ன மாதிரி இப்பக் கல்யாணத் துக்கு ஒத்துக்கறதான'' என்று தங்கையைப் பார்த்துக் கேட்டான் ஷ்யாம்சுந்தர்.

''ம்கூம், பெரிய அண்ணிக்கும் குழந்தை வந்ததுக்கப் புறம் தான், அப்படி சொன்னதா தான் எனக்கு ஞாபகம்'' என்றாள் ஸ்மிர்த்தி.

''அது சரிதான், அதுக்கும் இனி நல்ல நேரம் கூடி வரும்'' என்றார் அமுதா.

''நீ ஏம்மா சிரமப்பட்ற, நீயும் உட்காந்து சாப்புடு'' என்று கிருபாகரன் சொல்ல, ''பரவாயில்ல மாமா நான் கொஞ் சம் பொறுத்து சாப்பிட்டுக்கறேன்'' என்றாள் சசிரேகா.

மேலும் பரிமாறப் போன தனது மனைவியைப் போது மென்று தடுத்தான் ஷ்யாம்சுந்தர்.

கணவன் தன்னைப் பார்ப்பது தெரிய, தன்னை சாதா ரணமாகக் காட்டிக்கொள்ள முயன்று தோற்றாள் சசிரேகா.

கம்பீரமான தோற்றமும் அலட்சியப் பார்வையும், இவன் அந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்வானென் றால் நம்பவே முடியவில்லையே.

மனம் கணவனை நல்லவனென்று நியாயப்படுத்தும் வகையில் இல்லாத காரணங்களையெல்லாம் எடுத்து அடுக்கிக் கொண்டிருக்க, இவ்வளவு நடந்தும் கடைசியில் புத்தி போகும் போக்கைப் பார் என்று தன் மேலேயே எரிச்சல் தான் வந்தது சசிரேகாவுக்கு.

அன்று வேண்டுமென்றே இல்லாத வேலைகளை எல்லாம் இழுத்து செய்து கொண்டு வழக்கத்தை விடவும் வெகுநேரம் கழித்துத் தூங்கச் சென்ற சசிரேகாவின் செய்கை அமுதாவின் கண்களில் படத் தவறவில்லை.

கூடவே மகனும் மருமகளும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாததும்.

என்ன முயன்றும் சசிரேகா மனதிற்குள் நினைத்து பயந்தது போலவே தான் நடந்தது, தங்களது அறைக்கு அவள் தூங்கச் சென்றபோது கணவன் படுக்கப் போகாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''என்னமா இவ்வளவு நேரம்?''

கணவன் தன்னைக் கேட்டது காதில் விழுந்தாலும் விழாதது போலக் காட்டிக் கொண்டு செலஃப்பில் எதையோ மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தாள் சசிரேகா.

''சசி.''

அதற்கு மேல் நடித்தால் நம்பும்படியாக இருக்காதென்று உடனே கணவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன பிரச்சனை உனக்கு?''

ஓ நேரடியாகப் பிரச்சனைக்கே வருகிறானே, பிரச்சனையே நீதான் என்று சொல்ல முடியாமல் கணவனுடைய முகத்தைப் பார்த்தாள்.



''எனக்கு கேள்வி கேட்டா பதில் வந்தாகணும்.''

ஒரு சாதாரண கேள்விக்கு பதில் வரவில்லையென்று இவ்வளவு கோபப்படுகிறானே, இரண்டு பெண்களின் வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கும் இவன் அதற்கு என்னவென்று பதில் சொல்வான்.

''நான் தூங்கணும்'' என்று வழக்கமாகச் செய்யும் எதையும் செய்து கொள்ளாமல் கட்டிலுக்குச் சென்றவளுக்கு, கோபத்தில் விறைத்த கணவனின் உடல் கண்களில் படத் தவறவில்லை.

கட்டிலில் ஏறி ஒரு புறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டு பேசாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

முதுகில் குறுகுறுவென்றிருக்க, கண்கள் கலங்கிப் போயின சசிரேகாவுக்கு.

முடிவு செய்து விட்டதைப் போலக் கணவனுடன் பேசாமல் இருப்பது மிகவும் சிரமமோ என்று தோன்றியது.

கடவுளே ஒரு நாளே இப்படியென்றால், இனி வரும் நாட்கள்?

முதலில் கோபம் வந்தாலும் பிறகு சற்று யோசித்துப் பார்த்ததில் பாவம் உடம்புக்கு முடியவில்லை போலிருக்கிறது என்று மனைவியின் மேல் பரிதாபம் தான் தோன்றியது ஷ்யாம்சுந்தருக்கு,

மனைவியின் செய்கையில் இருந்த வித்தியாசம் வெளிப்படையாகவே தெரிந்தாலும், பாவம் நன்றாகத் தூங்கட்டும் காலையில் பேசிக் கொள்ளலாமென்று விட்டு விட்டிருந்தான்.

மறுநாள் காலையில் படுக்கையை விட்டு எழும் போதே ஒரு பெரிய பளுவை இதயத்தின் மேல் தூக்கி வைத்து விட்டாற்போல மனதிற்கு மிகவும் பாரமாக இருந்தது சசிரேகாவுக்கு.

ஒருவழியாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அவள் சமயலறைக்குச் சென்ற போது, அவளுடைய அத்தை ஏற்கனவே வந்து வேலை செய்து கொண்டிருந் தார்.

''குடுங்க அத்தை நான் செய்யறேன்'' என்று அந்த வேலைகளைத் தான் வாங்கிக்கொள்ள அவர் அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

கணவனிடம் பேச வேண்டி வந்தால் என்ன செய்வது என்பதற்காகவே அவனைத் தனிமையில் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டாள்.

அதைக் கணவன் கண்டு கொண்டான் என்பதும் அவளுக்குப் புரியாமல் இல்லை.

என்ன இது நாம் தவறு செய்துவிட்ட மாதிரி இப்படித் தயங்கித் தவிக்க வேண்டியிருக்கிறதே என்று எரிச்சல் தான் வந்தது.

''சசி.''

''இதோ வர்றேன் அத்தெ.''

''ஷ்யாம் கிளம்பிட்டானா பாரு, இல்லேன்னா நான் கூப்டேன்னு வரச் சொல்லுமா.''

''பாக்கறேன் அத்தெ'' என்று அவள் ஹாலுக்கு வந்த போது அவளுடைய கணவன் ஷூவை மாட்டி கொண் டிருந்தான்.



தயங்கிக் கொண்டே தன்னருகில் வந்து நின்ற மனை வியை நிமிர்ந்து பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

கணவனின் உணர்ச்சியற்ற பார்வையை ஒரு வினாடி நேருக்குநேர் சந்தித்தவள், பிறகு எங்கே பார்த்துக் கொண்டு ''அத்தெ கூப்புட்றாங்க'' என்றாள்.

அதற்குள் ''இதோ நானே வந்துட்டேம்மா'' என்று அவரே வந்துவிட, அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் சசிரேகா.

''சொல்லுங்கம்மா என்ன விஷயம்?'' என்று தாயைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''கண்ணா நமக்கு பேப்பர் புக்ஸ் எல்லாம் கொண்டு வந்து போட்றானே ஒரு பையன், அவன் பி.இ. முடிச் சிருக்கானாம்பா அதுவும் நல்ல பர்ஸன்டேஜ்ல....''

''சொல்லுங்கம்மா.''

''இல்ல அவனுக்கு நம்ம கம்பெனில வேலையிருக் குமா? உங்கப்பாகிட்டயும் நேத்து சொல்லிட்டேன், இருந்தாலும் உங்காதுலையும் ஒரு வார்த்த போட்டு வெச்சுட்டாப் பிரச்சனையில்லன்னு பாத்தேன்.''

''வேகண்ட் இருக்குமா, இருந்தாலும் அவனப் பாத்த துக்கப்புறம் தான் முடிவு செய்ய முடியும்.''

''பார்ட் டைமா தான் பேப்பர் போட்ற வேலைய செய்யறானாம், ரெண்டு மாசமா உள்ள வந்து கேக்க ட்ரை பண்றானாம் ஆனா நம்ம செக்யூரிட்டி உள்ள விடலன்னு நேத்து என்னப் பாத்ததும் ஒரே கெஞ்சல். பாத்தா ரொம்ப சுட்டிகையாத் தெரியறான்பா.''

'அப்படிப்பட்டவன் நேரடியாகக் கம்பெனிக்கு அப்ளிக் கேஷன் போட வேண்டியது தானே அதை விட்டுவிட்டு

இதென்ன குறுக்கு வழி' என்று மனதிற்குள் நினைத்தவன் அதை வெளியே சொல்லவில்லை.

''என்ன கண்ணா?''

''சரிதான் ப்ராப்பரா கம்பெனிக்கு அப்ளிக்கேஷன் போடச் சொல்லுங்க, இண்டர்வியூ கார்ட் அனுப்புவாங்க அதுக்கப்புறம் நான் பாத்துக்கறேன்.''

உடனே ''சரிப்பா'' என்று சந்தோஷமாக பதில் சொன்ன தனது அத்தையைப் பார்த்தாள் சசிரேகா.

தனது கணவன் ஒரு வார்த்தை சொல்லி விட்டாலே பெரும்பாலும் அது ஆட்சேபனையின்றி அந்த வீட்டினரால் ஒத்துக்கொள்ளப்படுவதை நிறைய முறை கண்டிருக்கிறாள்.

அப்படி அனைவரும் பயந்து ஒதுங்கிப் போவதால் தான் தன்னைக் கேள்வி கேட்க யாருமில்லையென்று இப்படி ஆடுகிறான் போலிருக்கிறது என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அன்று இரவும் கணவனின் வரவை சற்று பயத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, தவறு செய்தவன் ஜாலியாகத் திரியும் போது நாம் எதற்காக இப்படி பயந்து நடுங்க வேண்டும் என்று தன் மேலேயே கோபம் தான் வந்தது சசிரேகாவுக்கு.

'உங்களுடைய திருமணத்திற்கு முன்பெல்லாம் உன் கணவன் மாலையில் நேரம் கிடைத்தால் சற்று வீட்டிற்கு வந்துவிட்டுச் செல்வான், ஆனால் இப்பொழுது கம்பெனி விரிவாக்க வேலைகள் நடந்து கொண்டிருப்பதால் சில நிமிடங்களைக் கூட வீணாக்காது அதில் கவனத்தை



செலுத்திக் கொண்டிருக்கிறான்' என்று தனது அத்தை சொன்னது தான் நினைவுக்கு வந்தது.

பத்திருபது பேர் வேலை செய்யும் இடத்திலேயே பொறுப்புகள் அதிகமாக இருக்கும்போது, ஆயிரம் பேருக்கும் மேலாக வேலை செய்யும் தங்களது கம்பெனியை நிர்வகிக்கும் தனது கணவனைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

என்னதான் மற்ற அனைத்து விஷயங்களிலுமே அவன் பிரமாதமானவனாக இருந்தாலும், யோசித்துப் பார்த்ததில் ஒன்று மட்டும் சர்வ நிச்சயமாக தெரிந்து போயிருந்தது சசிரேகாவுக்கு.

ஒழுக்கமென்பது உயிருக்கும் மேலான ஒன்று.

அடிப்படையாக ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அவசியமானதும் கூட.

தனது கணவனிடம் அதுவே இல்லையென்னும் போது அவனுடன் மனம் ஒன்றிய வாழ்க்கையென்பதும் இனிமேல் தனக்கு இல்லை என்னும் முடிவுக்கு தீர்க்கமாக வந்திருந்தாள்.

''சசி.''

''அத்தெ சொல்லுங்க.''

''நானும் பாக்கறேன் காலையிலிருந்து ஒரே யோசனையாவே இருக்க, என்னமா விஷயம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில் அத்தெ.''

''அப்படின்னு உன் வாய் மட்டும் தான் சொல்லுது.'' என்றவரின் பார்வை தனது கணவனுடைய பார்வையை நினைவுபடுத்தியது.

''சரிமா இந்த கிரேவிய மட்டும் இன்னொரு கொதி வந்ததும் இறக்கிடு ஒரு போன் பேசிட்டு வந்துடறேன்'' என்று அவர் செல்ல, சரியென்று வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள் சசிரேகா.

அனைவரும் இரவு உணவை முடித்துக் கொண்டு சென்றிருக்க, எவ்வளவு மெதுவாகச் செய்தும் சசிரேகா வுக்குத் தான் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தும் முடித்திருந்தன.

இன்றைக்குக் கண்டிப்பாகக் கணவன் எதுவும் கேட் காமல் இருக்க மாட்டான் என்று அனைத்திற்கும் தயாரா கவே தங்களது அறைக்குச் சென்றாள்.

எதிர்பார்த்தது போலவே தான் உள்ளே வந்ததும் கணவன் தன்னை கவனிப்பது தெரிந்தது.

தானாகவே விளக்கம் சொல்வாளென்று எதிர்பார்த் திருப்பான் போலும், இல்லையென்றானதும் அவனா கவே கேட்டான்.

''என்னாச்சு உனக்கு?''

''ஒன்னுமில்ல.''

''அதான் ஏன் ஒண்ணுமே இல்லாமப் போயிடுச்சு.''

கணவனின் சிரிப்பு எரிச்சலை அதிகமாக்க, ''அதான் ஒன்னுமில்லேன்னு சொல்றேனில்ல விட்டுடுங்க'' என்றாள்.

அந்த வினாடியில் கணவனின் முகத்தைப் பார்த்த வளுக்கு மனதிற்குள் ஏதோ ஒரு இனம் புரியாத பயம் ஏற்பட்டது.

''சொல்லு என்ன பிரச்சன உனக்கு?''



..............

''சசிரேகா.''

அழுத்தமான காலடிகளுடன் கணவன் தன்னை நெருங்குவது தெரிந்தும் பதில் பேசாமல் சிலை போல நின்று எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ உம்மனசுல என்ன நினைச்சுட்டிருக்க?'' என்று மூச்சுக்காற்று தன் மேல் விழுமளவிற்கு அருகில் வந்து நின்றிருந்த கணவன் கேட்க, தன்னால் இயன்ற மட்டும் நிமிர்ந்து அதே பார்வையுடன் அவனைப் பார்த்தாள்.

''எம் பொறுமய சோதிச்சா அப்புறம் ரொம்ப வருத்தப் படுவ'' என்ற கணவனின் வார்த்தைகளில் நன்றாக சிரிக்கவே ஆரம்பித்திருந்தாள்.

இனியுமா, ஏற்கனவே படும்பாடு போதாதா.

''வாயத்திறந்து பேசித் தொல, ஏன் என்ன இப்பிடி வதக்கிற?'' என்றவன் கோபத்துடன் தனது இரண்டு தோள்பட்டைகளையும் பிடித்து அழுத்தியதில், வலி உயிர் போனது சசிரேகாவுக்கு,

ஆனால் அது சிறிதும் முகத்தில் தெரிந்து விடாதவாறு காட்டிக் கொண்டவள், எதுவும் பேசாமல் தொடர்ந்து அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

''சை'' என்று வேகமாகத் தனது கைகளை எடுத்துக் கொண்டவன், ''முடிஞ்சா இனி என் முகத்துலயே விழிக் காதே'' என்றான்.

அவன் திடிரென கைகளை எடுத்துக் கொண்டதில் சற்றே தடுமாறி பிறகு சமாளித்து நின்றவள், ''கரெக்ட் இப்ப இருக்கற நிலைக்கு அதுவே ஆயிரம் மடங்கு மேல்'' என்றாள்.

''அப்படியென்னமா ஊர்ல இல்லாத கொடுமய நீ இந்த வீட்ல அனுபவிச்சுட்டிருக்க?''

''தப்பாப் புரிஞ்சுக்கிட்டிங்க, நான் கொடுமய அனுபவிக்கறது நூத்துக்கு நூறு உண்மதான் ஆனா அது உங்ககிட்ட.''

''நம்பற மாதிரி ஏதாவது இருந்தாப் பேசு.''

''நீங்க நம்பற மாதிரியா, அது ரொம்பக் கஷ்டம்.''

''ஏனோ?''

''பின்னே சோத்துக்கே வழியில்லாதவளக் கூட்டிட்டு வந்து வேளாவேளைக்கு சோறு போட்டு துணி நகையெல்லாம் வாங்கிக் குடுத்துட்டிருக்கீங்க. அப்படியிருக்கும்போது இந்த வீட்ல கொடுமைய அனுபவிச்சுட்டிருக்கேன்னு நான் சொன்னா அத நீங்க நம்புவீங்களா?''

''ஏன் இவ்வளவு சீப்பாப் பேசற?''

''ஓ, நான் நடந்துட்டிருக்கறத சொன்னாலே உங்களுக்கு அது சீப்பா தெரியுதாக்கும்? ஆனா நீங்க அப்பிடி ஊரெல்லாம் சொல்லிட்டிருக்கீங்களே அதக் கேட்டப்ப என் மனசு எப்பிடித் துடிச்சிருக்கம்.''

''என்ன ஊளர்ற?''

''சரிதான், பதில் சொல்ல உங்களுக்கு விருப்பமில்லாதபோது நான் பேசறது உளறலாத்தான் படும்.''

''முடிஞ்சா நேரா விஷயத்துக்கு வா.''

''ஓ, இல்லன்னா உங்களுக்கே தெரியாம உண்மய சொல்லிடுவீங்களோன்னு பயமா இருக்கா? என்னக் கேள்வி மேல கேள்வி கேட்டுட்டே இருக்கீங்களே அதுக்கெல்லாம் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லேங்கறத முதல்ல நீங்க தெரிஞ்சுக்கோங்க.''



''என் உரிமையப் பத்தி நீ எனக்கு சொல்லித் தார யாக்கும்? சரிதான் என் உரிமையோட அளவு எவ்வளவுன்னு நானே காட்றேன் தெரிஞ்சுக்கோ'' என்று மேலும் அருகில் நெருங்கி வந்தவனிடமிருந்து இரண்டு அடி பின்னால் நகர்ந்தாள் சசிரேகா.

''வளவளவென்று பேசிட்டிருக்க எனக்கு மட்டும் ஆசையா அதுவும் இந்த நேரத்துல ம்'' என்ற கணவனுடைய கரங்கள் தன்னை இழுத்து அணைக்க, அவனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வெகுவாக முயன்றாள்.

ஆனால் அவள் அரும்பாடுபட்டுத் தடுக்க முயன்றதையெல்லாம் அவன் வெகு சாதாரணமாக முறியடித்து விட, மெல்லமெல்லக் கணவனின் கரங்களில் தன்னை மறக்க ஆரம்பித்தாள் சசிரேகா.

# 16

உடலோடு மனதும் வலுவிழந்துவிட, பிரம்மப்பிரயத்தனப்பட்டுப் படுக்கையை விட்டு மெதுவாக எழுந்தாள் சசிரேகா.

ஒரு வழியாகக் கீழே இறங்கி வந்தவளுக்குக் கணவன் நேரத்திலேயே கிளம்பி விட்டிருந்தது தெரிந்தது.

பெயருக்குக் காலை உணவினை எடுத்துக் கொண்டவள், ஏற்கனவே இருக்கும் உடல் உபாதைகளை சற்று

மிகைப்படுத்திச் சொல்லிவிட்டு மீண்டும் தங்களது அறைக்கே வந்து விட்டிருந்தாள்.

கடவுளே இனி இந்த வீட்டில் தன்னுடைய எதிர் காலத்திற்கு இரவு ஒன்றே மிகப்பெரிய உதாரணம்.

ஒவ்வொரு நாளும் கணவனின் கைகளில் மயங்கிக் கிடந்ததும், அதற்காக ஏங்கியதும், நாம் எவ்வளவு பிரமாதமான ஜோடி என்று இருவரும் தங்களுக்குள் பெருமை பேசிக் கொண்டதும்......

அப்படிப்பட்ட அன்பு ஒரே நாளில் இந்த அளவிற்குக் கசந்துவிடக் கூடுமா.

எது எப்படியோ இனிக் கணவனுடன் கருத்தொருமித்த வாழ்க்கையென்பது தனக்குக் கிடையாது.

என்ன திமிர், குற்ற மனப்பான்மை சிறிதும் இல்லாமல் இப்படி சர்வ சாதாரணமாக நடந்து கொள்ள இவனால் எப்படி முடிகிறது.

பழைய மாதிரியே ஒரு கடைக்கண் பார்வையில் அனைத்தையும் மறந்துவிட்டு அவனது மார்பில் வந்து தஞ்சம் புகுந்து விடுவாளென்று நினைத்துக் கொண் டான் போலிருக்கிறது.

ரோஷமுள்ள ஒரு பெண் அப்படியெல்லாம் நடந்து கொள்வாளா.

பாவம் அஞ்சலி என்று அவளை இழுக்காமல் பேசி விட முடிவு செய்தது நடக்காது போலிருக்கிறதே.

இன்று அவன் வரட்டும், வளவளவென்று பேச்சை வளர்த்துக் கொண்டிருக்காமல் முகத்திற்கு நேராகவே சொல்லிவிட வேண்டும்.

இனிமேல் தன் வயிற்றுக்குள் உதித்திருக்கும் சிசு வுக்கு ஒரு நல்ல தாயாகவும், இந்த வீட்டின் பெரியவர்



களுக்கு ஒரு நல்ல மருமகளாகவும் மட்டுமே என்னால் நடந்து கொள்ள முடியும்.

அதற்கு மேல் மனைவி என்ற உரிமையை நீ வலுக் கட்டாயமாக எடுத்துக் கொள்ள முயன்றால் அதைக் கண்டிப்பாக என்னால் பொறுத்துப் போக முடியாதென்ற சர்வநிச்சயமாகச் சொல்லிவிட வேண்டுமென்று நினைத் துக் கொண்டாள்.

''ஷ்யாம்.''

''சொல்லுங்கப்பா.''

''என்னவோ தீவிர யோசனைல இருக்கிற மாதிரி யிருக்கு.''

''ஆடர்ஸ் திடீர்னு ரெண்டு மடங்கு அதிகமாயிருக் குப்பா, அதத்தான் நினைச்சுட்டிருந்தேன்.''

''நானும் அது சம்பந்தமாப் பேசலாம்னு தான் வந்தேன் ஷ்யாம்'' என்று அமர்ந்தார் கிருபாகரன்.

''எல்லாம் என் பேரக்குழந்த வரப்போற நேரந்தான்,'' என்றவர் ''ஏன் அவ்வளவு தூரம் போகணும் என் மருமக வந்த நேரம்னே சொல்லலாம்'' என்று உணர்ந்து சொன்ன தந்தையைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

''டொமஸ்டிக் மார்க்கெட்ட விடவும் எக்ஸ்போர்ட். ஆடர்ஸ் அதிகம் வந்துட்டிருக்கு, ஆனா முடிஞ்ச அள வுக்கு நாம ரெண்டயும் ஒரே மாதிரி கான்ஸன்ரேட் பண்ணணும்'' என்றான்.

''நீ எல்லாத்தையும் பிரமாதமாப் பாத்துக்குவ அதுல எனக்கு முழு நம்பிக்கையிருக்கு. நீ பிஸினஸ்க்குள்ள வந்ததுக்கப்புறமே நான் கொஞ்சம் கூட டென்ஷனில் லாம ரொம்ப நிம்மதியா இருக்கேன் ஷ்யாம்.''

"இருக்கலாம்பா, ஆனா பிஸினஸப் பொறுத்த வரைக்கும் இவ்வளவு நாளா நல்லாப் பண்ணிட்டோம் தானேன்னு உக்காந்துட முடியாது. நம்ம உழைப்பும் கண்கானிப்பும் இருந்துட்டே இருந்தாத்தான் இருக்கிற பேரத் தக்க வெச்சுக்கறதோட இன்னும் மேலமேல போக முடியும்."

"அதெல்லாம் சரிதான் ஷ்யாம், ஆனா இப்ப உனக்குக் கல்யாணமாயிடுச்சு. அப்பப்ப மருமகள எங்காவது வெளிய கூட்டிட்டுப் போறதோட அவ ஆசப்பட்றதைப் பாத்து செஞ்சு குடுக்கறதும் உன்னோட கடமதான்."

மனைவி ஆசைப்படுவதயா?

ஏற்கனவே அவள் ஏதேதோ முட்டாள்தனம் செய்தாகிறது, இனியும் என்னென்ன செய்யப் போகிறாளோ.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் தனது தந்தை எழுந்து செல்ல, யோசிக்க, செய்ய என எத்தனையோ வேலையிருந்தும் எதையும் செய்ய முடியாமல் மனைவி செய்த அசட்டுத்தனம் தான் எந்நேரமும் நினைவுக்கு வந்து கோபத்தை வரவழைத்துக் கொண்டிருந்தது ஷ்யாம்சுந்தருக்கு.

இப்படியே போனால் பைத்தியமும் பிடிக்கச் செய்து விடுவாள் போலிருக்கிறதே, முதலில் அவளுடன் சற்று பொறுமையாக அமர்ந்து பேசியாவது விஷயம் என்னவென்று தெரிந்துகொண்டு அதை சீர்படுத்தியாக வேண்டும்.

பாவம் வேண்டாத எதையோ நினைத்துத் தனக்குத் தானே குழப்பிக் கொள்கிறாளென்று நினைத்தவனுக்கு, அதற்கு மேல் எதைப் பற்றியும் யோசிக்க முடியாத அளவுக்கு வேலையே சரியாக இருந்தது.

அன்று முழுவதும் படுக்கையே கதியென்று கிடந்த சசிரேகா மாலை வேளைக்குப் பிறகுதான் எழுந்து வெளியே வந்தாள்.



வெவ்வேறு மனநிலையில் இருந்த கணவன் மனைவி இருவருமே தங்களுடைய பிரச்சனைக்கு அன்றே தீர்வு கண்டுவிட வேண்டுமென்பதில் மட்டும் ஒத்த மனப் பான்மையுடன் இருந்தனர்.

ஸ்மிர்த்தியும் அமுதாவும் இந்துமதியுடன் அவளது உறவில் ஏதோ விஷேசமென்று மாலை நான்கு மணிக்கே வெளியே கிளம்பிச் சென்றிருந்தனர்.

வீட்டில் யாரும் இல்லாதது வேறு சவுகர்யமாகப் போய் விட அன்று பார்த்து சற்று நேரத்திலேயே வந்திருந்த கணவன் உன்னுடன் சற்று பேச வேண்டுமென்று அழைத்ததில் நான் காத்திருப்பதும் அதற்காகத்தானே என்று உடனே சென்றாள் சசிரேகா.

"வாம்மா உக்காரு, இருக்கற பிரச்சனைய இன்னையோட நாம ரெண்டு பேரும் உக்காந்து பேசி சரி பண்ணிக்கலாம். இப்பிடி இழுத்துக்கிட்டே இருக்கறதுனால யாருக்குப் பலன் சொல்லு."

ஓ பிரச்சனை என்னவென்ற ஐயாவுக்குத் தெரிந்து விட்டதா. அதட்டி மிரட்டினால் திருப்பிக் கொள்வாளென்று அடிபணிந்து பார்க்கிறானாக்கும்.

கணவனுக்கு விஷயம் தெரிந்து விட்டிருந்ததில், சசிரேகாவிற்கும் சற்று வசதியாகிப் போயிற்று.

நேரடியாக விஷயத்திற்கு வந்தாள்.

"ரெண்டு பொண்ணுங்களோட வாழ்க்கைல விளையாட்றது பெரிய தப்பு அதோட ரொம்பக் கேவலமும் கூடன்னு இப்பவாவது புரியுதா?"

............

தான் சொல்வதைப் புரியாதது போலப் பார்க்கும் கணவனை ஏளனத்துடன் பார்த்தாள் சசிரேகா.

'நடிப்பு பிரமாதம்.'

''கொஞ்சம் முன்னாடி என்ன சொன்ன?''

''ஓ அத என் வாயாலயே நான் முழுசா சொல்லக் 'கேக்கணும்'னு ஆசையா இருக்காக்கும். சரி அதயும் நல்லாக் கேட்டுக்கோங்க!! என்று மேலே மேலே மனைவி சொல்லிக்கொண்டே போனவற்றைக் கேட்ட ஷ்யாம்சுந்தரின் முகம் பாறையாக இறுகி விட்டிருந்தது.

''சொல்லுங்க, இதுக்கெல்லாம் என்ன விளக்கம் சொல்லப் போறிங்க?''

கோபப்படுவான், தனது தவறை மறைக்க இல்லாததையெல்லாம் இழுத்துப் பேசுவானென்று எதிர்பார்த்திருந்த சசிரேகாவுக்குக் கணவனின் பார்வை குழப்பத்தைத் தான் கொடுத்தது.

ஆனாலும் பதிலுக்காகக் கணவனின் முகத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏதோ நம்பமுடியாத விஷயங்களைக் கேட்டு விட்டது போல கணவனின் முகத்தில் சில வினாடிகள் மாறிமாறித் தோன்றிய உணர்ச்சிகள் இன்னும் நடிப்பைப் பார் என்று எரிச்சலைத்தான் வரவழைத்தது.

சமாதானப்படுத்தினாலோ சப்பைக்கட்டுக் கட்டினாலோ நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி கேட்டுவிட வேண்டுமென்று கோபத்துடன் காத்திருந்தவளுக்கு, கணவன் ஒன்றும் பேசாததில் எந்த முகத்தை வைத்துக்கொண்டு பேசுவானென்று ஏளனமாகத்தான் நினைக்கத் தோன்றியது.

ஏதோ செய்த தவறை மறைப்பதற்காகப் பொய்க்கு மேல் பொய் சொல்லி மேலும் கணவன் தன்னைத்தாழ்த்திக் கொள்ளாததில் மனதிற்கு சற்று திருப்தியாகக் கூட இருந்தது.



தானாகவே தவறை ஒத்துக் கொண்டாலும் கூட, அவனை மன்னித்துவிடக் கூடாதென்பதிலும் உறுதியாக இருந்தாள்.

சசிரேகாவின் எண்ணங்கள் இப்படியிருக்க, தன்னை ஒரு அற்பப் பிறவியைப் பார்ப்பதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்த கணவனின் பார்வையின் பொருள் அவளுக்கு விளங்கவில்லை.

சரிதான், உலகில் யார் தாங்கள் செய்த தவறை உடனே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கிருந்த நகரப்போன மனைவியிடம் ''ஒரு நிமிஷம்'' என்றான்.

நின்று தன்னை நிமிர்ந்து பார்த்தவளிடம் ''நீ சொன்னது மட்டும் தானா இல்ல இன்னும் ஏதாவது இருக்கா?'' என்று கேட்டான்.

''ம், அது உங்களுக்குத்தான் தெரியும். எனக்குத் தெரிஞ்சு அஞ்சலி. தெரியாம இன்னும் எத்தன பேரோ'' என்றாள் சசிரேகா.

என்ன முயன்றும் ஒரு வினாடி கூட ஷ்யாம்சுந்தரால் மனைவி சொன்னவற்றை மறக்க முடியவில்லை.

கருத்தொருமித்த பிரமாதமான பெண் தனக்கு வாழ்க்கைத் துணையாகியிருக்கிறாளென்று இறுமாப்புடன் இருந்தானே, கடைசியில் நானும் ஒரு சராசரி ஏன் அதற்குமே சற்றுக் கீழான பெண் தான் என்பதை முகத்தில் அறைந்தது போல சொல்லி விட்டாளே.

கற்பும், ஒழுக்கமும் பெண்ணுக்கு மட்டும் தான் என்று நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறது.

திருமணமான இத்தனை நாட்களில் தன்னுடைய கணவன் இந்த அளவிற்குக் கேவலமாக நடந்து கொள்

பவனல்ல என்பதைக் கூட அவளால் புரிந்து கொள்ள முடியவில்லையே.

அதிலும் எனக்குத் தெரிந்து ஒரு பெண், தெரியாமல் இன்னும் எத்தனை பேரோ என்றாளே,

தன்னை இந்த அளவிற்குக் கீழ்த்தரமாக எடை போட்டுவிட்ட பெண்ணைப் போய் மனதின் சிம்மா சனத்தில் ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறேனே,

வேண்டும், தனக்கு இதுவும் வேண்டும் இதற்கு மேலும் வேண்டுமென்று தன் மேலேயே கோபம் தான் வந்தது ஷ்யாம்சுந்தருக்கு.

உலகமே ஒன்று திரண்டு வந்து அவளைப் பற்றித் தவறாக சொல்லியிருந்தாலும், அதை அவன் நம்பியிருப்பானா,

அப்படி நம்பிக் கொண்டால் இத்தனை நாட்களும் நகமும் சதையுமாக ஒட்டி உறவு கொண்டு வாழ்ந்திருக்கும் தாம்பத்திய வாழ்க்கைக்கு என்ன அர்த்தமிருக்க முடியும்.

தனது கணவன் அப்படிப்பட்டவனா என்னும் நோக்கில் ஒரு வினாடி யோசித்திருந்தால் கூடப் போதுமே, அஞ்சலியின் வார்த்தைகளில் தவறு இருக்கக் கூடுமோ என்னும் சந்தேகம் வந்து விட்டிருக்குமே.

போதும், தகுதியற்ற இடத்தில் அன்பு வைத்துவிட்ட பாவத்திற்காகத் தான் யோசித்து யோசித்து மனதை வருத்திக் கொண்டது போதும்.

இனி அவளாகவே வரட்டும், தான் செய்துவிட்ட தவறை எண்ணி எண்ணி வருந்தட்டும்.

அப்பொழுதும் கூட பழைய மாதிரி மனதால் அவளைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியுமென்று ஷ்யாம்சுந்தருக்குத் தோன்றவில்லை.



இரவு வெகுநேரம் கழித்து அவன் வீடு வந்த சேர்ந்த போது மனைவி படுத்துத் தூங்கியிருந்தாள்.

அப்படி அவள் விழித்துக் கொண்டிருந்தாலுமே கூட இனி அவளுடன் தனக்கு என்ன இருக்கிறது என்று மீண்டும் எங்கெங்கோ சென்ற எண்ணங்களைக் கடிவாளமிட்டு அடக்கினான்.

சொந்த வாழ்வில் ஆரம்பித்து, வெற்றிகரமாகத் தொழிலை நடத்துவது வரை அனைத்திலுமே இதுநாள் வரையிலும் தான் எடுத்திருந்த முடிவுகளனைத்தும் நூறு சதவிகிதம் சரியாக அமைந்திருக்கிறதென்ற அவனுடைய கர்வம் இப்பொழுது மனைவியால் சுக்கல் நூறாகிப் போயிருந்தன.

# 17

"ஹாய் ஆன்ட்டி."

"வாம்மா, என்ன ஒரு வாரமா எட்டியே பாக்கல."

"ரெண்டு நாள் முன்னாடி வந்திருந்தேன் ஆன்ட்டி நீங்க தான் ஸ்மிர்த்தியோட ஊருக்குப் போயிருந்தீங்க" என்ற அஞ்சலியின் பதிலில் அனைத்தும் புரிந்தது ஷ்யாம் சுந்தருக்கு.

ஆக அன்று வைத்துத்தான் அனைத்தையும் ஓதியிருக்கிறாள், ஆனாலும் அவனுக்கு அஞ்சலியின் மேல் சிறிதும் கோபம் வரவில்லை.

நம்பிக்கை வைத்து விட்டவர்கள் பொய்த்துப் போகும் போது தான் மனம் சுக்கல்நூறாகி விடுகிறது.

அஞ்சலியின் மேல் எப்பொழுதுமே அவனுக்கு எந்த ஈர்ப்பும் இருந்ததில்லை, ஒரு சில முறை அவள் தன்னிடம் நடந்த கொண்ட முறையை வைத்துப் பார்க்கும் போது அவள் இந்த அளவிற்குப் போய்த் தனது மனைவியிடம் இல்லாததையெல்லாம் சொல்லியிருப்பதில் கூட அவனுக்கு சிறிதும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ ஏற்பட்டிருக்கவில்லை.

அவளுடைய இயல்பைத் தான் அவள் வெளிபடுத்தியிருக்கிறாள், அவளுக்கு சாதகமாக ஏதாவது நடக்க வேண்டுமென்றால் எவ்வளவு பெரிய பொய்யையும் சர்வ சாதாரணமாகச் சொல்வாள் என்பதும் அவன் அறிந்ததே.

அதிலும் இந்துமதியின் தூபம் வேறு சேர்ந்து கொண்டால் கேட்க வேண்டியதே இல்லை.

''ஹாய் ஷ்யாம்.''

கம்பெனிக்கு கிளம்புவதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தவன், ''வாம்மா என்ன காலைலயே'' என்று கேட்டான்.

''ஏன் வரக்கூடாதா?''

''தாராளமா வரலாம், ஆனா ஒருசிலர் வருகையோட முடிவு எப்படியிருக்குமோன்னு தான் யோசிக்க வேண்டியதாயிருக்கு.''

''என்ன ஷ்யாம் ஏதேதோ சொல்றீங்க?''

''அப்புறம் அதே ரெண்டு நாளைக்கு முன்னாடி, அதாவது நீ இங்க இருந்தப்ப நான் உன்ன வரச்சொன்னேனே, இதோ வர்றேன்னு சொன்னது தான் ஆளையே காணல.''

''ஸாரி ஷ்யாம், அன்னைக்குன்னு திடீர்னு அம்மாவுக்கு உடம்புக்கு முடியாமப் போயிடுச்சு.''

''அடடா, என்னம்மா ஆச்சு?''

''வெறும் காய்ச்சல் தான்'' என்றவள் இன்னைக்கு வேணும்னா நான் உங்ககூட வரட்டுமா?'' என்று கேட்டாள்.



''வேண்டாம், இங்கேயே இருந்தா உங்கூடப் பேசிட்டிருக்க நிறைய பேர் தயாரா இருக்காங்க. நீ என்ன சொன்னாலும் யோசிச்சுப் பாக்காம அத அப்படியே நம்பிக்கறவங்களும் இருக்கறதால நீயும் என்ன வேணும்னாலும் சொல்லலாம். ஓ பேசலாம்''

கணவனின் இரட்டைப் பொருள் தரும் பேச்சில் எரிச்சல் தான் வந்தது சசிரேகாவுக்கு.

குற்றம் செய்தவன் அவனாகவே அந்தப் பேச்சை இழுத்துப் பேசுவானா என்று அவளுடைய கணவனே சொன்னது போல ஒரு வினாடி யோசித்துப் பார்த்திருந்தாலும் கூட அப்பொழுதாவது எது உண்மை என்பது அவளுக்கும் புரிய ஆரம்பித்திருக்கும்.

ஆனால் அஞ்சலியோ ஷ்யாம்சுந்தர் சொன்னதைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

யாரும் இல்லாத சமயமாக பார்த்து சசிரேகாவை நெருங்கி மேலும் தனது வேலையைக் காட்டினாள்.

''பார்த்தாயா என்னிடம் எப்படிப் பேசுகிறார் என்று, அதுவும் தைரியமாக இத்தனை பேர் இருக்கும் போதே. எனக்குத்தான் நம் பெயர் கெட்டு விடுமோ என்று மிகவும் பயமாகிப் போயிற்று, அவர் கேட்பதை வைத்துப் பார்த்தால் நீ என் பெயரைப் பயன்படுத்தி விட்டாயா?'' என்று கேட்டாள்.

அவளுக்கு பதில் சொல்வதற்குள்ளேயே ஸ்மிர்த்தி வந்துவிட, பிறகு பேச்சு திசைமாறிப் போனது.

அனைத்திற்கும் உச்சகட்டமாகவும் அதாவது அசட்டுத்தனத்தின் எல்லையாக மீண்டும் ஒரு மிகப்பெரிய தவறை செய்து விட்டிருந்தாள் சசிரேகா.

அதாவது அஞ்சலியின் பேச்சை முழுமையாக நம்பிக் கொண்டு மீண்டும் கணவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்டு விட்டிருந்தாள்.

"ஒன்று தவறு செய்யாமல் இருக்க வேண்டும், அல்லது அப்படிச் செய்துவிட்டால் அதன் பின் விளைவுகளைச் சந்திக்கும் தைரியம் இருக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் பெண்களிடம் வீரத்தைக் காட்டுவது ஒரு உண்மையான ஆணுக்கு அழகு கிடையாது" என்றிருந்தாள்.

திடிரென்று தனக்கு முன்னால் வந்து நின்று உணர்ச்சி பொங்கச் சொன்ன மனைவியின் பேச்சில் சில வினாடிகள் விரக்தியாகச் சிரித்தவன் தான், ஆனால் அடுத்த வினாடியே அவனுடைய முகத்தில் சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்தது.

கூடவே நூறில் ஒரு பங்காகவாவது தான் பேசியதிலும் ஏதாவது தவறு இருக்குமோ எனும் வகையில் மனைவி யோசித்திருக்க மாட்டாளா என்ற தனது வெட்கம்கெட்ட எதிர்பார்ப்பையும் உடைத்துத் தூக்கி எறிந்திருந்தான்.

ஆனால் ஒரு விதத்தில் அதுவே மனைவியின் மேல் அவனுக்கிருக்கும் சிறு பரிதாப உணர்ச்சியைத் துடைத்தெறியப் போதுமானதாகவும் அமைந்து விட்டிருந்தது.

அன்று முதன் முறையாகக் கணவனின் கோபத்தை எதிர்கொண்டாள் சசிரேகா.

இரவு உணவு நேரம் நெருங்கி சிலமுறை அழைத்து விட்ட பிறகும் கூட அன்று ஏனோ யாருமே சாப்பிடுவதற்கு வந்திருக்கவில்லை.

சற்றுநேரம் சென்று அமரவாவது செய்யலாமென்று அவள் நகரப் போன போது தான், சாப்பிடுவதற்காகத் தன்னுடைய கணவன் வந்து அமர்வதைக் கண்டாள்.



கோபத்தில் இறுகியிருந்த கணவனின் முகத்தைக் கண்டு கொள்ளாமல், மனதிற்குள் தனக்கு வந்த எரிச்சலையும் கட்டுப்படுத்திக் கொண்டு பறிமாறுவதற்காக வந்தாள் சசிரேகா.

ஆனால் அந்த வினாடியே கையை நீட்டித் தடுத்தவன், உணர்ச்சியற்ற பார்வையுடன் நிமிர்ந்து மனைவியைப் பார்த்தான்.

"நான் நிம்மதியா சாப்பிடணும்னா நீ வந்து பரிமாறாம இருக்கிறது மட்டுமல்ல, நான் சாப்பிடும் போது எனக்கு முன்னாடி கூட வந்துடாதே" என்றான்.

கணவனின் வார்த்தைகள் ஓங்கிக் கன்னத்தில் அறைந்ததைப் போலிருக்க, பேசாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்திருந்தாள்.

கண்கள் கலங்கி விட்டிருக்க, நல்லவேளையாக யாரும் பார்த்து விடவில்லையென்ற நிம்மதிதான் அதிகமாக ஏற்பட்டது சசிரேகாவுக்கு.

ஆனால் அதிலிருந்து ஒவ்வொரு விஷயத்திலும் கணவனுடைய கோபம் பன்மடங்கு அதிகமாகித் தொடர்ந்த போதுதான் மிகவும் துடித்துப் போனாள்.

என்னதான் அனைவரும் பார்க்கத் தன்னைத் துன்புறுத்தும் எண்ணம் தனது கணவனுக்கு இல்லையென்றாலும், அவசியமேற்படும்போது யாருக்காகவும் அவன் பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதும் புரிந்தது.

ஒரு வாரம் சென்றிருந்தது.

கணவன் தன்னை இந்த அளவிற்கு வெறுத்து ஒதுக்குவானென்று சசிரேகா கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

வீட்டில் இருப்பவர்கள் அனைவருக்குமே கணவன் மனைவிக்குள்ளிருந்த கருத்து வேறுபாடு பெரும் விரிசலாக மாறிக் கொண்டிருப்பது நன்றாகவே தெரிய ஆரம்பித்திருந்தது.

அப்படியானால் அவன் என்ன தவறு செய்தாலும் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பதோடு பாராட்டவும் வேண்டுமென்கிறானா என்று சசிரேகாவின் உள்ளம் தனிமையில் பொறுமிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டில் வாரத்திற்கு மூன்று முறை சலவைக்காரன் வீட்டிற்கே வந்து அனைத்துத் துணிகளையும் துவைத்துத் தேய்த்துக் கொடுத்து விட்டுப் போவது வழக்கம்.

அப்படித்தான் அன்றும் அவன் துவைத்துத் தேய்த்து கொடுத்திருந்த கணவனின் துணிகளை வாங்கிக் கொண்டு போய் அவனுடைய வாட்ரோப் செல்ஃப்பில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள் சசிரேகா.

திடிரென்று எங்கிருந்து வந்தானோ. சசிரேகா அடுக்கி வைத்துக் கொண்டிருந்த துணிகள் அனைத்தையும் கடுங்கோபத்துடன் இழுத்துத் தரையில் விசிறியடித்தான் அவளுடைய கணவன்.

''கண்டவங்கெல்லாம் என் டிரஸ்ஸத் தொட்றது எனக்குப் புடிக்காது. திரும்பவும் அந்தத் துணிகளெல்லாம் என் ஷெல்ஃப்க்கு வரக் கூடாது, இனி நான் அதக் கையால தொடக்கூட மாட்டேன்'' என்று வார்த்தைகளால் குத்திக் காயப்படுத்தி விட்டுப் போனான்.

தலைசுற்றலுடன் சிரமப்பட்டுப் படியேறி நான்கு முறை அனைத்துத் துணிகளையும் கொண்டு வந்து



சேர்ந்திருந்தவளுக்கு, கணவனின் செய்கையில் அழுகை குமுறிக்கொண்டு வந்தது.

அப்டியே கட்டிலில் கவிழ்ந்து வெகுநேரம் அழுது தீர்த்தாள்.

மறுநாள் அந்தி வேளையில் சற்றே வெளியே நடந்துவிட்டு வரலாமென்று சென்றவளுக்கு அங்கு பழைய வேண்டாத பொருட்களைப் போட்டு வைத்திருக்கும் அறைவாயிலில் முதல்நாள் கணவன் கோபத்துடன் விசிறியடித்திருந்த அவனுடைய துணிகள் கிடப்பதைக் கண்டு அங்கிருந்த தோட்டக்காரனிடம் விசாரித்தாள்.

''என்னவோ தெரியலைங்கம்மா வேணும்னாப் பாரு இல்லேன்னா எரிச்சுடுன்னு சின்னையா குடுத்தார்'' என்று தோட்டக்காரன் சொன்ன பதிலைக் கேட்டவளுக்கு நெஞ்சே வெடித்துவிடும் போலாகி விட்டிருந்தது.

அவனுடைய துணிகளைத் தான் தொட்டுவிட்ட ஒரு காரணத்திற்காகவே இந்த அளவிற்குச் செல்கிறான் என்றால், தன் மேல் அவனுக்கு எவ்வளவு வெறுப்பும் கோபமும் இருக்க வேண்டும்.

அதுவும் அவன் வேண்டாமென்று கொடுத்திருந்த அந்தத் துணிகள் அனைத்துமே பலப்பல ஆயிரங்களை சர்வசாதாரணமாகத் தாண்டக் கூடியவை.

அதிலும் சில துணிகள் உங்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்குமென்று திருமணமான புதிதில் சசிரேகாவே கணவனுக்காகப் பார்த்துப்பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருந்தவை.

ஒருவேளை அந்த நினைவு தந்த கோபத்தினால் தான் இப்படி அனைத்தையும் எடுத்துக் கொடுத்திருப்பானோ என்ற சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

ஆனால் நாளுக்குநாள், பிரச்சனை ஒரு நாள் சரி யாகிவிடுமென்ற நம்பிக்கையே சசிரேகாவை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போய்க் கொண் டிருந்தது.

யோசிக்க யோசிக்க தன்னுடைய கணவனா இந்த அளவிற்கு நடந்து கொள்கிறானென்று இருந்தது.

அப்படியொன்றும் தன்னுடைய கணவன் அநியாயத் திற்குத் துணை போகக் கூடியவனல்லவே, அப்படி யிருக்கும் போது அவன் செய்யும் தவறைத் தட்டிக்கேட் டால் மட்டும் அவனுக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது.

ஒருவேளை நாம் அதைத் திரும்பவும் கேட்டுவிடக் கூடாதென்பதற்காகத்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறானோ,

இப்படியெல்லாம் எதையெதையோ எண்ணித் தேவை யில்லாமல் தன்னையே குழப்பிக்கொண்டவள், ஒரு வேளை கணவனின் மேல் எந்தத் தவறும் இல்லாமல் இருக்கலாமோ என்னும் ஒரு நோக்கில் மட்டும் யோசிக் காமல் போனது தான் அவளுடைய துரதிர்ஷ்டம்.

இப்பொழுதெல்லாம் கணவனின் முகத்தைப் பார்ப் பதே அரிதாகி விட்டிருந்தது சசிரேகாவுக்கு.

அதற்குமேல் அவனைப் பார்க்க நேர்ந்தாலும் எங்கே என்ன சொல்லிவிடப் போகிறானோ என்ற காரணம் புரியாத பயம் வந்து அவளை நடுங்கச் செய்தது.



''கொஞ்சம் என் ரூமுக்கு வா'' என்று தனது அத்தை முன்னே செல்ல, சில வினாடிகளில் அவருடைய அறைக்குச் சென்றாள் சசிரேகா.

''உக்காரு.''

''பரவாயில்ல அத்தெ சொல்லுங்க.''

''என்னம்மா உங்க ரெண்டு பேருக்குள்ள என்ன பிரச்சன?'' என்று நேரடியாக விஷயத்திற்கே வந்தாள் அவள்.

என்னவென்று சொல்வது.

என்னதான் தான் அவனுக்கு வேண்டாத மனைவி யாகவே இருந்தாலும் அவனைப்பற்றித் தன்னால் அது வும் அவனுடைய தாயிடமே எப்படிக் குறை சொல்ல முடியும்.

''என்னமா பேசு''

.........

''புருஷன் பொண்டாட்டிக்குள்ள கருத்து வேறுபாடு வர்றது சகஜம் தான், ஆனா அது இப்பிடி எல்லாருக்குமே தெரியற மாதிரி நடந்துக்கலாமா?''

அது தெரிய வேண்டியது அவருடைய பிள்ளைக்கல் லவா.

...........

''என்னமா பேசு''

...........

''அதுவும் இந்த மாதிரி சமயத்துல எந்நோமும் நீ கவலைப்பட்டுக்கிட்டே அழுதுக்கிட்டே இருந்தா பிறக்கப் போற குழந்தைக்கும் அது நல்லதில்ல.''

............

"நீ ஒன்னு மட்டும் நல்லாத் தெரிஞ்சுக்கோ ஷ்யாமப் பொறுத்த வரைக்கும் அவன் எந்தத் தப்புக்கும் துணை போறவன் கிடையாதுங்கறது மட்டுமில்ல, செய்யற வனும் கிடையாதுங்கறது எல்லாருக்கும் தெரியும்."

"அதே நம்பிக்கை உம்மேலயும் எனக்கு இத்தனை நாளா இருந்ததால தான் நான் எதுவும் கேக்க வேண் டாம்னு பாத்தேன்."

"சரி எப்படியோ எதனாலேயோ கருத்து வேறுபாடு வந்துடுச்சு, அத நீங்க ரெண்டு பேருந்தான உங்களுக் குள்ள பேசி சரி பண்ணிக்கணும்"

"எப்பவும் குடும்பத்துக்குள்ள ஒரு பிரச்சனன்னா பொண்ணுங்க தான் விட்டுக் குடுத்துப் போயாகணும், நீ அதப் புரிஞ்சுக்கற விவரமான பொண்ணுங்கற நம் பிக்கை எனக்கு இன்னும் இருக்கு அதக் கெடுத்துக்காத."

"என்ன நடந்திருந்தாலும் அவன் உன் புருஷந்தான. அவனோட மனநிலையைப் புரிஞ்சு அவன் கோபப் படாத மாதிரி எடுத்துச் சொல்லி கூடிய சீக்கிரம் உங்க பிரச்சனையத் தீத்துக்கற வழிய நீதான் பாத்தாகணும்."

"ஆனா..." என்று பேச்சை நிறுத்திக்கொண்ட தனது அத்தையைப் பார்த்தாள் சசிரேகா.

"ஷ்யாமப் பொறுத்த வரைக்கும் காரணமில்லாம அவசரப்பட்டு யார் மேலயும் கோபப்பட மாட்டாம்மா, அதனால நீதான் என்ன பிரச்சனைன்னு பாத்து அத சரி பண்ணிக்க முயற்சி பண்ணனும்."

"புருஷன் பொண்டாட்டிப் பிரச்சனைக்குள்ள மத்த வங்க அது நாங்களே ஆனாலும் தலையிட்றது நல்லா



இருக்காதுங்கறதோட, அத உன் புருஷன் விரும்பவும் மாட்டான்."

"தன்னை யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதுங் கறதுக்காகவே அவனோட சின்ன வயசுலிருந்தே எல்லா விஷயத்துலயும் ரொம்பவும் பாத்துதான் நடந்துக்கு வான், அதனாலேயே நானோ உன் மாமாவோ அவனுக்கு அட்வைஸ் பண்ணியே பல வருஷங்களுக்கும் மேலாச்சு. அட்வைஸ் பண்ற அளவுக்கு அவன் நடந்துக்கிட்டதும் இல்ல."

"உங்களுக்குள்ள என்ன பிரச்சனைன்னு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்."

"அத்தையா மட்டுமில்லமா உன்னோட அம்மாவா இருந்தும் சொல்றேன், தயவு செஞ்சு உங்க பிரச்சனயத் தீத்துக்கறதுக்கு இனிமேலாவது முயற்சி செய்."

"சரி அத்தை" என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்திருந்தவளுக்கு அழுகை தான் வந்தது.

அவர்களுடைய மகனின் மேல் தவறு இருக்காதாமே.

என்னுடைய அம்மா இருந்திருந்தாலும் எனக்காக இப்படித்தானே பரிந்து பேசியிருப்பார்களென்று நினைத் தவள் இல்லாத தனது தாயை நினைத்து அதற்கும் வெகுநேரம் அழுது தீர்த்தாள்.

அதுவும் குடும்பத்தில் ஒரு பிரச்சனையென்றால் பெண் தான் விட்டுக்கொடுத்துப் போயாக வேண்டு மென்கிறாரே, அவருடைய மகன் செய்தது மட்டும் தெரிந்தால் அவரால் இப்படியெல்லாம் பேச முடியுமா?

எதையெதையோ எண்ணி அழுதழுது சோர்ந்து போனவள், அப்படியே தூங்கிப் போய் விட்டிருந்தாள்.

மீண்டும் அவள் விழித்தெழுந்தபோது நேரம் மதியத் தைத் தாண்டியிருந்தது.

தனக்காக இல்லையென்றாலும் தனது வயிற்றில் வளரும் சிசுவுக்காகவாவது சாப்பிட்டாக வேண்டுமே என்று கீழேசென்று மதிய உணவை எடுத்துக் கொண் டாள்.

பசியில்லாமல் கட்டாயத்திற்கு சாப்பிட்டதாலோ என் னவோ, குமட்டிக் கொண்டு வர, வெளியே ஓடிச்சென்று குடலே வெளியோ வந்துவிடும் போல வாந்தியெடுக்க ஆரம்பித்தாள்.

வெகுநேரம் குமட்டிக் குமட்டி வாந்தியெடுத்ததில் மயக்கம் வரும் போலிருக்க, அப்படியே சென்று சுவ ரோரமாக இருந்த ஒரு கல் பெஞ்ச்சில் தலை சாய்த்துக் கண்கள் மூடி அமர்ந்து விட்டிருந்தாள்.

பின்னாலேயே தண்ணீருடன் வந்த அமுதா மரு மகளை வாய் கொப்புளிக்க வைத்து, கொஞ்சம் சுடு தண்ணீரையும் குடிக்கக் கொடுத்தார்.

அன்றிலிருந்து ஒரு தாயாகவும் இருந்து அவர் சசி ரேகாவை நன்கு கவனித்துக் கொண்டார்.

சற்றே முகம் வாடித் தெரிந்தாலும் ஓய்வெடுக்கச் சொல்வது, வாய்க்குப் பிடித்ததை செய்து கொடுப்பது சத்தான ஆகாரங்களை உணவில் சேர்த்துக் கொள்ள வைப்பது என்று தன்னைப் பிரமாதமாகப் பார்த்துக் கொண்ட தனது அத்தையின் கவனிப்பில் உள்ளம் நெகிழ்ந்து போனாள்.



உண்மையிலேயே தனது தாய் தான் மீண்டும் உயிர்த் தெழுந்து வந்து விட்டாரோ என்று எண்ணுமளவிற்கு அவருடைய அரவணைப்பு இருந்தது.

ஆனாலும் இனி இவளை மகன் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்பது தெரிந்திருந்ததால் தான் அவர் தன்னை இந்த அளவு கவனித்துத் தைரிய மூட்டுகிறாரா என்றும் சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

# 18

ஆனால் அவளுடைய கணவனோ தனது அன் னைக்கு நேர் எதிராகிக் கொண்டு வந்தான்.

இந்த சிறு பிரிவு நிரந்தரப் பிரிவுக்கு வழிவகுத்து விடுமோ என்ற பயம் இப்பொழுது சில நாட்களாக சசி ரேகாவுக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

''அண்ணி என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''வா ஸ்மிர்த்தி சும்மாதான் உக்காந்திருக்கேன்.''

''உங்களுக்குக் குடிக்கறதுக்கு என்ன வேணும்னு மம்மி கேட்டுட்டு வர சொன்னாங்க.''

''ஒன்னும் வேண்டாம்மா. இரு நானே போய் சொல் லிட்டு வந்துடறேன்'' என்று எழப்போன சசிரேகாவை முந்திக் கொண்டு சென்றாள் ஸ்மிர்த்தி.

"நீங்க உக்காருங்க அண்ணி நானே போய் சொல்லிட்றேன்" என்று சென்றவள் "கடைசிக்கு மம்மி இதயாவது உங்களக் குடிக்க சொன்னாங்க" என்று ஜூஸ் டம்ளருடன் திரும்பி வந்தாள்.

"வேண்டாமே ஸ்மிர்த்தி."

"அடப்புடிங்க அண்ணி, மம்மி சொல்றதென்ன நீங்க குடிக்கலன்னா நானே விடமாட்டேன்."

ஜூஸ் வாசனை குமட்டிக்கொண்டு வருமே என்று மனதிற்குள் பயந்து கொண்டே வாங்கிக் கொண்டாள் சசிரேகா.

"எப்பக் குட்டிப்பாப்பாவப் பாக்கப்போறோம்னு ரொம்ப ஈகரா இருக்கண்ணி."

"இன்னும் ஒரு ஸெவன் மந்த்ஸ்" என்றாள் சசிரேகா.

அந்த ஆவல் தனக்கு இல்லையே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அனைவரை விடவும் ஆவல் கொள்ள வேண்டிய அதன் தந்தையோ அவனது குழந்தையோடு அதைச் சுமந்து கொண்டிருப்பவளையும் சேர்த்துக் கைகழுவி விட்டிருந்தானே.

அங்கே சுற்றி இங்கே சுற்றி மீண்டும் நினைவுகள் அவளுக்குத் தன்னுடைய கணவனிடம் தான் வந்து நின்றன.

கணவனின் பாராமுகத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்தவளுக்கு, அவன் தவறே செய்திருந்தாலும் அதைத்தான் கண்டு கொள்ளாமல் விட்டிருக்கலாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.



உடனே அந்த அளவுக்கா கணவனின் துணைக்கு ஏங்கிக் கிடக்கிறோமென்று, தன் மேலேயே கோபமும் வந்தது.

"சசி."

தனது அத்தை அழைக்க, "இதோ வர்றேன் அத்தெ" என்று எழப் போனாள் சசிரேகா.

"ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டியிருக்குமா, அதுக்கு இத்தனநாளா இந்துவும் ராஜீவும் தான் போறதா சொல்லிட்டிருந்தாங்க. ஆனா இப்ப திடீர்னு அவங்களுக்கு வேற ஃபங்ஷனிருக்குன்னு அதுக்குப் போயாகணும்னு சொல்றாங்க. இப்ப நீயும் ஷ்யாமும் தான் போயாகணும்."

அவர் சொல்லச்சொல்ல எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டு நின்றாள் சசிரேகா.

"என்னமா?"

"சரி அத்தெ, நீங்க என்ன சொல்றீங்களோ அப்பிடிப் பண்ணிக்கிறேன்."

"ஷ்யாம் அர மணி நேரத்துல வந்துடுவாம்மா, நீ இப்பவே போய் கிள்மபினாதான் சரியா இருக்கும்."

என்னதான் தனது அத்தையிடம் சரியென்று விட்டு வந்து கிளம்பிக் கொண்டிருந்தாலும், மனதிற்குள் ஒரு இனம் புரியாத பயம் பரவுவதை சசிரேகாவால் தடுக்க முடியவில்லை.

பார்த்தாலே ஆகாதென்பவன், உடன் அழைத்துச் செல்வானா. அதோடு இன்னொரு முறை அவன் எரிந்து விழுந்தால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தன்னிடம்

இருக்கிறதா என்னும் நிச்சயம் அவளுக்கே இல்லா திருந்தது.

குளித்துவிட்டு வந்து உடைமாற்றிக் கொண்டிருந் தவள் ''சசி'' என்று அழைத்துவிட்டுத் தனது அத்தை வர நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னமா இவ்வளவு சிம்பிளான சேலயக் கட்டிட் டிருக்க?''

''ஏன் அத்தெ, இது வேண்டாம்னு சொல்றீங்களா?''

''ஆமாம்மா'' என்றவர் தானே சென்று சசிரேகாவின் செல்ஃபிலிருந்து ஒரு விலையுயர்ந்த பட்டுச்சேலை ஒன்றை எடுத்து வந்தார்.

''இந்தாமா இதக் கட்டிக்கோ ''என்றவர்'' உங்கிட்ட இருக்கறதுலயே இதுதான் ஓரளவுக்காவது இருக்கு கொஞ்சம் நல்லதா ஒரு பத்து சேலையாவது இருக்க வேண்டாமா ஒரு நாளைக்கு நானே கூட்டிட்டுப் போய்ப் பாத்து எடுத்துத் தர்றேன்'' என்றார்.

இதுவே முப்பத்தாயிரத்திற்கும் மேல் விலை, இதை விட நல்லதென்றால் என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் எடுத்துக் கொடுத்த சேலையை மருமகள் உடுத் திக் கொண்டதும் அதிலிருக்கும் குறைகளை சரிசெய்து விட்டவர், அந்த சேலைக்குப் பொறுத்தமான ஒரு வைரக்கல் செட்டை எடுத்து அணிவித்து விட்டார்.

சிறுசிறு அலங்காரங்களுக்குப் பிறகு சசிரேகாவைப் பார்க்கத் தன் கண்ணே பட்டுவிடும் போலிருக்க, ஆனால் அது மகனுடைய கண்களில் படவேண்டுமே என்று நினைத்தார் அமுதா.



என்ன ஏற்கனவே ஒல்லியான உடல் வாகு உடை யவள் தாய்மையின் ஆரம்ப கட்டத்தால் மேலும் இளைத் திருக்க, அது மட்டும் ஒரு குறையாகத் தெரிந்தது.

''சரிமா நீ மெதுவா வா நான் கீழே போறேன்'' என்று தனது அத்தை சென்றிருக்க சில நிமிடங்களில் தானும் கீழே இறங்கி வந்திருந்தாள் சசிரேகா.

''ஒரு நிமிஷம் திரும்புமா'' என்று ஒரு மொட்டு மல்லிகைச் சரத்தைக் கொண்ட வந்து தனது அத்தை வைத்துவிட, ''வாவ் அண்ணி!'' என்று வந்தாள் ஸ்மிர்த்தி.

''அண்ணி நீங்க நிஜமாவே இவ்வளவு அழகா? எனக்கே உங்களப் பாத்துட்டே இருக்கலாம் போலி ருக்கு.''

வெளியே கார் வந்து நிற்கும் ஓசையும், அதைத் தொடர்ந்து தனது கணவனின் குரலும் கேட்க, ஸ்மிர்த் திக்கு பதில் சொல்லிக்கொண்டே உள்ளே வந்து விட் டிருந்தாள் சசிரேகா.

மருமகளின் தயக்கம் அமுதாவின் கண்களில் படத் தவறவில்லை.

தொடர்ந்து உள்ளே வந்த சிறிய மகனைப் பார்த்தவர், ''வா கண்ணா சாப்பிட டிஃபன் கொண்டு வந்து குடுக் கட்டுமா?'' என்று கேட்டார்.

''வேண்டாம்மா டி மட்டும் ஒரு கப் குடுங்க. ஆமா என்ன நீங்க பாட்டுக்கு திடீர்னு கூப்புட்டு கல்யாணத் துக்குப் போகணுங்கறீங்க...?''

''ஆமாம்பா கண்டிப்பாய் போயாக வேண்டிய கல் யாணம் அதான்......''

''இன்னைக்கு ஒரு நாள் பரவாயில்ல எனக்கு அந்த வழியா வேற ரெண்டு வேலையும் இருக்கு'' என்றவன் ''இனிமேல் சொல்றதா இருந்தா ஒரு ரெண்டு நாளாவது முன்னாடி சொல்லுங்க'' என்றான்.

''சரிப்பா'' என்றவர் மகனுக்கு டி எடுத்து வருவதற்காக உள்ளே செல்ல, ''சரி நான் போய் சீக்கிரம் கிளம்பி வந்துட்றேன் நீங்களும் கிளம்புங்க'' என்று தாயின் பதிலுக்குக்காகக் காத்திருக்காமல் வேகமாகத் தன் அறையை நோக்கிச் சென்றான் ஷ்யாம்சுந்தர்.

பதினைந்து நிமிடங்களில் அவன் திரும்பி வந்தபோது ''இந்தா கண்ணா டீ எடுத்துக்கோ'' என்று வந்தார் அமுதா.

தாயிடம் டீ டம்ளரை வாங்கிக் கொண்டே ''என்னம்மா நீங்க இன்னும் கிளம்பாம இருக்கீங்க?'' என்று கேட்டான்.

'நானா?''

''ம்.''

''நான் வரலப்பா, மருமக தான் வர்றா'' என்று அப்பொழுது ஹாலுக்குள் வந்த சசிரேகாவைக் காட்டிச் சொன்னார் அவர்.

எதுவும் பேசாமல் ஒரு சில வினாடிகள் மனைவியைப் பார்த்தவன், ''என்னமா விளையாட்றீங்களா?'' என்று கேட்டான்.

''என்னப்பா?''

''அப்ப இங்க நீங்களே டிரைவரக் கார எடுக்கச் சொல்லிப் போய்ட்டு வந்திருக்கலாமே.''



''இல்லப்பா, நீங்க ரெண்டு பேரும் போய்ட்டு வந்தா நல்லா இருக்கும்னு பார்த்தேன்.''

''அட என்னமா நீங்க வீட்ல வேலையில்லாம ஜம்பமா உக்காந்து தின்னுட்டிருக்கறதுக்கும், பாத்துப்பாத்து மேக்கப் பண்ணிக்கறதுக்கும் சிலருக்கு முடியுதுதான. அப்படித் திங்கற சோத்துக்கு இந்த மாதிரி பலனாவது நமக்குக் கிடைக்கட்டுமே.''

''என்ன ஷ்யாம்...''

''அப்ப நீங்க வரல?''

''நான் வரலப்பா...''

''சரிமா அப்ப நான் கிளம்பறேன்.''

''மருகளக் கூட்டிட்டுப் போப்பா.''

''கண்டவங்களையெல்லாம் என்னால கூட்டிட்டுப் போக முடியாது.''

''ஷ்யாம்.''

குடித்து முடித்த காலி டீ டம்ளரை கீழே வைத்து விட்டு எழுந்தவன், ''என்ன எதுக்குமா தேவையில்லாமப் பேச வெக்கறீங்க நீங்க சொல்லலாம் ஆனா அதுக்கான தகுதி நமக்கு இருக்கான்னு அந்த ஜென்மங்கள் யோசிக்க வேண்டாம்.'' என்றான்.

''வேண்டாம்பா, புள்ளத்தாய்ச்சிப் பொண்ண அப்படியெல்லாம் சொல்லாத.''

''அப்பிடின்னு தான் ரொம்பவும் தாங்கிட்டிருக்கீங்க இவ்வளவு இடம் குடுத்தீங்கன்னா அப்புறம் ரொம்பவும் மேல போகாம என்ன பண்ணுவாங்க'' என்றவன் சாவியை எடுத்துக்கொண்டு, வருகிறேனென்று கிளம்பி விட்டிருந்தான்.

மகன் சென்றதும் அங்கு ஒரு ஓரமாக நின்றிருந்த சசிரேகாவைத் திரும்பிப் பார்த்தார்.

கணவனின் வார்த்தை அம்புகள் வந்து நெஞ்சைப் பிளந்ததில் துடித்துப் போயிருந்தவள், தனது அத்தை தன்னைப் பார்ப்பதற்குள். ஓரளவு தனது முகபாவனையை சீராக்கிக் கொண்டிருந்தாள்.

''என்ன மன்னிச்சுடுமா.''

''ஐயோ என்ன அத்தெ பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க.''

''என்னவோ தெரியலையே இப்படியெல்லாம் அவன் யாரையுமே பேச மாட்டேனே'' என்றவரின் குரலில் இருந்த நம்பாமை சசிரேகாவுக்கு வெளிப்படையாகவே தெரிந்தது.

''அதனால என்ன அத்தெ, உரிமை இருக்கறவங்களத் தான பேச முடியும்.''

சமாதானப்படுத்தப்பட வேண்டியவளே தன்னை சமாதானப்படுத்துவதைப் பார்க்கப் பாவமாக இருந்தது அவருக்கு.

எப்பொழுதும் மற்றவர்கள் தன்னைப் பார்த்துப் பரிதாபப்படுவதை அவள் விரும்பமாட்டாள் என்பதால் அவர் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

முடிந்த அளவுக்கு மற்றவர்களின் முன்பு எதையும் காட்டிக் கொள்ளக் கூடாதென்று சமாளித்துக் கொண்டு வந்திருந்தவளுக்கு, தன்னுடைய அறைக்கு வந்ததும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிற்று.



முதல் வேலையாக பட்டுச்சேலை நகைகளைக் கழற்றிப் போட்டவள், திருமணத்திற்கு முன்பு தான் எடுத்திருந்த பழைய சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

என்ன செய்தும் மனம் சமாதானப்பட மறுத்தது.

சர்வ சாதாரணமாக என்னவெல்லாம் பேசி விட்டான்.

கண்டவளை அழைத்துப் போக முடியாதாமே

இவன் செய்த தவறைத் தட்டிக்கேட்ட ஒரே காரணத் திற்காகத் தாலி கட்டிய மனைவி கண்டவள் ஆகி விடு வாளா.

ஜம்பமாக வேலை செய்யாமல் அமர்ந்து தின்று கொண்டிருப்பதாகச் சொல்கிறானே, வீட்டில் வேலைக் காரர்கள் நான்கு பேர் இருந்தும் அனைத்து வேலை களையும் இழுத்துப் போட்டு செய்யும் தனக்கு இது தேவை தான்.

என்ன முயன்றும் சசிரேகாவுக்கு மனம் ஆற மறுத்தது.

தனது அத்தையே சொல்வதைப் போல இந்த அள விற்குக் கீழ்த்தரமாகப் பேசக் கூடியவனல்ல தன் கணவன், சந்தேகமே இல்லை அவனுக்குத் தன்னை சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அதை முகத்திற்கு நேராக சொல்ல முடியாமல் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்.

கடவுளே நான் என்ன செய்வேன் வா என்று அழைக்கக் கூட தனக்கு யாருமே இல்லையே, தனியாள் என்றாலும் பரவாயில்லை வயிற்றில் குழந்தையை வேறு சுமந்து கொண்டு.

எதையெதையோ எண்ணிக் கண்களில் நீர் வற்றி விடும் அளவிற்கு வெகுநேரம் அழுது தீர்த்தாள்.

அப்படியே சோர்ந்து போய்க் கண்மூடிப் படுத்துக் கிடந்தவள், யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தாள்.

தனது அத்தை உள்ளே வருவதைப் பார்த்து எழுந்து அமர்ந்தாள்.

''இந்தாம்மா டிஃபன் சாப்பிட நீ வரக் காணோமேன்னு நானே எடுத்துட்டு வந்தேன்'' என்றவரிடம், ''இப்ப நானே வரலாம்னு தான் இருந்தேன் அத்தெ'' என்று படுக்கையை விட்டு எழுந்தாள் சசிரேகா.

அழுதழுது வீங்கியிருந்த சசிரேகாவின் முகமும் சிவந்து போயிருந்த கண்களும் அவரது கண்களில் படத் தவறவில்லை.

டிஃபனைப் பிளேட்டில் பறிமாறித் தனது அத்தை கொடுக்க வாங்கிக் கொண்டாள் சசிரேகா.

''உக்காந்து சாப்புடுமா.''

சசிரேகா இரண்டு வாய் எடுத்து சாப்பிட்டிருக்க ''சரிமா மெதுவா இன்னும் கொஞ்சம் வெச்சு சாப்பிடு நான் கீழே போறேன்'' என்று இறங்கிச் சென்றார் அமுதா.

அவர் இருந்திருந்தால் அவருக்காகவாவது இன்னும் கொஞ்சம் சாப்பிட்டிருப்பாளோ என்னவோ ஆனால் அவர் இறங்கிச் சென்றதும் மீண்டும் கணவன் சொன்னது தான் நினைவுக்கு வந்தது அவளுக்கு.

ஜம்பமாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னானே, அதுமட்டுமா தாங்கத் தாங்கத் தான் மேலே போவதாகவும்.



கையில் உணவை எடுத்து சாப்பிடக் கூட முடியாத அளவுக்கு கண்ணீர் கண்களை மறைத்துக் கொள்ள, ப்ளேட்டை அப்படியே கீழே வைத்து விட்டிருந்தாள் சசிரேகா.

கடவுளே இப்படியெல்லாம் கணவனால் அதுவும் தன்னைப் பேச எப்படி முடிந்தது.

நாளுக்குநாள் தன்மேல் அவனுக்கு வெறுப்பு அதிகமாகிக்கொண்டே போகிறதே, இது நிரந்தரமாகி விடுமோ.

அதற்குமேல் எதையும் யோசிக்கக் கூட முடியாத அளவுக்கு மனதிற்கு ஒரு மாதிரியாகிவிட, பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தாள்.

# 19

ஷ்யாம்சுந்தர் திரும்பி வந்தபோது நேரம் இரவு பத்து மணிக்கும் மேலாகி விட்டிருந்தது.

மனைவி ஒன்றும் சாப்பிடவில்லையென்பது ப்ளேட்டில் பரிமாறப்பட்ட எடுக்கப் படாமலிருந்த உணவிலிருந்து தெரிந்தது.

கட்டிலின் ஓரத்தில் குறுகிப் படுத்திருந்த மனைவியின் இளைத்த உடலைப் பார்த்தவனுக்கு நெஞ்சுக்குள் என்னவோ செய்தது.

தன்னுடைய நிம்மதியைத் தான் கெடுத்தாள் என்றால் அவளும் ஒன்றும் நன்றாக இருப்பது போலத் தெரிய வில்லையே.

மனைவி செய்தது பெரிய தவறு தான் முட்டாள்தனம் தான், ஆனால் இப்பொழுது நாம் செய்து கொண்டிருப்பது,

அதிலும் இப்பொழுது மனைவி இருக்கும் நிலைக்கு அவளை எப்படியெல்லாம் தாங்க வேண்டும்.

தன்னையறியாமல் மனைவியை நோக்கி நீண்டு விட்ட தனது கையை மீண்டும் இழுத்துக் கொண்டான் ஷ்யாம்சுந்தர்.

எனக்குத் தெரிந்து ஒருத்தி தெரியாமல் இன்னும் எத்தனை பேரோ என்றாளே.

சொன்னது மட்டுமா, இன்னும் அப்படித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

பாவமென்று சற்றே இளகத் தொடங்கியிருந்த மனதை மீண்டும் கல்லாக்கிக் கொண்டிருந்தான் ஷ்யாம்சுந்தர்.

மேலும் ஒரு வாரம் கடந்திருந்தது.

உனது முகத்தில் விழிப்பதே பாவமென்பதைப் போலக் கண்களாலேயே வெறுப்பை உமிழும் கணவ னின் செய்கையில் இப்பொழுதெல்லாம் தனிமையில் சென்று கண்ணீர் வடிப்பதே வழக்கமாகப் போய் விட் டிருந்தது சசிரேகாவுக்கு.

மேலும் மேலும் அவனது கோபத்தையும், வெறுப் பையும் அதிகப்படுத்தித் தன்னுடைய மனதையும் புண்படுத்திக் கொள்ள வேண்டாமென்று, இப்பொழுது



சில நாட்களாகக் கணவன் இருக்கும் இடத்திலிருந்து வெகுதூரம் ஒதுங்கிப் போகவும் ஆரம்பித்திருந்தாள்.

நியாயமாகப் பார்த்தால் கணவனின் மீது நாம்தான் இப்படி வெறுப்பையும் கோபத்தையும் காட்ட வேண்டு மென்று நினைத்தவளுக்கு இப்பொழுதிருக்கும் தலை கீழான நிலையை நினைத்து சிரிப்புக் கூட வந்தது.

மதிய உணவிற்குத் தேவையான காய்களை எடுத்து நன்றாகக் கழுவியவள், எதையெதை எப்படிச் செய்ய வேண்டுமென்று முத்தையாவிடம் சொல்லிக் கொடுத்து விட்டு வந்தாள்.

டைனிங்ஹாலில் இருக்கும் தனது அத்தை அழைக்க, அருகில் சென்றாள்.

''சொல்லுங்க அத்தெ.''

''அந்தக் கண்ணாடி டம்ளர எடுமா'' என்றவர், சசிரேகா எடுத்துக் கொடுத்ததும் அதைத் தான் பிழிந்து வைத்திருந்த ஆரஞ்சு ஜூஸால் நிரப்பினார்.

''எடுத்துக்கோமா'' என்றவர் சசிரேகாவின் தயக்கத் தைப் பார்த்துவிட்டு என்னவென்ற கேட்டார்.

''இவ்வளவு வேண்டாம்' அத்தெ.''

''என்ன நீ காலைல ரெண்டு இட்லிய சாப்டுட்டு அதோடயே மதியம் வரைக்கும் இருக்கப் போறியா? ஒன்னும் பேசக் கூடாதுன்னு தான் நானும் இருக்கேன் முதல்ல எடுத்துக் குடி.''

''ஹாய் மம்மி' எனக்கும் ஜூஸ்'' என்று அவருடைய மகள் ஸ்மிர்த்தி வர, ''இதோ போட்றேம்மா'' என்றார்.

''இப்பத்துக்கு வேணும்னா நாங்க ரெண்டு பேரும் இதயே ஷேர் பண்ணிக்கறோம் அத்தெ'' என்று சசிரேகா

தயங்கிக் கொண்டே சொல்ல, ''என்னவோ செய்ங்க'' என்று விட்டிருந்தார் அமுதா.

மற்றொரு டம்ளரை எடுத்து சொன்னது போலவே அதில் பாதியை ஊற்றி ஸ்மிர்த்தியிடம் சசிரேகா கொடுக்க, ''என்ன அண்ணி விட்டா எல்லாத்தையும் எனக்கே ஊத்திடுவீங்க போலிருக்கே'' என்றாள் அவள்.

''இல்லயே சரியா பாதியத்தானே ஊத்தியிருக்கேன் நல்லாக் கண்ணைத் திறந்து பாரு.''

''சரிதான் வாங்க நீங்க வந்து பாருங்க முதல்ல'' என்று ஸ்மிர்த்தி அந்த இரண்டு டம்ளர்களையும் எடுத்து அதனருகில் வைக்க, நீ நானென்று மகளும் மருமகளும் விளையாட்டாகத்தான் என்றாலும் சரிக்கு சரியாகப் பேசி சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்து அமுதாவிற்கும் சிரிப்பு வந்து விட்டது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு சசிரேகாவின் முகத்தில் தெரிந்த சிரிப்பும், சந்தோஷமும் அவரையும் மிகவும் சந்தோஷப்பட வைத்திருந்தது.

ஆனால் இவையனைத்தையும் பக்கத்து அறையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இந்துமதிக்கோ வயிறு எரிய ஆரம்பித்திருந்தது.

ஆரம்பத்தில் இதே அத்தை அந்த சசிரேகாவைப் பார்த்தாலே தனக்கு ஆகாதென்பதைப் போல எப்படியெல்லாம் நடந்து கொண்டார், இப்பொழுது விட்டால் அவளுக்கு ஊட்டியே விடுவார் போல்.

இதைக்குடி அதை சாப்பிடு என்றெல்லாம் என்ன கவனிப்பு. எதற்குமே வழியில்லாத அவளுக்கு இந்த



அளவு இடம் கொடுத்தால் பிறகு அவள் எப்படி அனைவரையும் மதிப்பாள்.

ஸ்மிர்த்தி என்று அழைத்துக் கொண்டே இந்துமதி வர, ''என்ன அண்ணி?'' என்று கேட்டாள் அவள்.

''எங்க இங்கிருந்த மந்த்லி , வீக்லி மேகஸின்ஸ் எதையுமே காணல?''

''தெரியலையே அண்ணி.''

''நாந்தான் படிக்க மேல எங்க ரூமுக்கு எடுத்துட்டுப் போனேன்'' என்று சசிரேகா சொல்ல, ''அப்பப்போய் எடுத்துட்டு வா. சொல்லிட்டு நீ பாட்டுக்கு நின்னுக்கிட்டா எல்லாம் அது பாட்டுக்கு கால் முளைச்சு இறங்கி வந்துடுமா?'' என்றாள் இந்துமதி.

''இதோ போறேன்'' என்று சென்ற சசிரேகா இரண்டு நிமிடங்களில் அந்தப் புத்தகங்களுடன் திரும்பி வந்தாள்.

சசிரேகாவின் கையிலிருக்கும் புத்தகங்களைப் பார்த்தவள், ''என்ன இவ்வளவு தான் இருக்கா?'' என்ற கேட்டாள்.

''இனி ரொம்பவும் பழைய புக்ஸ் மட்டும் தான் மேல இருக்கு.''

''நீ படிச்சுட்டதுனால உனக்கு எல்லாம பழைய புக்ஸ் ஆயிடுச்சு. நான் இன்னும் அதுல ஒன்னக் கூட படிக்கலயே போ அதையும் போய் எடுத்துட்டு வா'' என்று இந்துமதி சொல்ல, மீண்டும் சென்றாள் சசிரேகா.

சசிரேகா கொண்டு வந்து கொடுத்த புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிக் கொண்ட இந்துமதி ''ஏதோ உன் தகுதிக்கு ஏத்த மாதிரியான புக்ஸ மட்டும்

எடுத்துட்டப் போக வேண்டியது தான எதுக்கு இங்கிலிஷ் மேகஸின்ஸையெல்லாம் எடுத்துட்டுப் போய் பந்தா பண்ணிட்டிருக்க?'' என்றுவிட்டுப் போனாள்.

தமிழ், ஆங்கில வார, மாத இதழ் எதுவானலும் புதியவை வந்தவிட்ட பிறகே பழைய இதழ்களைத் தான் படிக்க மேலே எடுத்துச் செல்வது சசிரேகாவின் பழக்கம். அதற்குமேல் புதிய இதழ்களைப் படிக்க வேண்டுமென்று தோன்றினால் அங்கேயே இருந்து படித்துவிட்டுப் பிறகு அதே இடத்திலேயே வைத்தும் விடுவாள்.

அதிலும் இப்பொழுது சில நாட்களாகக் கண்டதை எண்ணிக் கலங்கும் மனதிற்குக் கடிவாளமாகத் தான் வேலையில்லாமல் சும்மா ஓய்ந்து கிடக்கும் நேரம் முழுவதிலும் புத்தகங்களைப் படிப்பதில் கவனத்தைத் திரும்பியிருந்தாள்.

அப்படித்தான் அந்த இதழ்கள் அனைத்தையும் சசிரேகா தன் அறைக்கு எடுத்துச் சென்றிருந்ததும்.

ஏதோ உன் தகுதிக்கு ஏற்ற மாதிரி தமிழ் இதழ்களை எடுத்துச் செல்ல வேண்டியது தானே என்கிறார்களே. சென்ட்ரல் போர்டு சிலபஸில் படித்த தனக்கு இன்னும் ஆங்கிலம் ஹிந்தி இரண்டு மொழிகளிலும் கூட எழுத படிக்க பேச என அனைத்தும் மிக நன்றாக வருமென்பது தெரிந்தால்,

ஆனால் நன்றாக யோசித்துப் பார்த்தவள் தன்னை ஏதோ ஒரு வழியில் மட்டம் தட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக மட்டும் தானே இந்துமதி இப்படியெல்லாம் செய்கிறாள் என்று முயன்று தனது



எண்ணப் போக்கை வேறு திசையில் திருப்பிக் கொண்டாள்.

''வாங்க வாங்க.''

வீட்டிற்குள் வந்த இந்துமதியின் பெற்றோரை மிகவும் சந்தோஷமாக வரவேற்றார் அமுதா.

''வாங்க, நல்லார்க்கீங்களா? உங்காருங்க.''

''நாங்க நலம், நீங்க எல்லாரும் நல்லார்க்கீங்களா?'' என்று அவர்கள் அமரவும், ''ஹாய் மம்மி டாடி வாங்க வாங்க'' என்று புன்னகையுடன் இந்துமதி ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

சில வினாடிகளில் ஸ்மிர்த்தியும் ஹாலுக்கு வந்து வீட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றாள்.

''என்னமா காலேஜ் முடிச்சுட்ட, இனி மேலபடிக்கலையா?''

''படிக்கணும் ஆன்ட்டி, ஸ்வேதா, நிவேதா நல்லார்க்காங்களா?''

''ஆமாம்மா, நெக்ஸ்ட் மந்த் வர்றாங்க.''

தன்னை அன்னை அழைக்க திரும்பி என்னவென்று கேட்டாள் ஸ்மிர்த்தி.

''உன் சின்ன அண்ணியக் கூப்பிடுமா.''

''இதோ சொல்றேன் மம்மி'' என்று ஸ்மிர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்து விட்டிருந்த சசிரேகா, வந்தவர்களை வரவேற்றுப் பேசிவிட்டுப் பிறகு தனது அத்தையைப் பார்த்தாள்.

அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டவள், ''இதோ போறேன் அத்தெ'' என்று நகர்ந்தாள்.

''என்னமா உங்க சின்ன மருமகளுக்கு உடம்புக்கு என்ன பிரச்சன?'' என்று கேட்ட தனது சம்பந்தி அம்மாவிடம் ''அப்படியெல்லாம் எதுவுமில்லையே'' என்றார் அமுதா.

''பின்ன இவ்வளவு ஒல்லியாய் பாக்கறதுக்கு உடம் புக்கு ஏதோ பிரச்சனை இருக்கற மாதிரித் தெரியறாளே!!

''ஓ மெலிஞ்சிருக்கறதப் பாத்துட்டுக் கேக்கறீங் களா?'' என்றவர், ''அவளோட உடம்பு வாகே அப்படித் தான் அதோட இப்ப விஷேசமா இருக்காளே அதுவும் ஒரு காரணம்'' என்றார்.

''அவங்கம்மா மாதிரி இவளுக்கும் ஏதாவது பெரிய வியாதி இருக்குமோன்னு எனக்கொரு சந்தேகம், அதான் கேட்டேன் வேற ஒன்னுமில்ல.''

டிஃபன் ப்ளேட்டுகளுடன் உள்ளே வந்து கொண் டிருந்த சசிரேகாவுக்கு, இந்துமதியின் தாய் தன்னைப் பற்றிச் சொன்னது தெளிவாகக் கேட்டது.

மற்றவர்களின் உணர்ச்சிகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமல் எப்படி இவர்களால் இப்படியெல்லாம் பேச முடிகிறதென்று நினைத்தவளுக்கு அழுகை வந்து விட்டது.

''எடுத்துக்கோங்க'' என்று தயங்கிக் கொண்டே சென்று அவர்களின் முன்பு டிஃபன் ப்ளேட்டை வைத் தவள்,

''எதுக்கும் இன்னொரு முறை கூட டாக்டர்கிட்டக் கூட்டிட்டுப்போய் கம்ப்ளீட் செக்கப் பண்ணிடுங்க''



என்று இந்துமதியின் தாய் தனது அத்தையிடம் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

மற்றவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டு மென்றே பேசுபவர்களை என்ன செய்வது, என்ன மறுத்துப் பேசினாலும் மேலும் பேச்சை வளர்க்கத்தான் செய்வார்களென்பதால் பேச்சின் திசையை மாற்றினார் அமுதா.

டிஃபன் எடுத்துக் கொள்ளச் சொல்லி இந்துமதியின் பெற்றோரை உபசரித்தவர், சசிரேகாவிடம் ''இனி நீ போய் ரெஸ்ட் எடுத்துட்டு நீலாகிட்டக் குடுத்தனுப்பு'' என்று சொல்லியனுப்பினார்.

ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் வந்த தன்னை தனது அத்தை பார்ப்பது தெரிய ''நீலா இல்ல அத்தெ'' என்று மெதுவாக அவருக்கு மட்டும் கேட்கும் விதமாகச் சொன்னவள், ஹாலில் சற்று உள்ளே தள்ளி அமர்ந் திருந்த இந்துமதியின் பெற்றோரை நோக்கிப் போனாள்.

அவள் கார்பெட்டில் கால் வைக்கப் போவதற்கு ஒரு சில வினாடிகள் முன்பு வரை கூட கார்பெட்டில் சுருக்கம் எதுவும் இல்லாமல் எப்பொழுதும் இருப்பது போல இருந்ததாகத்தான் சசிரேகாவிற்கும் தோன்றியது.

ஆனால் அதில் கால் வைத்த அந்த வினாடி அவளை யறியாமலேயே கால் தட்டிவிட, கீழே விழப் போனவள், பிறகு எப்படியோ தனக்குத்தானே சமாளித்து நின்றாள்.

அப்படி அவள் விழப்போய் பிறகு சமாளித்து நின்ற அந்த சில வினாடிகளில் ட்ரேயிலிருந்த டம்ளரிலிருந்து சிதறியிருந்த கொஞ்சம் காஃபி இந்துமதியின் மேல் விழுந்திருந்தது.

சும்மாவே எகிறும் இந்துமதியோ அதற்குப் பிறகு கோபத்தின் உச்சிக்கே சென்றிருந்தாள்.

"எனக்குத் தெரியும் இவளுக்கு எப்பவுமே எம்மேல பயங்கரமான பொறாம. நீங்க எல்லாரும் இருக்கும் போதே இவ செஞ்சிருக்கற வேலயப் பாத்தீங்களா" என்றவள், முகத்தில் தெரியும் கோபத்தை மறைக்கக் கூட முயலாமல் எரித்து விடுவதைப் போல சசிரேகாவைப் பார்த்தாள்.

"அதிலும் இவள் எந்த அளவிற்கு மோசமானவளாக இருந்தால் கல்யாணமாகி இரண்டே மாதங்கள் கூட ஆகியிருக்காத போதே ஷ்யாம் இவளை அவரது முகத்திலேயே விழிக்க வேண்டாமென்று சொல்லி யிருப்பார்.

அதுவும் அத்தையின் பெருந்தன்மையான குணத் திற்கு இவளையெல்லாம் கூட மேலே தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள், இவள் செய்யும் தவறுகளைத் தட்டிக் கேட்டாலே இவள் திருந்துவது கடினம். அப்படி யிருக்கும்போது மேலும் மேலும் இவளுக்கு இடம் கொடுத்துக்கொண்டே போனால் முடிவை நினைத்துப் பார்க்கவே எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது."

இப்படி இந்துமதி பாட்டுக்குத் தொடர்ந்து பேசிக் கொண்டே போக, அனைவருக்கும் காஃபியைக் கொடுத்து முடிக்கும் வரை கூட சசிரேகாவால் அழுகையைக் கட் டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஒருவழியாக அனைவருக்கும் கொடுத்து முடித்து விட்டு சமயலறைக்கு செல்லத் திரும்பியவளை "ஒரு நிமிஷம்" என்று அழைத்தாள் இந்துமதி.



பெருமுயற்சி செய்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்ட திரும்பி இந்துமதியைப் பார்த்தாள் சசிரேகா.

"தயவுசெஞ்சு நான் பேசினதத் தப்பா எடுத்துக்காத. நான் உன்ன என் கூடப் பிறந்த தங்கை மாதிரி தான் நினைச்சுட்டிருக்கேன், அந்த ஆதங்கத்துல தான் மத்த வங்களப் பாத்து நீ பொறாமப்பட்ற குணத்தையெல்லாம் விடணும்னு சொன்னேன் அவ்வளவுதான்."

இந்துமதி உருக்கமாக சொல்லச்சொல்ல ஒருவித ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனாள் சசிரேகா. ஒருவேளை நாம் அப்படித்தான் இருக்கிறோமோ என்று ஒருவினாடி அவளுக்கே தோன்றத் தொடங்கி விட்டி ருந்தது.

அவளுக்கே அப்படியிருக்கும்போது அங்கிருக்கும் மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதே இருக்க வில்லை.

சமயலறைக்குள் சென்று ட்ரேயை வைத்தவளுக்குக் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது.

சில வினாடிகளில் என்னவெல்லாம் சொல்லி விட் டாள்.

அப்படித் தாங்கள் கீழே விழுந்தும் கூட மற்றவர் களின் மீது காஃபியை சிந்தித்தான் ஆக வேண்டு மென்று யாராவது செய்வார்களா.

நன்கு கவனமாகத்தான், அதுவும் கையில் சூடான காஃபி கப்கள் இருந்ததால் கூடுதல் கவனத்துடனும் பொறுமையுடனும்தான் அவள் சென்றதே, அப்படியிருக் கும் போது எப்படிக் கால் தட்டிவிட்டது.

அதிலும் அந்தக் கார்பெட்டின் மேல் எப்படியும் ஒரு நாளைக்குப் பத்திருபது முறை நடப்பவளும் ஆயிற்றே.

என்ன யோசித்தும் தான் எப்படித் தடுமாறினே னென்பது மட்டும் சசிரேகாவுக்கு விளங்கவே இல்லை.

ஆனால் அதற்கு இந்துமதி பேசிவிட்டிருந்த வார்த் தைகள்.

# 20

எதையெதையோ எண்ணிக் குழம்பியதில் மனம் மிகவும் பாரமாகிவிட, என்ன முயன்றும் சசிரேகாவுக்கு அன்று இரவு ஒரு வினாடி கூடத் தூக்கம் பிடிக்க வில்லை.

எவ்வளவு அழகாக ஜோடித்து அனைவரும் நம்பும்படி யாகத் தன்மேல் அப்படியொரு பழியைப் போட்டாள்.

அந்தப் பிரச்சனைக்குப் பிறகு தனது அத்தை தன்னைப் பார்க்கும் பார்வையில் ஒருவித ஏளனம் கலந்திருப்பது போலவே பட்டது சசிரேகாவுக்கு.

இனி அவருடைய அன்பும் ஆதரவும் கூடத் தனக்குக் கிடைக்காமல் போய்விடுமோ.

முதலில் கணவனிடமிருந்து...

என்ன தோன்றியதோ தனது கணவனைத் திரும்பிப் பார்த்தாள் சசிரேகா.



சீராக ஏறி இறங்கிய மார்புக்கூடு அவன் நல்ல தூக்கத் தில் இருப்பதைக் காட்டியது.

கம்பீரமான கணவனின் முகம் ஏனோ பொய்யோடு சிறிதும் ஒத்துப் போகாததைப் போலத் தோன்றியது அவளுக்கு.

ஒரு வினாடி அப்படி நினைத்து விட்டவளுக்கு அதற் குப் பிறகு அதற்குத் தகுந்தாற்போன்ற காரணங்கள் மட்டுமே நினைவுக்கு வந்து கொண்டே இருந்தன.

மிகவும் நல்லவரென்று ஒருவரின் மேல் ஓரிருவர் வேண்டுமானால் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்திருக்கலாம், ஆனால் தன்னுடைய கணவனைப் பொறுத்தவரை அவன்மேல் ஒரு சிறு தவறு இருக்கக் கூடுமோ என்னும் நோக்கில் பார்க்கக்கூட யாரும் தயா ரில்லையே.

அப்படியானால் நாம் தான் தவறு செய்து விட்டாமோ.

கடவுளே...

நாளை முதல் வேலையாக அஞ்சலியை அழைத்து இந்த விஷயத்தைப் பற்றி விவரமாகப் பேசிவிட வேண்டு மென்ற முடிவுக்கு வந்த பின்னரே சசிரேகாவால் சிறிது நேரமாவது கண்ணுறக்கம் கொள்ள முடிந்தது.

உடனே அஞ்சலியிடம் பேச வேண்டுமென்று மனம் துடித்தாலும் காலை பத்து மணி வரை வேலைகளே சரியாக இருந்தன.

பழம் நழுவிப் பாலிலேயே விழுந்தது போல அஞ்ச லியே வீட்டிற்கு வந்திருக்க, மீண்டும் இந்த விஷயத் தைப் பற்றி இவளிடம் பேசியாக வேண்டுமே என்னும்

சங்கடத்தை மனதிற்குள் மறைத்துக்கொண்டு புன்னகை யுடன் வரவேற்றாள் சசிரேகா.

ஆனால் அதற்குப்பிறகு நடந்த விஷயமோ மனதிற்கு சற்றும் திருப்தி அளிக்காததோடு, ஒரு பெரிய பாறாங் கல்லையும் தலையில் தூக்கிப் போட்டுவிட்டுப் போன தில் துடித்துப் போனாள்.

ஆனாலும் அடிமனதில் தோன்றிய ஒரு இனம் புரியாத நிம்மதியையும் சசிரேகாவால் நன்றாகவே உணர முடிந்தது.

இந்துமதி சொன்னபடி அஞ்சலிக்குப் பிடித்த விதமாக காஃபியைக் கலக்கி முடித்தவள் அதைக் கொண்டு போய்க் கொடுப்பதற்கு யாரும் இல்லாததால் தானே எடுத்துச் சென்றாள்.

இரவு இந்துமதி பேசியதனைத்தும் நினைவுக்கு வந்து நெஞ்சை கனக்கச் செய்தது.

இந்துமதியின் அறை வாயிலுக்குச் சென்றிருந்தவள் உள்ளே தன்பெயர் அடிபட்டதில் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

''என்ன அஞ்சலி எட்டியே பாக்க மாட்டேங்கற அந்த அளவுக்குப் பெரிய ஆள் ஆயிட்டாயா?''

''இல்லையே இந்துக்கா, நான் வந்துட்டேதான் இருக் கேன்.''

''சரி நம்பிக்கறேன்.''

''என்னக்கா நீங்க. அது சரி ஏன் இந்தப் புது சேலய இப்பிடிப் போட்டு வெச்சிருக்கீங்க?''

''அத ட்ரை வாஸ்க்குக் குடுக்கணும்.''



''எடுத்து ஒரு வாரம் கூட ஆகல, அதுக்குள்ளே கட் டிட்டிங்களா?''

தன்னைப் பற்றிய பேச்சை விட்டுவிட்டு இந்து மதியும் அஞ்சலியும் வேறு எதையோ பேச ஆரம்பித் திருக்க, உள்ளே செல்வதற்காக ஒரு அடி எடுத்து வைக்கப் போனாள் சசிரேகா.

ஆனால் அதற்குள் அஞ்சலியின் கேள்விக்கு இந்துமதி சொன்ன பதிலைக் கேட்டவளுக்கு, நெஞ்சு பதறி விட்டது.

''அது ஒரு பெரிய ஜோக்'' என்று சிரித்த இந்துமதி யிடம் ''அது என்னக்கா?'' என்று கேட்டாள் அஞ்சலி.

''நேத்து நான் கார்பெட்டக் கால்ல சுருட்டி விளை யாடிட்டிருந்தப்ப அந்த வழியா அம்மா அப்பாவுக்குக் காஃபி கொண்டு வந்த சசிரேகா அதுல கால் தட்டி ட்ரே யில வெச்சுட்டிருந்த காஃபிய எம்மேல சிந்திட்டா?''

''அச்சச்சோ, உங்க மேலயும் விழுந்துடுச்சா?''

''ம்கூம், சேலைல மட்டும் தான். ஆனா...''

''என்னக்கா?''

''அவ ட்ரேய கெட்டியாப் பிடிச்சிருந்தா எம்மேல சிந்தி யிருக்காது தான, அதான் இருக்கற கோபத்தையெல்லாம் காட்டி நேத்து நல்லாத் திட்டி விட்டேன். என்ன அஞ்சலி எதுவும் பேச மாட்டேங்கற?''

''இல்ல ரொம்ப காஸ்ட்லி சேலையாச்சே அதான்கா பார்த்தேன், ஆமா என்னவெல்லாம் சொல்லித் திட்டினீங்க சொல்லுங்களேன் நானும் கொஞ்சம் காது குளிரக் கேட்டு என்ஜாய் பண்றேன்.''

''அதுவா?'' என்ற இந்துமதி நேற்று தான் பேசிய வார்த்தைகளை ஏற்ற இறக்கத்துடன் சுவாராஸ்யமாக சொல்லச்சொல்ல, அதைக் கேட்டு விழுந்துவிழுந்து சிரிக்கலானாள் அஞ்சலி.

சை மனிதாபிமானமே இல்லாமல் இப்படியெல்லாம் கூட இவர்களால் எப்படி நடந்து கொள்ள முடிகிறது. அத்தோடு நேற்று அவ்வளவு கீழ்த்தரமாகத் தன்னைப் பேசி விட்டதுமல்லாமல், அதற்கான குற்ற மனப்பான் மையோ ஆதங்கமோ சிறிதும் இருப்பது போலத் தெரியவில்லையே என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இப்பொழுதே உள்ளே அவர்களுக்கு முன்னால் போய் நின்றால் என்னவென்று நினைத்தவளுக்கு, அத்தோடு அதிர்ச்சி முடிந்து விட்டிருக்கவில்லை.

''போதும்கா வயிறே வலிக்கிது, இனி என்னால் சிரிக் கவே முடியாது. ஆமா அப்ப ஷ்யாமும் அவளும் இப்ப சுத்தமாவே பேசிக்கிறது கிடையாதா?''

''ம்கூம், பேசிக்காதது மட்டுமா, ஷ்யாம் அவள வீட்ட விட்டுத் துரத்தாதது தான் குறை வேற ஒரு பொண்ணா இருந்திருந்தா ரோஷம், மானம். எல்லாம் முக்கியம்னு கிளம்பி யும் போயிருப்பா. ஆனா இவ எங்க, அதோட அவளுக்கு வேற நாதியும் கிடையாதே. என்ன அஞ்சலி ஏன் சிரிக்கற?

''இப்ப அவங்க ரெண்டு பேருக்கும் இடையில விழுந் திருக்கற விரிசலுக்கான மூல காரணமே நாந்தான்.''

''என்ன சொல்ற, கொஞ்சம் புரியற மாதிரி பேசு.''

''ஆமாக்கா, ஷ்யாம் எங்கூடத் தப்பான எண்ணத் தோட பழகினதா இன்னும் அப்படிப் பழகிட்டுருக்கறதா நான் அவகிட்ட சொன்னேன்.''



''அதோட நான் அவர்கிட்டிருந்து விலகிப் போக ணும்னு நினைச்சாக் கூட விட மாட்டேங்கறார் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல நீதான் அதுக்கு எப்பிடி யாவது உதவி பண்ணனும்னு நான் உருகிக் கேட்டுக் கிட்டத அப்படியே உண்மைன்னு நம்பிட்டா.''

சொன்னதோடு மட்டுமல்லாமல் மேலும் மேலும் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட அஞ்சலி, ''நானும் ஷ்யாமும் நெருக்கமா இருக்கற போட்டோஸப் பாத் துட்டு பேயறஞ்ச மாதிரி ஆயிட்டாக்கா. விஞ்ஞானம் வளந்துட்ட இந்தக் காலத்துல எந்த போட்டோவ எப்பிடி வேணும்னாலும் நாம இணைக்கலாம்னு கூடத் தெரியாத முட்டாளா இருக்கா. இருந்திருந்து ஷ்யாம்க்கு இப்பிடி யொரு மனைவி'' என்றாள்.

''ஓ நானும் கூட என்ன காரணத்துனால ஷ்யாம் இப் பிடி மாறினார்னு தெரியாம மூளயப் போட்டுக் கசக்கிட் டிருந்தேன், அப்படிப்போடு அப்ப அவ அவரோட கேரக்டரையே தப்பாப் பேசிட்டாளா'' என்று இந்துமதி தனக்குத்தானே சொல்லிக் கொண்டிருக்க, ''யார் என்ன சொன்னாலும் அப்பிடியே நம்பிடுவா போலிருக்குக்கா'' என்றாள் அஞ்சலி.

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டுத் திரும்பிய இந்துமதியும், அஞ்சலியும் கோபத்துடன் தங்களுக்கு முன்னால் வந்து நின்றிருந்த சசிரேகாவைப் பார்த்தனர்.

மூச்சு வாங்கத் தங்களுக்கு முன்னால் வந்து நின்றிருந் தவளிடம் அஞ்சலி ''என்ன?'' என்று கேட்க ''நீயெல் லாம் ஒரு குடும்பப் பொண்ணு தானா?'' என்று கேட் டாள் சசிரேகா.

''ஏய் நாக்க அடக்கிப் பேசு, அதோட யார்கிட்ட என்ன பேசறோங்கறத யோசிச்சுட்டுப் பேசு.''

''அது சரிதான், உங்கிட்டப் பேசறதுக்குக் கொஞ்சம் யோசிக்கத் தான் வேணும். ஒழுக்கத்த உயிரா மதிக்கற பொண்ணுங்கள மட்டும் தான் இதுவரைக்கும் நான் பாத்திருக்கேன் நீ சொன்னதையெல்லாம் வேற யாராவது வந்து சொல்லியிருந்தா நம்பியிருப்பேனோ என்னவோ தெரியல, ஆனா உன்ன ஒழுக்கம் கெட்டவன்னு நீ உன் வாயாலயே சொல்லவும் தான் ஐயோ பாவம்னு நம்ப வேண்டியதாயிடுச்சு. ஆனா இப்பத்தான் தெரியுது நீ எவ்வளவு கீழ்த்தரமா நடந்துக்கிட்டேங்கறது.''

கடவுளே இவள் சொன்னதை நம்பிக் கொண்டு எவ்வளவு பெரிய தவறை செய்து விட்டிருக்கிறோமென்று மனதோடு உடலும் நடுங்க, அதை அப்படியே வார்த்தைகளாக வெளிப்படுத்திய சசிரேகாவை ஏளத்துடன் பார்த்தாள் அஞ்சலி.

''ஏய் என்ன நீ விட்டாப் பேசிட்டே போவ போலிருக்கு. சரி உனக்கு உம்புருஷன் மேல நம்பிக்கை இருந்திருந்தா நான் சொன்னத நம்பிட்டுப் போய் நீ அவரக் கேட்டிருப்பியா?''

செய்வதையெல்லாம் செய்துவிட்டுத் தன்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வேறு கேள்வி கேட்கிறாளே என்று நினைத்த சசிரேகாவுக்குத் தான் செய்து விட்டிருந்த அசட்டுத்தனத்தினால் கண்கள் கலங்கி விட்டிருக்க, அழுது வேறு அவர்களுக்கு முன்னால் மேலும் தன்னைக் கீழிறக்கிக் கொள்ள வேண்டாமென்று முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



''அதுலயும் நிஜமாவே ஷ்யாம் அந்த மாதிரி இருந்தாக் கூட உன்ன மாதிரி ஆதரவில்லாத நிலைல இருக்கிறவ அதக் கண்டும் காணாம பொறுத்துத்தான் போயாகணும்''

அப்படிச் சொன்ன இந்துமதியின் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தாள் சசிரேகா.

''நேத்து நான் கீழ விழப்போனதே உங்களால தான். ஆனா அதுக்கு மேலயும் எனக்குத்தான் உங்கமேல பொறாம அது இதுன்னு உங்க கோபத்தையெல்லாம் காட்டித் திட்டினீங்களே, உண்மைய சொல்லுங்க அப்ப நிஜத்துல உங்களுக்குத்தான் எம்மேல பொறாம இல்லையா?''

''சரி உங்க பாயின்ட் ஆஃப் வியூல இருந்தே கேக்கறேன் அப்படி எதுவுக்குமே வழியில்லாத, எந்த நாதியுமே இல்லாத என்னப் பார்த்தே நீங்க பொறாமப்பட்றீங்கன்னா அப்ப உங்க நிலம....?''

''ஏய் அளவாப் பேசு'' என்று கோபத்துடன் இடைமறித்த இந்துமதியைப் பார்த்து விரக்தியுடன் சிரித்தாள் சசிரேகா.

''அளவா என்ன அதக்கூடப் பேசக்கூடாதுன்னு தான் நான் இருந்தேன். கல்யாணமான ரெண்டு மாசத்துலயே ஷ்யாம் இவள முகத்துல கூட விழிக்க வேண்டாம்னு சொல்லிட்டார்னு சொன்னீங்களே, உண்மதான் ஒத்துக்கறேன். ஆனா அதுக்குக் காரணம் இந்த அஞ்சலி.''

''ரொம்பப் பெரிய தப்பே செஞ்சிருந்தாலும் அத நினைச்சு வருந்தி இனிமேலாவது தன்னத் திருத்திக்கணும்னு ஆசப்பட்றாளேன்னு அவளுக்கு உதவி செய்யறதா நினைச்சுட்டு நானே என் தலைல மண்ண வாரித்

கொட்டிக்கிட்டேன் உண்மைதான்'' என்று சொல்லி முடிப்பதற்குள்ளேயே அழுகையில் கண்கள் கலங்கி விட்டிருந்தன சசிரேகாவுக்கு.

அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''தயவு செஞ்சு இனிமேல் இப்பிடி யார் வாழ்க்கையிலும் விளை யாடிட வேண்டாம்'' என்று அஞ்சலியிடம் உணர்ந்து சொல்லிவிட்டு வெளியே செல்வதற்காக ஒரு எட்டு எடுத்து வைத்த சசிரேகாவை ''ஒரு நிமிஷம்'' என்று தடுத்தாள் இந்துமதி.

திரும்பி என்ன என்பதைப் போல இந்துமதியைப் பார்த்தாள் சசிரேகா.

''இனி உன் பக்கம் அஞ்சலி வரமாட்டா அதுக்கு நான் கியாரண்டி. என்னதான் இப்ப நீ ரொம்ப உருக்கமாப் பேசினாலும் அப்பிடி அவசரப்பட்டு நீ ஷ்யாம எதுவும் கேட்டிருக்கக் கூடாது, அவர் ஒன்ன முடிவு பண்ணிட்டா அவ்வளவு சீக்கிரம் மாற மாட்டார்னு எல்லாரும் சொல்லுவாங்க. எதுக்கும் பெஸ்ட் ஆஃப் லக்.''

இந்துமதியின் ஏளனப் பார்வையும் பேச்சும் இனி அவ்வளவுதான் உன் வாழ்க்கை என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருக்க, ஐயோ என்று கதறி அழ வேண்டும் போலத் துடித்த மனதை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சசிரேகா.

அன்று இரவு தான் வீடு திரும்பும் போது மணி பத் தரைக்கும் மேல் ஆகியிருக்க, வழக்கமில்லாத வழக்கமாக தங்களது அறையில் இன்னும் லைட் எரிந்து கொண் டிருப்பதைக் கண்டான் ஷ்யாம்சுந்தர்.



உள்ளே வந்தவனுக்கு கட்டிலில் அமர்ந்துகொண்டு கையிலிருக்கும் புத்தகம் எதையோ பெயருக்குப் பார்த்துக் கொண்டிருந்த மனைவி கண்களில் பட்டாள்.

எதையும் கண்டு கொள்ளாமல் கணவன் தன்பாட் டுக்கு இரவு உடையுடன் பாத்ரூமுக்குள் செல்வது தெரிந்தது சசிரேகாவிற்கு.

சிறிது நேரத்தில் குளித்து, பிரஸ் செய்துவிட்டு வெளியே வந்தவனின் முன்பாக தயக்கத்துடன் பின்னிப் பிணைந்து கொண்ட கால்களால் பிரம்பப்பிரயத்தனப் பட்டு நடந்து போய் நின்றாள் சசிரேகா.

தனக்கு முன்னால் வந்து வழியை மறைத்துக் கொண்டு நின்றிருந்த மனைவியைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையில் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தாலும், நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்திருந்த அவனது அருகாமை நெஞ்சுக்குள் என்னனென்னவோ செய்தது.

ஆனாலும் என்ன என்பதைப் போலத் தன்னைத் பார்த்த கணவனின் எரிச்சல் கலந்த பார்வை, அந்த சுகத்தைத் தொடர்ந்த அனுபவிக்க முடியாமல் செய்தது.

''நான்......''

கடவுளே எந்த முகத்தை வைத்துக்கொண்டு நான் உங்களைத் தவறாக நினைத்துப் பேசி விட்டேன் என்னை மன்னித்து விடுங்களென்று கேட்பது, வாயைத் திறந்து பேச ஆரம்பித்திருந்தாலும் வந்த அழுகை மேலே பேச விடாமல் தடுத்து விட்டிருந்தது.

மேலும் சில வினாடிகள் பொறுத்துப் பார்த்தவன் மனைவியை சுற்றிக் கொண்டு கட்டிலுக்கு வந்திருக்க,

திரும்பி மீண்டும் கணவனுக்கு முன்பாக வந்து நின் றிருந்தாள் சசிரேகா.

இப்பொழுது கணவனின் முகத்தில் எரிச்சலோடு கோபமும் தெரிய, ''நான்.... நான் உங்ககிட்டப் பேசணும்'' என்று தயங்கிக்கொண்டே சொன்னாள்.

கணவனிடமிருந்து எந்த பதிலும் வராமல் போக, அவனுடைய மவுனத்தையே சம்மதமாக ஏற்று மேலே தொடர்ந்தாள் சசிரேகா.

''நான் உங்களத்.....'' என்றவளை அழுகை மீண்டும் பேச விடாமல் தடுக்க, இப்பொழுது எரிச்சலை வார்த்தை களிலேயே காட்டினான் அவளுடைய கணவன்.

''இன்னைக்கெல்லாம் உக்காந்து முதல்ல அழுதுமுடி. அதுக்கப்புறமும் சொல்ல உருப்படியான விஷயம்னு ஏதாவது இருந்தா நாளைக்கு சொல்லு'' என்றவன் படுப்பதற்காகக் கட்டிலில் அமர்ந்து விட்டிருந்தான்.

''ஷ்யாம்... நான் உங்களத் தப்பா நினைச்சு ஏதேதோ சொல்லிட்டேன் என்ன மன்னிச்சுடுங்க ப்ளீஸ்....'' என்று ஒரு வழியாகத் தான் சொல்ல நினைத்ததை சொல்லி முடித்துவிட்டிருந்தாள் சசிரேகா.

கணவனின் முகத்தில் தெரிந்த விரக்தி கலந்த சிரிப்பு இதை என்னிடம் கேட்க நீ யார் என்று கேட்காமல் கேட்பதைப் போலிருந்தது.

எதுவும் சொல்லாமல் தூங்கப் போன கணவனைப் பார்த்து, ''ப்ளீஸ் ஷ்யாம் ஏதாவது பேசுங்களேன்'' என்றாள்.

''உனக்குத் தெரிஞ்சு அஞ்சலி மட்டும் தான் தெரி யாம இன்னும் எத்தன பொண்ணுங்க கூடப் பழகிட்



டிருக்கேன்னு கூடத் தெரியாம அவசரப்பட்டு வாய விடாத'' என்றான் அவளுடைய கணவன்.

''நான் செஞ்சது ரொம்பப் பெரிய தப்பு தான் ஷ்யாம். எவ்வளவு முட்டாள்தனமா நடந்துக்கிட்டேன்னு நினைச்சு இப்ப என் மனசு எப்பிடித் துடிக்கிது தெரியுமா?.. உடனே உங்களால என்ன மன்னிச்சுட முடியாதுன்னு எனக்கும் தெரி....''

''இங்க பாரு எனக்குத் தூக்கம் வருது, சும்மா வளவளன்னு வார்த்தைய வளக்கறது இன்னைக்குன்னு இல்ல என்னைக்குமே எனக்குப் பிடிக்காத ஒன்னு'' என்றவன் கட்டிலில் படுத்துக் கொண்டு தூங்குவதற் காகக் கண்களை மூடியிருந்தான்.

எதுவும் செய்யத் தோன்றாமல் அப்படியே சிலை போல நின்று விட்டிருந்த சசிரேகாவுக்குக் கண்கள் மட்டும் விடாமல் கண்ணீரைப் பொழிந்து கொண் டிருந்தன.

கடவுளே எப்பேர்ப்பட்ட வாழ்க்கையை நானே எனது அவசரத்தால் கெடுத்துக்கொண்டு விட்டேனென்று மனமும் ஊமையாய் அழுதது.

முன்பு எப்படியெல்லாம் இருந்தான், தொடாமல் அணைத்துக் கொள்ளாமல் அவனுக்குப் பேசவே தெரி யாதே.

கணவனின் பாராமுகமும், அதற்கு மேல் பார்த்துக் கொண்டால் விலக்கி தூர நிறுத்தி வைக்கும் அவனது வெறுப்புக் கலந்த பார்வையும், அந்தப் பழைய அன்பு கணவனிடமிருந்து இனி தனக்குக் கிடைக்கவே கிடைக் காதோ என்று சசிரேகாவை ஏங்கித் துடிக்க வைத்தது.

# 21

அன்று காலையில் குளித்துக் கிளம்பி வெளியே செல்வதற்குத் தயாராக வந்த ஷ்யாம்சுந்தர், தன்னைத் தாய் அழைக்க திரும்பினான்.

''சொல்லுங்கமா.''

''ஷ்யாம் இன்னைக்கு நைட் டின்னருக்கு தேவராஜன் அங்கிள் ஃபேமிலி வர்றாங்க''

''அப்பா சொன்னார்மா.''

''அப்படியா, அவருக்கு சொல்ல வேண்டியதே இல்ல நேரத்துல வந்துடுவார். நீயும் இன்னைக்கு ஆஃபீஸ் லிருந்து கொஞ்சம் சீக்கிரம் வந்துட்றயாப்பா?

''சரிமா.''

''அப்புறம் கண்ணா....''

''என்னமா சொல்லுங்க.''

.............

அன்னையின் தயக்கம் ஆச்சரியத்தைக் கொடுக்க, ''என்னமா சொல்லுங்க'' என்றான்.

''நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதப்பா, நைட் அவங்க வரும்போது சசிகிட்ட கொஞ்சம் சிரிச்ச மாதிரி நடந்துக்கோயேன்....''



இதைத் தாய் தன்னிடம் கேட்காமலே இருந்திருக்க லாமோ என்று ஷ்யாம்சுந்தரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவர் கேட்பதைப் பார்த்தால் என்னவோ தான் தான் வேண்டுமென்றே பிரச்னை செய்து கொண்டிருப்பதைப் போலல்லவா இருக்கிறது.

''என்னப்பா?''

''இது பெருமையா வெளிய சொல்லிக்கற விஷயம் கிடையாதுன்னு தான் எனக்கும் தோனுது'' என்றவன், ''கவலப்படாதீங்கம்மா சசிரேகாவ அவங்க அப்பாவுக்கு முன்னாடி எதுவும் செஞ்சுட மாட்டேன்'' என்றுவிட்டுப் போனான்.

மகனின் முகத்தில் தெரிந்த லேசான எரிச்சல் தான் எதையும் கேட்காமலே இருந்திருக்கலாமோ என்று அமுதாவை நினைக்க வைத்தது.

நேராகக் காரைச் சென்றடைந்திருந்தவன், முன் பக்கக் கார்க் கதவைத் திறந்து தனது கையிலிருந்த ஃபைல்களை உள்ளே வைத்தான்.

அனைத்தையும் வைத்து முடித்துவிட்டு டிரைவர் ஸீட்டில் ஏறி அமரப் போனவன், மனைவி வேகமாகத் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்து அப்படியே நின்றான்.

அருகில் வந்து விட்டிருந்தவள் ''இத அங்கயே வெச்சுட்டு வந்துட்டிங்க அதான் எடுத்துட்டு வந்தேன்'' என்று மொபைல் போனை நீட்ட, '' அது அவசியமில்ல வேற போன் மாத்திட்டேன்'' என்றான் ஷ்யாம்சுந்தர்.

"ஓ" என்ற மனைவி தன்னை நோக்கி நீட்டியிருந்த கையை இறக்கிக் கொள்ள, அவ்வளவுதானே என்று கேட்பதைப் போன்ற முகபாவனையுடன் மீண்டும் காரில் ஏறி அமரப் போனான்.

ஆனால் அதற்கு முன்னரே "ஷ்யாம்" என்று மனைவி அழைத்துவிட்டிருக்க திரும்பி அவளைப் பார்த்தான் ஷ்யாம்சுந்தர்.

"நான் நைட் சொன்னதப் பத்தி நீங்க....."

"எனக்கு லேட்டாச்சு" என்று கணவன் தனது வாட்சைப் பார்க்க, "ப்ளீஷ் ஷ்யாம் நான் சொல்றத ஒரு நிமிஷம் கேளுங்களேன்" என்றாள் சசிரேகா.

மனைவியின் கெஞ்சலும் அவளது கண்களில் மாறி மாறித் தோன்றிய ஆசையும் நிராசையும், மறுத்து எதையோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போன வனைத் தடுத்து விட்டிருந்தன.

"நான் ரொம்பவும் முட்டாள்தனமாத்தான் நடந்துக் கிட்டிருக்கேன் ஷ்யாம், எம்மேல உங்களுக்கு இருக்கிற கோபம் நியாயமானது தான். அதுக்காக என்ன சுத்தமாவே வெறுத்துடுவீங்களா ஷ்யாம்?"

பொடிப்பொடியாக மனைவியின் உடலில் ஆங் காங்கே தெரிந்த வியர்வைத் துளிகளும் ஓடி வந்ததில் ஏறி இறங்கிய அவளது மார்புக் கூடும் தன்னை என் னவோ செய்ய, "என்ன பண்றது நினைக்கறப்ப மனச மாத்திக்கற சக்தி எனக்கில்லையே" என்றவன் உள்ளே டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்ந்த காரை ஸ்டார்ட் செய் திருந்தான்.



செய்வதையெல்லாம் செய்துவிட்டுத் தளுக்காக ஒரு ஸாரி கேட்பவர்களைக் கண்டாலே ஷ்யாம்சுந்தருக்கு எப்போதும் பிடிக்காது. ஆனால் மனைவியின் விஷயத் தில் அவளும் ஒன்றும் நிம்மதியாக இருப்பது போலத் தெரியவில்லையே.

தனது தாயின் அரவணைப்பாவது கிடைத்துக் கொண்டிருக்கிறதே என்ற நிம்மதியுடன் மனைவியைத் தொடர்ந்து அலட்சியப்படுத்திக் கொண்டிருந்தவனுக்கு இப்பொழுது சில நாட்களாக அதுவும் இல்லையென்பது கண்கூடாகவே தெரிந்தது.

அதற்குக் காரணம் என்னவென்பதும் அவனுக்குத் தெரிந்தே தான் இருந்தது.

தன்னையே என்னவென்று கேட்டுவிடும் இந்துமதிக் கும், அஞ்சலிக்கும் தனது மனைவி எம்மாத்திரம்.,

ஆனாலும் எனக்குத் தெரிந்து ஒருத்தி தெரியாமல் இன்னும் எத்தனை பேரோ என்று மனைவி சொன்னது மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து அவனது மனதை இளக விடாமல் செய்தது.

படட்டும், நன்றாகவே படட்டும். யோசிக்காமல் தான் பேசிவிட்டதை நினைத்து இன்னும் ஒவ்வொரு நாளும் வருந்தட்டும்.

எவ்வளவு திமிராக இன்னும் என்னவெல்லாம் பேசி னாள்.....

உள்ளே ஒரு ஓரத்தில் சற்றே இளகத் தொடங்கி யிருந்த மனதை மீண்டும் கல்லாக்கிக் கொண்டிருந்தான் ஷ்யாம்சுந்தர்.

அன்று இரவு ஷ்யாம்சுந்தர் வீட்டுக்கு வரும்போதே விருந்தினர்கள் அனைவரும் வந்திருந்தனர்.

அவனது தந்தை ஏற்கனவே கிளம்பி வந்திருக்க, கடைசியாக வந்த அவனுக்கும் ஏக வரவேற்பு கிடைத்தது.

தேவராஜன் அங்கிள் வீட்டிலிருந்து அனைவருமே வந்திருக்க, முக்கியமாக வந்திருந்த இளையவர்களுடன் நல்ல தோழமையுடன் வெகு சுவாரஸ்யமாகப் பேச ஆரம்பித்திருந்தான் ஷ்யாம்சுந்தர்.

சசிரேகாவுக்குத்தான் தனது தந்தையைத் தவிர, மற்ற யாரையுமே அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை, ஆனாலும், வந்திருந்தவர்கள் அனைவரும் தன்னிடம் நன்றாகப் பேசியதில் மனதிற்குள் சற்று இதமாக உணர்ந்தாள்.

ஆனால் என்ன தடுத்தும் அவர்களைப் பார்க்கும் போது தனது தாய் பட்ட வேதனைகள் தான் நினைவுக்கு வந்தன சசிரேகாவுக்கு.

இவர்கள் அனைவரும் குடும்பத்துடன் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள், ஆனால் தனக்குத் தெரிந்த வரை தன்னுடைய அன்னை தனக்காக மட்டும் தான் முகத்தில் சிரிப்பைப் பூசியிருந்தார்களோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தந்தையுடனான சந்தோஷமான நினைவுகளைப் பற்றி ஒரு சில முறை தனது அன்னை சொல்லிக் கேட்டது அப்பொழுது பார்த்து நினைவுக்கு வந்தது.

அளவுக்கு அதிகமான அன்பு வைத்துவிட்ட காரணத்தினால் தான் தனது தந்தை செய்த தவறைத் தனது தாயால் சுத்தமாக மறந்து விட முடியவே இல்லையோ.



அதிக அன்பு வைத்து விட்டவர்கள் பொய்த்துப் போகும் போது, அதை யாராலுமே தாங்கிக் கொள்ள முடியாதோ.

அந்த மாதிரிதான் இப்பொழுது கணவனாலும் தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள முடியவில்லையோ.

கடவுளே அப்படியானால் இனி ஷ்யாமுடைய அந்தப் பழைய அன்பு நமக்குக் கிடைக்காமலே போய்விடுமோ.

முன்பு தனது தந்தை செய்த தவறால் தாய் வேதனைப்பட்டார் என்றால், இப்பொழுது நாம் செய்த தவறால் வாழ்நாள் முழுவதும் அழ நேரிட்டுவிடுமோ என்று சசிரேகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதிலும் ஷ்யாம் எவ்வளவு உத்தமன், அவனைப் போய் அவசரப்பட்டு என்னவெல்லாம் சொல்லிவிட்டோம்.

அதற்குப் பிறகு என்ன முயன்றும் சசிரேகாவால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை.

வீட்டுக்கு வந்தவர்கள் கிளம்பும் வரை ஓரளவு தன்னை சமாளித்துக் கொண்டவள், அவர்கள் சென்றதும் பெயருக்கு உண்டுவிட்டு தங்களது அறைக்கு வந்து சேர்ந்திருந்தாள்.

தனது தந்தை முதல் வந்திருந்தவர்கள் அனைவரிடமும் நன்றாக சிரித்துப் பேசிய கணவனின் முகமே மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டே இருக்க, அப்பொழுதிருக்கும் மனநிலைக்கு அவன் தன்னிடம். எரிந்து விழுந்தால் அதைத் தன்னால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாதென்று மொட்டை மாடிக்குச் சென்றிருந்தாள்.

ஏனோ அவர்கள் வந்து சென்றதற்குப் பிறகு தனக்கும் ஷ்யாமுக்கும் இடையேயான விரிசல் மிகப்பெரிய பள்ளமாக மாறி அது தன்னையே உள்ளே இழுத்துப் போட்டு மூடிக் கொண்டதைப் போலத் துடித்துப் போனாள்.

அம்மா நீங்களும் எந்த ஆதரவுமின்றி இப்பிடித்தான் ஒவ்வொரு நாளும் துடித்தீர்களா,

வெகுநேரம் எதையெதையோ எண்ணிக் கொண டிருந்ததில் மனம் மிகவும் பாரமாகி விட, தன்னையறி யாமலேயே கதறி அழ ஆரம்பித்திருந்தாள் சசிரேகா.

என்னதான் தனது தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாலும், ஷ்யாம்சுந்தருக்கு மனம் முழு வதும் மனவியிடம் தான் இருந்தது.

சற்று முன்னர் தங்களது அறைக்குச் சென்றவள், எதுவும் சாப்பிட்டது போலத் தெரியவில்லையே.

தினமும் இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறாளோ.

அடுத்த வினாடியே ''சரிப்பா நாளைக்குப் பேசலாம்'' என்று எழுந்தும் விட்டிருந்தான்.

தங்களது அறைக்கு வந்திருந்தவன் மனைவியை அங்கு காணாததில், நேராக மொட்டை மாடிக்கு வந்திருந்தான்.

எதிர்பார்த்தது போலவே மனைவி அங்கு இருக்க, முழங்கால்களில் முகம் புதைத்துக் கொண்டு அழுகை யில் குலுங்கும் அவளது முதுகு தான் அவனுக்கு முத லில் தென்பட்டது.

''சசி.''



அருகில் சென்று மனைவியின் முதுகைத் தொட்டு அழைத்தான் ஷ்யாம்சுந்தர்.

தன்னை நிமிர்ந்து பார்த்தவளின் கண்களிலிருந்த தாரைதாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருக்க ''என்னாச்சு, அழுகைய முதல்ல நிறுத்து'' என்றான்.

தான் சொன்னதற்காக சில வினாடிகள் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்ட மனைவி மீண்டும் அழ ஆரம் பித்திருக்க, சற்று சத்தமாக மனைவியை அழைத்தான்.

''எதுக்கு இப்பிடி அழுதுட்டிருக்க, முதல்ல எழுந்து உள்ளே வா.''

கணவனின் அதட்டலில் கண்களைத் துடைத்துக் கொண்டவள், ''நான் அப்புறமா வர்றேன்'' என்றாள்.

''ஏன் இப்ப என்ன? முதல்ல எழுந்துரு.''

கணவன் தானும் நகராமல் அங்கேயே நின்று கொண டிருக்க, உடனே எழுந்தாள் சசிரேகா.

வேகமாக எழுந்தாலோ என்னவோ தலை சுற்றிவிட, ஒரு அடி முன்னால் வந்து கீழே விழப் போன மனை வியைத் தன்மேலேயே தாங்கிக் கொண்டான் ஷ்யாம் சுந்தர்.

ஆனால் அடுத்த வினாடியே தனக்குத்தானே சமாளித் துக் கொண்டவள், கணவனிடமிருந்து விலகியும் இருந் தாள்.

''சாப்டியா?''

''சாப்டாச்சு.''

''எதுக்கு இங்க பனில வந்து உக்காந்திருக்க?'' என்ற வன், மனைவியை அழைத்துக் கொண்டு கீழே தங்களது அறைக்கு வந்திருந்தான்.

''ஒழுங்கா நேர நேரத்துக்கு சாப்பிடாம, எந்நேரமும் அழுதுக்கிட்டு இப்படியெல்லாம் செஞ்சு பாக்கறவங்க மத்தியில உம்மேல சிம்பதி க்ரியேட் பண்ணட்டிருக் காத.''

கணவனின் வார்த்தைகளில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், ''அந்த மாதிரி மத்தவங்க என்னப் பாக்க ணுங்கறதுக்காகவெல்லாம் எதையும் செஞ்சு எனக்கு எப்பவும் பழக்கமில்ல'' என்றாள்.

''அதான் தெரியுமே, யோசிக்காம பட்டுப்பட்டுன்னு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசித்தான உனக்குப் பழக்கம்.''

''ஒரு தடவ ஒரு தப்பப் பண்ணிட்டேன் தான் அதுக் காக அதக் காலம் முழுக்க சொல்லிக் காட்டிட்டே இருப் பீங்களா?''

''ஒரு தடவ ஒரு கொலைய செஞ்சுட்டு தெரியாம பண்ணிட்டேன்னு சொன்னா சட்டம் விட்டுடுமா, அதுக் கான தண்டனைய அனுபவிச்சுத்தான் தீரணும்.''

''போதும் ஷ்யாம் ரொம்பவும் தான் கொல்லாதீங்க'' என்று மனம் நடுங்க சொல்லிவிட்டுத் திரும்பிய மனை வியின் கையைப் பிடித்துத் தன் பக்கமாக இழுத்தான் ஷ்யாம்சுந்தர்.

''யாரு நானா'' என்று குனிந்து மனைவியின் முகத் தைப் பார்த்தவன் ''இந்த மாதிரி சீரியஸா நான் எப்பவுமே இருந்ததில்ல'' என்றான்.

கணவன் தனது கையைப் பிடித்திருக்கும் இடத்தில் வலி அதிகமாக இருக்க, ''கையை விடுங்க'' என்றாள்.



''விட்றதா? தப்பு செஞ்ச நீ தண்டனைய அனுபவிக் கறது நியாயம் தான்'' என்றவன் மனைவியை மிக அருகில் இழுத்து அவளது உதடுகளை நோக்கிக் குனிந் தான்.

வெகு நாட்களுக்குப் பிறகு கணவனின் கைகளில் தன்னை மறந்து நின்றவள், அப்படியே அவனது மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

மனைவி மறுத்திருந்தால் என்ன செய்திருப்பானோ ஆனால் தனது அணைப்பில் மயங்கிக் கிடந்தவளைப் பார்த்தவன் ''மத்த பொண்ணுங்களோட உடம்பக் கம்பேர் பண்ணும் போது இந்த விஷயத்துல நீ கொஞ்சம் ஸ்பெஷல் தான்'' என்றான்.

தீப்பட்டாற் போலத் தன்னிடமிருந்து விலக முயன்ற மனைவியைத் தனது அணைப்பிலிருந்து விடுவிக் காமல், அவளது முகத்தைப் பார்த்தான்.

''என்ன நம்ப முடியலையா? உண்மயத்தான் சொல் றேன்.''

''போதும் ப்ளீஸ், எனக்கு பதிலடி கொடுக்கறோம்னு நினைச்சுட்டு உங்கள நீங்களே தாழ்த்திக்காதீங்க.''

''ஓ, அப்படின்னு வேற நீ கற்பன பண்ணிக்கிட்டயா?''

''கடவுளே நான் செஞ்ச தப்புக்கு வேற எப்பிடி வேணும் னாலும் தண்டன குடுங்க, ஆனா இப்பிடி வேண்டாமே ஷ்யாம்.''

அதற்கு மேல் ஷ்யாம்சுந்தர் மனைவியைப் பேச விட்டிருக்கவில்லை என்றாலும் அவன் பேசினான்.

பேசினான் என்பதை விட வார்த்தைகள் என்ற கொடுக் கினால் தேளாய்க் கொட்டினான்,

தன்னை விடுவித்துக் கொள்ள சசிரேகா செய்த முயற்சி நூறில் ஒரு பங்காகக் கூட அவனிடம் எடுபட வில்லை.

கணவனின் தொடுகை இந்த அளவிற்கு சகித்துக் கொள்ள முடியாததாகி விடுமென்று அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

பின் வந்த நாட்களிலும் அதுவே தொடர மனதோடு உடலளவிலும் தொய்ந்து போயிருந்தாள் சசிரேகா.

மனைவியின் வேதனை முதலில் சில நாட்கள் மனதிற்குத் திருப்தியைக் கொடுத்திருந்தாலும், போகப் போகத் தானும் நிம்மதியோடு தூக்கத்தையும் இழந்திருந் தான் ஷ்யாம்சுந்தர்.

ஆனாலும் பாவமென்று மன்னித்து விட்டுவிட அவ னால் இயலவில்லை.

எந்த அளவிற்குத் தன்னைக் கேவலமாகப் பேசினாள், அனுபவிக்கட்டுமென்று தான் இருந்தது.

அன்று காலையில் எழுந்து கீழே வரும்போதே சசி ரேகாவால் ஒன்றும் முடியவில்லை.

முன்னைப் போல தனது அத்தை தன்னிடம் எந்த விஷயங்களிலுமே அதிகமான அக்கறை கொள்ளாததில் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தாள்.

தன்னால் இயன்ற ஒருசில வேலைகளை மட்டும் செய்தவள், பிறகு காலை டிஃபனை முடித்துக் கொண்டு தன் அறைக்குச் செல்வதற்காக மாடியேறப் போனாள்.

அப்பொழுது வெளியே கிளம்புவதற்குத் தயாராக வந்த தனது கணவன் டிஃபன் சாப்பிடுவதற்காக டைனிங் டேபிளுக்கு செல்வது தெரிந்தது.



அனைத்தும் தயாராக எடுத்து வைக்கப்பட்டிருக் கிறதா என்று சென்று பார்க்கத் தோன்றினாலும், தேவை யில்லாமல் அவனையும் கோபப்பட வைப்பதோடு தானும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாமென்று பேசாமல் மேலே செல்லத் தொடங்கினாள்.

அப்படி அவள் நினைத்து சில வினாடிகள் கூட முடிந் திருக்காது, ''அம்மா'' என்ற கணவனின் அழைப்பில் அப்படியே நின்றிருந்தாள் சசிரேகா.

கடவுளே எதற்காக அவரை அழைக்கிறானென்று மனம் பதைக்க, ''என்னப்பா?'' என்று உடனே டைனிங் ஹாலுக்கு வந்திருந்தார் அவனது தாய் அமுதா.

''என்னமா இது? இன்னும் ஒரு டிஃபனக் கூடக் காணோம். நேரம் என்ன ஆகுதுன்னு பாத்தீங்களா?''

''இதோ ஒரு நிமிஷம் கண்ணா'' என்றவர் கிச்சனுக் குக் குரல் கொடுத்து தயாரான டிஃபன்களை உடனே எடுத்து வரச் சொன்னார்.

''என்னமா இது வரவர இதக்கூடப் பாக்க மாட்டேங் கறீங்க?''

''எனக்குக் கொஞ்சம் வெளிய போக வேண்டிய வேலை யிருக்கறதுனால கிளம்பிட்டிருக்கேன்பா. அதோட சசி ரேகா தான் இதையெல்லாம் எப்பவும் பாத்துட்டிருக்கா'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கீழே இறங்கி வந்திருந்தாள் சசிரேகா.

''என்னமா இப்பிடி ஏதோ ஒரு சில வேலைகளை யாவது முதல் செஞ்சுட்டிருந்த, இப்ப அதயும் விட்டுட் டியா?''

''இல்ல அத்தெ முத்தையா எடுத்து வெச்சிருப் பா்னு.....''

''அட என்னமா நீங்க, முடிஞ்சா இனிமேல் நீங்க எடுத்து வைங்க. அத விட்டுட்டு கண்டவங்க எல்லாம் எடுத்து வைப்பாங்கன்னு என்னால எதிர்பாத்துட்டிருக்க முடியாது.''

மகனின் பேச்சு அமுதாவிற்கே சற்று அதிகப்படியாகத் தோன்றினாலும் அப்போதைக்கு அதை அவர் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

எரிச்சலுடன் மருமகளைப் பார்த்தவர், ''புதுசு புதுசா வேலைகள இழுத்துப் போட்டு செய்யலேன்னாலும் பரவாயில்ல், நீ எப்பவும் செஞ்சுட்டிருக்கறதயாவது கொஞ்சம் பாத்துக்கோ'' என்றார்.

''இப்பிடியே போனா இனிமேல் எங்கிட்டப் பர்மிஷன் வாங்கிட்டுத் தான் எல்லாரும் சாப்பிடணும்னு கூட சொல்லிடுவா போலிருக்கு'' என்ற சாப்பிட ஆரம்பித் திருந்தான் ஷ்யாம்சுந்தர்.

''மருமக வந்தா எல்லாருக்கும் வேளைப்பளு குறைஞ்சு ரெஸ்ட் கிடைக்கும், ஆனா இங்க அவளுக்கும் சேத்தே எல்லாத்தையும் நான் செய்ய வேண்டியிருக்கு எல்லாம் என் தலவிதி'' என்றுவிட்டுத் தனது அத்தை செல்ல, இதோ இதோ என்று வெளியேறத் தயாராக இருந்த கண்ணீரை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சசிரேகா.

கடவுளே யாருக்குமே உபயோகமும் இல்லாமல் யாரையுமே நிம்மதியாக இருக்கவும் விடாமல் எதற்காக இப்படியொரு வாழ்க்கையை எனக்குக் கொடுத்தாய்.



ஒரு வழியாகத் தன் அறைக்கு வந்து சேர்ந்துவிட்ட வளால் கண்ணீர் விட்டு அழக்கூட முடியவில்லை.

தனது தாயின் போட்டோவை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டவள், என்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டு நீங்கள் மட்டும் நிம்மதியாகப் போய்ச் சேர்ந்து விட்டீர்களே அம்மா என்று மனதிற்குள் ஊமையாய் அழுது தீர்த்தாள்.

சசிரேகாவைப் போலவே அமுதாவிற்கும் மனதிற்குள் சற்று பாரமாகத் தான் இருந்தது.

சசிரேகாவை அப்படிப் பேசிவிட்டு அவரால் நிம்மதி யாக இருக்க முடியவில்லை, அதோடு அவளைத் திட்டி அழ வைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் பேசியிருக்கவும் இல்லை.

என்னதான் கருத்து வேறுபாடு என்றாலும் அது ஒருநாள் சரியாகி விடுமென்று தினமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, மகன் மருமகளுக்கு இடையே யான விரிசல் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே போனதில் ஒரு எரிச்சல் கலந்த பயம் தான் ஏற்பட்டது.

தான் சசிரேகாவைத் தாங்கத்தாங்க தான் செய்வது தான் சரி என்று அவள் நினைத்துக் கொண்டால் என்ன செய்வதென்பதோடு, அதனால் மகனுக்கும் இந்த விஷ யத்தில் அலட்சியம் வந்துவிடக் கூடுமென்று இனி தான் கொஞ்சம் விட்டேற்றியாகத்தான் நடந்து கொள்ள வேண்டு மென்ற முடிவுக்கு வந்திருந்தார் அமுதா.

அதற்கு சற்றுப் பலன் இருப்பதும் கண்கூடாகவே தெரிந்தது.

முன்னெல்லாம் தனது மனைவியிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்ட மகன், இப்பொழுது கொஞ்சம் மாறி விட்டாற் போலத் தோன்றியது.

ஆனால் சற்று முன்னர் ஷ்யாம் நடந்து கொண்ட விதம் தனது எண்ணத்தைப் பொய்யாக்கி விட்டிருந்ததில், தனது கணிப்புத் தவறோ என்றும் மனம் குழம்பிப் போயிருந்தார்.

என்ன ஆனாலும் சரி இனி நாம் எதற்கும் பாவம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதோடு முடிந்த அளவு கடுமையாகத்தான் நடந்துகொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்திருந்தார் அமுதா.

## 22

வழக்கமான பரிசோதனைக்கு டாக்டரிடம் சென்றிருக்க வேண்டிய நாள் முடிந்து அதற்கு மேலும் கூட இரண்டு நாட்கள் முடிந்து விட்டிருந்ததில் இன்றைக்கு எப்படியாவது இதைப் பற்றித் தனது அத்தையிடம் கேட்டுவிட வேண்டுமென்ற நினைத்துக் கொண்டாள் சசிரேகா.

இரவு முழுவதும் உடல் சுட்டதில் அன்று காலையில் படுக்கையை விட்டு எழும்போதே மிகவும் களைப்பாக உணர்ந்தாள்.



ஏதோ வேண்டாத விருந்தாளியாக அந்த வீட்டில் சிலர் தன்னை நடத்திய விதத்தில் மனதிற்குள்ளேயே ஒடுங்கிப் போயிருந்தவளுக்கு, வேறு யாராவது சற்று பரிவாகப் பார்த்தால் கூடத் தாங்க முடியாது போயிற்று.

இதே நிலை தொடர்ந்தால் எங்கே மன நோயாளியாகி விடுவோமோ என்று கூட மனதிற்குள் பயந்து போய் விட்டிருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் சசிரேகா கீழே இறங்கி வந்தபோது, அனைவரும் ஹாலில் அமர்ந்து ஆசுவாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று தான் படுக்கையை விட்டே தாமதமாக எழுந்திருந்ததால், பசிவயிற்றைக் கிள்ள உடனே சென்று சாப்பிட்டு முடித்தாள்.

காலை டிஃபன் வேலை முடிந்து விட்டிருந்ததால் அனைத்தையும் ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்தவள், "ஏய் என்ன இது?'' என்ற இந்துமதியின் கோபமான அழைப்பில் நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

"இந்த என் சேலையோட ப்ளவுஸ எடுத்துக் கொண்டு போய் அத்தையோட ஸெல்ஃப்ல வெச்சிருக்க, நானும் ஒரு வாரமாத் தேடாத இடம் கிடையாது. உன்ன இந்த வேண்டாத வேலையெல்லாம் செய்யச் சொல்லி யார் அழுதது?''

சசிரேகாவும் தானாகக் கொண்டு போய் வைத்துவிட்டிருக்கவில்லை, இவை என்னுடையவை என்று தனது அத்தை பிரித்துக் கொடுத்த துணிகளைத் தான் கொண்டு போய் வைத்திருந்தாள். ஆனால் அதைச்

சொன்னால் அவரைக் குற்றம் சொல்வது போலல்லவா ஆகுமென்று பேசாமல் நின்றிருந்தாள் சசிரேகா.

''யார் என்ன திட்டினாலும் மண்டைல ஏறாத ரோஷம் கெட்ட ஜென்மம், சை'' என்று விட்டுப் போனாள் இந்துமதி.

கண்ணீர் கண்களை மறைத்துக் கொள்ள, அதே நேரம் டைனிங் ஹால் வழியாக, பக்கத்து அறைக்கு சென்ற தனது கணவன் அங்கு நடந்தவற்றைக் கவனித்து விட்டிருந்ததை சசிரேகா அறியவில்லை.

தன்னருகில் வந்த நின்ற சசிரேகாவை என்ன என்பதைப் போலப் பார்த்தார் அமுதா.

சன்னமான குரலில் ''இன்னைக்கு டாக்டர்கிட்ட செக்கப் போகணும் அத்தெ'' என்றவளை, ''சரி....'' என்று முடிக்காமல் பார்த்தார் அவர்.

அப்படிக் கேட்டவரிடம் மேலே என்ன சொல்வதென்று தெரியாமல் பார்த்தால் சசிரேகா.

''ஏதோ ரெண்டு தடவ உனக்கும் ஒன்னும் தெரியாதுங்கறதுக்காக அழைச்சுட்டுப் போனேன். அதுக்காக எப்பவுமே என்னயே எதிர்பாத்துட்டிருந்தா எப்பிடி? ஏன் இன்னைக்கு சண்டே தான, ஷ்யாம அழைச்சுட்டுப் போகச் சொல்லி கேட்டுப் பாக்க வேண்டியது தான? என்ன ஏதாவது பேசு...''

''நீங்க என்ன சொல்றீங்களோ அப்படிப் பண்ணிக்கறேன் அத்தெ.''

''அதான பேசறதுக்கெல்லாம் ஒன்னும் குறைச்சலில்ல'' என்றவர் முடிவாக எதுவும் சொல்லாமல் எழுந்து



சென்றுவிட, என்ன செய்வதென்று தெரியாமல் வெகு நேரம் அப்படியே நின்று கொண்டருந்தாள்.

மதியம் வரை எப்படியோ சமாளித்தவள் மேலும் காய்ச்சல் அதிகமானதில், நேராகத் தனது கணவனிடம் சென்றாள்.

''டாக்டர்கிட்டப் போகணும், அப்பிடியே ரெகுலர் செக்கப்பையும் முடிச்சுக்கலாம்'' என்றாள்.

''சரி....'' என்று தனது தாயைப் போலவே முடிக்காமல் தன்னைக் கணவன் பார்த்ததில் லேசாக சிரிப்பு வந்தாலும், அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''அத்தெதான் எப்பவும் கூட்டிட்டுப் போவாங்க, ஆனா இன்னைக்கு அவங்களுக்கு வேற வேல இருக்கறதுனால உங்களக் கூட்டிட்டுப் போகச் சொன்னாங்க.''

தயக்கத்துடன் என்றாலும் ஒரு வழியாக சசிரேகா சொல்லி முடித்திருக்க, ''எனக்கு முக்கியமான வேலையிருக்கு என்னால வர முடியாது'' என்று விட்டிருந்தான் அவளுடைய கணவன்.

பிடி கொடுக்காமல் ஒற்றை வார்த்தையில் முடித்து விட்டிருந்த கணவனிடம் மேலும் கேட்கும் வகை தெரியாது விழித்துக் கொண்டு நின்றாள் சசிரேகா.

ஆனால் அவளுடைய கணவன் கிளம்பிப் போய் பல நிமிடங்கள் ஆகியிருந்தன.

மேலும் சில மணி நேரங்கள் சமாளித்தும் ஒன்றும் முடியாமல் போய்விட, உடனே சென்று கிளம்பியவள் வேகமாகக் கீழே இறங்கி வந்தாள்.

நல்லவேளையாக டிரைவர் தயாராக இருக்க, தனது அத்தையிடம் சொல்லிக்கொண்டு மருத்துவமனைக்கு கிளம்பி விட்டிருந்தாள்.

வெளியே சென்று விட்டு அப்பொழுது தான் வீட்டிற்குள் வந்து கொண்டிருந்த மகனைப் பார்த்தார் அமுதா.

''என்னமா?''

''ஷ்யாம் நான் கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காத.....''

''சொல்லுங்க..''

''சசிரேகா பாவம்பா, எந்த ஆதரவுமில்லாம நம்மயே முக்கியமா உன்ன சார்ந்திருக்கா, அப்பிடி என்னதான் பெரிய தப்பையே அவ செஞ்சிருந்தாலும் உன் பெருந்தன்மையான குணத்துக்கு உன்னால அவள மன்னிச்சு விட்டுட முடியாதாப்பா.''

வேறு சமயமாக இருந்திருந்தால் தனத தாய் இந்தப் பேச்சை எடுத்ததற்கு எரிச்சல் பட்டிருப்பானோ என்னவோ, ஆனால் மதியம் தான் அழைத்துச் செல்ல முடியாதென்று மறுத்தபோது யாசிப்பதைப் போலத் தன்னைப் பார்த்த மனைவியின் பார்வை மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து தன்னை இம்சித்துக்கொண்டே இருந்ததில் தனது தாயின் கேள்விக்கு அவனால் உடனே எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை.

என்னவோ தனக்கு இனிமேல் வாழ்க்கையே இல்லாததைப் போல அவள் நின்ற விதம், ஏற்கனவே அவனுக்குள் தலை தூக்கியிருந்த குற்ற மனப்பான்மையை மேலும் மேலும் அதிகப்படுத்திக் கொண்டே போனது.



என்னதான் வேகமாகக் கிளம்பிச் சென்று விட்டிருந்தாலும், அவனால் எதிலுமே ஒரு சிறு அளவாகக் கூட கவனத்தை செலுத்த முடியாது போனதால் கிளம்பிச் சென்ற வேகத்திலேயே திரும்பியும் வந்திருந்தான்.

தனக்கு பெருந்தன்மையான குணமா என்று நினைத்தவனுக்கு சிரிப்புக் கூட வந்து விட்டது.

அஞ்சலியின் மோசமான குணம் பற்றித் தெரியாமல் அவள் சொன்னதை நம்பிக்கொண்டு தனது மனைவி தன்னைக் கேள்வி கேட்டது தவறுதான், அதற்காக மனைவியை தண்டிப்பதாக எண்ணிக்கொண்டு தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருக்கும் தன்னை என்னவென்று சொல்வது.

அவள் தெரியாமல் செய்தாலென்றால், தான் செய்து கொண்டிருப்பது தெரிந்தே அல்லவா.

''இப்ப சசி எங்கமா?''

''அவ டிரைவரக் கார எடுக்க சொல்லி, ஹாஸ்பிட்டலுக்குக் கிளம்பி போனாப்பா'' என்று அமுதா சொல்லவும், ஷ்யாம் சுந்தரின் மொபைல் ஒலிக்கவும் சரியாக இருந்தது.

எடுத்துப் பார்த்தவன், டிரைவர் எதற்காக அழைக்கிறானென்று உடனே அட்டெண்ட் செய்து பேசினான்.

..............

''இப்ப எங்க இருக்கீங்க?''

...............

''சரி உடனே வர்றேன்.''

''என்னப்பா என்னாச்சு?'' என்று தாய் கேட்ட பிறகு தான் அவர் அங்கு நின்று கொண்டிருப்பதே அவனது மனதில் உறைத்தது.

''இப்ப சசி போன கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச் சாம்மா''... என்று மகன் சொல்லி முடிப்பதற்குள்ளேயே, ''ஐயோ என்னப்பா சொல்ற?'' என்று அலறி விட்டிருந் தார் அமுதா.

ஆனால் அது ஷ்யாம்சுந்தரின் காதில் விழுந்திருக் குமா என்பது கூட சந்தேகம் தான்,

''நீங்க அப்பா கூட வாங்க'' என்று அவன் கிளம்பிப் போய் வெகுநேரம் ஆகியிருந்தது.

ஏற்கனவே தான் செய்ததையெல்லாம் நினைத்து வருந்த ஆரம்பித்திருந்தவன், இப்படியொரு போன்கால் வந்ததில் மனதிற்குள் ஆடிப்போனான்.

எப்படிப் போய்ச் சேர்ந்தானென்பது கடவுளுக்குத் தான் தெரியும், அடுத்த பத்து நிமிடங்களில் மருத்துவ மனையில் இருந்தான்.

பதட்டத்தில் டிரைவர் சொன்னதை வைத்து மிகவும் பயங்கரமாகக் கற்பனை செய்திருந்தவனுக்கு, தன்னைப் பார்த்ததும் ஓடி வந்தவனைப் பார்த்த பிறகு தான் ஓரளவு சுற்றுப்புறத்தையாவது உணர்ந்து கொள்ள முடிந்தது.

''உனக்கு எதுவும் ஆகல தானே மூர்த்தி?''

''எனக்குப் பெரிசா அடி ஒன்னும் இல்லைங்க, சும்மா மொக்க அடிதான். ஆனா அம்மாவுக்கு தான் என்னாச் சுன்னு தெரியலங்கய்யா, கார்லயே மயக்கம் போட்டுட் டாங்க.''



கைகள் சில்லிட்டுப் போயிருக்க, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மனைவியைப் பற்றி விசாரித்தான்.

''இப்ப அம்மா எங்க?''

''உள்ளதானுங்க'' என்று மருத்துவ மனைக்குள், கைகாட்டியவனிடம், ''பேசினாங்களா?'' என்று கேட்டான்.

''இல்லைங்கய்யா, வீல் சேர்ல வெச்சுதான் உள்ளேயே தள்ளிட்டுப் போனாங்க.''

டிரைவர் சொல்லக் கேட்டவன், அடுத்த வினாடி ரிஷப் சனில் இருந்தான்.

அவர்கள் காக்க வைத்த ஒவ்வொரு வினாடியும் ஒவ் வொரு யுகமாகக் கழிய, கையருகில் வந்த சுவர்கத்தைக் காலால் தட்டி விட்டுப் பைத்தியக்காரனாக நடந்து கொண்டேனே என்று மனதால் துடித்துப் போனான்.

அருகில் வந்து நின்ற டிரைவரிடம் நடந்ததை விவர மாகக் கேட்கலாமென்று திரும்பியவன், அவனுடைய நடுக்கத்தைப் பார்த்து பேசாமல் இருந்து விட்டான்.

ஆனால் முதலாளி கேட்காவிட்டாலும் தானாகவே நடந்ததை சொன்னான் டிரைவர்.

''வீட்ல இருந்து கிளம்பின பத்து நிமிஷத்துல எதுர்ல வந்த ஒரு மினி பஸ்காரன் பிரேக் புடிக்காம வந்து நம்ம கார்ல மோதிட்டானுங்கய்யா. கடவுள் புண்ணியத்துல நான் ஒடிச்சுத் திருப்பிட்டேனுங்க, அதனால ஸைட்ல மட்டும் ஒரு பெரிய உரசல் அவ்வளவுதான்.''

டிரைவர் மூர்த்தியே சொல்லாவிட்டாலும் கூட அவனைப் பற்றி ஷ்யாம்சுந்தருக்கு நன்றாகவே தெரியும். கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாகவே அவன்

தங்களது குடும்பத்திற்கு டிரைவர் என்பதோடு, இதுநாள் வரையிலும் ஒரு சிறு கறுப்புப்புள்ளி கூடப் பணியில் இல்லாத அளவுக்குத் திறமையானவனும் கூட.

எந்தக் காரணத்தைக் கொண்டும் என்ன அவசரமாக இருந்தாலும் மிகச்சிறிய அளவாகக் கூட சாலை விதி முறைகளை மீறாதவன்.

ஒருவழியாக மேலும் அரைமணி நேரத்திற்குப் பிறகே அவர்கள் அழைக்க, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எழுந்து சென்றான் ஷ்யாம்சுந்தர்.

டாக்டரின் அறிவுரையின்படி அவ்வளவு நேரமாகப் படுத்திருந்த சசிரேகா, அப்பொழுது தான் படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு வீட்டிற்குக் கிளம் பலாமென்று மருத்துவர் சொல்லிவிட்டுப் போயிருக்க, அந்த வீடு என்ற வார்த்தையே சசிரேகாவை நடுங்க வைத்தது.

அப்பொழுது தான் தன்னை நோக்கி வந்து கொண் டிருந்த கணவனைப் பார்த்தவள், அதற்குள் மிக அருகி லேயே வந்து விட்டிருந்தவனிடம் ''நீங்க எங்க இங்க?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''உனக்கு எப்பிடியிருக்கு?''

''எனக்கா? எனக்கொன்னும் இல்லையே'' என்ற சசிரேகாவிற்குக் கணவனிடம் தெரிந்த லேசான பதட் டம் ஏனோ ஒரு இனம்புரியாத பயத்தையும், நிம்மதியை யும் ஒருசேரக் கொடுத்தன.

''நீங்க மட்டும்தான் வந்தீங்களா ஷ்யாம்?''



''சசி.''

அந்தக் குரலில் தன்னை அழைத்த கணவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு, அவனது கண்களில் தெரிந்த வலிக்கான காரணம் என்னவாக இருக்குமென்று புலப் படவில்லை.

''நிஜமாவே உனக்கு அடி எதுவும் இல்ல தானம்மா.''

''ஆமா ஷ்யாம் நிஜமாவே எம்மேல ஒரு சின்ன அடி கூடப் படல. பஸ் வந்து நம்ம கார்ல மோதினப்ப பயத் துல மயங்கிட்டேன், அதுகூட ஒரு சில நிமிஷங் கள்ளேயே சரியும் ஆயிடுச்சு.''

அந்த வினாடியே தனது தாய்க்கு போன் செய்தவன், பயப்படுவதற்கு எதுவுமில்லை. நீங்கள் வர வேண்டாம். நாங்களே சிறிது நேரத்தில் வந்து விடுகிறோமென்று சொல்லிவிட்டு போனை வைத்திருந்தான்.

தான் ஒரு முறை மருத்துவரை சென்று பார்த்து அவர் எந்தப் பிரச்சனையும் இல்லையென்று உறுதியாகச் சொன்ன பிறகே மனைவியை அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

தனது சின்னையாவுடன் நடந்து வந்த சின்னம் மாவைப் பார்த்த டிரைவரோ சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான்.

டிரைவரை அருகில் அழைத்து ஷ்யாம்சுந்தர் ரூபாய் நோட்டுக் கற்றை ஒன்றை எடுத்துக் கொடுக்க, ''பண மெதுக்குங்கய்யா அம்மா நடந்து வர்றதப் பாத்ததே பல லட்ச ரூபாயப்பாத்த மாதிரியிருக்கு'' என்று மனதாரச் சொன்னான்.

''அது சரிதான் மூர்த்தி, நீ போய் ஒரு தடவ உடம்ப டாக்டர்கிட்ட செக்கப் பண்ணிட்டு ரெண்டு நாள் வீட்ல இருந்து ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறமா வேலைக்கு வா போதும்'' என்று சொல்லியனுப்பினான்.

நேராக வந்து காரில் ஏறியவன், மனைவி ஏறிக்கொண் டதும் ஸ்டார்ட் செய்தான்.

''எங்க போறோம் ஷ்யாம்?''

மனைவியின் கேள்விக்கு ஒரு சின்ன சிரிப்பையே பதிலாகக் கொடுத்தவன், நேராகப் போய்ச் சேர்ந்த இடம் சசிரேகாவின் தந்தை அவர்களுக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்திருந்த வீடு.

முதல் முறையாக வந்தபோது இருந்த சந்தோஷம் ஏனோ சசிரேகாவுக்கு அப்பொழுது இருக்கவில்லை.

''இறங்கி வா'' என்று மனைவியை அழைத்தவன் தானும் இறங்கிக் கொண்டான்.

கணவனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றவளுக்கு சுற்றுப்புறம் எதுவுமே மனதிற்குள் பதியவில்லை.

நேராக உள் அறைக்குச் சென்று ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தவளுக்குக் கண வன் தன்னைத் தொடர்ந்து உள்ளே வருவது நன்றாகவே தெரிந்தது.

திரும்பித் தன்னைப் பார்த்த மனைவியை நோக்கித் தனது இரு கரங்களையும் ஷ்யாம்சுந்தர் நீட்டியிருக்க, ஓடி வந்து அவனது மார்பில் தஞ்சம் புகுந்திருந்தாள் சசிரேகா.

எங்கே மனைவிக்கு வலித்து விடுமோ என்பதைப் போல அவன் மிருதுவாக அணைத்திருக்க, அதை



எதையுமே உணர்ந்து கொள்ளும் மனநிலையில் சசிரேகா இருக்கவில்லை.

தனது மார்பில் முகம் புதைத்துக் கதறும் மனைவியை பார்த்த அவனுக்கும் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''ஷ்யாம், என்ன உங்களால மன்னிக்கவே முடியாதா ஷ்யாம்?'' என்று நிமிர்ந்து தன்னைப் பார்த்த மனைவி யின் முகத்தைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டான்.

''சசி பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதடா. நிஜமாவே இன்னும் எனக்கந்தத் தகுதி இருக்குன்னு நீ நினைக்கறையாம்மா?''

''என்ன ஷ்யாம் இப்படிக் கேக்கறீங்க, தனியா பொறுமையா உக்காந்து யோசிச்சப்ப தான் நான் உங்கள எவ்வளவு கேவலமாப் பேசியிருக்கேன்றதையே என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது.''

''எந்தப் பிரதிபலனுமே எதிர்பாக்காம நீங்க எம்மேல வெச்சிருந்த உண்மையான அன்புக்கு நான் எவ்வளவு பெரிய அநியாயம் பண்ணிட்டேன் ஷ்யாம்.'' என்று மீண்டும் கண்கலங்க ஆரம்பித்திருந்த மனைவியை செல்லமாகக் கடிந்து கொண்டான் ஷ்யாம்சுந்தர்.

''நிஜமாவே நான் உம்மேல வெச்சிருக்கறது உண்மை யான அன்புன்னா, நீ பேசினது தப்பாவே இருந்தாலும் அத நான் பெரிசு படுத்தியிருக்கக் கூடாதுமா.''

''அது அப்பிடியில்ல ஷ்யாம், நீங்க எம்மேல வெச்சிருக்கற அன்பு தூய்மையானதுங்கறதால தான் நான் அப்படியெல்லாம் அநியாயமாப் பேசினத உங்க ளால தாங்கிக்க முடியல.''

''எனக்குத் தெரியும் சசி, உன்னோட பெருந்தன்மை யான குணத்துக்கு முன்னாடி நானெல்லாம் நிக்கக் கூட முடியாது......''

''வேண்டாம் ஷ்யாம் என்ன ரொம்பவும் தான் கொல்லாதீங்க, ஆனாலும் ஒரு சின்ன வேண்டுகோள்'' என்ற மனைவியிடம் ''என்னமா?'' என்று கேட்டான்.

''நீங்க எம்மேல கோபப்படுங்க, திட்டுங்க ஏன் அடிக்கக் கூட செய்ங்க ஆனா பேசாம மட்டும் இருக்க வேண்டாம் ஷ்யாம். அத என்னால தாங்கிக்கவே முடி யாது, ஏன்னா உங்கள விட்டா எனக்கிந்த உலகத்துல யாருமே இல்ல ஷ்யாம்'' என்று அழுகையில் உதடு பிதுங்கிய மனைவியைப் பார்த்த ஷ்யாம்சுந்தருக்கும் ஒரு வினாடி கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''ஷ்யாம்!''

தன்னால் மனைவி பட்ட வேதனை அவளது வார்த் தைகளில் தெரிய, ''சசி என்ன எப்பவாவது உன்னால மன்னிக்க முடியுமாடா?'' என்று சொல்லொனாத வேதனையுடன் மனைவியைப் பார்த்தான்.

''வேண்டாம் ஷ்யாம், எல்லாத் தப்பும் யோசிக்காம அவசரப்பட்டுப் பேசின எம்மேல தான் ஷ்யாம், எனக் கொரு ஆச ஷ்யாம் அத நிறைவேற்றி வைப்பீங்களா?''

''என்னடா?''

''நடுவுல வந்து போன அந்தக் கசப்பான நாட்கள ஒரு கெட்ட கனவா நினைச்சு ரெண்டு பேருமே மறந்துட லாமா ஷ்யாம்.''

''அப்படி மட்டும் மறக்க முடிஞ்சா அதவிட ஒரு சந் தோஷமான விஷயம் என்னப் பொறுத்த வரைக்கும் இந்த உலகத்துல வேற இருக்கவே முடியாதும்மா.''



''இருக்குது ஷ்யாம். நம்ம எதிர்கால வாழ்க்கை, கொஞ்சநாளாத் தொலைச்சுட்ட நம்ம சந்தோஷம்....''

கண்களில் கனவு மின்ன சொல்லிக்கொண்டே போன மனைவியை, எல்லையற்ற காதலுடன் பார்த்துக்கொண்டு நின்றான் ஷ்யாம்சுந்தர்.

சற்றே மேடிட்டிருந்த தனது வயிறைத் தொட்டு ''எல் லாத்துக்கும் மேல நம்ம குழந்த ஷ்யாம்'' என்ற மனை வியைக் கைகளில் ஏந்தி முத்தமழை பொழிய ஆரம்பித் திருந்தான்.

வெகுநேரம் கழித்து அதுவும் மனமே இல்லாமல் தன்னை விடுவித்த கணவனின் அன்பில் திக்குமுக் காடிப் போயிருந்தாள் சசிரேகா.

''சசி வீட்டுக்குக் கிளம்பலாமாடா?''

''வீட்டுக்கா?''

''ஆமாம்மா, அங்க அம்மா அதாவது உன் அத்தை உன்னப் பாக்கறதுக்காகக் காத்துட்டிருப்பாங்க.''

''ஏன்?'' என்று கேட்ட மனைவியிடம் ''அதெல்லாம் போகும்போது பேசிக்கலாம் வா'' என்று மனைவியுடன் கிளம்பியவன், அரை மணி நேரத்தில் தங்களது வீட்டைச் சென்றடைந்திருந்தான்.

வீட்டிற்குள் காலடி எடுத்த வைத்தவள் தன்னை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த தனது அத்தையை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அதற்குள் அருகில் வந்துவிட்டிருந்த அமுதா ''சசிரேகா'' என்று தனது மருமகளின் கையைப் பிடித்துக்கொண்டு கண் கலங்கினார்.

தனது அத்தையின் செய்கையில் ஒன்றும் புரியாமல் பார்த்தவள், ''என்ன அத்தெ?'' என்று கேட்டாள்.

''ஒன்னுமில்லடாம்மா, கொஞ்ச நேரத்துல வயித்துல புளியக் கரைச்சுட்டாங்க'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''எல்லாம் உன்னால வந்ததுடா, என் மருமக கூப் பிடும்போதே போயிருக்க வேண்டியதுதான'' என்று சலுகையான கோபத்துடன் மகனைத் திட்டினார்.

ஆனால் ''என்னமா பண்றது மனுஷங்களுக்கு சில விஷயங்கள மண்டைல அறைஞ்சு சொன்னா தான் சில சமங்கள்ள உறைக்குது'' என்று உண்மையான வருத்தத் துடன் சொன்னான் ஷ்யாம்சுந்தர்.

''சரி இப்பவாவது ரெண்டு பேருக்குள்ளயும் எல்லாமே சரியாயிடுச்சு தான?'' என்றார் அமுதா.

''ஆமா எங்க ரெண்டு பேருக்கும் இடையில என்ன பிரச்சனையிருந்தது?'' என்று ஷ்யாம்சுந்தர் பாவனை யுடன் கேட்க ''அதான?'' என்று தானும் உடன் சேர்ந்து கொண்டாள் சசிரேகா.

''எல்லாம் நேரண்டா சாமி'' என்ற அமுதாவின் வார்த் தைகள் அவருடைய சிறிய மகன், மருமகளின் சிரிப்பில் காணாமல் போயிருந்தது.